# சாய்மனைக் கதிரை



தமிழ் மன்றம்

6010
894.8113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பொருளாதாரத்தின்
அணிகலனாக விளங்கி,

எமது மக்களின் சமய, கலாசார
வளர்ச்சிக்குத் துணைநின்று,

இலங்கை எழுத்தாளரின்
படைப்புகளுக்கு
உதவிபுரிவதில்
பெருமிதம்கொள்ளும்

**மக்கள் வங்கியின்**

இனிய ஆசிகள்.

# மக்கள் வங்கி

**மக்களின் தோழன், நாடு முழுவதும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணைக் கூறை

சமூக நாவல்

AMIR ALI PUBLIC LIBRARY
SAMMANTHURAI
25-7-1985

ஜுனைதா ஷெரீப்

FOR REFERENCE
USE ONLY.

தமிழ் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chanaik koorai

a novel

*by* **JUNAIDA SHERIFF**

All rights reserved

© Copyright 1985

*by* **K. M. M. SHERIFF**

First published in March 1985

Twenty Third publication of:

THAMIL MANRAM,

GALHINNA, KANDY,

SRI LANKA.

வகுப்பு எண்: 894.8113

வரவுப்பதிவு எண்: 6010

**Price Rs. 23/-**

**Printed at**

**CATHOLIC PRESS, BATTICALOA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR REFERENCE
USE ONLY.

## சமர்ப்பணம்

என்னை ஆறுத் துயரில் தவிக்க விட்டு
இறைவனடி எய்திய
அன்பே உருவான
எனது இனிய தாய்
வை. கதிஜா உம்மாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நன்றி

இக்கதையை நாடகமாக ஒலிபரப்பிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சிப் பிரிவினருக்கும்,

தொடர்கதையாக வெளியிட்ட 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், தயாரிப்பாளர் ஜனாப் சித்தீக் காரியப்பர் ஆகியோருக்கும்

தினகரனில் வெளிவந்த கதையை வாசித்து கடித மூலமும், நேரிலும் என்னைப் பாராட்டிய அன்பு வாசகர்கள் சகலருக்கும்,

புத்தகமாக தற்போது வெளியிடும் கல்ஹின்னை, தமிழ் மன்ற நிர்வாகி அல்-ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களுக்கும்;

இந்நாவலை தனது முத்து, முத்தான கையெழுத்தில் பிரதியாக்கம் செய்து தந்த எனது மருமகள் ஆசிரியை திருமதி சுபைதா மீரான் சாஹிப் அவர்களுக்கும்

எனது இதய பூர்வமான நன்றிகள்.

— ஜுனைதா ஷெரீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைஞர் நோக்கிலே.....!

PUBLIC LIBRARY ... SAMMANTHURAI ... 1985

அண்மையில் 'தினகரன்' பத்திரிகையில் தொடர் நவீனமாக வெளிவந்த "சாணைக் கூறை" குறித்து எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட பலருக்குக் கண்ணீர் வரவழைத்த கதை பின்னர் நாவலாகப் பத்திரிகையில் வெளிவந்ததையிட்டு மகிழ்ச்சி.

மேல்நாடுகளில் மக்களைக் கவரக்கூடிய நல்ல நாவல் ஒன்றை எழுதிவிட்டால் போதும் - பணம் வந்து சேரும். ஆனால், நமது நாட்டில் ஆத்ம திருப்திக்காகவே எழுதுகிறார்கள். பாராட்டு ஒன்றுதான் அவர்களுக்குக் கிடைக்கும் பரிசு. அந்த வகையில் "சாணைக் கூறை" எழுதிய தங்களுக்குக் கிடைத்த பரிசு அபரிமிதமானது என்பதை கதாசிரியரின் பேனாமுனை என தினகரன் வெளியிட்ட பகுதி கூறுமலே கூறுகிறது.

–ருளியா ஸியாத்.

ஷேக் மதார் ரோட், தர்கா டவுன்.
2. 10. 84.

உங்களின் கதையை எங்கள் இதயத்தில் பதியவைத்து விட்டீர்கள். பின்பு என்ன நடக்கப்போகிறது எனும் ஆவலைத் தூண்டி வாசிப்பவர்களைச் சிந்தனையில் மூழ்கும்படி ஒவ்வொரு அத்தியாயமும் சிறப்பாக அமைந்துள்ளன. எனது பாராட்டுக்கள்.

–எப். ஸகியா ஹஸன்.

காலி, 7. 9. 1984.

எத்துணைச் சிறப்புவாய்ந்த எழுத்தாளர் தாங்கள் என்பதற்கு இக் கதை நல்லதொரு சான்ருகும்......கதையின் ஆரம்பம் முதல் முடிவு வரை காட்டப்பட்டுள்ள அனைத்தும் வாசகர்களுக்கு உணர்த்தப்படும் அறிவுரையாக பளிச்சிடுவது போற்றத் தக்கது. இஸ்லாமியக் கடமைகள் கொள்கைகளை வரம்பு மீறுவதனல் கிடைக்கும் தண்டனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களில் தெளிவாகச் சேர்க்கப்பட்டுள்ளதனுல் கதை யின் தரம மேலும் ஒரு படி உயர்கிறது.

- ஏ எம். ஹஸன்.

பிரதான வீதி, நிந்தாவூர்
22, 9. 84

கதையின் ஓட்டம் போகப்போக சூடுபிடிக்க ஆரம் பித்துவிட்டது நாளை என்ன வருமோ என்று எதிர்பார்க்க வைத்துவிட்டது..... கதையின் இடைப்பட்ட பகுதி, மிகவும் கலைச்சுவை நிறைந்ததாயிருந்தது.

-எஸ். எம். நுஹ்மான்.

குருகொட, அக்குறணை.

கிழக்கு மாகாண மக்களின் கலாச்சாரம், பண்பாடுகள், திருமண சம்பிரதாயங்கள் முதலியவற்றை நாங்கள் அறிய, உதவிசெய்த உங்களை எப்படிப் போற்றுவது என்றே தெரி யவில்லை..... தினகரன் வந்தவுடன் முதலில் சாணைக் கூறை யைப் படித்துவிட்டுத்தான் வீட்டு வேலைகளைத் தொடங்கு வேன்.

- எம். எச் முப்ரிலிஹா.

புதிய குடியிருப்புப்பாதை, புத்தளம்.

தினகரன், தினமும், தேனுய் இனித்த சாணைக் கூறை யைப் பிரசுரிக்கும் பொழுது வாசித்த எனக்கு, கதையின் விறுவிறுப்பைக் கண்டு, கதாசிரியரைப் பாராட்டுவதா' வாசிக்கும் வாய்ப்பைத் தந்த தினகரனைப் பாராட்டுவதா என்ற பெரும் புதிர் ஏற்பட்டது. தினகரனுடன் ஜுனைதா ஷரீபுக்கும் என் அன்பு நிறைந்த பாராட்டுக்கள்.

- ஏ. எம். ஜவ்பர்.

கல்முனை ரோட், அம்பாறை. 19. 9. 84

உங்கள் கதையைப் படிக்கும்பொழுது ஏற்பட்ட இனிப்பு எப்படித் தெரியுமா? வார்த்தைகளில் வார்க்க முடியாதது. கதை இன்றும் மனதை உருக்கிக் கொண்டிருக்கிறது.

-ரிஸ்வானு பரீத், ஹஸானு பரீத்,
பர்ஹானு ஹகீம்.

மடவளை பஸார்

ஒரு தரமான நாவல். இன்று எமது சமுதாயத்தில் நட மாடும் பாத்திரங்கள் நஜீமா, நவாஸ் போன்ருேர். சமுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் இன்று மலிந்துள்ள மூடநம்பிக்கைகள், பணத் திமிர், அகங்காரம் போன்றவற்றிற்குச் சரியான சாட்டை

—எம். ஜே. எம். ஸவாஹிர்.

நீதவான் மன்றம், நாவலப்பிட்டி

எம் இதயங்களில் நீங்காத இடம் பிடித்துக்கொண்ட சாணைக்கூறை, ஒரு நல்ல சமூக அமைப்புக்கொண்ட கதையாக உள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு முதலில் உங்கள் நாவலைப் பார்க்கிறோம். இறுதியில், திகிலுடன் தொடரும்' என்று நிறுத்துகிறீர்கள், நீங்கள். இதனால், அடுத்து என்ன நடக்குமோ என நாங்கள் பொறுமை இழந்து தவிக்கின்றோம்.

—ரஹ்மத் பேகம், ஷகிலா அலி, பாஸானு அலி.

இல்லவத்துற, கம்பளை

பல வாரங்களாக எம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய சாணைக் கூறை முடிவடைந்ததும், மிகவும் கவலையடைந்தேன். கிழக்கு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மை மக்களான முஸ்லிம்களின் கலாசாரம், பண்பாடு பற்றி நன்றாக அறிவதற்கு வாய்ப்புத் தந்தது பற்றி எங்களுக்கு அளவிலா மகிழ்ச்சி.

— இஸ்ஸதுல் அமீனு நளீம்.

வெலிப்பிட்டிமோதர, கிந்தோட்டை

நவாஸ், நஜீமா இருவரையும் ஏன் பிரித்தீர்கள், என்றாலும், கதை வெகு பிரமாதம். இதுபோன்ற நல்ல கதைகளை நிறைய எழுதுங்கள். உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

கே. எம். பாரூக்.

ஹில் வீதி, களுத்துறை

சாணைக் கூறை என்னும் தொடர்கதையை நன்றாக எழுதியிருக்கிறீர்கள் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

-எம். எம். பௌஸியா.

சேச் ரோட், ருகம

உங்களின் படைப்பான சாணைக் கூறையைப் படித்ததில், நானடைந்த மகிழ்ச்சி ஏராளம். உங்களின் கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வீ. சி. ரேட், அக்கரைப்பற்று

-எம். ஐ. எஸ். சனீறு.

உங்கள் சாணைக் கூறை என்னைச் சிரிக்க வைத்ததுடன், அழவும் வைத்துவிட்டது. சாணைக் கூறை நூலுருப் பெற என் வாழ்த்துக்கள்.

ஹம்பாந்தொட்டை

– ஐ. உம்முல் பஜிரியா

நீங்கள் எழுதிய சாணைக் கூறையைப் படித்துச் சுவைத்தேன். கதை மிகவும் சிறந்தது. நான் க. பொ. த. பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும், உங்கள் கதையைத் தொடர்ந்து வாசித்தேன். பரீட்சை நெருங்கிவிட்டதே, பாடம் படிக்கவேண்டுமே என்ற ஆவலுக்கிடையிலும் சாணைக் கூறையை, விடாமல் பார்த்து வந்தேன்.

தள்கஸ்பிட்டிய, அம்பதோட்ட

ஏ. எஸ். சித்தி ஜுவைரியா.

இதற்கு மேலும், நாவலைப் படித்தவர்கள் எழுதிய கடிதங்களைச் சுருக்கித்தான் எழுதினாலும். அதுவே பல புத்தகங்கள் ஆகிவிடலாம் என அஞ்சுவால், இத்துடன் நிறுத்திக்கொள்ளுவோம். இப்படி, ஆயிரக்கணக்கானவர்கள் அமோக வரவேற்புத் தந்ததுடன், நூலுருவில் சாணைக் கூறை, வரவே வேண்டும் என்றும் அடம்பிடித்துள்ளனர். இவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய விரும்பிய நாவலாசிரியர் எம்மை அணுகி, ''சாணைக் கூறை''யை வெளியிடுங்கள் என்று கோரியதால், தயக்கமின்றி, நூலுருவாக்கி வாசகர்களுக்கு வழங்குகிறோம். இதனால், பல்லாயிரக்கணக்கானோர் சாணைக் கூறையை வாசித்து இன்புற வழி சமையும்.

சாணைக் கூறையை நூலுருவில் வெளியிட அனுமதி தந்த ''தினகரன்'' பிரதம ஆசிரியர், திரு. ஆர். சிவகுருநாதன், M. A. அவர்களுக்கும், வாசித்து மகிழ்ந்தவர்களின் ஆசையை நிறைவேற்றுவதற்கு எமக்கு வாய்ப்புத் தந்த நாவலாசிரியரான ஜுனைதா ஷெரீபுக்கும் எமது ஆழிய நன்றி.

–எஸ். எம். ஹனிபா,
நிர்வாகி.

தமிழ் மன்றம், கல்ஹின்ன, 15. 1. 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணைக் கூறை

எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. அது 1945ம் வருடமென்று.

கிழக்கு மாகாணத்தின் கரையோரக் கிராமம். கிழக்கே வங்காள விரிகுடாவின் நீல நிற அலைகள் மேலெழுந்து, மேலெழுந்து கரையை முத்தமிடும் காட்சி. மேற்கே மட்டக்களப்பு வாவி. **1** இடையில் கிராமம். பார்க்குமிடமெங்கும் தென்னை மரங்கள். நிழல் பரப்பும் அதன் பரந்த ஓலைகள். பூவரசங் கிளைகளைக் கொண்ட ஓலை வேலிகள். அதனடுவே சின்னஞ்சிறு தென்னோலை வேய்ந்த வீடுகள். எங்கேயாவது ஒன்றிரண்டு கல் வீடுகள். பணக்காரத் தெருக்களில் பார்க்குமிடமெல்லாம் கல் வீடுகள். சில தகரவேலிகள்.

பத்துப் பன்னிரெண்டு பள்ளிவாசல்கள். நேரத்துக்கு நேரம் ஒலிக்கும் பாங்கொலிகள்.

இதுதான் நான் பிறந்த கிராமம்.

எனக்கு அப்போது வயது ஐந்து இருக்கலாம்.

இரண்டாவது மகா யுத்தத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாகாவிட்டாலும், கோழிகளைப் போல் பயந்து ஒடுங்கி முடங்கிக் கிடந்தவர்கள் இறக்கைகளைத் தட்டிவிட்டு சற்று மனத்தைரியத்துடன் தெருக்களில் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

எனது மாமாவின் வீட்டில் அன்று ஏதோ விசேஷம். காலையில் எழுந்ததும் எழாததுமாக, வாய் கழுவியதும் கழுவாததுமாக, துண்டுச் சாரனை உடுத்துக்கொண்டு மாமாவின் வீட்டுக்கு ஓடிவிட்டேன். மூமீன் எனது உம்மா சுபைதாவின் மூத்த சகோதரன்.

காலையிலேயே அவர்களின் வீடு களை கட்டிவிட்டது. மாமா கிணற்றடியில் பாய்களைத் தேய்த்துக் கழுவிக் கொண்டு நின்ருர். கழுவுவதற்காக சில பழைய சாக்குத் துண்டுகளை மாமி மரியம் எடுத்து வந்து கிணற்றுச் சேறு தாங்கியில் போட்டார். துணி வெளுக்கும் சின்ஞன் பவ்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக வந்து நின்ருன். ஒரு பெரிய துணி மூடை அவன் தோளிலிருந்து மாமியின் கைகளுக்கு மாறியது.

"என்ன புள்ள... இன்று நாப்பதாக்கும்..... ஹி .. .. ஹி ." சின்னுன் பின் தலையைச் சொறிந்தான்.

"என்னங்க. சின்னுன் துணி கொண்டு வந்திருக்கான்" மாமி சப்தமிட்டார்.

"சின்னுன். அப்டி படிலே இரு. இதோ வந்துடறேன்" மாமா பதிலுக்கு சப்தமிட்டார்.

எனக்கு புரிந்துவிட்டது. அன்று நஜீமா பிறந்து நாற்பதாவது நாள். வீட்டில் கொண்டாட்டம்.

நான் பூனையாக வீட்டினுள் நுழைகிறேன். மாமியின் தம்பி ஒருவன் வாளித்தண்ணீரை தரையில் வீசி, வீடெல்லாம் தேய்த்துத் தேய்த்துக் கழுவுகிருன்.

"ஏன்டாம்பி. உள் வீட்டுக்குள்ள கழுவிட்டியா?" மாமி கேட்டார்.

"இல்ல ராத்தா."

"பத்திரம்டா. புள்ள தொட்டிலுக்க படுக்கான். அவள்ள தண்ணீ படாம பாத்துக்க"

"நீ மச்சான்கிட்ட சொல்லி இந்த வாளில தண்ணி கொண்டுவந்து தரச் சொல்லு."

அவன் குனிந்து வெயர்க்க, வெயர்க்க தும்புத்தடியால் தரையைத் தேய்ப்பதை சில விநடிகள் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். வழுக்கும் தரையில் ஓடி ஓடி விளையாடவேண்டும் போல் தோன்றியது. ஸ்ரேறிங் பிடிப்பதைப்போல் கைகளை வளைத்து 'புர்ர்......'என சப்தமிட்டவாறு தரையில் அங்கும் இங்கும் ஓடுகிறேன்.

"டேய் நவாஸ். வழுக்கி விழுந்திடுவாடா. ஓடாதடா" அவன் என்னைப் பார்த்து இரைந்தான். நான் கேட்கவில்லை. ஓட்டம் தொடர்ந்தது.

"டேய். நீ நிறுத்தல்ல, இந்தத் தும்புத் தடியால தருவன்." என்றவாறு என்னை நோக்கி இரண்டு எட்டுகள் வைத்தான்.

மெதுவாக உள் வீட்டினுள் நுழைந்தேன். தொட்டிலுக்கருகில் சென்றேன். மெதுவாக......மிக மெதுவாக தொட்டிலுக்குள் எட்டிப் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்மையாக.....பால் நிறமாக......கால்களில் சிவப்பு வண்ணம்......கைகள் உருண்டு திரண்டு .....நான் சாப்பிடாமல் அடம் பிடித்தால் எனது உணவை அதற்குக் கொடுத்து விடுவேன் என என் உம்மா பயமுறுத்தும் அந்த நிலாவின் வட்டவடிவமான முகம் ....தலையில் அடர்ந்த கறுத்த மயிர்கள்.

தொட்டிலை எனது இரண்டு கைகளாலும் பற்றி...... அதை சற்று வளைத்து இன்னும் சமீபமாக எனது முகத்தை வைத்து நஜீமாவைப் பார்க்கிறேன். பார்க்கப் பார்க்க அவள் அழகாகத் தெரிகிருள். அவளைத் தொடவேண்டும் போல .....அந்த மென்மையான கன்னங்களை மெதுவாக தடவி விட வேண்டும்போல... அந்த கருமையான மயிர்களை கோதிவிட வேண்டும் போல......அந்த ரோஜா இதழான கால்களை கைகளுக்குள் பிடித்துக் கொண்டிருக்கணும் போல......

நேரஞ் செல்லச் செல்ல என் ஆர்வம் அதிகரிக்கிறது. என்னுல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு .....என் கைகள் குறுகுறுக்கின்றன.

மெதுவாக, ஒரு கையால் அந்த நிலவு முகத்தைத் தொடுகிறேன். மெழுமெழுப்பான கன்னங்களை கையால் தடவுகிறேன். சில வினாடிகளில் அவளுடைய முகம் சிரிக்கிறது. அது தான் நரி விரட்டுவதா? அடுத்த சில வினாடிகளில் ரோஜா கூம்புவதுபோன்று.....சிவந்த உதடுகள் துடிக்கின்றன. கண்களைத் திறக்கிருள். என்னைப் பார்க்கிருள். என் கண்களுக்குள் உற்றுப் பார்க்கிருள். மீண்டும் சிரிக்கிருள். நான் தலையைக் கோதி விடுகிறேன்.

என்ன நினைத்தாளோ......கால்களை அங்கும் இங்குமாக அறுபட்ட கோழியாக அடிக்கிருள். தொடர்ந்து பெரிய ஒப்பாரி......

"டேய் நவாஸ். ஏன்டா அவளை எழுப்பினே?" மாமி மண்டபத்தினுள் நின்று சப்தமிடுகிருர்.

நான் மௌனம்.

நஜீமா தொட்டிலின் கீழ் வைக்கப்பட்டிருந்த படிக்கத்தை சலசலவென நிரப்புகிருள்.

மாமி எட்டிப் பார்க்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீயாடா புள்ளயை எழுப்பினே? இன்டைக் கென்டு எனக்கு எவ்வளவு வேலேடா. குளிக்கணும். சமைக்கணும். ரொட்டி சுடணும். ஏன்டா..... உன் உம்மா எப்போ வாறதா சொன்ஞ?"

"தெரியா மாமி. நான் எழுந்ததுமே நஜீமாவைப் பார்க்க ஓடியாந்துட்டேன்."

"அது தான் வந்து தூங்கிக்கிட்டு இருந்தவளை எழுப்பி இருக்கே."

"ஏன் மாமி, நஜீமா நல்ல வடிவு இல்லியா?" நான் ஆசையுடன் கேட்டேன்.

"டேய்......என் புள்ளயில உன் கண்ணை வைச்சுடாதடா."

"என்னைப் பார்த்து சிரிச்சா மாமி. நேத்து எங்க உம்மாவைப் பார்த்தும் சிரிச்சாவாம்."

நஜீமா நிறுத்தி இருந்த அழுகையைத் தொடர்ந்தாள்.

"ஏன்டா நவாஸ். நான் பாலைக் கொடுத்துட்டு தொட்டிலில வளத்தாட்டிட்டுப் போறன். தொட்டிலை ஆட்டி விடுறியா?"

"எணக்கும் பசிக்கிது. ஏதும் தாங்க. தின்னுட்டு பகலெல்லாம் ஆட்டிவிடுறன்."

"அடுத்த அறைக்குள்ள வாழப்பழம் இருக்கு. எடுத்துத் தின்னு."

மாமியின் தம்பி இன்னும் தேய்த்துக் கொண்டிருந்தான்.

நான் அடுத்த அறைக்குள் சென்று, வாழைப் பழமொன்றை எடுத்து தோலை உரிக்கும் போது......

"ராத்தா. வாழப்பழத்தை நவாஸ் களவெடுக்கான்." சப்தம் கேட்டு வெடுக்கென திரும்பிப் பார்த்தேன். மாமியின் தங்கச்சி சல்மா கதவடியில் நின்ருள்.

"அவளை நான்தான்டி, தின்னச் சொன்னேன்."

"டேய். எனக்கும் ஒன்டு எடுத்துத்தாடா" சல்மா கேட்டாள்.

அவள் என்னைவிட ஐந்தாறு வயது மூத்தவள்.

"ஏன்டி நான் களவெடுத்ததா மூட்டிக்கொடுத்தே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிச் சொல்ல மாட்டன்டா. எடுத்துத் தாடா."

நானும் அவளுமாகச் சில பழங்களை விழுங்கினோம்.

தண்ணீர் குடிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றேன். மாமா பாய்களைக் கழுவுவதில் மும்முரமாக நின்றார்.

"குடிக்க தண்ணீ தாங்க மாமா"

"அந்த வாளிக்குள்ள இருக்கு. எடுத்துக் குடி."

நானும் சல்மாவும் குடித்தோம்.

"ஏன்டா நவாஸ். உன் வாப்பா ஊட்டுலயா?"

"ஆமா"

"ஓடிப்போய் நான் வரச் சொன்னதா கூட்டி வா. எனக்கு நிறைய வேலை கிடக்கு. அவரைத் தான் சந்தைக்கு அனுப்பணும்"

நான் சற்று பிகு பண்ணினேன்.

"என்னடா யோசிக்கிறே?"

"மாமி நஜீமாவுக்கு பால் கொடுக்கா. தொட்டிலை ஆட்டிவிடச் சொன்னா. அதுக்குப் போகணும்"

"அந்தவேலையை அவ செய்வா. நீ போய் உன் வாப்பாவைக் கூட்டி வா"

"அப்புறம் வந்து தொட்டிலை ஆட்டுவதா மாமிக்கிட்ட சொல்லுங்க மாமா"

நான் சாறனை மடித்துக் கட்டுகிறேன். கைகளை முன்னுக்கும் பின்னுக்கும் இழுத்து கியர் போடுகிறேன். ஸ்ரேறிங் பிடிக்கிறேன். வாயால் புர்......புர்..... சப்தம். ஒரே ஓட்டமாக பக்கத்து தெரிவிலுள்ள எனது வீட்டை நோக்கி ஓடுகிறேன்.

என்னதான் ஓடினாலும், நஜீமா என் கண்களை உற்றுப் பார்த்து சிரித்த அழகு மனம் முழுதும் வியாபித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

வாப்பா சந்தையிலிருந்து வந்துவிட்டார். ஒரு சாக்குப் பை நிறைய சாமான்கள் வாங்கி வந்து உம்மாவிடம் கொடுத்தார். மரக்கறி, மீன், கொச்சிக்காய், வெங்காயம்......எல்லாமே அதனுள் இருந்தன. மீன்கள் ஈர்க்கில் ஒன்றில் கோர்வையாக கோர்த்து இருந்தன.

" அவங்களுக்கு என்ன வாங்கினீங்க? " உம்மா கேட்டார்.

" நாற்பது அல்லவா? கோழியும், உன் மதினிக்கு செத்தல் மீனும் வாங்கினேன். திராயும் வாங்கினேன் "

செத்தலும், திராயும் சாப்பிட்டா பால் ஊறும் எம்பாங்களே "

" அதனுல் தான் வாங்கினேன். இந்தா .....பின்னேரமா இதைத்தான் உன் மருமகளுக்கு கொண்டு போய் போடு "

வாப்பா கையில் இருந்த பொட்டலத்தை உம்மாவிடம் கொடுத்தார். உம்மா பிரித்துப் பார்த்தார்.

ஒரு பட்டுச் சட்டை. ஒரு துண்டு பட்டுத் துணி.

" சாணைக் கூறையா? "

" உன் மகனுக்கு முறைப் பொண் அவதானே. நீ தானே சாணைக் கூறை போடனும் "

உம்மா சிரித்தார். வாப்பாவும் சிரித்தார். எனக்கு என்ன விளங்கிற்ரு, நானும் சிரித்தேன்.

" டேய் நவாஸ். ஏன்டா ஊத்தையா நிக்கிறே? குளிக்கலியா? ஏன்டா உன் தலைமயிர் இப்படி வளர்ந்திருக்கு? மயிர் இறக்கலியா? "

மௌனமாக நின்றேன்.

" டேய். நானும் தலை இறக்கணும். புறப்படுடா. "

ஒரு சேர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டேன். தலைமயிர் இறக்குவதா? அதைப்போல் ஒரு தொந்தரவு! என்னைத் தனியாக போகச் சொன்னுல், அதே சாக்கில் மாமாவின் வீட்டுக்கு ஓடி விடலாம். இப்போது வாப்பாவும் வருவதாக கூறுகிருரே. இன்று தப்பவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ஞல் முடியாது என உம்மாவைப் பார்த்து கண்ணைக் காட்டுகிறேன். அவர் விளங்கிக் கொண்டதாக காட்டிக்கொள்ளவில்லை.

தலை எழுத்தை சபித்தவாறு .....உம்மாவைப் பார்த்து பற்களை நறநறத்தவாறு .. கால்களைத் தரையில் தட்டித் தட்டி நடந்தவாறு......வாப்பாவைப் பின் தொடர்கிறேன்.

ஒஸ்தா மாமாவின் குடில் பள்ளிவாசலுக்கு சற்றுத் தள்ளி அமைந்திருக்கிறது. உயரமான ஒருவர். அவர்தான் குடிலின் சொந்தக்காரன். அவரின் கீழ் இன்னும் இருவர். ஒருவர் உதட்டைப் பிதுக்கியவாறு எப்போதும் காட்சியளிப்பார். மற்றவர் கண்களை சதா சிமிட்டிக் கொண்டிருப்பார்.

" யாசீன். முதலிலே இவனுக்கு இறக்கி விடு " வாப்பா கூறியவாறு அங்கு கிடந்த பாயொன்றில் அமர்கிருர். நான் ஒடுங்கியவாறு யாசீன் என்ற உதடு பிதுங்கியவரின் அருகில் பவ்யமாக வந்து நிற்கிறேன்.

" தம்பி. இப்படி முன்ஞலே இருடா "

நான் அவனின் முன்ஞல் கால்களை மடித்தவாறு சம்மணம் போட்டு தரையில் அமர்கிறேன். அவனுடைய மடித்த முழங்கால்கள் என்னுடையதைத் தொடுகின்றன.

யாசீன் காவி படிந்த வெள்ளைச் சீலைத் துண்டொன்றை எடுத்து உதறுகிருன். அதில் படிந்திருந்த மயிர் துணிக்கைகள் சாற்றில் பறக்கின்றன. அதை அப்படியே எனது மடியிலும் அவனுடைய மடியிலுமாக பரத்தி விரித்து விடுகிருன்.

சிரட்டைக்குள் கையைவிட்டு தண்ணீரை அள்ளி எனது தலையில் தப்புகிருன். மீண்டும் தப்புகிருன். தலையை அமுக்கி தேய்த்து விடுகிருன். மயிர்களுக்குள் விரல்களை விட்டு அழுத்துகிருன். எனக்கு வலிக்கிறது. முகத்தை அஷ்டகோணலாக்குகிறேன்.

உறை ஒன்றுக்குள் கையை விட்டு சவரக் கத்தியை எடுக்கிருன். கண்ணுக்கு அடக்கமான தூரத்தில் பிடித்து அதன் கூர்மையை அளக்கிருன். மனம் திருப்தியடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லைப் போலும். குடிலின் வரிச்சியில் கட்டி தொங்கவிடப் பட்டிருந்த மாட்டுத் தோலொன்றை இடக் கையால் பிடித்து இழுத்தவாறு, வலக் கையில் பிடித்திருந்த கத்தியை மேலும் கீழும் நகர்த்தி......கத்தியை மறுபக்கமாக பிரட்டி மீண்டும் மேலும் கீழுமாக நகர்த்தி......கூர்மையாக்கினன்.

கத்தியைப் பார்க்கும்போது ..,...தோலில் அதை நகர்த்தி கூர்மையாக்கும் வேளையில் உண்டாகும் சப்தத்தைக் கேட்கும்போது.... எனக்கு கொலைப்பயம் ஏற்பட்டது. எழுந்து ஓடி விடலாமா என்ற எண்ணம். கடைக் கண்ணுல் வாப்பாவைப் பார்க்கிறேன். தலையை மழிக்கும்போது கூரிய கத்தி எங்கேயாவது சிராய்ப்பை ஏற்படுத்தி விட்டால்......? மீண்டும் பய உணர்வு. என்னைக் கட்டுப்படுத்த முடியாத நிலை.

" தம்பி. நிமிந்து இருடா."

நான் முதுகை முன்னுக்கு வளைக்கிறேன். கண்களில் மெலிதாக கண்ணீர் சுரக்கிறது. வாப்பாவின் கொடுவாள் மீசையைக் கடைக் கண்ணுல் பார்க்கிறேன்.

யாசீன் கத்தியை தலையில் வைத்து ஓர் இழு இழுக்கிருன். உடம்பை ஓர் உலுக்கு உலுக்குகிறேன். கத்தியில் வழித்த மயிர்க் கற்றைகளை மடியில் விரித்திருந்த சீலைக்குள் சங்கமிக்கிருன்.

" தம்பி. வளையாதடா. நிமிந்து இர்டா "

யாசீன் என்னென்னமோ சொல்கிருன். எனக்கு விளங்கவில்லை. தலையை எரிக்கிறது. வலிக்கிறது. அவனுடைய பழக்கப்பட்ட கைகள் சரசரவென மயிர்க் கற்றைகளை சீலைக்குள் சொரிகின்றன.

முன் தலையை வழித்துவிட்டான் போலும். பிடரியில் கையைப் போட்டு அமர்த்தி என் தலையை அவனுடைய மடிக்குள் வளைத்து எடுக்கிருன். எனக்கு முதுகு நோவெடுக்கிறது. நான் நெளிகிறேன். பக்கவாட்டுக்கு சரிய முயற்சிக்கிறேன்.

" அட......சும்மா இர்டா " கூறியவாறே பின் தலையையும் வழித்துவிடுகிருன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு மயிர் வழிப்பதற்கு இடையிலே முப்பது பேருக்கு வழித்து விடலாம்டா தம்பி" கூறியவாறு யாசீன் பெருமூச்சொன்றை ஊதித் தள்ளுகிறுன்.

நான் எழுந்து நிற்கிறேன். தலையை விரல்களால் தடவிப் பார்க்கிறேன். கண்ணுடியைத் தடவுவது போல.........
...ஒரே மளமளப்பு.

இப்போது எனக்கு மஜீதை நினைக்கும் போதுதான் பயமாக இருக்கிறது. அவன் தான் என்னுடைய நண்பன். நான் தலை வழித்த பின் எப்போதுமே முதல் குட்டு குட்டுபவனும் அவன் தான்.

நான் வீட்டுக்கு வருகிறேன். உம்மா கரித்துண்டொன்றைத் தருகிறுர். வாப்பா கிணற்றுக் கொட்டில் வைத்து நசித்து தூளாக்குவதைப் போல் நானும் கரித்துண்டை பொடி செய்கிறேன். வாப்பாவைப் போலவே பல்விடுக்கில் வைத்து பக்கவாட்டில் ...மேலும் கீழுமாக தேய்க்கிறேன்

பெரிய அண்டாவில் உம்மா தண்ணீர் நிறைத்து வைத்து இருக்கிறுர். இடுப்பில் சுற்றி இருந்த சாரன் துண்டை மெல்ல அவிழ்த்து கிணற்றுக் கொட்டில் வைக்கிறேன். கிணற்றைச் சுற்றி ஓலை வேலி. வேலிக்குள் ஐந்தாறு கமுகம் மரங்கள். அங்கும் இங்குமாக வீழ்ந்து கிடந்த கமுகம் பூக்கள். ஒரு விளி மாமரம் பூவும் காயுமாக.

பிறந்த மேனியுடன் நிற்கிறேனே என எனக்கு சற்று வெட்கம்தான். சுற்றிவர வேலி உள்ளதால் வெட்கத்தை மறக்கிறேன். தண்ணீரைக் கோப்பையால் மொண்டு தலையில் ஊற்றுகிறேன். சவரம் செய்த மண்டை ஓட்டில் முதன் முதலில் தண்ணீர் பட்டதும் எரிவு ஏற்படுகிறது. இரண்டாவது, மூன்றுவது கோப்பையில் எல்லாம் சரியாகி......
...தொடர்ந்து அந்த குளிர் நீர் உடலில் படும் போதெல்லாம் ஏற்படும் ஆனந்தம்......திடீரென எங்கிருந்தோ சுகமான காற்று வேலிக் கடப்பின் ஊடாக வீச......நான் எனக்குத் தெரிந்த மிகப் பழைய பாடலின் அடியொன்றை ஹம் பண்ணியவாறு தொடர்ந்து குளிக்கிறேன்.

"என்னடா. இன்னும் முடியல்லியா?" உம்மா சப்தமிட்டுக் கேட்கிறுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் காதில் போட்டுக் கொள்ளாமல் குளிக்கிறேன். அன்று பகலெல்லாம் குளித்தாலும் எனக்கு ஆனந்தம்தான்.

"மாமாட்ட போகணும். குளிச்சிட்டு எடுடா" உம்மா மீண்டும் இரைந்தார்.

மாமாவின் வீட்டுக்குப் போகவேண்டும் என உம்மா கூறியதும் எனக்கு நஜீமாவின் நினைவு எழுந்தது. காலையில் மாமி கேட்டுக் கொண்டது போல் நீண்ட நேரம் தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தேன். மீண்டும் அங்கே போகவா? எனக்கு பேரானந்தம்,

பருத்தித் துணியில் தைத்த சேர்ட் ஒன்றையும் சாரனையும் அணிந்து தெருவுக்கு வருகிறேன். மாமாவின் வீட்டுக்கு போவதன் முன்னர் மஜீதைக் கண்டு விடக் கூடாது. கன்னிக் குட்டால் தலையை வெடிக்க வைத்து விடுவான்.

தெருச் சந்திக்கு வருகிறேன். சந்தி மூலையில் ஒரு பெரிய ஆலமரம். பல நீண்ட விழுதுகள். அதில் ஒன்றில்...... ...மஜீது தொங்கிக் கொண்டிருக்கிறான்.

அவனைப் பார்த்தும், பார்க்காததுமாக நான் போக முயற்சிக்கையில்......

"டேய் நவாஸ். நில்லுடா. எங்கேடா போறே?"

நான் மகுடிக்குக் கட்டுப்பட்டவனாக நிற்க......அவன் என் அருகில் வர......

"வாடா விளையாடலாம்."

"முடியாடா."

"எங்கேடா போறே?"

"எங்க மாமிக்கு அழகான பொம்பிளைப் புள்ள பிறந்திருக்கு. இன்றைக்கு அங்க நாப்பது. அங்கதான் போறன்."

"உங்க மாமி மகள் உனக்கு ஆருடா?"

"எனக்கு ஆருடா?"

"மச்சிடா."

அவன் அருகில் வருகிறான். வலக் கையை முதுக்குக்குள் மறைத்த வாறு......

"நான் வாறன்டா."

"சும்மா நில்லுடா"

மூடிய கைமுஷ்டியால் என் தலையில்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தலையை இரு கைகளாலும் பொ் துகிறேன்'

''கன்னிக்குட்டு எப்படி'?' அவன் கா படிந்த பற்க ளால் சிரிக்கிறான்.

''பொறு நீயும் தலை வழிப்பே, அப்போ பார்த்துக் குறேன்''

நான் நடையைத் தொடர்கிறேன். நஜீமாவின் ரோஜா நிறக் கைகள் என்னை அழைப்பது போல ஓர் உணர்வு எனக்குள் ஏற்படுகிறது,

# 3

பிற்பகல் நாலு மணி சுமார் இருக்கலாம். உம்மாவும் வாப்பாவும் நானும் மீண்டும் மாமியின் வீட்டுக்குப் போகிறோம், உம்மா காரைக்கால் சோமன் ஒன்றை உடுத்து சரக்க, சரக்க நடக்கிறார். வாப்பா சாரன் அணிந்து, கோத்து வாங்கி சால்வையால் போர்த்தி வேலைப்பாடமைந்த வெள்ளைத் தொப்பியொன்றைத் தலையில் போட்டு சற்று முன்னே நடக்கிறார். கணவனும், மனைவி யும் அருகருகே நடந்து செல்வது சற்று அகௌரவமாக அவர் கருதினார் போலும்.

''வாங்க மச்சான்''

''வாங்க மச்சி''

வாப்பாவையும். உம்மாவையும் மாமாவும், மாமியும் வரவேற்கின்றனர்.

மாமாவின் வீட்டில் ஒரே பரபரப்பு. மண்டபம் நிறைய பெண்கள். வெள்ளைப் பிடவை உடுத்த வயதானவர்கள், சோமனும். கைத்தறியும் உடுத்த கல்யாணமானவர்கள் வாய் நிறைய வெற்றிலை பாக்கு கொதுப்பியவாறு............ பக்கத்தில் உள்ள படிக்கத்தில் சூச்சுச் என்றவாறு......மாமி யின் தம்பி இரண்டொரு வெடில் கட்டுகளையும், நெருப்பு அவிந்த விறகுத் துண்டொன்றையும் எடுத்தவாறு கிணற் றடிக்குச் செல்கிறான். நானும் அவனை பின்பற்றுகிறேன்.

''டேய். தூர நில்லுடா''

வெடில் கட்டுகளைக் கொளுத்தி எறிகிறான், டப்...டப்... டம்...டம் . டமால் சப்தங்கள். சப்தம் ஓய்ந்ததும் நானும் சல்மாவும் குறைவெடில் பொறுக்குவதற்கு ஓடுகிறோம்.

''டேய். நெருப்பு இருக்கும்டா. கவனம்'' அவன் எச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கிறுன். சல்மா பயப்படுகிறுள். நான் அதில் போட்டுக் கொள்ளவில்லே. வெடிக்காத சில வெடில்களே பொறுக்கி எடுக்கிறேன். திரியில் மெலிதாக நெருப்பு இருந்தவைகளே காலால் மணலில் அமுக்கி நெருப்பை அணைத்து.........

"சல்மா. வாறியா சீறுவாணம் விடுவோம்?"

சல்மா சம்மதிக்கிறுள். நானும் அவளும் கிணற்றின் சேறு தாங்கியில் குந்தி இருந்து வெடில்களே பிரித்து அவை களின் கழுத்தை இரண்டாக மடித்து..... வெடில் மருந்தை சிமெந்து தரையீல் கொட்டி......நெருப்பை வைக்கிறேம். அது புஸ்..... என பளிச்சிடுகிறது. கைகொட்டி சிரிக்கி ருேம்.

நேரம் ஆக ஆக மாமியின் வீட்டில் பெண்கள் கூடு கிறுர்கள். ஒரே கலகலப்பு. மாமாவும் வாப்பாவும் வாசலில் மாதுளே மரத்தருகில் பாய் போட்டு உட்கார்ந்து கதைத் துக் கொண்டிருக்கிறுர்கள்.

அவர்கள் மச்சானும் மச்சினனும் மிக ஒற்றுமை, இரு வருமே வேளாண்மை செய்பவர்கள், மாமா வாப்பாவை விடக் கூடுதலாக வேளாண்மை செய்வதாக பேசிக்கொள் வார்கள்.

"டேய் நவாஸ். கையைக் கழுவிவிட்டு வாடா, ரொட்டி தின்ன" உம்மா கூப்பிடுகிறுர்.

நான் கையை அலம்புகிறேன்.

பெண்களுக்கு முன்ஞல் பன் ஓலேத் தட்டுகளில் பெரிய அளவிலான அரிசிமா ரொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. பொன் எழுத்துத் தட்டைகளில் இறைச்சிக் கறி, உறைப் பான ஆணம்.

நான் உம்மாவின் அருகில் அமர்ந்து ரொட்டித் துண்டு களே ஆணத்தில் துவைத்து, துவைத்து வாய்க்குள் வைத்து மெதுவாக அரைக்கிறேன்.

"ஏன்டா உறைக்குதா?" உம்மா கேட்டார்.

நான் ஆமென பாவம் காட்டுகிறேன்.

சிறிது நேரத்தில் சாப்பிட்ட தட்டைகள் ஒதுங்க வைக் கப் படுகின்றன,

மாமி புது சோமன் ஒன்றை உடுத்து, தலேயின் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமும் கொம்பு எடுத்து வாரிவிட்டு, காதில் பொன் அல்லுக்குத்துகள் பள பளக்க ..... கழுத்தில் பெரிய பொன் குண்டல மணிக்கோர்வை ஊஞ்சலாட...... கால்களில் கொலுசம் சல சலக்க ...கைகளில் தங்கக் காப்புகள் சகிதமாக நஜீமாவை ஏந்தியவாறு பெண்கள் மத்தியில் வந்து அமர்ந்தார்.

ஏனோ தெரியாது என் உம்மாவுக்கு அருகில்தான் அவர் இருந்தார்.

நான் உம்மர்வின் தோளினூடாக எட்டி நஜீமாவைப் பார்க்கிறேன். அவள் விழிகளை அங்கும் இங்கும் மேயவிட்டு சுற்றில் என் முகத்தில் நிற்பாட்டுகிறாள்.

ரோஜா நிற பட்டுச்சட்டை..... உருண்டையான கைகளில் சிறிய பட்டையான தங்க [வளையல்கள்......கண் பட்டு விடலாமென்று நெற்றியில் கருப்புப் பொட்டு. அழகென்றால் அழகு! அவ்வளவு அழகு!

நான் நஜீமாவையே பார்த்தவாறு ருக்கிறேன்.பார்க்கப் பார்க்க அழகாகவே இருக்கிறாள்.

என் உம்மா கையிலிருந்த பொட்டலத்தை விரித்து அதனுள் இருந்தவைகளை எடுத்து...... நஜீமாவின் உடலில் மெதுவாகப் போடுகிறார். நஜீமாவின் பட்டுக் கன்னங்களை தடவி விடுகிறார்.

"சுபைதா உம்மர் மருமகளுக்குச் சாணைக் கூறை போடுறுவாக்கும்" பக்கத்தில் இருந்த யாரோ ஒரு கிழவி சொல்லி விட்டுச் சிரிக்கிறாள்.

மாமி, உம்மா, பக்கத்திலிருந்த மற்றவர்கள் எல்லோரும் சிரிக்கிறார்கள். நானும் சிரிக்கிறேன்.

"அட, உன் மகனும் சிரிக்கிறாங்கா!" அந்தக் கிழவி மீண்டும் சொல்கிறாள்.

எல்லோர் கவனமும் என்மேல் திரும்புகிறது. எனக்கு வெட்கம். எங்கேயாவது ஓடிவிடவேண்டும் போன்ற ஓர் உணர்வு.

"ஏன் அவனுக்கு முறைப் பொண் இவதானே" எம் உம்மா சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியென்முல் இப்பவே கல்யாணத்தை வைச்சுட லாமே'' வேருெருத்தி கூறுகிருள்.

மண்டபம் சிரிப்பால் அதிர்கிறது. நஜீமாவுக்கு என்ன தோன்றியதோ அவளும் சிரிக்கிருள்,

உம்மா குழந்தையைத் தன் மடிக்கு வாங்குகிருர், ஒவ் வொருவராகக் கலைகின்றனர். இறுதியில் எனது உம்மாவும் வாப்பாவும். நானும் மிஞ்சுகிருேம்.

''மச்சி. ராவைக்கு நின்று சாப்பிட்டுட்டு போங்க'' மாமி வேண்டுகிருர்.

''இல்ல பகலய கறி தீச்சுவைச்சிருக்கன். நாங்க போயி டுறம்'' உம்மா கூறுகிருர்.

உம்மாவின் மடியில் கிடந்த நஜீமாவை வாப்பா தூக்கு கிருர். முகத்தை, முதுகை. கால்களை வருடிவிடுகிருர். வழ வழப்பான கன்னங்களில் மூக்கால் முத்தமிடுகிருர்.

திடீரென நஜீமா அழுகிருள்.

''ஒங்க மீசை குத்திவிட்டதாக்கும். அதுதான் குழந்தை அழுகுது!'' உம்மா கூறிவிட்டு வாப்பாவைப் பார்த்து கண்சிமிட்டுகிருர்.

நாங்கள் வீட்டை நோக்கி நடக்கிருேம்.

---

# 4

சுமார் ஒருவருடம் கடந்து விட்டது. எனக்கு வயது ஆறு, நஜீமாவுக்கு ஒன்று.

நானும் மஜீதும் ஆலமர விழுதுகளில் குரங்கு களாக தொங்கிக்கொண்டு விளையாடுகிருேம். கால்களைப் பூமியில் பதித்து பதித்து உத்தி ஊஞ்சல் ஆடு கிருேம், மஜீது விழுதில் ஆடியவாறே கால்களால் என்னைத் தடுக்கிருன். நான் கீழே விழுகிறேன். முனகலுக்கிடையே மீண்டும் எழுகிறேன். பலமாக விழுதைப் பிடித்து, வேக மாகத் தரையை உதைத்து ஆடியவாறு மஜீதின் கால்களில் அடிக்கிறேன், அவன் அலறியவாறு கீழே விழுகிருன், இப் போது நான் சிரிக்கிறேன்.

''டேய் நவாஸ், புள்ள புடிக்கிற ஆள் திரிகிருணும்டா, நீ கண்டியா?'' மஜீது கேட்டான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பிடிக்கிறவர்களைப் பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன்," மஜீதும் பலமுறை இவர்களைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறுன்.

பெரிய தொப்பை வயிற்றுடன் மீசை வைத்துக் கொண்டு, தோளில் பையைத் தூக்கியவாறு தெருக்களில் திரிகிருர்களாம். தனியாகத் தெருக்களில் திரியும் ஆண் பிள்ளைகளை ஒரேபிடியாக பிடித்து கோணிச் சாக்கில் போட்டுக் கொண்டு ஓடிவிடுவார்களாம், தாய்க்குத் தலைப்பிள்ளைகள் தான் அவர்களுக்குத் தேவையாம், குளம் கட்ட...... புதையல் எடுக்க..... கழுத்தைக் சுதறக் கதற வெட்டி பலி கொடுப்பார்களாம். நானும் எனது உம்மாவுக்குத் தலைப் பிள்ளை,

"இல்லடா மஜீது, நான் காணல்ல, நீ கண்டிருக்கியா?"

"இல்லடா, நான் அவனைக் கண்டா இப்படித்தான் ஒரு உதை உதைப்பேன்" காலை உயர்த்தி எனக்கு உதைத் தான், நான் சுருண்டு கீழே விழுந்தேன்,

"ஏன்டா எனக்கு உதைச்சே?" அழுதவாறு கேட்டேன்.

"நான் விழுதிலே ஆடச்சே எனக்கு ஏன் நீ உதைச்சே?"

"நீதானேடா எனக்கு முதலிலே காலால அடிச்சே, மூரடா",

மஜீது முரட்டுப் பயல் தான், அவனுடைய செயல்கள் எனக்குச் சில நேரங்களில் பிடிப்பதே இல்லை, என்ன செய்ய லாம்? அவனை விட்டால் எனக்கு ஆள் இல்லை,

"போடா பன்றி, நான் உன்னுடன் பேசப்போவதே இல்லை" அவனைக் கோபமா பார்த்து விட்டு நான் திருப்ப........

"டேய் நவாஸ், அதோ பிள்ளை பிடிக்கிறவன்டா..."... மஜீது கூறியவாறு அவனுடைய வீடு உள்ள திசையில் ஓட..... நான் தடுகெட்டு, தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் தயங்கி நிதானமான ஒரு நிலைக்கு வரும் போது...... தூரத்தே வரும் பிள்ளை பிடிப்பவனைச் சற்று உற்றுப் பார்த்தேன்,

தொப்பை வயிறு, பெரிய மீசை, தலையில் துருக்கித் தொப்பி, தொள தொளத்த கோட்டுச் சட்டை, கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு ஆள்.

சந்தேகமில்லை, பிள்ளை பிடிப்பவன்தான், உரிந்த சாரனை வாயில் கௌவுகிறேன், ஒரே ஓட்டம். திரும்பித் திரும்பிப் பார்த்து ...... மூச்சு இரைக்க, இரைக்க .... ஒரே ஓட்டமாக ஓடி .... வீட்டுக் கேட்டைத் தாண்டி உம்மாவின் மடியில் போய் விழுகிறேன்.

"என்னடா? என்ன?"

"புள்ள புடிக்கிறவன்கா. திரத்தி வாருன்"

"எங்கடா வாருன்?" ஊஞ்சலாடிக்கொண்டிருந்த வாப்பா கேட்டார்.

"அதோ...... அந்தா"

"கொஞ்சம் போய்ப் பாருங்களேன்"

"வேற வேலை இல்ல. புள்ளையாவது! புடிக்கிறவனாவது!"

"வாப்பா போகவாணு, உங்களையும் புடிச்சிட்டு போயிடுவான்"

நான் குஞ்சுக் கோழியாக உம்மாவின் மடியினுள் புதைகிறேன். உம்மா என் தலையை தடவி விடுகிறார். இதமாக இருக்கிறது.

"வாங்க மாஸ்டர், வாங்க" வாப்பா யாரையோ அழைப்பதைக் கேட்டு தலையை உயர்த்துகிறேன். அதே ஆள், அதே பிள்ளை பிடிகாரன்.

"இவன் தான், இந்த ஆள்தான்" நான் சப்தமிட்டவாறு உம்மாவின் மடியைக் கட்டிப் பிடிக்கிறேன்.

"அட, சும்மா இருடா, நம்ம பெரிய வாத்தியாரு. பாயில இருங்க மாஸ்டர். நம்ம பயல் உங்களைக் கண்டு புள்ள புடிக்கிற ஆள் என பயந்துட்டான்"

"ஆமா காசிம் (அதுதான் என் வாப்பாவின் பெயர்) ஒரு வகையில பார்க்கப்போனா நான் புள்ள புடிக்கிறவன் தான். பாடசாலைக்குப் போகாம தெருக்களிலே திரிகிற பிள்ளைகளை பிடித்து பாடசாலையிலே சேர்க்கிற வேலையை நான் இப்போ செய்துக்கிட்டு இருக்கிறேன். உனக்கிட்ட இவன் இருப்பதா கேள்விப்பட்டேன். அதனால்தான் உன் வீடுதேடி வந்திருக்கேன்"

"எனக்கும் அவனை படிப்பிக்க வேண்டும் என்றுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை. நாளைக்கே கொண்டு வந்து சேர்த்துடறன்''

''ரொம்ப சந்தோஷம். நான் வரட்டுமா?''

''சே.. சே வீட்டுக்கு வந்த பெரியவங்க வெறும் வாயோட போறதா? சுபைதா..... '' வாப்பா உம்மாவைப் பார்த்தார்.

''டேய். வாடா இப்படி''

நான் ஒடுங்கியவாறு ..... கைகளைக் கட்டியவாறு...... வர்சலுக்கு வருகிறேன்.

''நாளைக்கே பாடசாலைக்கு வந்துடு'' தொப்பை வயிறு கூறுகிறார்.

''ம் ..... ம் ....''

''நல்லா உடுத்துட்டு வா''

''ம்..... ம்......''

உம்மா சீனிமாவும், தேனீரும் வாப்பாவிடம் கொடுத் தனுப்பினார்.

அவர்கள் இருவரும் சீனிமாவை கடதாசித் துண்டினால் கோரிக் கோரி வாய்க்குள் போட்டவாறு நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

★ ☆ ★

''மாமி, உம்மா இதைக் கொடுத்துட்டு வரச்சொன் ஞங்க'' ஒரு பீங்கானுக்குள் சில கொழுக்கட்டைகளை வைத்து, அதை ஒரு பன் ஓலைத் தட்டால் மூடி, பீங்கானை யும் தட்டையும் சேர்த்து வெள்ளைச் சீலைத் துண்டொன் றுக்குள் வைத்து, சீலையின் நான்கு மூலைகளையும் மேற்பக்க மாக இறுக்கிக் கட்டி என் கையில் தந்திருந்த செப்பை மாமியின் கையில் கொடுக்கிறேன்.

உம்மா அடிக்கடி இப்படித்தான் செப்பு அனுப்புவார் சொந்தக்காரர்களுக்கு, வாப்பாவின் குடும்பத்தார்களுக் கெல்லாம் அனுப்புவார். சில நேரங்களில் கொழுக்கட்டை, சில சந்தர்ப்பங்களில் கோலியப்பம், சட்டியப்பம்...... முக் கிய வைபவங்களென்றால் கறுப்பு நிற ஹல்வா..... இவ் வாறு தின்பண்டங்கள் அனுப்புவார்.

''இன்றைக்கு என்ன உங்கிட்ட?'' மாமி கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாப்பா சூடுபோட்டு விட்டுக்கு நெல் கொண்டு வந்த தாம்''

''அப்படியென்றால் புதிர் எல்லாம் ஆக்குவீங்களே?''

''நாளைக்கு ஆக்கிறதா உம்மா சொன்ன. நீங்களும் வாங்க மாமி''

''கூப்பிட்டு அனுப்பின வாறம்''

''வரும்போது நஜீமாவையும் தூக்கி வருவீங்களா?''

''அவளைத் தனியே தொட்டிலுக்குள் விட்டுட்டு வரலாமா?''

நஜீமா திடீரென அழுவது கேட்கிறது.

''அடடட. இப்ப அழுகிருளே. நான் குளிக்கணுமே''

''மாமி நீங்க குளிங்க. நான் ஊஞ்சலிலே வைச்சு ஆட்டுறன்''

''வாடா நவாஸ். நல்ல புள்ள. நான் பாலைக் கொடுத்து தாறன். நீ ஊஞ்சலிலே வைச்சு ஆட்டு''

மாமி நஜீமாவைத் தூக்கி, மார்புச் சேலையை நீக்கி... அவளைத் தூக்கி தோளில் போட்டு முதுகைத் தட்டி...

''அப்படி ஊஞ்சலிலே இரு. மடிக்குள்ள வைக்கன். ஊஞ்சில மெல்ல மெல்ல ஆட்டு''

நான் ஊஞ்சலில் இருந்து மாமி கூறியது போன்றே கையால் கயிற்றைப் பிடித்து இழுத்து அசைத்து ஆட்டி விடுகிறேன்.

மாமி கிணற்றடிக்குப் போய்விட்டாள்.

நஜீமா கண்களை மூடியவாறு அமைதியாக என் மடியில் கிடக்கிருள். நான் அவள் முகத்தையே பார்த்தவாறு... என்னை மறந்தவாறு... கைகள் விசை கொடுத்த பொம்மை போல் கயிற்றைப் பிடித்து தானுக ஆட்டியவாறு...

நஜீமா நெளிகிருள். முறுகுகிருள். திடீரென என் தொடைகளில் ஈரம் பரவுவது போல்... சாரனுக்குள்ளால் தண்ணீர் வடிவது போல்... ஏதோ நாற்றம் வீசுவது போல்...

நான் மூக்கை சுளிக்கிறேன், மெதுவாக அவளுடைய கால்களைச் சற்று உயர்த்தி...

''மாமி ஓடியாங்க''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா?"

"வாங்க மாமி, வாங்களேன் கெதியா"

"என்னடா? குளிச்சிட்டு நிக்கேன். என்னடா அவசரம்?"

"நீங்க வரர்ட்டி நஜீமாவைக் கீழே போட்டுடுவேன்"

"டேய் ..டேய்...... போட்டுடாதடா, நான் வாறண்டா"

மாமி மாமாவின் சாரனொன்றை மார்புக்குமேலே கட்டியவாறு .. ஈரத்தலேயுடன்... உடம்பெல்லாம் ஈரமாக... வாத்து நடப்பதுபோல் நடந்து.. ஓடி வருகிறார்.

"என்னடா?"

"ஓ!"

"என்னடா?"

"கெதியா தூக்குங்க, நாறுது. சாரனைக் கழுவித் தாங்க"

மாமி என்ன நினைத்தாரோ வாய்விட்டுச் சிரிக்கிறார்.

---

# 5

அடுத்த நாள், எங்களது வீட்டில், பெரிய கொண்டாட்டம்.

மாமி நேரத்தோடேயே நஜீமாவையும் தூக்கிக் கொண்டு வந்து விட்டார், மாமா சாப்பாட்டு நேரத்துக்கு வருவதாகச் சொன்னார்,

உம்மாவும் மாமியுமாக குசினிக்குள் குந்தியவாறு கதையாக கதைத்தனர். இருவர் கைகளும் மரக்கறிகளை துப்புரவாக்கிக் கொண்டு இருந்தன, மாமி கீரையின் இலைகளை ஒவ்வொன்ருக பார்த்து புழுக்கள் இல்லாத இலைகளாக தெரிந்து எடுத்துக் கொண்டிருந்தார், உம்மா சுரக்காயை சீவி துண்டு துண்டாக அரிந்தார்,

வாப்பா வாசலில் கோணிச் சாக்கொன்றை கீழே விரித்து, சந்தையில் வாங்கி வந்திருந்த முழு நீளமான கய மீனைத் துண்டாடுகிறார். கத்தியினால் சுரண்டும் போது செதில்கள் பறக்கின்றன, நான் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறேன்,

குசினிக்குள் செல்கிறேன். என்னைக் கண்டதும் மாமி வாய்விட்டுச் சிரிக்கிறார். நேற்று நடந்ததை...... நான்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவஸ்தையை உம்மாவிடம் கூறுகிறார். உம்மாவும் சிரிக்கிறார்.

''நாளைக்கு இவன்தானே அவளை முடிக்கப்போகிறான். அப்புறம் அவளுக்கு ஏதாவது வாத வருத்தம் வந்து பாயோட கிடந்தா, இவன்தானே கழுவியும் விடணும்'' உம்மா கூறியவாறு என்னைப் பார்க்கிறார். நான் நழுவுகிறேன்.

சாப்பாட்டு நேரத்துக்கு மாமா வந்துவிடுகிறார்.

''சுபைதா, எல்லோருக்கும் ஒன்றாக்வே சாப்பாட்டை வை. எங்களுக்கு ஆண்களுக்கு வேறாகவும், உங்களுக்கு வேறாகவும் வைக்க வாணா, இது புதிர் சாப்பாடு. ஒன்றா சாப்பிடுவம்''

எல்லோரும் ஒன்றாக சாப்பிடுகிறோம். ஒரு பக்கத்தில் மாமாவும் மாமியும், மறுபக்கத்தில் உம்மாவும், வாப்பாவும், நானும்.

ஒரு பெரிய பொன் எழுத்து சகனில் குவியக் குவிய சோறு, கயமீன் பொரியல். கயமீன் உறைப்புக் கறி, கயமீன் தலைப் பாவாணம். சுரைக்காய் கறி, கத்தரிக்காய் கறி, கீரைச் சுண்டல், தயிர், சீனி, வாழைப் பழம், ஒரு கோப்பை நிறைய அரிசிமாப் பாணி.

வாப்பாவும், உம்மாவும் வெயர்வை வழிய வழிய...... சீலைத் துண்டால் முகத்தைத் துடைத்தவாறு...... ஒவ்வொரு பீங்கானாக காலி செய்கிறார்கள்.

உம்மாவும், மாமியும் குனிந்த தலை நிமிராமல்...... ஒவ்வொரு சிறு உருண்டைகளாக உருட்டி......

''சுபைதா, சோற்றைக் கொஞ்சம் குழைச்சுப் போட்டே' வாப்பா சொல்கிறார்

''புது அரிசிதானே. தண்ணீ கணக்கு தெரியாம விட்டிருக்கும்'' மாமா உம்மாவுக்காக வக்காலத்து வாங்குகிறார்.

''உம்மா, நஜீமாவுக்கு கொஞ்சம் பாணி கொடுக்கலாமா?'' நான் மெல்லக் கேட்கிறேன்.

''ஆசையைப் பாரு, அவளை கட்டினத்துக்குப் பிறது ஆசைதீர சாப்பாடு கொடு'' வாப்பா சொல்லிவிட்டுச் சிரிக்கிறார், மற்றவர்களும் சிரிக்கிறார்கள். எனக்கு அவமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தால் உடல் கூனிக் குறுகியது மௌனமாக தயிரும், வாழைப் பழமும், சீனியும், பாணியும் கலந்த சோற்றை வாய்க்குள் திணிக்கிறேன்,

★ ★ ★

அது ஹச்சுப் பெருநாள் காலம்.

பெருநாள் தினம் முடிந்து விட்டது.

நானும், மஜீதும் வேறு சில நண்பர்களுடன் 'சூ' விளையாடிக் கொண்டிருந்தோம்.

அப்போதெல்லாம் 'சூ' விளையாட்டு ஒரு பிரபல்யமான விளையாட்டு. சுமார் பதினைந்து இருபதடி விட்டத்தில் வட்டமொன்றைக் கீறி, அதனுள் ஒரு தரப்பினர் நிற்பர். வட்டத்துக்கு வெளியே மறு தரப்பினர். ஒவ்வொரு தரப்பிலும் ஆகக் குறைந்தது எட்டுப் பேராவது நிற்போம்.

வட்டத்துக்கு வெளியே நிற்தவர்களில் ஒருவன் 'சூ...' என சப்தமிட்டவாறு வட்டத்தினுள் நுழைந்து சுற்றிச் சுற்றி ஓடியவாறு உள்ளே நிற்பவர்களில் யாருக்காவது கையால் அடிக்க வேண்டும். அடிபட்டவன் கழிந்து விடுவான்.

உள்ளே நிற்பவர்களில் யாராவது ஓடித் திரிபவனை பாய்ந்து பிடிக்கலாம். ஓடுபவன் பலசாலியானால் பிடித்தவனை இழுத்தவாறு வட்டத்துக்கு வெளியே வந்து விடுவான். அவ்வாறு வந்தால் பிடித்தவன் கழிந்து விடுவான். ஓடுபவனை வட்டத்துக்கு வெளியே வரவொட்டாமல் உள்ளேயே வைத்துக் கொண்டிருந்தால், ஓடுபவன் கழிவான். வெளியே நிற்பவர்களில் மற்ற ஒருவன் இப்போது ஓடத் தொடங்குவான். எந்த தரப்பினர் சகலரையும் முதலில் இழக்கின்றனரோ அவர்கள் தோல்வி அடைவர்.

நானும் மஜீதும் எப்போதும் ஒரே தரப்பிலேயே விளையாடுவோம். அன்று நீண்ட நேரம் விளையாடினோம். எங்களுக்குத் தோல்வி, முகங்களைத் தொங்கப்போட்டவாறு தெருவில் வந்து கொண்டிருந்தோம்.

''மஜீது, நாங்க ராவைக்கு மெத்தை வீடு பார்க்கப் போறடா!''

''யார் யார்டா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான். உம்மா, வாப்பா, மாமி, மாமாவெல்லாம் வருவாங்க''

''எப்படிடா போறீங்க?''

''வாப்பா கரத்தையில போறதா சொல்லியிருக்கார் நீயும் வாறியா?''

''ஏலாடா. ராவைல எங்காச்சும் போஞ வாப்பா ஏசுவார்''

''நாங்க போயிட்டு வந்து உனக்கிட்ட சொல்றன்''

மெத்தை வீடு பார்க்க மஜீது வரமாட்டானே என்ற துக்கத்துடன் வீட்டுக்குச் செல்கிறேன்.

★ ★ ★

வாப்பா இரட்டை மாட்டு கரத்தையொன்றை ஒழுங்கு செய்திருந்தார். பெரிய பெரிய கொம்புகளுடன் கூடிய நாம்பன்கள். ஓலையால் வேய்ந்த கூரை. அதனுள் சலங் கைகள் முன்பின் பக்கங்களில் கட்டி தொங்க விடப்பட் டிருந்தன. நாம்பன்களின் கழுத்திலும் சலங்கைகள்.

எங்களது குடும்பமும், மாமா குடும்பமும் வண்டியில் ஏறினோம். இரவு இஷா தொழுகைக்குப் பின்னர், அப்போ துதான் நிலவு உதயமாகிக் கொண்டிருந்தது.

வண்டில் சலங்கைச் சப்தம் சல் சல்... என ஒலிக்க ......வண்டிக்கார பிச்சையின் மறமறத்த குரலில் பாட லொன்று தற்கொலை செய்ய .....உம்மாவும், மாமியும் ஊர்க் கதைகள் பேச......வண்டில் ஆடி அசைந்து கரடுமுரடான பாதையில் ஓடியது.

நான் வண்டியின் பின் கம்பைப் பிடித்தவாறு பாதை யைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சலங்கைச் சப்தம், வண்டில் அசைவு ஆகியவற்றால் மாமியின் மடியில் தூங்கிக்கொண்டிருந்த நஜீமா எழுந்து விட்டாள். ஒப்பாரி...... மாமியின் ஆறுதல் வார்த்தைகள் ......அவள் அழுகையை நிறுத்தவில்லை.

''மச்சி, பிள்ளையைத் தாங்க. நான் வைச்சிக்கிறன்'' உம்மா கேட்டார். நஜீமா கைமாறினாள். அழுகை அடங்க வில்லை. மாமா தூக்கித் தோளில் போட்டார். அழுகை பலத்தது, வாப்பா அவளை வாங்கித் தோளில் போட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகையை நிறுத்த என்னவெல்லாமோ தந்திரம் செய் தார். அழுகை அடங்கவே இல்லை.

''வாப்பா. எங்கிட்ட தாங்க. எங்கிட்ட அழமாட்டா'' நான் கேட்டேன்.

நஜீமா என் மடிக்குள் மாறினள்,

நான் அவளை மடியினுள் போட்டு ஊஞ்சலில் வைத்து ஆட்டும் போது வழக்கமாக பாடும் பாடல் ஒன்றைப் பாடினேன்:

சில விஞடிகளில் அழுகை நின்றது. நஜீமா கால் கை களை அடித்து என் மடியில் விளையாடத் தொடங்கி விட் டாள்.

''பாரேன், இப்போதே மச்சானின் மடி தேவைப்படு கிறது'' உம்மா கூறினர்.

எல்லோரும் சிரித்தனர். நான் பாடலைத் தொடர்ந் தேன்.

மெத்தை வீடு கட்டியிருந்த இடம் எங்களது வீட்டி லிருந்து சுமரார் அரைமைல் தூரமிருக்கலாம், பிரதான வீதிக்கருகிலுள்ள வெற்று வளவொன்றினுள் கட்டப்பட் டிருந்தது,

பெருநாள் காலங்களில் எமது கிராமத்தில் இவ்வாறான மெத்தை வீடுகள் கட்டுவது வழக்கம். பலரிடம் பணம் அறவிட்டு, பெரிய தூண்களை பூமியில் ஓட்டி சுமார் பத்து அடி உயரத்துக்கு மேல் ஓலைக் கூரையுடன் வீடு அமைத்து கிடுகால் மிக ரம்யமாக சுவர் அமைத்து. சுவர்களுக்கெல் லாம் குருத்தோலைகளாலும், வண்ணத் தாள்களாலும் சோடனைகள் செய்து, வீடு நிறைய பலூன்கள், மணிக் குன்றுகள் போன்றவற்றல் அலங்கரித்து .....காஸ் லைட்டு கள் ஒளி வெள்ளம் பாய்ச்ச ..... மிக ஆடம்பரமாக...... மிக ரம்யமாக...... மிக கலகலப்பாக..... மெத்தை வீடு காட்சியளிக்கும். ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் அதற் காக அமைக்கப்பட்ட பலகை ஏணியால் ஏறி, உள்ளே சென்று ..... சற்று நேரம் சொர்க்கத்தினுள் இருக்கிறோம் என்ற உணர்வைப் பெற்று...... 'டேய். டேய். சோடனை களைத் தொடாதங்கடா...... பலூனைப் பிய்க்காதங்கடா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், போதும். போங்கடா......' சப்தங்களைக் கேட்டு, மீண்டும் ஏணி படிகளால் இறங்கி......

நாங்கள் மெத்தை வீட்டுக்குள் ஏறியதும் "காசீம். வா மச்சான்" என்ற அழைப்புக்கு ஆள் ஆனேம். அழைத்தது வேறு யாருமல்ல. மெத்தைக் வீட்டைக் கட்டிய மீரான் தான்.

"குடும்பத்தோட வந்தியா?"

"ஓம் மீரான்"

"அவங்க சுத்திப் பார்க்கட்டும். நாம வா. அப்படி இருந்து கதைத்துக் கொண்டிருப்பம்"

நாங்கள் மெத்தை வீட்டைச் சுற்றிப் பார்த்தோம். மஜீது அடிக்கடி சொல்வானே 'சொர்க்கம்' என்று. அது இதுதானே? அவ்வளவு சோடனைகள், அவ்வளவு சந்தோசம்.

விசேட விருந்தினர்களுக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த அன்னுசி சர்பத்தை மீரான் எங்களுக்குக் குடிக்கத் தந்தார். எனக்கு அன்னுசி சர்பத் குடிப்பது அது தான் முதல் தடவை. இனிப்பு, அன்னுசி துண்டுகள் கடிபடும் போது ஏற்படும் புளிப்பு, கசகச கொட்டையின் பஞ்சு ருசி, மணம்.... எல்லாமே அற்புத பானமாக அதை ஆக்கி இருந்தன. சொர்க்கத்தில் குடிப்பதெல்லாம் இப்படித்தான் ருசியாக இருக்குமோ? நான் சிந்தித்தேன்.

## 6

எனக்கு நஜிமாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. மஜீது என்னுடன் கோபம். காலையில் வார் விளையாடும் போது நான் அவனுடைய முதுகில் பலமாக அடித்து விட்டேனும், விளையாட்டில் அடிப்பது அடிபடுவது எல்லாமே சகஜம். அவனுடைய எண்ணப்படி நான் அடிபட பிறந்தவன், அவன் அடிக்கப் பிறந்தவன்

வார் விளையாட்டும் ருசிகர விளையாட்டுத்தான். ஆறு. ஏழுபேர் கொண்ட இரண்டு பிரிவுகளாக நாங்கள் பிரிந்து கொள்வோம். எப்போதும் நானும், மஜீதும் ஒரு பிரிவிலேயே இருப்போம். இன்று என்னவோ அவன் எதிர் தரப்புக்குச் சென்று விட்டான். கடந்த இரவு அவனில்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மெத்தைவீடு பார்க்கப்போன கோபமாக இருக்கலாம், அல்லது பொருமையாக இருக்கலாம். அவனுடைய உணர்ச்சிகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து நான் நடக்கவேண்டி இருக்கிறது.

சுமார் நூற்றிச்சொச்சம் அடி தூரத்தில் இரு தரப்பினரும் நிற்போம். ஒரு தரப்பிலுள்ள ஒருவன் அங்கிருந்து நடந்துவந்து அல்லது கோங்கோட்டமாக வந்து எதிர் தரப்பிலுள்ள ஒருவனின் கையை அவனுக்கு எட்டிய அளவு தூரத்தே நின்று தொட்டுவிட்டு தலைதெறிக்க ஓடுவான். கை தொடுபட்டவன், தொட்டுவிட்டு ஓடுபவனை துரத்தி ஓட.... அவன் ஓட.... இவன் ஓட.... பின்னால் ஓடுபவன் முன்னால் ஓடுபவனின் முதுகில் பளீர் என அறைய, அறைபட்டவன் சரணடைந்து கழிவான். முன்னால் ஓடுபவன் தன்னைத் துரத்துபவனின் கையால் அடிபடாமல், தனது தரப்புக்குள் புகுந்துவிட்டால் உடனே துரத்திவந்தவன் எதிர்புறமாக முதலைத் திரும்பல் திரும்பி ஓடத்தொடங்குவான். அவனை மற்றத்தரப்பில் இருந்து வேறொருவன் துரத்துவான். இப்படி ஓடுவதும், துரத்துவதும்... துரத்துவதும், ஓடுவதுமாக விளையாட்டு தொடரும். ஒவ்வொருவரின் முதுகிலும் பளீர் பட்டவுடன் அவர்கள் முகத்தைத் தொங்கவிட்டவாறு வரும் காட்சி... பெரிய பரிதாபமாக இருக்கும். இதற்கிடையில் மறியல் வைப்பது .. மறியலில் இருப்பவர்களை பலவந்தமாக எதிரி முகாமுக்குள் சென்று கடத்தி வருவது எல்லாமே நடக்கும்.

ஒரு தரப்பிலிருந்து வார் கொடுத்துவிட்டு ஓடுபவனை, குறிப்பிட்ட இடம் ஒன்றுக்குள் வைத்து மற்ற தரப்பினர் அடித்துவிட்டால் அவனை மறியல் வைத்துவிடுவார்கள். மறியலில் சிக்குண்டவன் கைகளைக் கட்டியவாறு அதற்காக கீறப்பட்டிருக்கும் கோட்டில். தன் தரப்பினர் வந்து காப்பாற்றிச் செல்லும்வரை நின்றுகொண்டே இருப்பான். அவனுடைய தரப்பைச்சேர்ந்த, வேகமாக ஓடக்கூடிய யாராவது ஒருவன் எதிர்தரப்புக்குள் நுழைந்து தன்னை எதிர்த்து துரத்துபவனை மறுக்கி, ஏமாற்றி கைதானவனின் அருகில் சென்று, அவனைத்தொட்டு இருவருமாக மீண்டும் மறுக்கி, ஏமாற்றி தங்களுடைய தரப்பைச் சென்று அடைவர்.

இவ்வாறு நீண்டநேரம் விளையாட்டு தொடரும்.

இன்று காலை நானும், மஜீதும் எதிர் எதிர் தரப்பில் விளையாடினோம். அகஸ்மாத்தாக அவனை நான் துரத்த வேண்டி ஏற்பட்டுவிட்டது. அவன் ஓட, நான் துரத்த...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கால்தடுக்கி விழ... நான் ஒரே பாய்ச்சலாக பாய்ந்து அவனின் முதுகில் அடிக்க...

அது அவனுக்குப் பொறுக்கவில்லை. என்னுடன் பேசாமல் போய்விட்டான்.

நான் இப்போது யாருடன் விளையாடுவது?

நஜீமாவைத் தூக்கி மடியில்வைத்து ஊஞ்சலாடினால் தேவலாம்போல் இருந்தது.

கதவு திறந்துகிடந்தது. மாமியைக் காணவில்லை. ஊஞ்சலருகில் சென்றேன். நஜீமா கால்கைகளை அடித்து... சிரித்தவாறு விளையாடிக்கொண்டு படுக்கிறாள். அருகில் சென்றேன். ஒரே நாற்றம். மெதுவாக கால்களை தூக்கிப்பார்த்தேன். சே! குமட்டிக்கொண்டு வந்தது. கழுவி விடுவதற்கு மாமியைக் காணவில்லையே.

"மாமி .. மாமிய்ய்ய்..." கூப்பிட்டேன்.

பதிலில்லை. மீண்டும், மீண்டும் சற்று உரக்க கூப்பிட்டேன்.

எங்கே போய்விட்டார்?

நஜீமாவை அப்படியே விட்டுவைக்க எனக்கு மனமில்லை. நான் தீர்மானத்துக்கு வந்தேன். உம்மா புதிர் சமைத்த அன்று சொன்னாரே 'நாளைக்கு அவளுக்கு ஒரு வாதவருத்தம் வந்தா இவன்தானே கழுவியும் விடணும்னு.'

குசினிக்குள் சென்றேன். மண் பானைக்குள் சுடுநீர் இருந்தது. அதை வாளியொன்றினுள் ஊற்றி குளிர் நீருடன் கலந்தேன். நஜீமாவை மெதுவாக தூக்கிவந்து, படிக்கட்டில் உட்கார்ந்து நீட்டிய என் கால்களின்மேல் அவளை வைத்து, நீரை ஊற்றி .. ஊற்றித் தேய்த்து... ஒரு பக்கம் குமட்டல் மீண்டும் நீரை ஊற்றி .. தேய்த்து... சுத்தமாக கழுவினேன். எல்லாம் முடிந்துவிட்டது.

"நவாஸ், என்னடா செய்கிறே?" திடீரென மாமியின் குரல்கேட்டு திடுக்குற்று நிமிர்ந்தேன்.

வாசலில் மாமி.

எனக்கு வெட்கம். மாமி நிலைமையைப் புரிந்துகொண்டார்.

"நான் உங்களைக் கூப்பிட்டேன் மாமி; நீங்க வரல்ல"

மாமி சிரித்தார். நானும் சிரித்தேன். என் இடுக்கில் ஈரத்துடன் இருந்த நஜீமாவும் சிரித்தாள்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஏழுவயதாகி விட்டது. நஜீமாவுக்கு இரண்டு.

எனது உம்மாவின் தங்கைவீட்டில ஒரு திருமணம். உம்மாவின் தங்கச்சி எனக்கு சாச்சி. மணப்பெண் எனக்கு சகோதரி முறை.

காலையிலேயே அங்கு சென்றுவிட்டேன்.

அது இரண்டு அறைகளுடனும் ஒரு வராந்தாவுடனும் கூடிய களிமன் வீடு. ஓரமாக ஓலைக் குசினி. வீட்டுக்குள் கடுகு வண்ணம், காரைக்கால், பால் வண்ணச் சோமன் களால் வெள்ளைகட்டி... வராந்தாவிலும் வெள்ளைகட்டி... வாசலில் நீள்சதுரமான பந்தல்போட்டு அதன்மேல் குறுக் கும் நெடுக்குமாக கயிறு இழுத்து, அதன்மேல் சீலைகளினால் வெள்ளைகட்டி... பந்தல் கால்களுக்கிடையில் மஞ்சளும் கரும் பச்சையும் கலந்த குருத்தோலைகளைத் தூங்கவிட்டு... பந்தலுக்குள் குருத்துமண் கொட்டி... கடந்த இரவு எதற் காகவோ வெடிககவைத்த பட்டாசு வெடில்களின் பிய்ந்த தாள் துகள்கள் அங்கும்இங்கும் பறந்துகிடக்க .. என் வயதை யொத்த பையன்களும், சிறுமிகளும் அரைநிர்வாண ஆடை களுடன் இலட்சியமில்லாமல் ஆளையாள் துரத்தி, துரத்தி ஓடிஓடித் திரிந்ததால் புழுதிமண் காற்றோடு மேல்கிழம்ப... இதுதான் கல்யாண வீடு.

காலையிலேயே சாச்சா ஏற்பாடு செய்திருந்த இரண்டு செட் பறையடிப்பவர்கள் வந்துவிட்டார்கள். இருவரிடம் பறை. மற்ற இருவரிடமும் ஊதுகுழல்.

ஊது குழல்களை வாய்க்குள்வைத்து கன்னங்கள் முட்டை அடைத்தவைகளாக உப்ப... தொடர்ந்து ஊத .. பறை யடிப்பவர்கள் இரு கைகளிலும் வைத்திருந்த சிறு பிரம்புத் தடியால் பறையை அறைய... டான்... டான்... டான்... சப் தங்கள் காற்றோடுகலகக .. பிள்ளைகள் பட்டாளம் ஈய்க்க ளாக அவர்களைச்சுற்றி மொய்க்க... வீடு ஒரே அளர்க்களப் பட்டது.

சாச்சா எங்கிருந்தோ பாட்டுப்பெட்டி ஒன்றைக்கொண்டு வந்தார். கூடவே ஒரு ஆளும் வந்தான். சற்சதுரமான கறுப்புநிறப் பெட்டி. அதனோடு சேர்த்து நாயொன்று வாயைப் பிளந்தவாறு பாட்டுககேட்பதைப் போன்ற தோற் றத்துடன்கூடிய படம் போட்ட ஒரு பென்னம்பெரிய குழல்.

''பறையை நிப்பாட்டுங்க, குழலைப் போடுறன்'' வந்த வன் சொன்னான்.

''நீங்க அழைப்பு எடுக்கப்போங்க'' பறை அடிப்பவர் களைப்பார்த்து சாச்சா கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறைச் சப்தம் நின்றது. பறை அடித்தவர்கள் பெரிய வட்டாவில் இருந்த வெற்றிலை பாக்கை சுண்ணும்பைத் தேய்த்து கொதுப்பினர்.

' எங்க எங்க போகணுமென்னு ஒரு பொடியனைக்கூட அனுப்புங்க'' பறை அடித்தவர்களில் ஒருவன் கூறினன்.

சாச்சா சுற்றும்முற்றும் திரும்பிப்பார்த்தார். என்னில் பார்வையை நிலைப்படுத்தினர்.

''டேய் நவாஸ். இங்கே வாடா''

விநாடிக்குள் அவர் அருகில் நின்றேன்.

''டேய். நீ இவங்களை நான் சொல்ற வீடுகளுக்கெல்லாம் அழைத்துப்போய் கல்யாணத்துக்கு அவங்களை அழைச்சதா சொல்லிட்டு வா''

எனக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போவதில் ஒரு பக்கம் விருப்பம். மறுபக்கம் வெறுப்பு. பறை அடிப்பதை பார்த்தாகிவிட்டது. குழல் பெட்டியில் பாட்டுப்படிப்பதை பார்த்தாகணும். அதறகிடையில் எனக்கு இன்னுமோர் ஆசை. பறையடிப்பதையும், பாட்டுப்பெட்டியில் பாட்டுப் படிப்பதையும் நஜீமாவை தூக்கிக் கொண்டுவந்து காட்ட வேண்டும்.

நான் யோசித்தவாறு நிற்பதை சாச்சா கண்டுகொண்டார்.

''பேயனைப்போல என்னடா யோசிக்கிறே?''

''ரெண்டு பாட்டு போட்டீங்கன்னு கேட்டுட்டுப் போவன்'' நான் துணிச்சலுடன் சொன்னேன்.

''நீ ரெண்டுபாட்டைப் போடுப்பா''

பாட்டுப்பெட்டியுடன் வந்தவன் அகன்ற வாய்க்குழலை பெட்டியில் மாட்டி, சிறிய பலகைப் பெட்டியைத் திறநது ஊசியொன்றை எடுத்து எதிலோ சொருகி திறப்பு போன்ற ஒன்றால் மளமளவென சுற்றி, கூகையை இறுக்கி, றெக்கோட் ஒன்றை எடுத்து, மூலையொன்றில் பொருத்தி, ஊசி பொருத்திய செப்பை மெதுவாக றெககோட்டில் வைத்து எதையோ தட்டிவிட்டான்.

''எண்ணி எண்ணி பார்க்கமனம் இன்பம்......''

பிள்ளைகள் பட்டாளம் நாய்களாக வாயைத் திறந்தவாறு நிற்க... குசினிக்குள் நின்ற பெண்கள் வெளியே முகங்களை நீட்டி எட்டிப்பார்க்க.. பெட்டியை இயககுபவன் பெண்கள் பக்கமாக அடிக்கடி முகத்தைத் திருபப...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் முடிந்தது.

றெக்கோட்டை மற்றப் பக்கத்துக்கு மாற்றி, சூகை யேற்றி, ஊசி மாற்றி, விசையைத் தட்டிவிட... ''உன் கண் உன்னை ஏமாற்றிஞல்... டடடா... டடடா...''

கூடிநின்றவர்கள் ''டடடா...டடடா'' என சப்தமிட...

''போதுமாடா? சரி சரி. இவங்களை அழைச்சிட்டுப் போடா''

சாச்சா போகவேண்டிய வீடுகளின் பட்டியலைச் சொன்ஞர்.

---

# 7

சாச்சா தந்த பட்டியலின்படி பறையடிப்பவர்களை நான் அழைத்துக்கொண்டு போகவேண்டிய முதலாவது வீடு எங்களுடையது. அடுத்தது மாமியின் வீடு.

எனக்கு உடனேயே நஜீமாவைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. மாமியின் வீட்டுக்கு இவர்களை அழைத்துச்சென்முல், அவர்களையும் அழைத்து விட்டு நஜீமாவையும் தூக்கிக்கொண்டு ஏனைய வீடுகளுக்குப் போகலாம். மாமியின் வீட்டுக்கு முதலில் சென்றேன். மாமா வீட்டில் இருந்தார்.

''ம். அடிங்க பறையை'' பெரிய மனிதனுக கட்டளையிட்டேன். ஒருவன் வாயில் குழலைப் பொருத்த, இருதரம் மற்றவன் டான்... டன்... டான் டான்... சில நிமிடங்களுக்குத் தொடர... நஜீமா குடுகுடுவென நடந்துவந்து கைகளைக் கொட்டிச் சிரிக்க...

நான் உள்ளே சென்றேன்.

''மாமி நான் அஞ்சாறு ஊடுகளுக்கு இவங்களை அழைச்சிட்டு போகணும். நஜீமாவையும் தூக்கிட்டுப் போகட்டா?''

மாமி சம்மதித்தார். நஜீமாவைத் தூக்கிவந்து ஒரு கவுணைப் போட்டுவிட்டார்.

பறையடிப்பவர்களுக்கு மாமா சில்லறை கொடுத்தார்.

நஜீமாவையும் இடுக்கிக்கொண்டு நான் அவர்களை எனது வீட்டுக்குக் கூட்டிச்சென்றேன். அடுத்தடுத்த வீடுகளுக்கும் இவ்வாறே.

பறை அடிப்பதை, குழல் ஊதுவதைப் பார்க்கும்போது நஜீமாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி என்பதை அடிக்கடி அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய முகம் காட்டியது. அவளையும் இடுப்பில் ஏந்திய வாறு நான் அந்தக் காட்சிகளைப்பார்த்து ரசித்தது எனக்கும் பெரிய சந்தோசமாக இருந்தது.

அழைப்புகள் முடிந்து சாச்சியின் வீட்டுக்குச் சென்றோம். பாட்டுப்பெட்டி இன்னும் படித்துக்கொண்டிருந்தது. நான் அருகே சென்று, மடியில் நஜீமாவை வைத்தவாறு இருந்தேன். பாட்டுப்பெட்டியில் பாட்டு கேட்பது இதுதான் அவளுக்கு முதல் தடவை. நாமென்றால் ஏற்கனவேயே இரண்டொரு தடவைகள் வேறு எங்கேயோ கேட்டிருக்கிறேன்.

பறையடிப்பவர்கள் கல்யாண வீட்டில் பலத்த சப்தத்தில் பறைகளைத் தட்டினார்கள்.

வீடு ஒரே அமர்க்களப்பட்டது.

பிற்பகலாகிவிட்டது. மதிரோண்டி (மருதாணியை எனது கிராமத்தில் இப்படித்தான் சொல்வர்) அழைப்பிற்காக சாச்சி அழைத்த பெண்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். சுமார் நாற்பது பெண்கள். காதுகளில் அல்லுக்குத்து. கழுத்தில் பொன்மணிக் கோர்வை. கைகளில் தங்கக் காப்புகள் சகிதம் சோமன் பிடவைகளில் அவர்கள் காட்சியளித்தனர். விதவைகள் வெள்ளைப் பிடவைகளில்.

கொதுகொதுவென ஒரே கதை. அப்படி என்னதான் கதைக்கிறார்களோ? வட்டாவில் இருந்த வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி பாக்குத்தூள் வைத்து சாச்சி ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறார்.

நஜீமாவைத் தூக்கிக்கொண்டு மாமி வருகிறார். என்னை அவள் கண்டதுதான் தாமதம், கைகளை உயர்த்தி என்னிடம் வருவதற்காக மாமியின் இடுக்கிலிருந்து உன்னி உன்னிக் கிளம்புகிறாள்.

''இந்தாடா. உன்னைக் கண்டுட்டாள். வைச்சிக்க'' மாமி நஜீமாவை என்னிடம் கைமாறுகிறார்.

இதுவரை வராத பெண்களை அழைப்பதற்காக அங்கு கூடியிருந்தவர்கள் எழுந்துநின்று வாய்க்குள் விரலைவிட்டு குரவை ஒலி எழுப்பினர். மூன்று நான்கு தடவைகள் சப்தம் எழுப்பினர்.

அழைத்த பெண்களெல்லாம் வந்துவிட்டனர் போலும்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து மதிரோண்டி எடுத்து வருபவர்கள் வந்துகொண்டிருப்பதாக யாரோ ஒரு பையன் கூறிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மதிரோண்டி வருகுதாங்கா... குடையை எடுங்ககா. எழும்புங்ககா'' சப்தங்கள்.

மணப்பெண்ணுக்கு சகோதரி முறையான ஒரு பெண் மோகினிப்பட்டு சோமன் அணிந்து சற்று அழகாகக் காட்சி யளித்தாள். இவளைத்தான் மதிரோண்டி வாங்குவதற்காக சாச்சி ஏற்பாடு பண்ணியிருந்தார்.

வீட்டிலிருந்து பெண்கள் எல்லோரும் புறப்படும்போது பெருத்த சப்தத்தில் குரவையிட்டனர். பறை அடிப்பவர்கள் பறைகளைத் தட்டியவாறு முன்னே செல்ல பெண்கள் பின் தொடர்ந்தனர்.

நான் நஜீமாவை இடுக்கிக்கொண்டு பறையடிப்பவர் களுக்கு அருகேயே சென்றுகொண்டிருந்தேன். தெரு புழுதி யைக் கக்கியது.

தெரு மூலைக்கு வந்து, குரவையிட்டு, பறையடித்து இன்னும் முன்னேறினோம்.

சற்றுத்தூரத்தே மாப்பிள்ளைத் தரப்பு பெண்கள் கூட் டம் தெரிந்தது.

எங்கள் தரப்பில் மதிரோண்டி வாங்கப்போகும் பெண் இரட்டை முக்காடிட்டு நடுநாயகமாக குடையின்கீழ் நின் ருள். நாங்கள் அவர்களைநோக்கி சற்று நெருங்க, அவர்கள் எங்களை நோக்கி ஆமை வேகத்தில் நெருங்க...

அவர்களும் ஒரு பறை செட் எடுத்திருந்தனர். அவர் கள் தரப்பிலும் மதிரோண்டி கொண்டுவருவதற்காக இரட்டை முக்காடிட்ட ஒருத்தி குடையின்கீழ் நின்ருள்.

இரண்டு தரப்பினர்களுக்கிடையிலும் இப்போது சுமார் ஐம்பது அடிகள் வித்தியாசம் இருக்கலாம்.

இரண்டுபக்க பறைகளும் வேகமாக அடிபட்டன. பறை அடித்தவர்களில் ஒருவனின் தோளில் போட்டிருந்த துண்டு அவன் பறையை அடிப்பதற்காக உடம்பை ஆட்டிய வேகத் தில் கீழேவிழ கூடிநின்ற பிள்ளைகள் கைகொட்டிச் சிரிக்க... பெரிய அமர்க்களம்.

இருதரப்பு பெண்களும் நின்ற இடத்தில் நின்றவாறு குரவைசளை விட்டுத்தள்ளினர். மாமியின் தம்பி 'ஏன்டாம்பி' பட்டாசுக்கட்டுகளை வெடித்துத் தள்ளினுன். நஜீமாவின் நாற்பதாவதுநாள் கொண்டாட்டத்திலும் இவன் தான் வெடில்கள் கொளுத்தினுன்.

தொடர்ந்து பறை... தொடர்ந்து குரவை... தொடர்ந்து பட்டாசுகளின் பட்...பட்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளை தரப்பு பெண்கள் நின்ற இடத்திலிருந்து அசையவே இல்லை.

''அவங்க வரமாட்டாங்ககா. நாமாங்கா போகணும்'' எங்கள் தரப்பிலிருந்த ஒரு கிழவி சப்தமிட்டுக் கூறினாள்.

எங்கள் தரப்பு அசையத் தொடங்கியது. இரு தரப்பின ரும் மெதுவாக முன்னேற.. குரவைச் சப்தம் காதை அடைக்க வெடில் இடிச்சப்தங்கள்.. பறை அடிப்பவர் கள் உச்சஸ்தான ஒலியில் அடிக்க... இரு தரப்பினரும் நெருங்கினர்.

மாப்பிள்ளை தரப்பில் குடைக்குள் நின்ற பெண் தன் கையில் இருந்த மருதாணித்தட்டை பெண் பகுதியில் நின்ற வளிடம் கையளித்தாள். இரு தரப்பினரும் பெரும் சப்தத் துடன் குரவை ஒலி எழுப்பினர்.

''மாப்பிள்ளைவீட்டு பந்தலிலிருந்து வந்த நாச்சிமார் எல்லாம் பெண்வீட்டு பந்தலுக்கு வாங்க'' என்றாள் பெண் தரப்பில் ஒருத்தி.

குடைகள் இரண்டும் மூடப்பட்டன. மாப்பிள்ளை, பெண் தரப்பினர் பெண் வீட்டைநோக்கி நடந்தனர். பறை அடிப்பவர்கள் முன்னே பறையுடன்.

பெண்வீட்டில் பந்தலின்கீழ். விருந்தையில் பெண்கள் உட்கார்ந்தனர் பெரும் கலகலப்பு. பாட்டுப்பெட்டியில் மீண்டும் 'எண்ணி எண்ணிப் பார்க்க மனம்...'

வந்தவர்கள் அனைவருக்கும் வெற்றிலைச்சுருள்கள் வழங் கப்பட்டன. ஒவ்வொரு சுருள்களுக்குள்ளும் நாலைந்து வெற் றிலைகள். ஐந்தாறு பாக்குகள்.

பெண்கள் ஒவ்வொருவராக கலையத்தொடங்கினர்.

மாப்பிள்ளை வீட்டாருக்கு மிக நெருங்கிய உறவுமுறை யான சில பெண்கள் மட்டும் அறைக்குள் நுழைத்தனர். உள்ளே கிடந்த சப்ரமஞ்சக் கட்டிலொன்றில் மணப்பெண் மோகினிப்பட்டுச் சோமன் அணிந்து, அடக்கமே உருவாக, குனிந்த தலையாக வீற்றிருந்தாள்.

மணப்பெண் என்னைவிட நாலைந்து வயதுதான் மூத்த வள் அவளுக்கு பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று வய திருக்கலாம்.

மாப்பிள்ளையின் சகோதரி ஒருத்தி மருதாணி பீரிசை எடுத்து, அதன்மேல் மூடியிருந்த தட்டைத்திறந்து, உள்ளே மையாக அரைத்துவைத்திருந்த மருதாணியில் கையளவு எடுத்து மணபெண்ணின் கையில் பதித்தாள். கூடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு ரூபா தாளையும் வைத்தாள். இவளைத்தொடர்ந்து ஏனைய பெண்களும் மருதாணியை தொட்டுத்தொட்டு மணப் பெண்ணுக்கு போட்டுவிட்டனர்.

''பொண் நல்ல வடிவுகா'' ஒருத்தி சொன்னாள்.

''மாப்பிள்ளைக்கு ஏத்த ஜோடிகா'' இன்னொருத்தி.

ஏதேதோ கேலிக் கதைகள். வெடிச் சிரிப்புகள். மணப் பெண்ணின் முகம் நாணத்தால் சிவக்க...

இப்போது பெண்கள் எல்லோரும் போய்விட்டனர்.

நஜீமாவை மாமி இடுக்கிக்கொண்டு சென்றுவிட்டார். நஜீமா இல்லாதது எனக்கு என்னவோபோல் இருந்தது.

வீட்டுக்குப்போவதற்கும் எனக்கு விருப்பம் இல்லை; உம்மா, வாப்பாவெல்லாம் சாச்சியின் வீட்டிலேயே நின்றனர்.

இருட்டிவிட்டது. காஸ் லைட்டுகள் நாலைந்து ஏற்றப் பட்டன. பந்தலுக்குள் இரண்டு. வராந்தாவில் ஒன்று. அறைக்குள் இன்னுமொன்று. மாமியின் தம்பி ஏன்டாம்பி தான் காஸ் லைட்டுக்களை கொளுத்தினான். அவன் பெட்ரோல் போன்ற ஏதோ திரவத்தை லைட்டினுள் ஊற்றி நெருப்புக் குச்சியைத் தட்டி வைக்கும்போது குபீர் என நெருப்பு தீ கக்க .. நான் திணுக்குற்று துள்ளிப்பாய்ந்தேன்.

காஸ்லைட்டுகள் சற்றுப் பலமாக காற்று வீசும் சந்தர்ப் பங்களில் உஸ் உஸ் என வெளிவிடும் சப்தங்கள் என் செவிகளுக்கு இனிமையாக இருந்தன.

கல்யாண வீட்டின் பின்புறமாக சென்றேன். நாலைந்து ஆண்கள் பெரிய அண்டாக்களில் சமைத்துக்கொண்டிருந்த னர். தலையில் முண்டாசு ஒன்றைக் கட்டியவாறு எனது வாப்பா நின்றார். அன்று காலையிலேயே அவர்கள் மாடு ஒன்றை அறுத்தது எனகுத் தெரியும் ஒரு குட்டிமாடு கதறககதற அறுக்கப்பட்டது. மாடு அறுக்கும் இடத்துக்கு சென்ற என்னை தூர ஓடுமாறு துரத்திவிட்டனர். நான் தூர ஓடுவதுபோனறு ஓடி, வெளியேவந்து மாடு அறுக்கும் இடத்துக்கு சமீபமாக உள்ள வேலி அருகில் சென்று ஓலை இடுக்குக்குள்ளால் எட்டிப்பார்த்துக்கொண்டு நின்றது அவர் களுக்கு எங்கே தெரியப்போகிறது?

ஒரு பெரிய கடாரத்தில் சோறு கொதித்தது. மற்ற கடாரத்தில் இறைச்சிக் கறி.

அன்றுஇரவு பெண், மாப்பிள்ளை தரப்புகளைச்சேர்ந்த முக்கியமானவர்களுக்கு பெண் வீட்டில் விருந்து. கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு மாப்பிள்ளை வீட்டிலும் மாடு அறுத்து மௌலூது ஓதி விருந்து கொடுத்தனர். எனது வாப்பாவும் சென்றிருந்தார்.

இஷா தொழுகையின்பின் விருந்து பரிமாறப்பட்டது. சுமார் ஐம்பதுபேர் கலந்துகொண்டனர்.

அன்று பகலெல்லாம் அங்குமிங்குமாக அலைந்து திரிந்ததால் எனக்கு அலுப்பாக இருந்தது. கண் நிறைய நித்திரை.

''ஏன்டா கொட்டாவி விட்டுக்கொண்டு முழித்துக் கொண்டிருக்கிறே? அப்படி பந்தலுக்குள்ளே பாயில படு. மாப்பிள்ளை வர்ற சமயத்திலே எழுப்பிவிடுறன்'' உம்மா கூறினர்.

''எழுப்பக்குள்ள பூதத்தைப்போல படுத்திடாத. நீ தான் மாப்பிள்ளைக்கு கால் கழுவனும்'' சாச்சா கூறினர்.

எனக்கு கண் கரித்தது. ஒரே மயக்கமாக... தலை சுற்று வதுபோல... விளுடிக்குள் பாயில் விழுந்து நித்திரையாகி விட்டேன்.

---

# 8

கண்களைக் கசக்கியவாறு எழுந்து உட்கார்ந்தேன். எதிரே சாச்சா நின்றார்.

''நவாஸ் எழும்பு. கிணற்றடியிலே வாளிக்குள்ள தண்ணிஇருக்கு, முகத்தைக் கழுவு. மாப்பிள்ளை வந்துகொண்டிருக்கார். நீதான் கால் கழுவனும். கெதியா எடு''

சாச்சா கூறியவைகளை நொடிக்குள் செய்துமுடித்தேன்.

நேரம் நடுச்சாமம் இருக்கும். கண்களில் இன்னும் நித்திரை மயக்கம். இன்னும் தலைசுற்றல்......

யாரோ இரண்டொருவர் ஓடியோடி பந்தலுக்குள் பாய்களை விரித்தனர். காஸ் லைட்டுகளுக்கு காற்று அடித்தனர்.

அறைக்குள் சென்றேன்.

காரைக்கால் சோமன் ஒன்றை உடுத்து ..... அப்போது தான் தண்ணீர் வார்த்ததுபோல் தலையில் ஈரத்துடன் ..... சற்று தூக்கக் கலக்கமான கண்களுடன் .. கட்டிலில் மணப் பெண் வீற்றிருந்தாள். கட்டிலில் ஏழு பாய்கள் விரித்து .. வெள்ளைச் சீலையால் மேலே உள்ள சட்டம் மூடப்பட்டு . அறையின் ஒரு பக்கத்தில் இரண்டு செப்புக் குடங்களில் தென்னம்பாளைகள் விரியவிடப்பட்டு... ஆளுயர குத்துவிளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றில் ஏழு மூக்குகளிலும் திரிகள் எரிய... வெள்ளை கட்டிய தட்டால் மூடிய தண்ணீர் கோப்பை .. பால்பழக் கோப்பை .. இத்தியாதிகளுடன் மணவறை சோபித்தது.

மணப்பெண் என்னைப் பார்த்தாள்.

''மாப்பிள்ளை வாருரும்'' எனறேன் அவளைப் பார்த்து.

அவள் எதுவும் சொல்லவில்லை. ஒரு நீண்ட கொட்டாவி விட்டாள்.

நான் வெளியே வந்தேன்.

தூரத்தே வெடில் சப்தம் கேட்டது. வாசலுக்கு விரைந்தேன். பறைச்சப்தம் தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து 'மவ்லாய ஸல்லிவசல்......' பைத்து ஒலி.

நாலைந்து காஸ் லைட்டுக்கள் இருபக்கமும் ஒளிபரப்ப...... அந்த நடுச்சாமத்திலும் குடையின் கீழே மாப்பிள்ளை. அவரைத் தொடர்ந்து மிதியடிக் கட்டைகளைப் போட்டு சட்... சட்... சப்தங்களுடன் நடந்துவரும் ஆண்கள் கூட்டம். பைத்துகள் முழங்கியவாறு ...

மாப்பிள்ளை சாரன் அணிந்து, அரைக்கை சேட், தலையில் நீண்ட உயரமான கறுப்புத்தொப்பி, பின் கழுத்தை வளைத்து நெஞ்சின் இருபுறமும் தொங்கும் சால்வையுடன் வந்துகொண்டிருந்தார்.

வீட்டுக்குச் சமீபமாக அவர் அண்மித்ததும் பெண் வீட்டைச்சேர்ந்த ஒருவன் விரித்த குடையொன்றுடன் எதிர் கொண்டு தனது குடைக்குள் அவரை எடுத்து வீட்டை நோக்கி அழைத்து வந்தான். ஆண்கள் கூட்டம் பின் தொடர்ந்தது.

நான் வாசல் கடப்புக்கு அருகே நின்றேன்.

வெடில் சப்தங்கள்... குரவை ஒலிகள் காதுச் சவ்வுகளைப் பிய்த்தன.

வாசலில் பலகை ஒன்றில் வெள்ளை விரித்து, ஓரத்தில் செப்புக் குடங்கள் இரண்டில் ஒன்றில் தேங்காய்ப்பாலும் மற்றதில் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தன.

மாப்பிள்ளை என் அருகில்வந்து கால்களில் கிடந்த செருப்புக்களை கழற்றிவிட்டு, வெள்ளை விரித்த பலகையில் ஏறி நின்றார்.

பால்செம்பை கையில் எடுத்து அவரின் காலில் ஊற்றினேன்.

''மச்சானுக்கு கால்களை தேய்த்து கழுவிவிடு'' மாப்பிள்ளையின் உறவினன் ஒருவன் சொல்லிவிட்டுச் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையின் கால்களை நான் தேய்க்கவில்லை. தொடர்ந்து தண்ணீர் செம்பை அவரின் கால்களில் ஊற்றினேன். மாப்பிள்ளை கையோடு கொண்டுவந்திருந்த வெள்ளி மோதிரமொன்றை என் சுண்டுவிரலில் அணிவித்தார்.

''வாங்க. உள்ளே வாங்க'' பெண் தரப்பினரான ஒருவர் மாப்பிள்ளையை அழைத்தார்.

மாப்பிள்ளை மெதுவாக நடந்துசென்று வெள்ளைப் பிடவை விரித்து அவருக்காக போட்டிருந்த பாயொன்றில் அமர்ந்தார். ஏனையவர்கள் பந்தலுக்குள்ளும், வராந்தாவிலும் உட்கார்ந்தனர்.

மணப்பெண் வீற்றிருந்த அறைக்குள் போகவேண்டும் போல் இருந்தது எனக்கு. அப்போதுதான் மாப்பிள்ளை தாலி கட்டுவதைப் பார்க்கலாம்.

''கொஞ்சம் விலகுங்க. இந்தப் பிடவையை மறைத்துப் பிடிங்க. மாப்பிள்ளை வீட்டுக்கார பெண்கள் வாருங்க. அவங்களை முதலில் உள்ளே உடுங்க'' யாரோ கூறினர்.

மறைத்துப் பிடித்த சீலைக்குப்பின்னால் பெண்கள் ஐந்தாறுபேர் அறைக்குள் நுழைந்தனர். நானும் மெதுவாக அறைக்குள் சென்றேன். சாச்சாவும் அறைக்குள் வந்தார்.

''மாப்பிள்ளையை உள்ளே அனுப்புங்க. கூடவே அவருடைய மச்சானையும் அனுப்புங்க'' என் வாப்பா வராந்தையில் நின்று சொன்னது எனக்கு உள்ளே கேட்டது.

''பணிந்த கதவு மாப்பிள்ளை. தலையிலே தட்டிடாம குனிஞ்சிக்கிட்டு போங்க'' என் வாப்பா தொடர்ந்தார்.

தலையைக் குனிந்தவாறு மாப்பிள்ளை உள்ளே வந்தார். வந்ததும் வராததுமாக மணப்பெண் இருந்த கட்டிலை இருதடவை நோக்கினர்.

''தம்பி. அப்டி இருங்க'' மணப்பெண்ணுக்கு உதவியாக நின்ற கிழவி கூறினாள்.

மாப்பிள்ளை மௌனமாக நின்றார்.

''தாலி கட்டினதுக்குப் புறகுதாங்கா பக்கத்தில் இருக்கிற'' என்றாள் ஒருத்தி.

மாப்பிள்ளையின் மச்சான் கையிலிருந்த பெட்டி ஒன்றைத் திறந்து தங்கத்தாலான சங்கிலியொன்றை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுத்தான்.

அவர் பெண் அருகே சென்று, மெதுவாக முக்காட்டை நீக்கி, தாலிச் சங்கிலியை கழுத்தில் வைத்து பிடரிப் பக்கமாக கையைவிட்டு இரண்டு தொங்கல்களையும் கொழுவிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலி கட்டி முடிந்ததும் சாச்சா தன் மகளின் தலை மயிர்கள் சிலதைப் பிடித்து மாப்பிள்ளையின் கையில் கொடுத்தார்.

''இப்ப அப்படி இருங்க''

மாப்பிள்ளை கட்டிலில் அமரப்போகவும் உள்ளே நின்ற பெண்கள் குரவைச் சப்தத்தால் அறையை அதிரவைத்தனர்.

''தாலி கட்டியாச்சு, துஆ ஓதுங்க'' மாப்பிள்ளையின் மச்சான் சாத்தியிருந்த அறைக்கதவைத் திறந்து வெளியே பார்த்துக் கூறிக்கொண்டே வெளியே சென்றான்.

''பால் பழம் கொடுங்ககா'' கிழவி மாப்பிள்ளைத் தரப்பு பெண்களைப் பார்த்துக் கூறினாள்.

மாப்பிள்ளையின் தங்கை ஒருத்தி வெள்ளை கட்டிய தட்டொன்றால் மூடியிருந்த கோப்பையை எடுத்து, தட்டை நீக்கி அதனுள் ஏலவே கரைத்து வைத்திருந்த பால் பழ பானத்தை கிளாஸ் ஒன்றால் அள்ளி மாப்பிள்ளையின் வாயில் வைக்க, அவர் சிறிய அளவைப் பருக.. மிகுதியை பெண்ணின் வாயில் வைக்க..... அவள் வெட்கத்தால் உதடுகளைத் திறக்காமல்விட.. இவள் வற்புறுத்த அவள் சிணுங்க... பின்னர் மிகுதிப் பானத்தில் சிறிய அளவை அவளும் பருக...

''பொண்ணுக்கு வெக்கங்கா'' ஒருத்தி சொன்னாள்.

''புதுசுதானகா, அப்படித்தாங்கா இருக்கும்'' என்றாள் வேறொருத்தி.

கடைக்கண்ணால் பெண்ணைப் பார்ப்பதும் தொடர்ந்து வீட்டின் கூரையைப் பார்ப்பதும், மற்றவர்கள் கவனியாத போது பெண்ணைப் பார்ப்பதுமாக மாப்பிள்ளை இருந்தார்.

சாச்சா அறையைவிட்டும் நீங்கிவிட்டார்.

மாப்பிள்ளையை வெளியே வருமாறு யாரோ வெளியிலிருந்து அழைத்தார்கள். அவர் வெளியே சென்றார். நானும் பின் தொடர்ந்தேன்.

மாப்பிள்ளை அவருக்கென விரிக்கப்பட்ட பாயில் இருந்தார் அவருடைய காதுக்குள் யாரோ ஒருவன் எதையோ கிசுகிசுத்தான். மாப்பிள்ளை உதடுவிரியாமல் சிரிக்க, கிசுகிசுத்தவன் பலமாகச் சிரிக்க, பக்கத்தில் இருந்தவர்கள் விசயம் தெரியாமல் சிரிக்க.. ...

மாமியின் தம்பி 'ஏன்டாம்பி' பந்தலுக்குள் வந்து ஆட்கள் அணி அணியாக இருக்க உதவினான். தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன் தட்டுகளில் பெரிய அளவு அரிசிமா ரொட்டிகள் கொண்டுவந்து வைக்கப்பட்டன. கூடவே இறைச்சிக்கறி.

நான்குபேருக்கு ஒன்ருக ரொட்டித் தட்டுகளும், கறிக் கோப்பைகளும் வைக்கப்பட்டன.

சகலருக்கு முன்னுலும் இவை வைக்கப்பட்டதும் எனது வாப்பா 'பிஸ் மில்லாஹ்' என்ருர் சப்தமிட்டு.

இறைச்சிக்கறியை பீங்கானுக்குள் ஊற்றி ரொட்டியைப் பிய்த்துப்போட்டு சாப்பிடத் தொடங்கினர்.

மாப்பிள்ளைக்கு மட்டும் சாப்பிட பொன் எழுத்துக்கள் பொறித்த பீங்கான். பொன் எழுத்துக் கோப்பையில் கறி.

சாப்பாடு முடிந்ததும் தேனீர் பறிமாறினர். பீடி புகைத்தனர். சிலர் வெற்றிலை பாக்கு போட்டனர்.

''அல்லாஹூ அக்பர். அல்லாஹூ அக்பர்'' ஜும்ஆ பள்ளிவாசலின் சுப்ஹூ பாங்கு ஒலி அந்த இளம் காலைப் பொழுதில் காற்றில் தவழ்ந்தது.

திருமணத்தில் பங்குபற்றியவர்கள் அங்கிருந்து சுப்ஹூ தொழுகைக்காக பள்ளிவாசலை நோக்கி ஏகத் தொடங்கினர்.

---

# 9

அன்று ஒரு சனிக்கிழமை.

எனக்கு பாடசாலை இல்லை. காலையில் எழுந்ததுமே நஜீமாவைப் போய்ப் பார்க்கவேண்டும்போல் தோன்றியது. பகலெல்லாம் அவளுடனேயே விளையாட வேண்டும் என எண்ணிக்கொண்டேன். மண் வீடு கட்டி, மண் புட்டு சுட்டு, களிமண் தட்டை செய்து .. இவ்வாறு பல மனக்கோட்டைகளுடன் புறப்பட்டேன்.

மாமியின் வீட்டை அடைந்தேன்.

அழுக்கான வெள்ளைப் பிடவையொன்றை அணிந்த கிழவி ஒருத்தி சோம்பிய முகத்துடன் ஓரமாக நின்ருள். மாமா பாயொன்றில் இருந்தார். மாமி இடுப்பில் இரண்டு கைகளையும் குத்தியவாறு... மாமியைப்பார்க்க பயமாக இருந்தது. நான் வந்ததை மாமி காணவில்லைப்போலும்.

''இங்கபாரு. நீ உன் காப்பைத்தந்து ஒரு வருசத்தால் மூளுவதா சொல்லி நூறு ரூபா வாங்கினே. இப்போ ரெண்டு வருசம் போயிட்டு. இப்பவந்து காப்பைக்கேட்டா நான் எப்படி தருவன்? எனக்கிட்ட திருப்பித்திருப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்காத. நான் சொன்னு சொன்னதுதான்'' மாமி பயங்கரமான தொனியில் கூறினுள்.

கிழவியின் கண்களில் நீர்.

''புள்ள. எனக்கிட்ட உள்ளது அதுமட்டும் தாங்கா. என் மகளுக்கு மாப்பிள்ளே பேசி இருக்குகா. அந்த தங்க காப்பைப் போடுவதா சொல்லிப்போட்டங்கா. ரெண்டு வருஷத்துக்கும் வேணுமென்று வட்டி எடுத்துக்ககா. காப்பைத்தாகா'' கிழவி நாக்குழறினுள்.

''திருப்பித்திருப்பி அதைத்தானே சொல்றே. நான் சொல்வது உனக்கு விளங்குதில்லேயே ஒருவருசத்தால மூணு வதா சொன்ன நீ, ஒரு வருசத்தாலேயே மூண்டு இருக்கணும். நான் உன் காப்பை வித்துப்போட்டன். இப்ப நீ கேட்டா நான் எப்படித்தாறது?''

கிழவி எதையோ சொல்லியவாறு ஒப்பாரி வைத்தாள். மாமாவைநோக்கி என்னமோ சொன்னுள்.

''இதோபார். அவட மகளுக்கு மாப்பிள்ளே பேசி இருக்காம். ஒரு வருசமாவது, ரெண்டு வருஷமாவது... போட்டுட்டு பேசாம நகையைக்கொடு'' மாமா வாய்க்குள் முணு முணுத்தார்.

மாமி அவரைப் பயங்கரமாக பார்த்தார்.

''உங்க வேலேய நீங்க பாருங்க. என் விசயத்திலே தலே யிட்டீங்கன்னு''

மாமா பெட்டிப்பாம்பானுர். சுவரில் பொருத்தியிருந்த மான்கொம்பில் கொளுவப்பட்டிருந்த சால்வையைத் தூக்கி தோளில் போட்டார்.

''நான் வயலுக்கு போயிட்டுவாறன்'' மாமா வெளியேறினுர்.

மாமியும் அழுக்குப்பிடவைக் கிழவியும் சிறிதுநேரம் ஆளுக்காள் ஏசிக்கொண்டனர். கிழவி அசிங்கமான வார்த்தைகளினுல் மாமியைத் திட்டினுள். பதிலுக்கு மாமியும்... மாமியைப்பார்க்க... அவரின் முகத்தில் தெரிந்த பயஙகரம்!

கிழவி வாசலுக்குவந்து ஒருபிடி மண்ணே அள்ளி ''நீ நாசமா போயிடுவே!'' என சொல்லியவாறு வீசி எறிந்துவிட்டு, முந்தானேயால் கண்களேத் துடைத்துவிட்டு, தள்ளாடியவாறு வெளியே சென்ருள்.

''மாமிய்ய்ய்...'' நான் மெதுவாக அழைத்தேன்.

''யாருடாது?''

அப்போதுதான் மாமி என்னேக்கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் தான்''

''என்னடா வேணும்?''

''சும்மா. நஜீமாவோட விளையாட...''

''விளையாட்டாவது, மண்ணுங்கட்டியாவது. போடா... அவளுக்கு தண்ணி வாக்சணும். போய் தனியே விளையாடுடா''

''நான்.. நான் தண்ணி வாத்துவிடட்டா?'' மெதுவாகக் கேட்டேன்.

''தொல்லைப்படுத்தாதடா. போடா'' மாமி விரட்டினார்.

எனக்கு மனம் உடைந்துவிட்டது.

இந்தக்கோலத்தில் நான் மாமியைப் பார்த்ததே இல்லை. நான் இதுவரை பார்த்ததெல்லாம் மாமியின் ஒருபக்கத்தைத்தானே? மாமியின் அடுத்தபக்கம் இதுதானே?

அழுக்குப்பிடவைக் கிழவி . அவளின் முகத்தில் தெரிந்த பரிதாபம் .. என் மனக்கண்ணில் தோன்றின.

'மாமி இவ்வளவு வக்ரமனம் கொண்டவரா?'

மஜீது ஒருதரம் கூறியது எனக்கு திடீரென ஞாபகத்தில் எழுந்தது.

''டேய். உங்கமாமி வட்டிக்குக் கொடுக்கிறவடா. வட்டிக்குக் கொடுக்கிறவங்க எல்லாம் கல்மனசுக் காறங்கடா. அவங்க நரகத்துக்கு போறவங்கடா. உன் மாமியும் நரகத்துக்குத்தான்டா போவா''

மாமி கல்மனம் உடையவர்தான். மாமா கூறியும் அந்தப் பரிதாபத்துக்குரிய கிழவிக்கு அவர் இரக்கப்படவில்லையே!

மாமாவை நினைக்கும்போது எனக்கு கோபம் கோபமாக வந்தது. 'என்ன ஆண்பிள்ளை அவர்! என் உம்மாவென்றால் வாப்பா கீறிய கோட்டைத் தாண்டமாட்டாரே. வாப்பா ஒரு பார்வை பார்த்தாலே உம்மாவுக்குப்போதுமே! சீ! இவரும் ஒரு மனுசனு?'

தொடர்ந்து நடந்தேன். நஜீமாவுடன் அன்றெல்லாம் விளையாடுவதற்கு எத்தனையோ திட்டங்கள் போட்டிருந்தேனே! எல்லாம் வீண்! எல்லாம் கற்பனை! எல்லாமே கனவுகள்!

திரும்பி மாமியின் வீட்டுக்குப் போகலாமா என நினைத்தேன். வேண்டாம். இப்போதுபோனுல் மாமி இன்னும் ஏசுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்சந்தி ஆலமரத்துக்கு அருகில் சென்று வேரில் உட்கார்ந்து மரத்தில் சாய்ந்தேன்.

என்மனதில் நஜீமா... மாமி... மாமா... அந்த அழுக்குப்பிடவைக் கிழவி... நஜீமா... நஜீமா .. நஜீமா... மனம் முழுதும் நஜீமா.

''ஏன்டா நவாஸ், என்னடா யோசிக்கிறே?''

குரல்கேட்டு திணுக்குற்றேன்.

மஜீது நின்முன்.

''ஒண்ணுமில்லடா''

''சொல்லுடா. என்னமோ யோசிக்கிறுடா. வாப்பா அடிச்சாரா?''

வாப்பா அடித்திருந்தால்தான் நான் அப்போதே மறந்திருப்பேனே. ''அப்படி ஒண்ணும் இல்லடா''

''அப்படீன்ஞ வாடா சறுக்கால் விளையாடுவம்''

''இன்றைச்கு ஏலாடா''

''சறுக்கால் விளையாட வந்தீன்ஞ உனக்கு ஒண்ணுமே நடக்கலேன்னு அர்த்தம். விளையாட வராமவிட்டா உனக்கு நடந்ததை நீ சொல்லணும்''

''சரி சரி. வாறன்டா விளையாட''

இருவரும் திட்டிக்குச்சென்றோம். மஜீது சறுக்கால் கீறினுன். நீள்சதுரமான ஒரு பெட்டி கீறி, நடுவில் ஒரு கோடாலும் குறுக்கே இரண்டு கோடுகளாலும் அதை ஆறு நீள் சதுர பெட்டிகளாகப் பிரித்தான்.

''முதலில் யார்டா விளையாடுவது?''

''நீதான் விளையாடு''

தேய்ந்த மாங்கொட்டை ஒன்றைப் பொறுக்கிவந்தான். வெளியில் நின்று கையால் மாங்கொட்டையை முதலாவது சதுரத்தினுள் எறிந்து, ஒற்றைக்காலால் மாங்கொட்டையின் மேல் பாய்ந்து அதை மிதித்து, அதே ஒற்றைக்காலால் அடுத்த சதுரத்தினுள் எறிந்து, அதனுள்ளும் பாய்ந்து மிதித்து, மூன்ருவது சதுரத்தினுள் துள்ளிப்பாய்ந்து மிதித்து, நாலாவதினுள் மாங்கொட்டையைத் தள்ளும்போது சதுரத்தின் கோட்டில் கொட்டை விழுந்தது. நான் ''முள்ளி'' என்றேன். அவன் மூன்று சதுரங்கள் மட்டுமே தாண்டிய நிலையில் வெளியே வந்தான்.

நான் விளையாடத் தொடங்கினேன். ஆறு சதுரங்களையும் ஒரே மூச்சில் மாங்கொட்டையை ஒற்றைக்காலால் ஒற்றி பாய்ந்துமுடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடுத்தது கைடா'' மஜீது சொன்னான்.

''தெரியும்டா''

மாங்கொட்டையை வலது நடுக்கையில் வைத்து, ஒற்றைக்காலால் நொண்டியவாறு சதுரங்களைக் கடந்து, ஆறுவது சதுரத்தினுள் வரும்போது எனது கால் சதுரக்கோட்டைத் தொட்டுவிட்டது. மஜீது ''முள்ளி'' என்றான். நான் கழிந்தேன்.

அவன் விட்ட இடத்திலிருந்து விளையாட்டைத் தொடங்கினான். ஆறு சதுரங்களையும் ஒற்றைக்காலால் மாங்கொட்டையை ஒத்திக்கடந்து, உள்ளங்கையில் கொட்டையை வைத்தவாறு நொண்டிக்கடந்து, பொத்திய கைமுஸ்டியின் மேல் மாங்கொட்டையை வைத்தவாறு ஆறு சதுரங்களையும் ஒரே மூச்சில் நொண்டிக்கடந்து, அதே கொட்டையை தலைமேல் வைத்து, தலையை ஆட்டாமல், உடலை அசைக்காமல் நொண்டி மூன்றாவது சதுரத்தை அடையும்போது கொட்டை கீழே விழுந்தது. அவன் கழிய, நான்விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து ஒரேமூச்சிலேயே தலைமேல் கொட்டையை வைத்து நொண்டி முடித்து, நொண்டும் கால்மேல் மாங்கொட்டையை வைத்து மெதுவாக ஒவ்வொரு சதுரமாக கோடுகளில் படாமல் நொண்டிக்கடந்து, பின்னர் கண்கள் இரண்டையும் மூடி, ஒரு கண்ணின்மேல் கொட்டையை வைத்தவாறு கொட்டையும் கீழே விழாமல் குனிந்தும் கீழே பார்க்காமல் ஒவ்வொரு சதுரத்தினுள்ளும் கோடுகளில் படாமல் காலைவைத்து சரியா? சரியா ? என மஜீதிடம் கேட்டவாறு ஆறு சதுரங்களையும் கடந்துமுடித்தேன்.

இனி எனக்கு கடல். அதாவது சதுரத்தின் வெளியே நின்று. மேலா? கீழா? எனக்கேட்பேன். அவன் 'மேல்' என்றால், சதுரத்தின் எதிர்புறமாகப் பார்த்தவாறு நின்று தலைக்குமேலால் மாங்கொட்டையை சதுரங்களிலொன்றினுள் எறிவேன். அவன் 'கீழ்' என்றால் இரண்டு கால்களுக்கும் நடுவால் எறிவேன். மாங்கொட்டை கோடுகளில் படாமல் ஏதாவது ஒரு சதுரத்தினுள் வீழ்ந்தால், அந்தச் சதுரம் எனக்குச் சொந்தமானது. அதனுள் காலால் ஒரு சக்கரம் வரைவேன்.

கடலினுள் நின்று மேலா, கீழா கேட்டேன். மஜீது 'மேல்' என்றான். எனக்கு ஒரு சக்கரம் கிடைத்தது. தொடர்ந்து நொண்டி விளையாடும்போது நான் எனது சக்கரத்தினுள் இரண்டு கால்களையும் வைத்து நின்று இளைப்பாறலாம். கூடுதலாக சக்கரங்களைப் பெறுபவர் வெற்றியடைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் நீண்டநேரம் விளையாடினோம்.

நஜீமாவின் எண்ணத்தை மறந்து... மாமியின் வக்ர புத்தியை மறந்து வீட்டுக்குச் சாப்பிடப்போவதை மறந்து .. தொடர்ந்து விளையாடினேன்.

எனக்கு நான்கு சக்கரங்கள். அவனுக்கு இரண்டு.

''நவாஸ். பின்னேரம் ஈச்சம்பழம் ஆயப் போவா மாடா?'' மஜீது கேட்டான்.

ஈச்சம்பழம் பறிப்பதென்றால் காட்டுக்குள் செல்லவேண்டும். காட்டுக்குள் பாம்பு, பன்றி, ஈச்சமுள்... அபாயங்களெல்லாம் உள்ளன.

ஈச்சம்பழம் என்றால் நஜீமாவுக்கு உயிர். எனக்கு காட்டுக்குள் செல்ல பயம்தான். எனினும் ஈச்சம்பழங்களைப் பறித்து அவளுக்குக் கொடுக்கலாமென்பதை நினைக்கும் போது பயத்தை மறந்தேன். அவனுடைய கோரிக்கைக்கு இணங்கினேன்.

---

6010

# 10

கிராமத்துக்கும் கடற்கரைக்கும் இடையில் சிறிய பற்றைக்காடு. காசான் பற்றைகள். ஈச்ச மரங்கள், நாவல் மரங்கள். சிறியதும் பெரியதுமான பற்றைகளும், மரங்களும், சில இடங்களில் அடர்த்தியாகவும், வேறு இடங்களில் அடர்த்தி குறைந்தும் காணப்படும்.

மஜீதும், நானும் பிற்பகல் காட்டுக்குச் செல்லப் புறப்பட்டோம். மஜிது சிறிய கத்தி ஒன்றை எடுத்துவந்தான்.

இருவரும் நடந்தோம். மஜீதுக்கு ஈச்சம்பழம் பறித்த அனுபவம் உண்டு. எனக்கு இதுதான் முதல் அனுபவம்.

அது ஈச்சம்பழ சீசன். மிகவும் உக்கிரமான வெயில் காலத்தில் ஈச்சம்பழங்கள், முந்திரிப்பழங்கள், நாவற்பழங்கள் கிராமத்தில் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு விற்பனையாகும்.

நாங்கள் காட்டை அண்மித்துவிட்டோம். வீட்டிலிருந்து காடு சுமார் அரைமைல் தூரம் இருக்கும்.

ஒவ்வொரு ஈச்சமரமாக பார்த்தவாறு நடந்தோம். காசான் சருகுகளில் கால்கள் பட்டதும சரசரத்தன சருகுக்குள் ஒளிந்துகிடந்த நெருஞ்சி முட்கள் பாதங்களில் தைத்தன. முட்கள் குத்தும்போதெல்லாம் ஆ..... ஊ..... என முணுமுணுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நவாஸ் பார்த்து நடந்துவாடா. சருகுகளுக்குள் பாம்பும் கிடக்கும்டா'', என்றான் மஜீது.

பாம்பு என்ற வார்த்தையைக் கேட்டதுமே உடல் கிடுகிடுத்தது. பேசாமல் திரும்பி விடலாமா எனவும் எண்ணினேன். மஜிது இல்லாமல் திரும்பிச்செல்லவும் முடியாது. அவன் பழங்களைப் பறிக்காமல் வரப்போவதும் இல்லை.

கனத்த நெஞ்சுடன் அவனைப் பின் தொடர்ந்தேன்.

ஈச்ச ஓலைகளின் கூரிய இலைகளும், இலை மடல்களை விலக்கியவுடன் தெரிந்த முட்களும எனக்கு மேலும் பயத்தை அதிகரித்தன.

சில பற்றைகளுக்குள், பச்சைநிறக் குலைகள் ...... முற்றிய சிவப்புநிறக் குலைகள் ..... ஒரு பற்றைக்குள் மட்டும் பழுத்த கறுப்புநிற குலைகள் காணப்பட்டன.

''டேய் இதுதான்டா பழக்குலை''. மஜீது கூறிவாறு முட்களுக்குள்ளால் மெதுவாக கையைவிட்டான். பழங்களில் சிலவற்றைப் பறித்தான். அவனுடைய கை பட்டதுமே பழங்கள் பொலபொலவென தரையில் வீழ்ந்தன. கைக்குள் அகப்பட்டவை மிகக் கொஞ்சந்தான்.

கையை வெளியே எடுத்தான். புறங் கையில் சிராய்ப்புக் காயங்கள்.

''முள் குத்துதுடா. பழங்களை ஆயவே முடியாம இருக்கு. என்ன செய்யலாம்?'' என்னிடம் கேட்டான்.

''என்ன செய்யலாம்?'' அவனிடம் கேட்டேன்.

''நீ கையை விட்டுப் பாரேன்''.

''ஏலாடா''

''அப்படின்னு ஒரு வேலை செய்வோமா?''.

''என்ன?''

''ஒரு நெடிய கம்பை எடுத்து ஈச்ச மட்டைகளையும், முட்களையும் கம்பால விலக்கிப் பிடித்துக்கொள், நான் ஆய்கிறேன்.''

காட்டுக்குள் அங்குமிங்கும் தேடி ஒரு நீண்ட கம்பைக் கண்டெடுத்தோம்.

''நான் மட்டைகளையும், முட்களையும் கம்பால ஒதுக்கித் தருவேன். நீ பலமா பிடிச்சுக்க'' கூறியவாறு மஜீது செய்தான்.

இப்போது ஈச்சம்பழம் பறிப்பது இலகுவாக இருந்தது. பழங்களை குலைகளிலிருந்து உருவி, உருவி எடுத்து கையோடு கொண்டுவந்திருந்த சீலைத் துணிடொன்றில் வைத்தான். மஜீது பழங்களைத் தொடர்ந்து பறித்துக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான், அவன் பழங்கள் பறிக்கும் இலாவகத்தை என்னை மறந்து பார்த்துக்கொண்டிருக்கையில் திடீரென என் காலின் கீழ் சருகுகளின் சலசலப்பு கேட்க நான் திணுக்குற்று கையிலிருந்த கம்புடன் துள்ளிப்பாய .. ஈச்ச முட்களும் கூரிய ஓலைகளும் மஜீதின் கை, முகம், கழுத்து ஆகியவைகளைப் பதம் பார்க்க .. அவன் 'ஆ .....' வென அலறியவாறு ஏற்கனவே பறித்திருந்த பழங்களை காலால் மிதித்துக்கொண்டு வேறுபக்கமாக பாய... எனக்கு அறைவதற்காக அவன் கை ஓங்க...

''டேய் அடிக்காதடா, பாம்புடா ..'' என்றேன் நான்.

அவன் கோபத்தை மறந்து ''என்ன ? பாம்பா ? எங்கே ?'' என்முன்.

''என் காலுக்குள் சருகு சரசரத்தது. பாம்பாத்தான் இருக்கும்'' கூறியவாறு விழிகளை நாலா பக்கத்துக்கும் பயத்தால் அசைத்தேன். என்னைச் சுற்றி பாம்புகள் பல பக்கமும் அசைவதாக ஓர் உணர்வு. எங்கேயாவது ஓடி விட்டால் தேவலாம் போன்று இருந்தது.

''வா. பாம்பா என பார்க்கலாம்''.

''எனக்கு ஏலா. நீ தனியா பாரு''

''கம்பைக் கொண்டாடா, பயந்தாங்கொள்ளி'' தள்ளி நின்றவாறு சருகுகள் சரசரத்த இடத்தில் குத்தினன். சருகுகளை நீக்கினன்.

அதனுள் .....

அரணை ஒன்று படுத்திருந்தது.

''சீ! போயும், போயும் இதற்குத்தான் பயந்தியா ?'' கூறியவாறு கம்பால் மணலை அள்ளி அரணையின் மேல் எற்றினன். அது சரசரவென பற்றைக்குள் புகுந்தது.

''வாடா. வேற பற்றைக்குப் போய் ஆயலாம்''

''ஏலாடா. வாடா வீட்டுக்குப் போகலாம்.''

''ஈச்சம்பழம் ஆயாமல் வீட்டுக்குப் போவதா ? உன்னால் வர முடியாமப்போனு, நீ இங்கேயே நில்லு. நான் போறன்.''

எனக்கு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல்...... அவனைப் பின் தொடர்ந்தேன்.

நஜீமாவுக்கு ஈச்சம்பழங்களை சாப்பிடக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமும் மனதில் அலை அடித்தது.

வேறு ஒரு பற்றைக்குச் சென்றோம். நாலைந்து பழுத்த குலைகள் இருந்தன. சிவப்புநிறமான உதக் காய்களின் குலைகளும் சில தென்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய். கம்பால நல்லா புடிச்சிக்க. பாம்பு, அது இதுன்னு கம்பை விட்டியோ, பாம்புக்கு பதிலாக நானே உன்னை கடிச்சு கொண்ணுடுவேன்''.

மஜீது பாம்பு என்ற வார்த்தையைச் சொன்னதுமே என் கால்கள் படபடத்தன.

சே! நான் என்ன முட்டாள்! வாப்பாவிடம் சொன்னால் சந்தையிலே வேண்டிய அளவு ஈச்சம்பழங்கள் வாங்கித் தந்திருப்பாரே. ஏன்தான் வந்தேன்? அதுவும் இவனுடன்! நான் பறித்த பழங்களை நஜீமாவுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணந்தான் என்னை இந்த அவஸ்தைகளை அனுபவிக்க வைக்கிறது.

கண்கள் நாலாபக்கமும் பாம்புகளைத்தேடி அலைய, மஜீது ஒதுக்கித் தந்தவாறு, கம்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றேன்.

அவன் பழுத்த குலைகளையெல்லாம் பறித்துவிட்டான்.

''நவாஸ். ரெண்டு உதக்காய் குலைகளை வெட்டிக் கொண்டுபோய் கூரைக்குமேலே பனியிலே வைச்சா நாளைக்கு பழுத்திடும்டா. குலைகளை வெட்டட்டா?'' மஜீது கேட்டான்.

''வேணுடா. ஆய்ந்த பழங்களே போதும். வாடா போகலாம். கை கடுக்குதுடா.''

கூடியசிக்கிரம் அங்கிருந்து போய்விடவேண்டும் போலிருந்தது எனக்கு. அவ்வளவு பயம்.

''கை ஒண்ணும் வலிக்கா. சும்மா புடிச்கிக்க''

கடுஞ்சிவப்பு நிறமாகக் காட்சியளித்த இரண்டு குலைகளை கத்தியால் வெட்டி எடுத்தான்.

''டேய், பச்சைக்குலை ரெண்டையும் வெட்டுவோம். அவிச்சு பருப்பை எடுத்துத் தின்னலாம்.''

''டேய்... டேய்..... போதும்டா, வாடா போகலாம். இருட்டுதுடா. வாப்பா ஏசுவார்டா''

''அறைஞ்சன்னு, சும்மா கெட்டியா புடிச்சிக்க''

பச்சைக குலைகள் இரண்டை அறுத்தெடுத்தான்.

''டேய். கம்பை விடுறன்டா.'' அவனுடைய பதிலை எதிர்பாராமல் கம்பை வெளியே எடுத்தேன.

''ம்... இந்தா தின்னு''

கைநிறைய ஈச்சம்பழங்களை அள்ளித் தந்தான்.

நானும், அவனும் பழங்களை வாய்க்குள் போட்டு ருசித்தவாறு கிராமத்தை அடைந்தோம்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்ருக இருட்டிவிட்டது. ஈச்சம்பழங்களை நஜீமாவுக்குக் கொடுத்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போகவேண்டுமென நான் ஏற்கனவேயே தீர்மானித்து வைத்திருந்தேன்.

மாமியின் வீட்டை அடைந்தேன். காலையில் மாமி எனக்கு ஏசியது... விரட்டி அனுப்பியது ஞாபகத்தில் எழுந்தது. 'ஒருவேளை இப்போதும் ஏசி துரத்தி விடுவாரோ?' பயத்துடன் உள்ளே நுழைந்தேன்.

மாமி குப்பி விளக்கினுள் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தார். நஜீமா அருகில் நின்ருள்.

நான் தூரநின்று ''நஜீமா......'' என்றேன்.

என் குரலைக் கேட்டதுதான் தாமதம் அவள் என்னருகே ஓடி வந்தாள்.

மாமி என்னைத் திரும்பிப் பார்த்தார். ஒன்றும் சொல்லவில்லை.

''இந்தா, ஈச்சம்பழம். நான்தான் ஆய்ந்தேன்.'' கடதாசிக்குள் வைத்திருந்த ஒரு தொகைப் பழங்களை அவளின் கைகளுக்குள் திணித்துவிட்டு ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினேன்.

---

# 11

வெய்யிலின் அகோரம் தாங்கமுடியாமல் இருந்தது. வரட்சி என்ருல் அவ்வளவு வரட்சி. கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. கிராமத்தில் பள்ளமான இடங்களில் அமைந்துள்ள வீடுகளுக்கு தண்ணீர் மொள்ளுவதற்காக பெண்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலைந்துதிரிந்தனர்.

ஊரில் 'ஊரோடி' என பேசிக்கொண்டார்கள். 'ஊரோடி' என்ருல் அம்மை, பொக்களிப்பான் நோய்களைக் குறிக்கும்.

மஜீது நாலைந்து நாட்களாக காய்ச்சலாய்ப் படுத்திருந்தான். நான் போய்ப் பார்த்துவந்தேன்.

''டேய். உன் கூட்டாளி மஜீதுக்கு ஊரோடியாம். அடிக்கடி அவன்கிட்ட போகாதடா'' வாப்பா என்னை எச்சரித்தார்.

நான் அவனைப் பார்க்கப்போவதை நிறுத்திக்கொண்டேன். நஜீமாவுக்கும் இந்த நோய் ஏற்பட்டுவிடுமோ என எனக்கு பயமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாமி. ஊரிலே ஊரோடியாம். நஜீமாவை வெளியில அனுப்பாதீங்க'' என்றேன் அவளை ஊஞ்சலிலே வைத்து ஆடியவாறு.

''நான் அவளை அனுப்பல்ல. நீதான் அங்க இங்க போயிட்டுவந்து அவளோட விளையாடுறே'' மாமியின் பதில் எனக்கு என்னவோபோல் இருந்தது.

''இஞ்ச. அம்பாவோ. இம்பாவோ சொல்லன்'' என்றாள் நஜீமா என்னைப்பார்த்து. அவள் இப்போது நன்றாகக் கதைக்கத்தொடங்கிவிட்டாள். அவளுடைய குரல் பாட்டுப் பெட்டியில் நான்கேட்ட 'எண்ணி எண்ணிப் பார்க்க மனம் ...' பாடலைப் பாடியவளின் குரலைப்போல் இருப்ப தாக எனக்குத் தோன்றியது.

மழலை மொழியால் அவள் கதைப்பதை பகலெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும் போல் எனக்குத்தோன்றும். அவ்வளவு இனிமை. அவள் என்னை 'இஞ்ச' என்றுதான் அழைப்பாள்.

''என்ன பாட ?'' நான் திரும்பிக்கேட்டேன்.

''அம்பாவோ, இம்பாவோ''

ஊஞ்சல் ஆடும்போது இந்தப் பாடலைத்தான் பாடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் ஊஞ்சல் கிடக்கும். வளையொன்றின் நடுவே இரண்டு பக்கங்களிலும் கயிறுபோட்டு சுமார் ஐந்தடி நீளமான ஓர் அடி அகலமான பலகை போடப் பட்டிருக்கும்.

இரண்டுபேர் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடினால் ஒருவர் 'அம்பாவோ இம்பாவோ' எனச்சொல்ல மற்றவர் 'ஏலே லம், ஏலேலம்' என்பார்.

''நான் அம்பா சொன்னா, நீ ஏலேலம் சொல்வியா ?'' நான் கேட்டேன்.

''ஓ ''

''அம்பாவோ, இம்பாவோ'' நான் ஓசையுடன் சொன்னேன்.

''ஏலேலம், ஏலேலம்''

''அம்பாகாரன், காசல்லவோ''

''ஏலேலம். ஏலேலம்''

''காசல்லவோ, கடனல்லவோ''

''ஏலேலம், ஏலேலம்''

''மூணு முருங்கைத்தண்டு''

''ஏம்லலம், ஏலேலம்''

''முறிச்சிப் பார்த்தா கீரைத்தண்டு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏலேலம், ஏலேலம்''

''உட்டாள் கள்ளி மூத்திரத்தை''

''சீ......''

நஜீமா சிரிக்க, நான் சிரிக்க... அவள் கைகொட்டி உடலை அசைத்து குலுங்கி, குலுங்கி சிரிக்க... நானும் சிரிக்க......

இருவரும் நீண்டநேரம் சிரித்தோம்.

★ ★ ★

இரவானதும் எனக்கு உடலெங்கும் உளைச்சல் போல் இருந்தது. குளிராக... சற்று மயக்கமாக... தலை சுற்றுவது போல்...

''என்னடா ஒரு மாதிரியா இருக்கிறே?'' உம்மா கேட்டார்.

''குளிரா இருக்கு. தலை இடிக்குது.''

''போர்த்திக்கிட்டு படு''

உம்மா கனமான சோமன் ஒன்றைத் தந்தார்.

போர்த்தினேன்.

நேரம் செல்லச்செல்ல, குளிர் அதிகரித்தது. தலையிடி தாங்கமுடியாமல்.. இறுக்கிப் போர்த்தினேன். அடிக்கடி உடலைக் குலுக்கியது.

நான் அனுங்கினேன்.

உம்மா அருகில்வந்து, போர்வையை விலக்கி நெற்றியைத் தொட்டுப்பார்த்தார்.

''அல்லாஹ்வே! கொதிக்குதே, இஞ்சவந்து பாருங்க''

வாப்பா வந்தார். அவரும் தொட்டுப்பார்த்தார்.

''நான் எத்தனை தடவை அவனுக்கிட்ட சொன்னன் அவன் மஜீதுக்கிட்ட போகாதடான்னு. இவனுக்கும் தொத்திட்டு''

''இப்ப என்ன செய்யலாம்?''

''கொஞ்சம் களிமண்ணை எடுத்து தண்ணியிலே குழைச்சு நெத்தியிலே பூசிவிடு. தலைவலி நின்னுடும். அப்படியே கொஞ்சம் அரிசியை எடுத்து அவன்ட தலையைச்சுத்தி நேந்து வை. காய்ச்சல் விட்டதும் கடற்கரையில கழிச்சுடலாம்''

உடலை குலுக்கிகுலுக்கி எடுத்தது. ''உம்மா.. ம்.. உம்மா '' என அனுங்கியவாறு இறுக்கி, இறுக்கி போர்வையைப் போர்த்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா வரண்டது; மயக்கம்... அப்படியே நித்திரையாகி விட்டேன்.

அடுத்தநாள் காலையில் காய்ச்சல் சற்றுத் தணிந்து இருந்தது. கால் கைகளில் மசமசத்தது. பார்த்தேன். சிறிய சிறிய கொப்புளங்கள்.

எனது தலைப்பக்கத்தில் ஒரு பன் ஓலைத்தட்டினுள் கொஞ்சம் அரிசியும், ஒரு கோழிமுட்டையும் வைக்கப்பட்டிருந்தன. உம்மாதான் வைத்திருப்பார். கழிப்பு கழிப்பதற்காக.

''வாசற்கடப்பிலே வேப்ப இலையைக் கட்டி தொங்க உடுங்க'' உம்மா வாப்பாவிடம் கூறினார்.

''ஏற்கனவேயே தொங்க உட்டுட்டேன். இன்னும் கொஞ்சம் வேப்பஇலை கொண்டுவாறன். அவனுக்கு முதுகுக்குக கீழ போட்டுவிடு. அவன் அதிலதான் படுக்கணும்''

வேப்ப இலைகளின்மேல் படுக்கிறேன். மீண்டும் குளிர்கிறது. நடுங்கினேன். காய்ச்சல் அடிக்கத்தொடங்கியது.

தொடர்ந்து காய்ச்சல். கொப்புளங்கள் உடலெங்கும் பரவுகின்றன.

என்னைப் பார்ப்பதற்காக நாலைந்து பெண்கள் வந்தனர். சாச்சியும், சாச்சாவும் வந்தார்கள். முதல்நாள் மாமா மட்டும் தனியே வந்து பார்த்துவிட்டுச் சென்றார். மாமி வரவில்லை. இரண்டாம் நாள் மாமி வந்திருந்தார். நஜீமாவைக் கூட்டிவரவில்லை. 'ஏன் நஜீமாவை கூட்டிவரவில்லை என கேட்கலாமா?' என நினைத்தேன். மாமி ஏதாவது சொல்லிவிடுவாரோ எனப் பயமாக இருந்தது.

யாரோ ஒரு மாந்திரீக பரிசாரியிடமிருந்து ஓதிக்கொண்டு வந்த தண்ணீரால் உம்மா என் முகத்தைக் கழுவிவிட்டார். அடிக்கடி சந்தனம் அரைத்து கொப்புளங்கள் இருந்த இடங்களிளெல்லாம் பூசிவிட்டார்.

நான்கு நாட்கள் தொடர்ச்சியாக காய்ச்சல் அடித்தது. பின்னர் படிப்படியாகத் தணிந்தது. இப்போது என்னால் எழுந்து நடமாடக்கூடியவாறு இருந்தது

உடலில் ஏற்பட்டு வெடித்த கொப்புளங்களின் தழும்புகள் இலேசாக ஆல்வாடத் தொடங்கின.

சுமார் ஆறுநாட்களாக நான் நஜீமாவைப் பார்க்கவில்லை. அவளை உடனேயே போய்ப்பார்க்க வேண்டும்போல் தோன்றியது.

''உம்மா. சும்மாதானே வீட்டில இருக்கிறன். மாமிட வீட்டுக்கு போயிட்டு வரட்டா?'' உம்மாவைப் பார்த்துக் கேட்டேன். வாப்பாவும் அருகிலேயே நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வேணும், வேணும். இப்போதுதான் இந்த நோய் தொத்துற பருவம். கொப்புள தழும்புகள் காய்ந்து காற்றில பறந்துதான் மற்றவர்களுக்கு தொத்துறது. நீ வீட்டிலேயே இரு'' என்றார் வாப்பா.

நஜீமாவை நான் மனக்கண்ணால் பார்த்தவாறு இருதயத்தால் உரையாடியவாறு நினைவால் நானும், அவளும் விளையாடியவாறு சிரித்தவாறு சிணுங்கியவாறு... பொழுதைக் கழித்தேன்.

★ ★ ★

அடுத்த வெள்ளிக்கிழமை. இப்போது எனக்கு பூரண சுகம். எனது நோய் குணமடைவதற்காக செய்த நேர்த்திக் கடனை நிறைவேற்ற கடற்கரைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களை உம்மா செய்துகொண்டிருந்தார்.

பகல் சாப்பாட்டிற்காக மஞ்சள் சோறு சமைத்து நேர்ச்சையாக வைத்த கோழி முட்டையுடன் கூடவே இரண்டொரு முட்டைகளைப் பொரித்துவைத்திருந்தார். மஞ்சள் சோறு சமைக்கும் நாட்களில், இதற்காக முட்டைகள் பொரிப்பது ஒரு தனி அலாதி தேங்காய்ப் பூவுடன், நற்சீரகம் பெருஞ்சீரகம், மல்லி போன்ற கறிச் சரக்குகளை அம்மியில் வைத்து அரைத்தெடுத்து, அதனுடன் முட்டைக் கருக்களைக் கலந்து தேங்காய் எண்ணெயில் பொரித்து எடுப்பர். மஞ்சள் சோற்றை சாப்பிட முன்னர் கொஞ்சம் சோற்றையும், முட்டைப் பொரியல் துண்டொன்றையும், வாழையிலை ஒன்றினுள் வைத்து ஒதுக்குப்புறமான ஏதாவது ஒரு சந்தியில் வைத்துவிட்டு வருமாறு வாப்பாவிடம் உம்மா கொடுத்தார். முதலில் எனக்கு உம்மா சாப்பாடு பரிமாறினார். அதன் பிறகுதான் உம்மாவும், வாப்பாவும் சாப்பிட்டனர்.

பிற்பகலில் கடற்கரைக்குச் செல்வதற்காக மாமி நஜிமாவையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார் சாச்சி, சமீபத்தில் திருமணமான தனது மகளுடன் வந்தார். வேறு சில பெண்களும் வந்தனர்.

ஒரு பெட்டிநிறைய மஞ்சள் சோறு கடற்கரைக்கு கொண்டுசெல்வதற்காக உம்மா சமைத்திருந்தார். கோப்பை நிறைய இறைச்சிக்கறி வைத்துச் சாப்பிடுவதற்காக வாழை இலைகள். கூடவே தென்னம்பாளையில் செய்யப்பட்ட ஒரு சிறிய தோணி. பாய்மரத்துக்குப் பதிலாக ஈர்க்கிள் ஒன்றில் பொருத்தப்பட்ட கடதாசித்துண்டு. ஒரு கேத்தல் நிறையத் தண்ணீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைத் தூக்கிக்கொண்டு பெண்கள் நடந்தனர்.

நஜீமா மெதுமெதுவாகவே நடந்தாள். அவளுடன் கூடவே நடந்துசெல்ல வேண்டுமென எண்ணியதால், நோய் வாய்ப் பட்டிருந்ததால் வேகமாக நடக்கமுடியாமல் உள்ள தாக பாசாங்கு செய்தவாறு, நானும் அவளருகிலேயே நடந்தேன்.

எங்களைவிட சுமார் ஆறு ஆடி தூரத்தில் பெண்கள் நடந்தனர்.

''இஞ்ச. உனக்கு உரத்த காச்சலாமே'' நஜீமா கேட்டாள்.

''நான் பொளைச்சதே அபூர்வம். அவ்வளவு காய்ச்சல்''

''ஏன் அப்படி செல்றே?''

''காய்ச்சல் கூடினல் மௌத்தாகிடுவேனே''

''மௌத்தென்ரு என்ன?''

''மௌத்தென்ரு மௌத்துத்தான்''

''அதுதான் என்ன?''

''நான் மௌத்தாகினு நீ என்னோட பேசமாட்டே. என்னைப் பார்க்கமாட்டே. நாம ரெண்டுபேரும் விளையாட மாட்டோம். என்னை மண்ணுக்குள்ள புதைச்சிடுவாங்க''

''அப்போ நீ மௌத்தாகக்கூடா''

''ஏன்?''

''நீ போனு எனக்கு விளையாட யார் இருக்கா? நீ காய்ச்சலால படுத்த இவ்வளவு நாளும் நான் விளையாடவே இல்ல''

''அப்போ நீ என்னப்பார்க்க வரல்லியே?''

''உம்மாதான் என்ன கூட்டிவரல்ல''

''நீ என்னப் பார்க்கணும்னு அழல்லியா?''

''அழுதேன். உம்மா உடலல''

நஜீமா என்னைப் பார்க்கவரவில்லையே என மனதில் இருந்த குறை நீங்கியது. அவள் நீண்ட தூரத்துக்கு நடக்கமுடியாமல் அவஸ்தைப்பட்டபோது, என உமமா அவளைத் தூக்கி இடுக்கில் வைத்தவாறு நடந்தார்.

கடற்கரையை அடைந்தோம். வெள்ளை மணல், நீலக் கடல், அங்கொன்றும், இங்கொன்றுமாக நண்டுக்குழிகள். நண்டுகள். அடிக்கடி அலைகள் அடித்தன.

ஒரு புன்னைமர நிழலில் நாங்கள் கொண்டுசென்ற உண வுப்பொருட்களை வைத்தோம். எங்களோடு வந்த என் வயதையொத்த சில சிறுமிகள் நண்டு பிடிப்பதற்காக ஓடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நவாஸ்: அங்க இங்க போகாதே. நீதான் தோணியைக் கடலில தள்ளி விடணும்'' உம்மா கூறினர்.

நானும், நஜீமாவும் சற்றுத்தள்ளி அருகருகே உட்கார்ந்தோம்.

பெண்கள் ஊர்க்கதைகளை மெல்லத் தொடங்கினர். இதமான காற்று வீசியது.

தூரத்தே கடலில் கப்பலொன்றுசெல்வது தெரிந்தது. நஜீமாவுக்கு அதைக் காட்டினேன்.

''நஜீமா. நான் உன் பெயரை இந்த மண்ணில் எழுதிக் காட்டட்டா?'' நான் கேட்டேன்.

''உனக்கு எழுதத் தெரியுமா?''

''ஓ. தெரியுமே''

கையால் மணலை செப்பனிட்டு ஒவ்வொரு எழுத்தாக அவளுடைய பெயரை எழுதினேன்.

''நல்லா இருக்கே''

''நீயும் பாடசாலைக்குப் போனா எழுதலாம்''

''நான் எப்ப போற?''

''உனக்கு இப்போதானே மூணு வயசு; ஆறு வயசாகணும்''

''உன் பெயரையும் எழுதேன்''

அவளுடைய பெயருக்கு அருகே என்னுடைய பெயரை எழுதினேன்.

''நஜீமா...நவாஸ்'' நான் வாசித்தேன்.

அவள் சிரித்தாள். நானும் சிரித்தேன்.

பெண்கள் கடலுக்கருகில் என்னை அழைத்துச்சென்றனர்.

தென்னம்பாளையால் செய்த தோணியில், ஈர்க்கில் கடதாசிப்பாயை நடுவில் குத்தி, அதைக் கப்பலாக பாவனை செய்து ''நவாஸ். சோற்றை அள்ளி இதனுள் வைத்து கடலில் தள்ளிவிடு'' என்றார் உம்மா.

இரண்டு கைகளாலும் மஞ்சள் சோற்றை அள்ளி கப்பலுக்குள் (?) வைத்து, சில இறைச்சித்துண்டுகளையும் அதனுள்போட்டு, அலை அடித்து திரும்ப இழுத்துச்செல்லும் போது கப்பலைத் தள்ளிவிட்டேன்.

கப்பல் விஞடியில் கவிழ்ந்தது. சோற்றுப் பருக்கைகள், இறைச்சித் துண்டுகள், கடல்நீரில் கலையுண்டன. கப்பல் அங்குமிங்குமாக ஒத்துண்டது.

கழிப்பு அவ்வளவுதான். கப்பலுக்குள் சோற்றைவைத்து கடலினுள் வாழும் ஊரோடிக்கு அனுப்பிவிட்டதாக திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திப்பட்டவாறு பெண்கள் திரும்ப புன்னைமர நிழலுக்கு வந்து, வாழை இலைகளில் சோற்றையும், கறியையும் கொட்டி சாப்பிடத்தொடங்கினர்.

நானும், நஜீமாவும் ஒரு வாழை இலையின் இரண்டு பக்கங்களிலும் உட்கார்ந்து சாப்பிட்டோம்.

---

# 12

ஒரு ஞாயிற்றுக்கிழமை. விடிந்ததும், விடியாததுமாக மஜீது என்னைத் தேடிவந்தான்.

''டேய் வாறியா. முந்திரிக் கொட்டை பொறுக்கப் போவோம்'' என்றான்.

அது முந்திரி சீஸன். கிராமத்தில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஓலைப்பெட்டிகளிலும், கோணிச் சாக்குகளிலும் முந்திரிப் பழங்கள் குவித்துவைக்கப்பட்டு விற்பனையாகும்.

''போவோமே''

கிராமத்துக்கும், பற்றைக் காடுகளுக்கும் மத்தியில் முந்திரித் தோப்புகள் இருந்தன. தோப்புகளைச் சுற்றி முந்திரி காய்க்கும் காலங்களில் மட்டும் பற்றை வேலி போட்டிருக்கும். சில தோப்புகளில் முட்கம்பி வேலியும் அடித்துஇருப்பர்.

மஜீதும், நானும் முந்திரித் தோப்புகளை நோக்கி நடந்தோம். நீண்ட ஒழுங்கையால் சென்று, பிரதான பாதையை அடைந்து, அதைக் கடந்து வேறொரு ஒழுங்கையால் நடந்தோம்.

முந்திரி மரங்கள் நிறைய இள மஞ்சள், இளஞ்சிவப்பு நிறப் பழங்கள் காய்த்துக் குலுங்கின.

கீழ ஒழுங்கையில் கடந்த இரவு வௌவால்கள் சுவைத்துத் துப்பிய சக்கைகள் கொட்டைகளுடன் கிடந்தன. அவைகளை எடுத்து, சக்கைகளைப் பிய்தது எறிந்துவிட்டு கொட்டைகளை மட்டும் சேகரிக்கத்தொடங்கினோம். ஓடி ஓடி சேகரித்தோம்.

கம்பி வேலிகளுக்குள், நிறைய கொட்டைகள் சக்கைகளுடன் கிடந்தன. மஜீது தன் கையுடன் கொண்டுவந்திருந்த நீண்ட தடியொன்றை இரண்டு முட்கம்பிகளின் இடைவெளிக்குள்ளால் உள்ளே செலுத்தி கொட்டைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே ஒழுங்கைக்குள் தட்டிவிட்டான். நான் சக்கைகளைப் பிய்த்து எறியும் வேலையில் ஈடுபட்டேன்.

தொடர்ந்து பற்றை வேலிகள் போட்டிருந்த பெரிய தோப்புகளுக்கு அருகில் சென்றோம்.

''டேய் நவாஸ். நீ வெளியே நின்று யாராவது வாருனு எனப் பாரு. ந'ன் உள்ளே போகிறேன். யாராச்சும் வந்தா கூ.. என சப்தமிடு. ரெண்டுபேரும் பாய்ஞ்சிடலாம்''

''டேய். டேய். நில்லுடா. உள்ளே போய் களவெடுக்கப்போறியா? அது ஆகாதுடா. அது பாவம்டா'' நான் கெஞ்சினேன்.

''போடா. போடா. நான் சொன்னமாதிரி செய்யல்லே-அறைஞ்சுடுவேன்''

என் பதிலை எதிர்பாராமல் அவன் பற்றை வேலியின் மேலால் பாய்ந்தான்.

''டேய். பொறுக்கின கொட்டைகளை சாறனுக்குள்ள வைச்சு மடிச்சி கட்டிக்க. யாரும் வந்தா ஓட ஆயத்தமா நில்லு'' அவன் அங்குமிங்கும் பார்த்தவாறு பூனையாகப் பதுங்கி முந்திரி மரங்களுக்கு அருகில் சென்று ஒவ்வொரு கொட்டையாகப் பொறுக்கத்தொடங்கினான்.

சேகரித்த கொட்டைகளையும் என்னிடம் கொண்டுவந்து தந்தான்.

''டேய். உன்னுக்கு காவல்காரன் யாருமே இருப்பதா தெரியல்ல. இதுதான் சந்தர்ப்பம். நான் மரத்தில ஏறி பழம் ஆய்ந்துகொண்டு வாறன். நல்லா பாத்துக்க'' கூறியவாறு திரும்பவும் தோப்புக்குள் செல்லத்தொடங்கினான்.

''டேய் நில்லுடா. களவெடுக்காதடா. வாடா போகலாம்'' நான் கத்தினேன்.

''போடா பொன்னைப்பயலே. சும்மா நில்லு. இல்லே. வெளியே வந்தா அறைஞ்சி கொண்ணுடுவேன்''

என் கால்கள் நடுங்கின. யாராவது வந்துவிட்டால்...? முந்திரிப் பழங்கள் களவெடுப்பதை யாராவது கண்டு வாப்பாவிடம் சொல்லிவிட்டால்...? முதுகுத்தோலை உரித்து விடுவார்.

எனக்கு இதுவும் வேண்டும். இன்னும் வேண்டும். அன்று ஈச்சம்பழம் பறிக்கப் போனபோது, மஜீதுடன் இனிமேல் இத்தகைய வேலைகளுக்குப் போவதில்லை எனத் தீர்மானித்து வைத்திருந்தேன். அதை மறந்து இப்போது இவனிடம் மீண்டும் மாட்டிக்கொண்டேன் இதுதான் கடைசித்தடவை. இனிமேல் ஹரும்... ஹரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத், பொத்... என பழங்கள் முந்திரி சருகுகளில் வீழ்ந்தன. பத்து இருபது பழங்கள் ஆய்ந்திருப்பான். திடீரென...

வள்... வள்... என நாய் குரைக்கும் சப்தம். இரைத்த வாறு நாய் ஓடிவருவதுபோன்ற சப்தம். "யார்ராது ?" என்ற கர்ணசடூரமான ஆண்குரல். தொடர்ந்து யாரோ ஓடிவருவதுபோன்ற அரவம். நாயின் வள்...வள் சப்தங்கள்.

நான் திணுக்குற்றேன்.

"மஜீது. ஆள்டா..." என்றேன் சப்தமிட்டு.

'தொபீர்' என அவன் வீழ்ந்த சப்தம்கேட்டது நொண்டியவாறு பற்றை வேலிக்கு மேலால்பாய்ந்து வெளியே வீழ்ந்தான்.

நாயின் வள்...வள்.. சமீபத்தில் கேட்டது.

இருவரும் தலைதெறிக்க ஓடத்தொடங்கினோம். மடித்துக்கட்டிய சாரனுக்குள் கிடந்த முந்திரிக்கொட்டைகள் அங்குமிங்குமாக சிதறின.

சிறிதுதூரம் ஓடியதும் திரும்பிப்பார்த்தேன்.

ஒரு பெரிய நாய் பற்றைவேலியால் பாய்ந்து எங்களைத் துரத்திவந்தது.

நாங்கள் பின்னங்கால் பிடரியில்பட... மூச்சு இரைக்க.. வேகமாக... மிக வேகமாக ஓடினோம்.

மஜீது காலொன்றை இழுத்து இழுத்து ஓடினான்.

மீண்டும் திரும்பிப்பார்த்தேன்.

தூரத்தே பற்றைவேலி ஓரமாக ஓர் உருவம் தெரிந்தது.

நாங்கள் ஓட்டமாக ஓடி ஒழுங்கையைக் கடந்து பிரதான பாதைக்கு வந்தோம்.

பாதையில் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆட்களின் நடமாட்டம் தெரிந்தது.

திரும்பிப்பார்த்தோம். நாயைக் காணவில்லை.

பாதையின் ஓரமாக சென்று நின்று மடித்துக்கட்டிய சாரனை அவிழ்த்துவிட்டேன். ஐந்து முந்திரிக்கொட்டைகள் மட்டும் கீழே வீழ்ந்தன. நூற்றுக்குமேல் கிடந்த கொட்டைகள் எல்லாம் ஓடும்போது சிதறிவிட்டிருந்தன.

மஜீது கீழே உட்கார்ந்தான். முழங்காலில் இரத்தம் வழிந்தது.

"டேய் ரெத்தம் வழியுதுடா" என்றேன்.

"மரத்திலிருந்து துள்ளும்போது கீழேகிடந்த கல் குத்திவிட்டது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இர்ரா. முருங்கை இலை கொண்டுவாறன்''

பக்கத்தில் நின்ற முருங்கை மரமொன்றில் சில இலை களைப்பிய்த்து கைக்குள் வைத்துக் கசக்கி சாற்றைக் காயத்தில் பூசிவிட்டேன்.

★ ★ ★

காலையில் நடந்ததை நஜீமாவிடம் சொல்லிச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது எனக்கு.

மாமியின் வீட்டுக்கு சென்றேன்.

மாமி வாசலில் நின்றார். கூடவே மாமியின் தம்பி. 'ஏன்டாம்பி'யும் நின்றான்.

''ஏன்டாம்பி .. கோழிக்கெல்லாம் தவிடு வைச்சுட்டியா?'' மாமி கேட்டார்.

''வைச்சுட்டேன்''

''சந்தைச்கு போயிட்டு வாறியா?''

''அதுக்கென்ன?''

''அப்பிடி போறப்போ நான் சொல்ற வீட்டுக்குப் போய் வட்டிக்காசு தரணும் வாங்கிட்டு வந்துடு''

திடீரென மஜீதின் எண்ணம் எழுந்தது. மாமி நிச்சயமாக நரகத்துக்குப் போகவேண்டியவா தான்.

உள்ளே நஜீமா நின்றாள்.

''வா ஊஞ்சலாடுவோம்'' என்னை அழைத்தாள்.

''இல்ல. திட்டியில பெரிய ஆக்களெல்லாம் முந்திரிக் கொட்டை விளையாடுறாங்க. வா போய்ப்பார்க்கலாம்''

நஜீமாவும், நானும் திட்டிக்குச் சென்றோம்.

சுமார் இருபதுபேர் அளவில். எல்லோரும் பெரிய, பெரிய ஆண்கள்.

திட்டியில் ஓர் இடத்தில் முந்திரிக்கொட்டை குவியலாக குவிக்கப்பட்டிருந்தது. ஆயிரம் கொட்டைகளுக்குமேல் இருக்கலாம்.

சுமார் ஐம்பதடி தூரத்தில் நீண்டகோடு கீறி ஏழெட்டுப்பேர் நின்றனர். ஒருவனின் கையில் நிறைகூடிய ஒரு படிக்கல். அவன் கொட்டைக்குவியலுக்கு இலக்குப் பார்த்துவிட்டு, வேகமாக படிக்கல்லால் எறிந்தான்.

படிக்கல் குவியலுக்கு சற்று மேலே சென்று விழுந்தது.

மற்றவன் அதே படிக்கல்லை எடுத்து குறிபார்த்து எறிந்தான். அதுவும் குவியலுக்கு மேலேதான் விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாமவன். கறுப்பு நிறம். பார்ப்பதற்கு சற்று பய-கரமாக இருந்தான்.

படிக்கல்லை கையிலெடுத்து, சிறிது நேரம் அசையாமல் நின்று குறி பார்த்துவிட்டு எறிந்தான். படிக்கல் சரியாக முந்திரிக்கொட்டைக் குவியலில் விழுந்தது. கொட்டைகள் நாலா பக்கமும் சிதறின.

கூடிநின்ற அவனுடைய தோழர்கள் சிதறிய கொட்டைகளைப் பொறுக்கினர். ஒரே ஆரவாரம்.

மீண்டும் அவர்கள் தலைக்கு இத்தனை கொட்டைகள் என்ற வீதத்தில் கணக்கிட்டுக் குவித்தனர்.

ஒவ்வொருவராக படிக்கல்லால் எறிந்தனர். கொட்டைகள் சிதறுவதும், பொறுக்குவதும்... பார்ப்பதற்கு சந்தோசமாக இருந்தது.

முந்திரிக்கொட்டைகள் சிதறும்போது நஜீமா கைகளைக் கொட்டி சிரித்தாள். நானும் அவளுடன் சேர்ந்துகொண்டேன்.

---

## 13

நோன்பு மாதம் தொடங்கிவிட்டது. கிராமத்திலுள்ள ஆண்கள், பெண்கள் எல்லோருமே நோன்பு நோற்பார்கள். நடுச்சாமத்தில் எழுந்து சாப்பிடுவார்கள். நோன்பு நோற்பதாக நிய்யத்து வைப்பார்கள். சற்று நேரம் நித்திரை செய்வார்கள். பெண்கள் காலை எட்டு, ஒன்பது மணிவரை நித்திரை செய்வர். பகலெல்லாம் பட்டினி. பிற்பகல் இருட்டி மஃரிப் பாங்கு கேட்டதும் பேரீச்சம்பழங்களை சாப்பிட்டு அன்றைய நோன்பை முடிப்பார்கள்.

நானும் எல்லா நோன்புகளையும் நோற்க வேண்டுமென உம்மாவிடம் வற்புறுத்தினேன்.

''வேணும், நீ சின்னஆள். நோன்பு பிடிச்சு தாங்க மாட்டே.'' உம்மா சமாளித்தார்.

நான் மீண்டும் வலியுறுத்தினேன். பலன் முதலாவது நோன்புமட்டும் பிடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

நோன்பு நாட்களில் ஸஹர் நேரத்தில் நோன்பு நோற்க எழுப்புவதற்காக பக்கீர்கள் தஹராக்களை அடித்துக் கொண்டு ஸலவாத்துக்களை உரத்து கூறிக்கொண்டு வருவர். மூலைக்கு மூலை நின்று அவர்கள் தஹராக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி அடித்தவாறு 'ஹில்... ஹில்...' என சப்தமிடுவர். நள்ளிரவில் இடியோசையாக சப்தம் கேட்கும்.

நோன்பு நாட்களிலும் வாப்பா காலையிலேயே எழுந்து, வயலுக்குப் போய்விடுவார்.

உம்மா எட்டுமணிக்குப் பிறகுதான் எழும்புவார். குளித்துவிட்டு, சோமனை உடுத்து ஹதீது கேட்கப்போவார். கிராமத்தில் பல இடங்களில் மார்கக உபன்னியாசம் செய்வார்கள். பள்ளிவாசல்களில்... மார்க்க அறிஞர்களின் வீடுகளில்... ஓலைப்பந்தல் போட்டு, கீழே பாய் விரித்து இருப்பர். மார்க்கப் பிரசங்கம் செய்பவருக்கும் பெண்களுக்குமிடையில் ஒருதிரை தொங்க விடப்பட்டிருக்கும். திரையின் ஒரு பக்கத்தில் பெண்களும், மறுபக்கத்தில் பிரசங்கம் செய்பவரும், ஆண்களும் இருப்பர்.

பிரசங்கம் காலையில் ஒன்பதுமணி சுமாருக்கு தொடங்கினால் நண்பகல்வரை நீடிக்கும்.

பிரசங்கம் கேட்பதற்கு கிராமத்திலுள்ள பெண்கள் சகலரும் செல்வர். வீட்டிலே பெண்களையே காணமுடியாமல் இருக்கும். கூடுதலான பெண்கள் வருவதால் பிரசங்கம் செய்யும் இடத்துக்கு சமீபமாக நிறைய மிட்டாய் கடைகள், சாப்புச் சாமான் கடைகள் திறக்கப்பட்டிருக்கும்.

"நவாஸ், ஹதீது சொல்லி முடியக்குள்ள ஒரு தட்டை எடுத்துக்கொண்டு வா." உம்மா என்னிடம் சொல்லிவிட்டு காலையில் போவார்.

சரியான நேரத்துக்கு மிட்டாய் கடைகளின் மத்தியில் தட்டுடன் நிற்பேன்.

உம்மா என்னைக் கூட்டிச்சென்று, தட்டு நிறைய மிட்டாய்கள் வாங்கித் தருவார். தேன்குழல், ஹல்வா, தேங்காய்ப்பூவும் சீனியும் கலந்த மிட்டாய்கள் .. மாவால் செய்த இனிப்புப் பண்டங்கள்...... சீனி மிட்டாய்கள்...... எல்லாமே வாங்கித்தருவார்.

நோன்பு நாட்களின் பகல் காலங்களில் ஹோட்டல்கள் எதுவுமே திறபடாது. ஆண்கள் வெற்றிலை பாக்கு போடாத வெளுத்த உதடுகளுடன் நடமாடுவர். பாதைகளில் பீடி, சிகரட் புகைக்கமாட்டார்கள்.

பிற்பகல் நேரங்களில் கிராமத்தில் பல இடங்களில் மிட்டாய் கடைகள் திறந்திருப்பர். கடைகளில் ஏகக் கூட்டமாக இருக்கும்.

பள்ளிவாசல்களால் தீர்மானிக்கப்படும் வீடுகளில் பெரிய கடாரங்களில் அரிசிக்கஞ்சி காய்ச்சுவர். பிற்பகலானதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,கஞ்சி' காய்ச்சப்படும் வீடுகளில் நோன்பு திறப்பதற்கு ,கஞ்சி' பெறுவதற்காக கோப்பைகளுடனும், பானைகளுடனும் பெரிய கூட்டமே கூடும்.

ஆண்கள் நோன்பு திறக்க பள்ளிவாசலுக்கு செல்வர். பெண்கள் வீட்டில்.

நோன்பு திறந்ததும் கஞ்சி.. இனிப்புப் பண்டங்கள்... ரொட்டி அல்லது இடியப்பம் போன்ற உணவுகள். தராவீஹ் தொழ போகமுன்னர் இரவு உணவு.

நோன்பு இரவுகளில் ஒவ்வொரு வீடுகளிலும் திருக்குர்ஆன் ஓதுவார்கள். அந்த நாட்களில் நோனபு தினங்களில் மட்டுமல்ல, வருட முழுவதுமே ஒவ்வொரு வீடுகளிலும் இரவானதும் குர்ஆன் ஓதத்தொடங்கிவிடுவர். இரவில் தெருக்களால் செல்லும்போது, திருக்குர்ஆன் ஓதும் ஒலி இனிமையாக காற்றில் தவழ்ந்துவரும்.

பக்கத்திலுள்ள வீடொன்றில் தராவீஹ் தொழுவதற்காக உம்மா போவார். மாமியும் அந்த வீட்டுக்குத்தான் வருவார். மாமாவும், வாப்பாவும் பள்ளிவாசலுக்குத் தொழப்போவார்கள்.

நஜீமாவைத் தனியே விட்டுவிட்டு போகமுடியாததால், தராவீஹ் தொழுதுமுடிந்து மாமி வரும்வரை என்னை வந்து நஜீமாவுடன் நிற்குமாறு மாமா கேட்டார். வாப்பா பள்ளிவாசலுக்கு போகும்வழியில், என்னை மாமியின் வீட்டில் விட்டுவிட்டு மாமாவை அழைத்துக்கொண்டு செல்வார்.

ஒருநாள் வாப்பா வெளியூருக்குச் சென்றவர் இரவாகியும் வீட்டுக்குத் திரும்பிவரவில்லை.

''நீ மாமிட்ட எப்பிடிப் போப்பிறே?'' உம்மா கேட்டார்.

''நான் தனியே ஓடிப்போயிடுவேன்''

''இருட்டா இருக்கே''

''ஒரு பந்தம் கொளுத்தித்தந்தா, அந்த வெளிச்சத்திலே போயிடுவேன்''

அப்போதெல்லாம் டோர்ச் லைட் பாவிப்பவர்கள் மிகக்குறைவு. இரவுவேளைகளில் வெளியே செல்வதானால் சிரட்டையொன்றுக்குள் மெழுகுதிரியை கொளுத்தி வைத்துக்கொண்டு செல்வர். அல்லது தடியொன்றில் சீலையைச் சுற்றி தேங்காய் எண்ணெயில் துவைத்து நெருப்பு வைத்து அந்த வெளிச்சத்தில் செல்வர். இதுதான் பந்தம். சிறிய விளக்கொன்றின் வெளிச்சத்தில் நெருப்பு அவியும் விறகுத் துண்டுடன்... இப்படியும் இரவில் நடமாடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறைந்த வெளிச்சத்தில் தெருவில் வருபவர்கள் அடிக்கடி ''கம்புக்கட்டு'' என சப்தமிட்டு சொல்வர். அதாவது தோளில் கம்புகளைக் கட்டி தூக்கிக்கொண்டு வருவதால் போதிய அளவு விலகிச்செல்லுமாறு எதிரே வருபவர்களை எச்சரிப்பதற்காக இவ்வாறு சொல்வர். உண்மையிலேயே தோளில் எதுவும் இருக்காது.

உம்மா பந்தமொன்றை கொளுத்தித் தந்தார்.

பந்தத்துடன் நடந்தேன். ஒரே இருட்டு மனதில் பயம்.

தெருவில் நடமாட்டமே இல்லை. வேலிகளில் மறைந்திருந்த சுவர் கோழிகளின் ஒலி நாய்கள் குரைக்கும் சப்தம் எங்கேயோ பூனையொன்று வேகமாக உறுமியது.

என் உடல் சிலிர்த்தது. திரும்பி வீட்டுக்கே ஓடிவிடலாமா என நினைத்தேன் நஜீமா தனியே இருக்கவேண்டி வருமே என்பதை நினைத்தவுடன் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

நாற் சந்தியை .. ஆலமரத்தை நெருங்கும்போது இரத்தம் உறைவதுபோன்ற பயம் எனக்கு. வாப்பாவுடன் வரும்போதெல்லாம் எனக்கு பயமே ஏற்படுவதில்லை. இன்று ஒவ்வொரு அடி வைக்கும்போதும் பயமாக இருந்தது.

சந்தியை அடைந்தேன். சற்று பலமாக காற்று வீசியது. திடீரென கையில் பிடித்திருந்த பந்தம் அணைந்தது. காரிருள். என்னையே என்னால் பார்க்கமுடியாத இருள்.

பயத்தினால் ''உம்மா ..'' என அலறினேன். ஒரு வினாடிதான் தாமதம். எதிரே யாரோ டார்ச்லைட் அடித்தவாறு நடந்துவருவது தெரிந்தது. இருதயம் படக் படக் எனத் துடிக்க நான் அந்த டார்ச் லைட் வெளிச்சத்தைப் பார்த்தவாறு வேகமாக நடந்தேன்.

வெளிச்சம் சரேலென என் முகத்தில் வீசப்பட்டது. எனக்கு கண்கள் கூசின.

''நவாஸ். இருட்டுக்குள்ள தனிய வாறியா? நான் உன்னை அழைச்சிட்டுப்போகத்தானே வாறேன்'' என்றார் மாமா.

இப்போதுதான் எனக்கு உயிர் வந்தது .....

மாமாவுடன் அவருடைய வீட்டுக்குச் சென்றேன்.

★ ★ ★

மாமாவும், மாமியும் தராவீஹ் தொழப் போய்விட்டனர். நானும், நஜீமாவும் வீட்டில் தனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்றைக்கு என்ன விளையாடலாம்?'' நான் கேட்டேன்.

''விளையாடுவதற்குமுன்னுலேயே இதைத் தின்னு'' கூறியவாறு வட்டிலப்பத் துண்டொன்றைத் தந்தாள்.

''லொம்ப லுசியா இலுக்கே. யாரு செய்தா?'' வாய்க்குள் சுவைத்தவாறு கேட்டேன்.

''எங்க உம்மாதான் செய்த''

''இன்னு. இதை நீ தின்னு''

''வாணு. நான் கொள்ளயா தின்னுட்டன்''

''நான் தாறன். இதைத் தின்னன்''

''அப்படின்டா கொண்டா. திங்கன்''

அவளும், நானும் சுவைத்து சுவைத்துத் தின்றோம்.

''எனக்குக் கொடுக்கச்சொல்லி உங்க உம்மாவா வைச்சுட்டு போனு?'' நான் கேட்டேன்.

''இல்லே. நான்தான் உனக்கு வைச்சேன்''

எனக்குத் தெரியும், மாமி எனக்காக வைத்திருக்க மாட்டார் என்று.

''நீ தனியத்தான் வந்தியா?'' நஜீமா கேட்டாள்.

''தனியத்தான்''

''இருட்டுக்குள்ள வாறதுக்கு உனக்குப் பயமில்லையா?''

''பயம்தான். நான் வராட்டா நீ தனியே இருப்பியே. அதுதான் வந்தேன்''

''தெருவில பேய் நிக்குமே''

''நோன்பு நாளேல பேய்களை பிடிச்சி, அடைச்சு வைச்சுடுவாங்களாம். நொண்டிப் பே மட்டுந்தான் நிக்குமாம். அது நல்ல பேயாம். ஒத்தருக்கும் ஒண்ணும் செய்யாதாம்''

''நீ பேயைப் பார்த்திருக்கியா?''

''இல்ல''

நாங்கள் இருவரும் எதைப்பற்றியெல்லாமோ கதைத்துக்கொண்டிருந்தோம்.

''உஞ்சில் ஆடுவோமா?'' நான் கேட்டேன்.

''வாவன்''

நாங்கள் எதிரும், புதிருமாக ஊஞ்சலில் அமர்ந்தோம்.

''கப்பல் பாட்டு படிப்பமா?''

''அது என்ன பாட்டு?''

''நான் பாட்டு படிப்பேன். நீ இல்லல்லாஹ் சொல்லு''

''படியன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆசைக் கடல் பொங்கி நின்னு''
''இல்லல்லா... இல்லல்லா...''
''அலிபுலாமீன் முழங்கி நின்று''
''இல்லல்லா... இல்லல்லா ''
''ஓசையாம் ஒரு வலம்புரியாம்''
''இல்லல்லா இல்லல்லா ''
''ஓடும் கப்பல் முஹம்மதியாம்''
''இல்லல்லா .. இல்லல்லா ''
''கப்பலில் சரக்கு ஒப்பாமல் ஏத்தி
கணக்கொன்றும் தவறாமல் கடகடன்றெழுதி
ஆசையா பறக்குதுகா ஆகாசக் கப்பல்''

நான் பாடலைத் தொடர்ந்தேன். நஜீமா இல்லல்லாஹ் சொல்லிக்கொண்டிருந்தாள்.

---

## 14

வீட்டில் கண்டதை எல்லாம் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு. கண்டகண்ட இடங்களிலெல்லாம் எழுதுவேன்.

எதிரில் எதைக்கண்டாலும் வாசிப்பேன். கடதாசிகள் .. புத்தகங்கள்... பழைய கொப்பிகள்...

வீட்டில் பழைய கொப்பிகள் பல கிடந்தன, ஒரு லீவு நாள் இந்தக் கொப்பிகள் எல்லாவற்றையும் புரட்டினேன். சில கொப்பிகள் மாமாவினுடையவை. சில வாப்பாவின் கோணல்மாணலான கையெழுத்தில் இருந்தன.

ஒரு கொப்பி 'மந்திரங்கள்' என தலைப்பிட்டிருந்தது.

அதைக் கையிலெடுத்துப் புரட்டினேன். முழுக்கமுழுக்க மந்திரங்கள். பிள்ளை பிறக்கவைக்க வீடு காவல்பண்ண . தொழிலில் முன்னேற... மழை பெய்விக்க வழக்குகளை வெல்ல .. வேளாண்மை அபரிமிதமாக விளைய பெண்களை வசியம்செய்ய இவ்வாறு எத்தனையோ விடயங்களின் காரியசித்திக்கான மந்திரங்கள் எழுதப்பட்டிருந்தன.

எல்லாமே பெரியபெரிய மந்திரங்கள். ஒவ்வொன்றையும் மனப்பாடம் செய்து, பலநூறு தடவைகள் திரும்பத் திரும்ப சொல்லிவந்தால் காரியசித்தி கிட்டும் என முகவுரையில் எழுதப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பக்கங்களைத் தட்டிக்கொண்டு சென்றேன். ஒரு பக்கத்தில் நாலேநாலு வரிகளில் மந்திரமொன்று எழுதப் பட்டிருந்தது. நாய் உறுக்கும் மந்திரம்.

எனக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. தெருக்களில் செல்லும்போது எனக்கு எப்போதுமே நாய்களுக்குத்தான் பயம். மந்திரமொன்றைப் பழகிக்கொண்டால் நாய்கள் என் அருகில் நெருங்காது. நெருங்கினால் மந்திரத்தால் உறுக்கி ஸ்தம்பிதமடையச் செய்துவிடுவேன்.

மந்திரத்தை வாசித்தேன்.

"ஓம். அகோரகண இரணிய நரசிங்க விட்டுணு கவுச கத்தினாலே விழுசீ!" என கூறியவாறு 'தூ' என துப்ப வேண்டும்.

மூன்று நான்கு தடவைகள் மந்திரத்தை வாசித்தேன். மனப்பாடம் ஆகிவிட்டது.

மனதினுள் ஆயிரம் தடவைகள் சொல்லிப்பார்த்தேன். மந்திரத்தைச் சொல்லச்சொல்ல ஆனந்தமாக இருந்தது.

நாயொன்றைக் கண்டு, அதை உறுக்கிப்பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் எனக்கு.

நாய்களைத் தேடத்தொடங்கினேன்.

நாயின் நல்லகாலமோ, என்னுடைய கெட்டகாலமோ அன்று முழுவதுமே ஒரு நாயைத்தானும் என்னால் சந்திக்க முடியவில்லை.

அடுத்தநாள்.

நானும், மஜீதும் சைக்கிள் றிம் ஓட்டி விளையாடிக் கொண்டு நின்றோம். நாய் உறுக்கும் மந்திரத்தைப்பற்றி அவனிடம் வெகுவாகப் புளுகி இருந்தேன். அவனுக்கும் மந்திரத்தைச் சொல்லித்தருமாறு என்னைக் கேட்டான். நான் மறுத்துவிட்டேன். ஒரு நாயைமட்டும் அவனுக்கு உறுக்கிக் காட்டிவிட்டால், அதன்பின்னர் அவன் என்னுடன் சண்டைக்கு வரமாட்டான். என்னுடைய மந்திரக்கொப்பி யில் ஆள் உறுக்கும் மந்திரமும் இருப்பதாக அவனிடம் சொல்லி வைத்திருந்தேன்.

"நாய் உறுக்குவதென்று என்னடா?" அவன் கேட்டான்.

"நான் மந்திரத்தைச்சொல்லி அதை உறுக்கினேனெண்டு, அது நின்ற இடத்திலேயே நிக்கும். ஆடாது. அசையாது. அப்புறம் மெள்ளமெள்ள செத்துப்போகும்"

"ஆளை உறுக்கினாலும் இப்படித்தானோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆமாடா''

''நீ நாயை உறுக்கிப்பார்த்தாயா?''

''பத்து நாய்களை உறுக்கிப்போட்டடன். நீ ஒரு நாயைக் காட்டேன். உறுக்கிக்காட்டுறன்''

சிறிதுநேரம் நாங்கள் தொடர்ந்து விளையாடினோம். நாங்கள் இருவரும் சற்று தூரத்தில் எதிரும் புதிருமாக நின்று வேகமாக சைக்கிள் றிம்மை ஓட்டிவந்து மோதவிடுவோம். யாருடைய றிம் முதலில் கீழே விழுகிறதோ அவர் தோல்வி அடைவார்.

''டேய் நவாஸ். அதோபார்டா. நாய்டா'' என்றான் மஜீது.

துள்ளிக்குதித்தேன். மந்திரத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான முதலாவது பிராணி. எனக்கு சந்தோசம் பிடிபடவில்லை.

அது ஒரு கறுத்தநாய். கழுத்தில் சடை. உயர்ந்து வளர்ந்து இருந்தது. ஆடி அசைந்து நடந்துவந்தது.

''டேய். நீ இங்கேயே நில்லு. அதை எப்படி உறுக்கிறேன் என்பதைப் பார். இதுக்குமேலே நீ என்னோடை சண்டைபோட்டே, இத உறுக்கிறுப்ல உன்னயும்...'' கூறியவாறு நாயைநோக்கி நடந்தேன்.

எனக்கும், நாய்க்கும் இடையில் சுமார் பத்து அடிகள் வித்தியாசம் இருக்கலாம்.

ஆடி அசைந்து தன்பாட்டில் வந்த நாய் என்னைக் கண்டதும் நின்றது. முகத்தை உற்றுப்பார்த்தது. இதுதான் சந்தர்ப்பம் என ''ஓம் அதோகண ..'' மந்திரத்தைச்சொல்லி 'தூ' என துப்பினேன்.

நாய் என்னை சற்று வெறித்துப்பார்த்தது. மீண்டும் 'ஓம் அதோகண...' மந்திரத்தை நொடிக்குள் கூறி 'தூ' என்றேன்.

நாய் என்னநினைத்ததோ, மிகப்பலமான குரலில் குரைத்தவாறு என்னைநோக்கிப் பாய்ந்தது.

''உம்மா '' என ஓலமிட்டவாறு நான் ஓட... நாய் என்னைத் துரத்த.. நான் ஓட பக்கத்தில்நின்ற மஜீது கல் ஒன்றை எடுத்து நாய்க்கு எறிய... நாய் வேறுபககம் ஓடியது.

மஜீது விழுந்து விழுந்து சிரித்தான். என் முகத்தில் எண்ணெய் வடிந்தது.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்புப்பெருநாளைக்கு சில நாட்களுக்கு முன்னர். கிராமத்தில் பணக்காரர்கள் ஸக்காத் கொடுத்தனர். தெருக்கள் நிறைய ஏழைகள். ஆண்களும், பெண்களும், பிள்ளைகளுமாக ஒரே ஓட்டமும் நடையும்.

ஸக்காத் கொடுக்கும் தனவந்தர்களின் வீடுகளில் நேரத்தோடேயே மிருகங்களை அடைப்பதுபோன்று ஆட்களை அடைக்கத்தொடங்கிவிடுவர். இரண்டுமூன்று மணி நேரமாக இந்த அடைக்கும்வேலை நடைபெறும். சிறிய இடம். பெருங் கூட்டம். இடநெருக்கடி. வெயர்வை நாற்றம். வெய்யிலின் கோரம். நோன்புநோற்ற பெண்களும், ஆண்களும்.

பார்ப்பதற்கு பெரிய பரிதாபமாக இருக்கும்.

நானும் மஜீதும் தெருக்களில் திரிந்து ஸகாத் வாங்குவதை வேடிக்கை பார்ப்போம்.

வீடுகளில் ஆட்களை அடைத்துமுடித்ததும் ஸகாத் கொடுக்கப்போகும் வீட்டின் சொந்தக்காரன் சில்லறைகளால் நிரப்பிய இரண்டுமூன்று தட்டுக்களுடன் வந்து தெருக்கதவு ஓரமாக நிற்பான். கூட்டத்துக்குள் நிற்கும் கூலிக் காடையர்கள், அல்லது ஸகாத் கொடுப்பவனின் சொந்தக்கார வாலிபர்கள் அருகில் நிற்பர். ஒவ்வொருவரின் கையிலும் சிறிய குண்டாந்தடிகள். பணம் கொடுக்கும் போது கூட்டம் குழம்பினால் அடக்குவதற்காக.

நீண்டநேரம் அடைபட்டு வாடிவதங்கிப்போய்க் கிடப்பவர்கள் ஒவ்வொருவராக தெருக்கதவருகில் வருவர். பணக்காரன் தட்டுக்குள்ளிலிருந்த ஐம்பதுசத அல்லது இருபத்தைந்துசத குற்றியொன்றை எடுத்துவந்தவரின் கைக்குள் வைப்பார். இப்படி ஒவ்வொருவராக.

"சீ! இவ்வளவு நேரம் காத்துக்கொண்டு நின்றதுக்கு இருபத்தைந்து சதம்தானா?" சிலர் வாங்குவதையும் வாங்கி விட்டு ஏசியவாறு செல்வர்.

"உனக்கு எவ்வளவு?" ஒருத்தி மற்றவளிடம் கேட்பாள்.

"எனக்கு ஐம்பது சதம். உனக்கு?"

"எனக்கும் ஐம்பது சதம்தான்"

"அவருதான் ஊரில பெரிய பணக்காரன். போன வருசமும் எனக்கு ஐம்பது சதம்தான். சீதேவி நல்லா இருக்கணும்"

இவர்களின் உரையாடல்களைக் கேட்கும்போது நான் நினைப்பேன் 'என்ன முட்டாள் சனங்கள்! சுமார் நாலுமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்குமேல் வேகாவெய்யிலில் காய்ந்து, இந்த புழுக் கத்தினுள் வெயர்வை வடிய வடிய தன்மானத்தை மறந்து நின்று ஐம்பது சதம் காசைப்பெற்று சந்தோஷமாகச் செல் கிறார்களே! இந்த நான்கு மணிநேரம் ஏதாவது வேலை செய்திருந்தால், இதைவிட கூடுதலாக உழைத்திருக்க லாமே!'

பெருநாள் நெருங்க நெருங்க ஸக்காத் பெறுபவர்களின் கூட்டம் அதிகரிக்கும். சில ஏமாற்றுப் பேர்வழிகளான பணக்காரர்கள் நோன்புமாத கடைசி நாளன்று ஸக்காத் கொடுப்பதை வைத்துக்கொள்வர். ஒரே நேரத்தில் பல இடங்களில் ஸக்காத் கொடுத்தால், தங்களுடைய வீடுகளில் கூட்டம் அதிகம் சேராது என்பது அவர்களின் எண்ணம். குறைந்தளவு ஆட்களை அடைத்து ஸக்காத் கொடுப்பது போல் கொடுத்து பெரிய அளவில் ஸக்காத் கொடுத்ததாக பேரெடுப்பார்கள். சில வீடுகளில் அடைக்கப்பட்டிருந்த சகலருக்கும் ஸக்காத் கொடுத்து முடிந்தபின்னரும் அடை படாத சிலர் வந்து ஸக்காத் கேட்பர். பணக்காரன் காவல் நாயாக மாறுவார். அல்லது ஸக்காத் கொடுக்க உதவியாக நின்ற காடையர்களில் ஒருவன் வந்தவனின் பிடரியைப் பிடித்துத்தள்ளி தெருவில் கொண்டுசென்று நிறுத்துவான்.

சில பணக்காரர்கள் அல்லாவுக்கு மிகவுமே பயந்தவர் கள். புனித குர்ஆனின் கட்டளைகளுக்கு ஏற்ப சரியாக கணக்கிட்டு ஸக்காத் வழங்குவர். ஏழைகளின் வீடுகளுக்கு அவர்களே நடந்துசென்று ஸக்காத் கொடுப்பர். தங்களது குடும்பத்திலுள்ள ஏழைகளுக்கு பண உதவி செய்வர். பெருநாளைக்காக உடுப்புகள் வாங்கிக்கொடுப்பர்.

பெருநாளைக்கு முதல்நாள் மாமா வீட்டுக்கு வந்தார். உம்மாவுக்கு ஒரு சோமன் வாங்கிவந்தார். என்கையில் ஒருரூபா குற்றியொன்றை திணித்தார். நான் மறுத்தேன். அவர் விடவில்லை.

கடைசி நோன்புதினம். பிறை கண்டால்தான் பெரு நாள். நாளைக்குப் பெருநாளா என்பதை அறிவதில் ஒவ் வொருவருக்கும் ஆதங்கம். பிறை பார்ப்பதற்காக ஆற்றங் கரையில் கூட்டம் கூட்டமாக போய்நிற்பர்.

பெருநாள் தினத்துக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னிருந்தே பட்டாசு வெடிப்பது தொடங்கிவிடும். ஊரில் வெடில் சப்தம் கேட்டதும் 'பெருநாளைக் கூப்பிடுறாங்க' என்பார் என் உம்மா.

பெருநாள் அன்று இரவு வெடில்சப்தத்தால் ஊரே கிடுகிடுக்கும். காதுச்சவ்வுகள் கிழிவதுபோன்று தொடர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக பட்டாசுகள் வெடித்தவாறே இருக்கும். வாப்பாவும் பட்டாசுகள் வாங்கிவந்து வீட்டில்வைத்துச் சுடுவார்.

பெருநாளுக்கு முதல்நாள் பிற்பகலில் இருந்து கிராமம் புதுச்சோபை பெறும். தெருக்கள் நிறைய ஆட்கள். துணிக் கடைகளில் ஏகக்கூட்டம். பொட்டனி வியாபாரிகள் சந்திக்கு சந்தி தற்காலிகமாக துணிவியாபாரம் செய்வர். தையற்காரர்கள் இரவுபகலாக தைத்துக்கொண்டிருப்பர். பெருநாளைக்காக முடிவெட்டுவதற்கும், தலை வழிப்பதற்குமாக ஒஸ்தாக்களின் குடில்களும், அம்பட்டவர்களின் சலூன்களும் விடியவிடிய திறந்திருக்கும்.

காஸ் லைட்டுகள் வைத்து இரவுச்சந்தை நடைபெறும்.

பெருநாள் பிறைகண்டதாக ஊர்ஜிதமாகிய பின்னர் பள்ளிவாசல்களில் தக்பீர் ஒலிக்கப்படும்.

ஒவ்வொரு வீடுகளிலும் ஊதுபத்தி மணம் .. மருதாணி அரைப்பது .. பெருநாளுக்காக ஹல்வா செய்து எடுத்தல் ..

ஒன்பது மணி சுமாருக்கு இரவின் பட்டாசுவெடில் சப்தங்களுக்கு மத்தியில் பள்ளிவாசல் முஅத்தீனின் சப்தம் தெருக்களில் கேட்கும். "நாளைக்குப் பெருநாளாண்டா கூய்..."

வாப்பா இஷா தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு போன போதே பிறைகண்ட விசயத்தை அறிந்துவந்து உம்மாவிடம் சொன்னார்.

"நான் சந்தைக்குப்போய் மரக்கறி சாமான் வாங்கி வாறன். நீ கோழியைப்புடிச்சி வேறயா வை. வந்து அறுத்துத்தாறன்" இராச் சாப்பாட்டின்பின், சணல் பை ஒன்றை எடுத்துக்கொண்டு வாப்பா வெளியே செல்ல ஆயத்தமானார்.

பெருநாள் அன்று இரவு. நஜீமாவின் வீட்டில் .. அவளுடன் விளையாடியவாறு அவளுடன் பட்டாசு வெடித்து விடியவிடிய விளையாட வேண்டும்போல் தோன்றியது எனக்கு.

"வாப்பா ... என்னை மாமிட ஊட்டிலே விட்டுடுங்களம்."

"இந்த நேரத்திலே எதற்காக அங்க?"

"நாளைக்கு பெருநாள் என்று அவங்கட ஊட்டுக்கு வரச்சொல்லி நஜீமா சொன்ன. சீன வெடில்கள் வாங்கி வைச்சிருப்பாள். நான் போய்த்தான் கொளுத்தணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவரு பெரிய மனுசன்! இவருதான் சீன வெடி கொளுத்தணும். வெடிலேத் தொட்டே கையை உடைச்சிப் போடுவன்''

''நான் கொளுத்தமாட்டேன், நஜீமாட மாமா ஏன் டாம்பிதான் கொளுத்துவான். ஆனு நான் போகமட்டும் வெடில் சுடாம காத்துக்கொண்டிருப்பதாக சொல்லி இருக்காள்''

''இரவைல அங்க இங்க போகத்தேவையில்ல. போட்டுட்டுப் படுடா''

எனக்கு வாப்பாவின் கூற்று பெரிய ஏமாற்றம்.

உம்மாவுக்கு முன்னுல்நின்று சிணுங்கி அழுதேன்.

''அவன்தான் ஆசைப்படுருன். கூட்டிட்டுப் போங்களேன். நீ போடா. வெடில்களேக் கையால தொட்டிடாத'' உம்மா! அவங்க சீதேவி. எப்போதும் என்பக்கம்தான்.

நானும், வாப்பாவும் நஜீமாவின் வீட்டை அடைந்தோம்.

நஜீமா எனக்காக கதவருகிலேயே காத்துக்கொண்டு நின்ருள். ஏன்டாம்பியும், மாமாவும், பாயொன்றில் இருந்தனர். மர்மி ஊஞ்சலில்.

''வாங்க மச்சான். சந்தைக்குப் போகவா? நானும் கூடவர்றேன். ரெண்டு பேருமா போவம்'' மாமா கூறியவாறு எங்களே வரவேற்ருர்.

வாப்பாவும், மாமாவும் சந்தைக்குச் சென்றபின்...

நானும், நஜீமாவும் பட்டாசுகள் கொளுத்தி .. ஊஞ்சல் ஆடி சிரித்து மகிழ்ந்து ..

அந்த இரவு ஓர் இனிமையான இரவு.

---

# 15

பெருநாள் முடிந்தது.

கிராமம் முழுதும் கல்யாண நிகழ்ச்சிகளும், சுன்னத் வைபவங்களும்...

கல்யாண வீடுகளில் சோடனேகள்... சப்தங்கள். மருதாணி பரிமாறும் பெண்கள்.

நானும், மஜீதும் கோலிக்குண்டு விளேயாடிக்கொண்டு நின்றோம். தரையில் மூன்று குழிகள். கருங்கல் சீமெந்துடன் குழைத்து உருட்டப்பட்ட சிறிய கைக்கடக்கமான குண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இடதுகை பெருவிரலில் குண்டை வைத்து, மற்றக் கைவிரல்களால் குழிகளுக்குள் தெறித்துவிடுவோம். ஒவ்வொரு குழிக்கும் இடையில் சுமார் ஆறு ஏழு அடிகள் வித்தியாசம் இருக்கும்.

முதலில் குழிகளுக்குள் குண்டுகளைப் போட்டவர் வெற்றியடைவர்.

தோற்றவர் மூன்றும் குழியருகில் குந்தி தனது வலது கையின் பெருவிரலையும், சிறுவிரலையும் நீட்டி ஏனையவைகளை மடக்கியவாறு குழியின் ஓரமாகப் பிடிப்பர். வென்றவர் முதலாம் குழியருகில் குந்தியவாறு கல்குண்டை மற்றவருடைய மொழிகளுக்கு குறிவைத்துத் தெறிப்பார். இது மொட்டு அடிப்பது எனப்படும்.

நானும், மஜீதும் நீண்டநேரம் விளையாடினோம். அன்று எனக்கு வெற்றி. மொட்டுக்காக மஜீது மொழிகளைப் பிடித்தான். நான் குறிபார்த்து குண்டைத்தெறித்தேன்.

மொழியில் குண்டு பட்டதும், அவனுடைய ஆ. ஊ. அனுங்கல்கள் எனக்குக்கேட்டன.

''திரும்பவும் விளையாடலாமா?'' எனக்கேட்டேன்.

''அடுத்த தெருவில ஒருவீட்டில சுன்னத்தாம். மேளம் கொண்டுவந்து இருக்கிறாங்களாம். வாறியா, பார்க்கப்போகலாம்?'' மஜீது கேட்டான்.

ஏற்கனவேயே ஒருதடவை மேளம் அடிப்பதை பார்த்திருக்கிறேன். இப்போதெல்லாம் எனது கிராமத்தில் மங்கள நிகழ்ச்சிகளுக்கு பறை அடிப்பவர்களை தவிர்த்து, தவில் அடிப்பவர்களை அழைக்கத் தொடங்கிவிட்டனர்.

''அதுக்கென்ன. போகலாமே'' என்றேன்.

தவில் அடிக்கும் வீட்டுக்கு மாமியின் வீட்டு ஒழுங்கையால்தான் போகவேண்டும். எனக்கு யோசனை பொறி தட்டியது.

''மஜீது. இங்கேயே நில்லு. எங்க நஜீமாவையும் கூட்டிக்கொண்டு வாறன்''

அவன் தெருவில் நிற்க, நான் மாமியின் வீட்டினுள் சென்றேன். நஜீமாவும், மாமியும் குசினிக்குள். மாமி ஓட்டில் அரிசிமா ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தார்.

நஜீமாவை வெளியே அழைத்தேன்.

''வாறியா. மேளம் அடிப்பதைப் பார்க்கப்போகலாம்?''

''எங்க?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பக்கத்து தெருவில சுன்னத்தாம். மோளம் வந்திருக்காம்''

''சுன்னத் என்று என்ன?''

''அது தான் சுன்னத்து''

''அதுதான் என்ன?''

''ஆண்பிள்ளைகளுக்கு சுன்னத்து செய்வாங்க. அதுதான் சுன்னத்து''

''அவங்களுக்கு என்ன செய்வாங்க?''

''அது அது அதுதான் சுன்னத்து. உனக்கு எப்படி சொல்ற?''

''ஏன்? எங்கிட்ட சொன்னா என்ன?''

''அது எனக்கு தெரியா. உங்க உம்மாகிட்டே கேளு''

''நீயும் ஆம்புள தானே. உனக்கு சுன்னத்து பண்ணியாச்சா?''

''இன்னும் இல்ல. வாறவருசம் வேளாண்மை வெட்டினதுக்குப் புறகுதான் எனக்கு சுன்னத் செய்வதா வாப்பா சொல்லியிருக்காரு. புறப்படு. மோளம் அடிப்பதைப் பார்க்கப்போகலாம்''

நஜீமாவும், நானும் பேசிக்கொண்டது மாமிக்குக் கேட்டிருக்கவேண்டும். மாமி தானாக சிரித்தது எனக்குக் கேட்டது.

★ ★ ★

சுன்னத் வைபவ வீட்டில் பெரிய பந்தல்போட்டு நிறைய பாய்கள் விரித்து இருந்தனர். என் வயதையொத்த, அல்லது என்னைவிட பெரிய சிறிய பிள்ளைகள் ஈக்களாக மொய்த்துநின்றனர். நடுவில் பாயில் உட்கார்ந்து தவில் அடிப்பவர்கள் நாதசுரம் வாசிப்பவர்கள்.

நான் நஜீமாவை இடுப்பில் இடுக்கியவாறு கூட்டத்தினுள் நுழைந்தேன். மஜீது வழி ஒதுக்கித்தந்தான். மேளம் அடிப்பவர்களுக்கு சற்றுமுன்னால் சென்று நஜீமாவைக் கீழே இறக்கிவிட்டேன்.

இரண்டுபேர் தவில் அடித்தனர். வேறு இருவர் நாதசுரம் வாசித்தனர். இன்னொருவர் குழல் ஒன்றை வாய்க்குள் பொருத்தியவாறு எப்போதுமே உப்பிய கன்னங்களுடன் இருந்தார்.

தவில் அடிப்பவர்களில் ஒருவன் கறுப்பு நிறம். பெரிய உடல். கழுத்தில் தங்கச்சங்கிலி. மடிக்குள் மேளத்தை வைத்தவாறு... பெரிய உதடுகளில் ஒன்றை சற்று பிதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியவாறு... பிள்ளைகளைப்பார்த்து அடிக்கடி கண் சிமிட்டிய வாறு தவில் அடித்துக்கொண்டிருந்தான். இவன் அடிக்கும் போது மற்றவன் அவன் சற்று ஒல்லி. மாநிறம். விரல் களில வெள்ளை நிறமான எதையோ மாட்டிக்கொண்டு தவிலில் மெதுவாக தாளம் போட்டுக்கொண்டிருந்தான்.

நாதசுரம் வாசிப்பவர்கள் குழல்களை உதட்டில் பொருத்தி, கைகளால் குழல்களை மேலும் கீழும், பக்கவாட்டிலும் அசைத்து ஊதிக்கொண்டிருந்தான். நாதசுர இசை கேட்பதற்கு இனிமையாக இருந்தது.

''இருங்கடா. இருங்கடா. கீழே இருங்கடா'' யாரோ ஒருவன் கையிலுள்ள சிறு பிரம்பால் பிள்ளைகளின் தலையில் மெதுவாக தட்டி கீழே இருக்குமாறு சொன்னான்.

நின்றிருந்த நாங்கள் பாய்களில், கொட்டியிருந்த குருத்து மணலில் இருந்தோம்.

முதலில் தவில் அடித்தவன் நிறுத்த, மற்றவன் தொடங்கினான்.

இருவரும் தலைகளை ஆட்டியவாறு, உடல்களை அசைத்த வாறு உடலில் வடியும் வெயர்வைத் துளிகளை அடிக்கடி துவாயால் துடைத்துவிட்டவாறு...

எங்களை மறந்து நாங்கள் நாதசுர இசையை ரசித்துக் கொண்டிருந்தோம்.

★ ★ ★

அடுத்தநாள். ஒரு பெரிய தகரடின், கம்புத்துண்டு, பப்பாசிக் குழல் ஆகியவற்றுடன் மாமியின் வீட்டுக்கு சென்றேன்.

பப்பாசிக் குழலின் ஒரு பக்கத்தை கண்ணாடித்தாளால் அடைத்து துவாரங்கள் இட்டு வைத்திருந்தேன்.

''நஜீமா. நீ இந்தக் குழலை ஊது. நான் மேளம் அடிக்கிறேன்'' என்றேன்.

காட்டிக் கொடுத்தவாறு நஜீமா ஊத . நான் தகரடப்பாவில் கம்பால் அடிக்க... ஒரே சப்தம்.

நேற்று தவில் அடித்த கறுப்பனைப்போல உதட்டைப் பிதுக்கி தலையை, உடலை அசைத்து பெரும் சப்தமாக நான் அடிக்க...

''டேய் டேய் நவாஸ் நிறுத்துடா. நிறுத்துடா. தலை இடிக்குதுடா'' கூறிக்கொண்டு மாமா வாசலுக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடா செய்கிறே?''
''மோளம் அடிக்கேன்''
''இதுதான் மோளமா?''
தகரடின்னைப் பறித்து தூர எறிந்தார்.
முகத்தைப் பல கோணங்களாக மாற்றினேன்.

★ ★ ★

அன்றிரவு சுன்னத் செய்யப்போகும் பையனை ஊர்வல மாக காரில் அழைத்துவருவதாக பேசிக்கொண்டனர்.

ஊரில் பணக்கார வீடுகளில் சுன்னத் வைபவம் நடை பெற்றால் மாப்பிள்ளைப் பையனை காரில் கிராமம் முழுவதை யும் சுற்றிவருவர்.

எங்களது வீட்டுக்கு சற்றுத்தள்ளி பிரதான பாதை. இரவு எட்டு மணியளவில் பாதையில் வெடிச்சப்தமும், தொடர்ந்து மேளச்சப்தமும் கேட்டது. இருட்டையும் பொருட்படுத்தாமல் பாதைக்கு ஓடினேன்.

சுன்னத் மாப்பிள்ளை ஊர்வலத்தைப் பார்ப்பதற்காக பாதையின் இருமருங்கும் ஆண்களும், பெண்களும் மொய்த்து நின்றனர்.

முன்னே பட்டாசு கொளுத்துபவர்கள் அடிக்கடி பட் டாசுகளைக்கொளுத்தி வெற்றுவளவுகளினுள் தூக்கி எறிந்த னர். சந்திகளில் நின்று வானங்கள் கொளுத்தினர்.

பாதையில்வைத்து கொளுத்தும் வானங்கள் சில விநாடி களுக்கு தங்கநிற நெருப்புத் துளிகளை தெளித்துவிட்டு, தொடர்ந்து நீலநிற, பச்சைநிற, சிவப்பு, மஞ்சள்நிற குண்டு களை வானத்தைநோக்கித் தள்ள... அவை மேலே சென்று வெடித்து நெருப்புத்தூள்களாக பொரிகளைச் சொரிய .. இதைப்பார்த்து ரசிக்க நஜீமா இல்லையே என கவலையுற் றேன்.

பட்டாசு வெடிப்பவர்களைத் தொடர்ந்து, களிக்கம்பு அடிப்பவர்கள். பத்துப் பதினைந்துபேர் ஒரேவித உடுப்பு அணிந்து, சதங்கைகள் பொருத்திய கம்புகளை கையில் ஏந்தி, ஓசைக்கேற்ப அசைந்து அசைந்து ஒருவரின் பொல்லில் மற் றவர் அடிக்க .. உள்ளே புகுந்து, வெளியே வந்து

அவர்களைத் தொடர்ந்து கம்பு விளையாடுபவர்கள். இரு வர் நீண்ட தடிகளை கைகளில் பிடித்து ஒரு தடியால் மற் றத்தடியை அடிப்பதும்... ஒருவர் மற்றவரைத் தாக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக அவர் தடுக்க... கால்களை நோக்கி கம்பை வீச... மற்றவர் துள்ள...

இவர்களுக்குப் பின்னால் வாள், கத்தி, கிரிஸ் விளையாடுபவர்கள் ஒருவர் நீண்ட கூரிய வாளொன்றைக் கையில் பிடித்து வேக வேகமாக வீசி உடலின் ஒவ்வொரு பகுதியிலும் இதோ வெட்டப்போகிறார், அதோ வெட்டப்போகிறார் என்ற திகிலில் நம்மை ஆழ்த்தி, ஒரு இடத்திலும் வெட்டாமல் நாசூக்காக வாளைச் சுற்றி கிறிஸ் விளையாடுபவரும் .. கையில் கிரிஸ் கத்தியைத் தாங்கி... நாலு பக்கமும் அதை வீசி ஒரே திகில். எங்கே கிரிஸ் கத்தியால் தனக்குத்தானே குத்திக்கொள்வாரோ என்று நம்மை ஏங்க வைத்தவாறு ...

இவர்களின் பின்னால், சீனடி விளையாடுபவர்கள். சாரனின் கீழ்தலைப்பை மடித்து வயிற்றுடன் சேர்த்து சொருகி கால்களை சற்று அகற்றிவைத்து, தரையைக் கையால் தொட்டு முத்தமிட்டு முதலில் ஸலாம் வரிசை எடுத்து. பின்னர் இரண்டு கைகளாலும் அல்லது முழங்கைகளால் முன்னே, பின்னே, பக்கவாட்டில் நிற்பவர்களுக்கு அடிப்பதுபோல், இடிப்பதுபோல், தள்ளிவிடுவதுபோல், ஓங்கி அறைவதுபோல், தலையால் மோதுவதுபோல் அதே சமயத்தில் தனது இரண்டு கால்களாலும் உதைப்பதுபோல், அடிப்பதுபோலெல்லாம் பாவனை செய்து . வேகமாக முன்னே திருப்பி, பின்னே திரும்பி, பக்கவாட்டில் பாய்ந்து மடித்த ஒரு முழங்கையில் மற்றக்கையால் வேகமாக பளீர் என அடித்து தொடையில் கைகளால் தட்டி சீனடி முடிந்ததும் மீண்டும் தரையைத்தொட்டு முத்தமிட்டு

இவரைத்தொடர்ந்து நாதசுர, தவில் காரர்கள். உதட்டைப் பிதுக்கும் கறுப்பனுக்கருகில் நான் நின்றுகொண்டேன். நாதசுரக்காரர்கள் ஊதுவதை நிறுத்த தவில் அடிப்பவர்கள் ஆள்மாறி ஆள் தவில்களை ஒவ்வொரு ராகமாகத்தட்ட ..

''நல்ல சமாடா'' கூட்டத்திலிருந்த ஒருவன் சப்தமிட்டான்.

பாதையின் இருபக்கத்திலும் ஊர்வலம் நிறைய காஸ் லைட்டுகள்.

இறுதியாக திறந்த மோட்டார் கார் ஒன்றில் சுன்னத் செய்யப்போகும் மாப்பிள்ளை. தலையில் துருக்கித் தொப்பி. கழுத்து நிறைய தங்க மாலைகள். நீண்ட கைகள் கொண்ட சேட்.. இரு மருங்கிலும் காஸ் லைட்டுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைத்தொடர்ந்து மாப்பிள்ளையின் சொந்தக்காரர்கள். ஊர்வலமாக நடந்தனர்.

நீண்டநேரம் மாப்பிள்ளை ஊர்வலம் பார்த்துக்கொண்டு நின்றேன். இந்தக் காட்சிகளைக்கான நஜீமா இல்லையே என்பது எனக்கு பெரிதும் துக்கமாக இருந்தது.

---

# 16

நஜீமாவின் வீட்டுக்கு சற்று தூரத்தில் சில பெண்கள் நெல்குற்றி வியாபாரம் செய்துகொண்டிருந்தனர். நெல்லை அவித்து, உரலில் இட்டு குற்றி அரிசியை விற்பனை செய்வர். நெல் குற்றுவதால் கிடைக்கும் உமியை தெருவில் ஓரமாக கொட்டிவிடுவர். சகலரும் ஒரே இடத்திலேயே உமியைக் கொட்டிவந்ததால் நாளடைவில் அது பெரிய குவியலாக வளர்ந்துவிட்டிருந்தது.

உமிக்குவியலில் யாரோ ஒருவர் ஒருநாள் நெருப்பை வைத்துவிட்டார். அது மெதுவாக அவிந்து புகைந்து கொண்டிருந்தது. சிலவேளைகளில் உள்ளே உமி அவிவது வெளியில் தெரியாமலும் இருந்தது.

ஒருநாள் காலை. இடியப்பம் வாங்குவதற்காக ஓலைத் தட்டு ஒன்றுடன் சென்றுகொண்டிருந்தேன் நெல் வியாபாரம் செய்பவர்களுள் ஒருத்தி காலைவேளைகளில் இடியப்பம் அவித்து விற்பாள்.

எனக்கு சற்று தூரத்தில் நஜீமாவும் தட்டொன்றுடன் பிஞ்சுக் கால்களால் நடந்துசெல்கிறாள். அவளும் இடியப்பத்துக்காகத்தான் செல்கிறாள் என நினைத்துக் கொண்டேன். ஒழுங்கையால் நடந்து சென்றவள் என்ன நினைத்தாளோ தனது நடையை மாற்றி அவிந்துகொண்டிருக்கும் உமிப் பக்கமாக சென்றாள். எனக்கு திகீர் என்றது. 'ஒருவேளை உமிச்சாம்பல் என நினைத்து அதனுள் காலைவிட்டு விளையாடப் போகிறாளோ?'

எனது சந்தேகம் வலுத்தது. அவள் அதைத்தான் செய்யப்போகிறாள்.

நான் ''நஜீமா '' என அழைத்தவாறு ஒரே ஓட்டமாக அவளைநோக்கி ஓடினேன். நான் கூப்பிட்டது அவளுக்கு விளங்கவில்லைப்போலும். அவளின் நடை தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் அழைத்தவாறு "நஜீமா. அதுக்குள்ளே காலை வைக்காதே உள்ளே நெருப்பு" கூறியவாறு... வேக மாக... மிகவேகமாக ஓடினேன்.

அவள், இன்னும் அவியாத உமிக்குள் காலை வைப்ப தற்கும், நான் ஓடிச்சென்று அவளைத் தூக்குவதற்கும் சரி யாக இருந்தது.

ஆனால்......

ஓடிச்சென்ற களைப்பு... அவளைத் தூக்கியதால் என் கால்களில் ஏற்பட்ட தடுமாற்றம்... அவிந்த நெருப்புக்குள் விழப்போன நான்.. என்னை நானே விழாமல் தடுக்க.. என்னை மறந்து ஒருகாலை அவிந்த உமிக்குள் வைத்துவிட் டேன்.

"ஆ....." திடீரென காலைத் தூக்கியவாறு நஜீமா வுடன் ஒரே துள்ளாக பாய்ந்து மணலில் வீழ்ந்தேன்.

என் சப்தம்கேட்டு யாரோ ஒரு கிழவி ஓடிவந்தாள். என்னை அடையாளம் கண்டாள். எனக்கு நேர்ந்த கதியை அறிந்தாள். கைத்தாங்கலாக என்னை வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

மர்மா வந்து என் காயத்தைப் பார்த்துவிட்டுச்சென்றார். மாமி நஜீமாவுடன் வந்தார்.

நஜீமாவின் முகம் சோம்பி இருந்தது. அவளால்தான் எனக்கு அந்தநிலை ஏற்பட்டது என்பதை அவள் அறிந் திருப்பாள்போலும்.

"நீ ஏன்டா அவளைப்போய் தூக்கினாய்? அவள் எப் போதுமே துடிதுடிப்பு. நெருப்புக்குள்ள அவள் காலை வைத்து துடிதுடித்திருக்கணும். அப்பதான் பாடம் படிப் பாள்."

மாமியின் கூற்று எனக்கு புதுமையாக இருந்தது. நஜீமாவைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றி விட்டேனே என நான் சந்தோசமுறும வேளையில், தனது பெற்றமகள் துடிதுடிக்து வேதனையடைய வேண்டும் என மாமி நினைக் கிறாரே. இது மாமியின் மறுபக்கமா? அவரின் வக்ர புத்தியா? சிந்தித்தேன்.

என் காலில் ஏற்பட்ட காயம் ஆற நீண்ட நாட்கள் எடுத்தன.

★ ★ ★

அன்று பின்னேரம் மாமியின் வீட்டில் ஒரே கலகலப்பு. மாமியின் தம்பி ஏன்டாம்பி முதன்முறையாக கொழும்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞுப்போய் வந்ததால் அவருக்கு ஆராத்தி எடுக்கும் வைப வம்.

மாமியின் வீட்டில் நிறைய பெண்கள் கூடி இருந்தனர். நான் உம்மாவுடன் சென்றேன்.

வைபவத்துக்காக அழைக்கப்பட்ட பெண்கள் வருவதற் காக குரவை ஒலித்தனர். மாமா சில வெடில் கட்டுக்களைக் கொளுத்திப்போட்டார்.

''இந்தா. தின்னு'' கூறியவாறு நஜீமா என்னிடம் ஆப்பிள் பழமொன்றைத் தந்தாள். இளஞ்சிவப்பு நிறம். ஏன்டாம்பி கொழும்பில் வாங்கி வந்ததாம்.

அதைக் காக்கா கடிகடித்து, ஒருதுண்டை நஜீமாவிடம் கொடுத்தேன்.

''இந்தா. இதை நீ தின்னு''

நானும் அவளும் பழத்தை ருசித்துத்தின்றோம்.

''இந்தா. இதையும் தின்னு. மாமாதான் வாங்கி வந்த''

கண்ணாடித்தாளில் சுற்றிய எதையோ தந்தாள்.

''என்ன இது?''

''தின்னுபாரேன். பகலெல்லாம் வாய்க்குள்ள வைச்சுச் சப்பலாம்.''

கடதாசியை உரித்து, பாடமாக இருந்த இனிப்பு மிட்டாயை வாய்க்குள் வைத்தேன். முதலில் ஒருவித நறு மணம். பின்னர் இனிப்பு ருசி. தொடர்ந்து ரப்பரைப் போல் ஒரே சப்பல் .. சப்பல் ..

''நல்லா இருக்கே. இதுட பேரென்ன?''

''தெரியா. நில்லு. மாமாகிட்ட கேட்டு சொல்றன்.''

ஏன்டாம்பி நாங்கள் நின்ற இடத்துக்கு வந்தான். நஜீமா கேட்டாள்.

''அது சுவிங்கம்டா''.

தொடர்ந்து சப்பினேன்.

பெண்கள் எல்லோரும் இப்போது கூடிவிட்டனர். மீண்டும் குரவைச்சப்தம்... பட்... படபட என பட்டாசு வெடில்கள்.

ஏன்டாம்பியை வெள்ளை விரித்திருந்த உரல் ஒன்றின் மேல் இருப்பாட்டினர். அவன் நிறசேர்ட் அணிந்து, சிவப்பு நிற சாரன் உடுத்து உரலின்மேல் உட்கார்ந்தான.

இரண்டு பெண்கள் ஆராத்தி பீங்கானை எடுத்து வந் தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீங்கானுக்குள் மஞ்சள் நீர் .. வாழைக்குருத்து துண்டுகளில் குத்தப்பட்ட தேங்காய் எண்ணெய்யில் துவட்டிய சீலை சுற்றப்பட்ட ஈர்க்கிள் திரிகள். எல்லாமாக ஆறு திரிகள். திரிகளில் நெருப்பு சுடர்விட்டு எரிந்தது.

ஏன்டாம்பியின் அருகில் பெண்கள் இருவரும் நின்று, ஆராத்திப் பீங்கானை அவனுடைய தலைக்கு மேலால் மூன்று தடவைகள் சுற்றினர். நெருப்பை ஊதி அணைக்குமாறு அவனிடம் நீட்டினர். அவன் ஆறு திரிகளையும் அணைத்தான். பெண்கள் குரவைஒலி வீட்டை அதிரவைத்தது.

பெண்களுக்கு அரிசிமா ரொட்டியும், இறைச்சிக் கறியும் பரிமாறப்பட்டன.

நானும், நஜீமாவும் ஒரு பீங்கானுக்குள் சிறிய ரொட்டித் துண்டொன்றை பிய்த்துப்போட்டு சீனியில் தொட்டு சாப்பிட்டோம்.

★ ★ ★

ஹச்சுப் பெருநாளைக்கு இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் இருந்தது. கிராமத்தில் பல பணக்காரர்கள் ஹச்சுச் செய்வதற்காக மக்கமா நகருக்கு செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

மாமியின் தம்பி முறையான ஒருவரும் இவ்வாறு ஆயத்தமானவர்களில் ஒருவர்.

அவருடைய வீட்டில் அன்று மௌலூது விருந்து.

அன்று பிற்பகலே நாங்களெல்லாம் அவருடைய வீட்டுக்குச் சென்றுவிட்டோம். வீடு நிறைய ஆண்களும், பெண்களும் வருவதும். போவதுமாக இருந்தனர். ஆண்கள் வந்து அவருடன் கதைத்து இருந்துவிட்டு . அவரின் கைகளைப் பற்றி ஸலாம் சொல்லி, ஆளையாள் அரவணைத்து .. அவருக்காக பிரார்த்தனை செய்துவிட்டுச் சென்றனர்.

இரவு விருந்துக்காக பெரிய கடாரங்களில் சோறு சமைக்கப்பட்டது மாடு அறுத்து கறி சமைத்தனர்.

பிள்ளைகள் கூட்டம் புழுதி கிளப்பின. நானும், நஜீமாவும் அவருக்குச் சொந்தமான பக்கத்து வளவொன்றினுள் சென்றோம். அது வெறும்வளவு. சுற்றிவர வேலி அடைத்து நடுவில் ஒரேயொரு கிணறு. கிணற்றின் அருகில் நீண்ட கமுகுகள், வாழைமரங்கள். ஒரு பெரிய விளிமாங்காய் மரம்.

''இஞ்ச .. விளிமாங்காய் ஆஞ்சிதாவன்; தின்பம்'', நஜீமா கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரனை மடித்துக்சட்டி, மெதுவாக மரத்தில் ஏறி, மரக்கொப்பில் நின்று விளிமாங்காய்களைப் பறித்து தரையில் எறிந்தேன். நஜீமா ஆசையுடன் பொறுக்கினாள். விளிமா பழங்களை வாய்க்குள் வைத்து உறிஞ்சினாள். அதன் புளிப்பு .. மரத்தின்மேல் நின்ற எனக்கு ஜலம் ஊற்றெடுத்தது. கீழே குதித்து அவளுடன் இணைந்துகொண்டேன்.

இரவானதும் காஸ்லைட்டுகள் ஏற்றப்பட்டன.

ஆண்கள் விருந்துக்காக சாரிசாரியாக வந்தனர். பந்தல் போட்டு பாய் விரித்திருந்தனர். அணியணியாக வந்தவர் கள் அமர, நான்குபேருக்கு ஒன்றாக சோற்றுச் சகன் வைக்கப்பட, ஒருவர்வந்து கை, வாய் கழுவ தண்ணீர் கொடுக்க விருந்து சாப்பிடத்தொடங்கினர்

விருந்துக்காக வந்திருந்த ஆலிம்கள் சற்று காலாற உலாவினர். பின்னர், புதுப்பாய்கள் பரவி, அதன்மேல் வேலைப்பாடமைந்த சமுக்காளங்கள் விரித்து, தலையணை களின்மேல் மௌலூது ஓதும் கிதாபுகளை (புத்தகங்கள்) வைத்து ஆலிம்கள் ராகமெடுத்து ஓதினர். பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அடிக்கடி மாதுளஞ்சுளைகள், கற் கண்டு துண்டுகள் வழங்கப்பட்டன.

நள்ளிரவு நேரம். மௌலூது ஓதி முடிவுற்றது

அடுத்தநாள் அந்த வீட்டில் ஜனத்திரள். நொத்தாரிசு ஒருவர் வந்து சொத்துக்களுக்கு உயில் எழுதினார். வந்த வர்கள் மக்காவுக்கு செல்ல இருப்பவரின் கையைத்தொட்டு ஸலாம் சொல்ல அவருடைய மனைவி ஒரு மூலையில் நின்று சிணுங்க... அவர் தொப்பி, சால்வை அணிந்து அவரை ஏற்றிச்செல்வதற்காக வந்துநின்ற கார் ஒன்றினுள் ஏறி, கூடவே சொந்தக்காரர்கள் சிலருடன் தண்ணீர் கப்பல் எடுப்பதற்காக கொழும்புக்குப்போகப் புறப்பட்டார்.

வைத்து சப்தம் காதைப்பிளந்தது.

''இஞ்ச. நீ எப்ப மக்காவுக்குப் போற?'' நஜீமா என்னைப்பார்த்துக் கேட்டாள்.

''நான் பெரிய ஆளாகி, பணக்காரனாகி போவேன். ஆனா, தனியே போகமாட்டேன்''

''ஆரோட போவே?''

''உன்னையும் கூட்டிக்கொண்டு''

''ஆளப்பாரு''

அவள் கைகொட்டிச் சிரித்தாள். நானும் அவளின் மகிழ்ச்சியில் பங்குகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

ஹஜ்ஜுப் பெருநாளுக்கு இன்னும் இரண்டு கிழமைகள் இருந்தன. இப்போதே இரவு வேளைகளில் அங்கு மிங்குமாக பட்டாசு வெடி சப்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன.

கிராமத்திலுள்ள எல்லா வீடுகளிலும் பச்சை அரிசி ஊறவைத்து, மா இடித்து பலகாரம் சுட்டனர்.

ஒவ்வொரு வீட்டிலும் மா இடிக்கும் சப்தம்... பலகாரம் பொரிக்கும் தேங்காய் எண்ணெயின் நாற்றம்... தெருக்களால் நடந்துசெல்லமுடியாத அளவுக்கு மூக்கைத் துளைத் தெடுக்கும்.

எனது உம்மா நேரகாலத்தோடேயே பலகாரம் சுடத் தொடங்கிவிட்டார். சாச்சி எங்கள் வீட்டுக்கு வந்து உம்மா வுக்கு உதவிசெய்தார். ஏழு எட்டு நாட்கள் தொடர்ச்சி யான வேலை உம்மாவுக்கு.

இடியப்ப பலகாரம், கொட்டு பலகாரம், சீனிப் பல காரம், சோகி, கைவீச்சு, அச்சு பலகாரங்கள்... முந்திரிப் பருப்பு, பயற்றுப் பலகாரங்கள்... இப்படி பலப்பல.

உம்மா எல்லாவகைப் பலகாரங்களையும் செய்வார். பச்சை மாவு உரலில் இடித்து முடிந்ததும், உரலில் மிச்ச மாகக் கிடக்கும் கப்பி மாவில் தேங்காய்ப்பூ, சீனி ஆகிய வைகளைக் கலந்து 'துள்ளு மா' பிசைந்துதருவார். துள்ளு மாவை ஒரு கடதாசியில் சுற்றி எடுத்து, மாமியின் வீட்டுக்கு ஓடிவிடுவேன்... நஜீமாவுடன் சேர்ந்து சாப்பிடுவதற்காக.

முந்திரி, பயற்று பலகாரங்கள் சாப்பிட மிக ருசியாக இருக்கும்.

பலகாரங்களைச் சுட்டு பெரிய அண்டாக்களில் உம்மா போட்டுவைப்பார்.

பெருநாள் நெருங்க, நெருங்க பட்டாசுகளின் சப்தம் அதிகரிக்கும்.

பெருநாளுக்கு முன்தினம். பொதுவாக சகல வீடுகளி லும் சந்தனக் கூடு ஏற்றுவர். வண்ணத் தாள்களால் எண் கோண சந்தனக் கூடுகள் கட்டி மரங்களில் தொங்கவிடுவர்.

நான் ஒரு பெரிய சந்தனக்கூடு கட்டிவைத்திருந்தேன். கீழ்ப்பக்கம் உள்ள இரண்டு ஈர்க்கில்களிலும் சிறிய பலகை யொன்றை இணைத்து, பலகையின்மேல் மெழுகுதிரியொன் றைப் பொருத்திவைத்தேன்.

சந்தனக்கூடு ஏற்றுவதை பார்ப்பதற்காக நஜீமா வீட் டுக்கு வந்திருந்தாள். வாப்பாவும் வீட்டில் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டத்தொடங்கியது.

''வா. சந்தனக் கூட்டை ஏற்றலாம்'' அவளையும் அழைத்துக்கொண்டு கிணற்றடியில் நின்ற வேப்பை மரத் தடிக்குச் சென்றேன். அதில்தான் ஏற்கனவேயே கயிறு போட்டு வைத்திருந்தேன்.

வாப்பாவும், உம்மாவும் நான் சந்தனக்கூடு ஏற்றப் போவதை வேடிக்கை பார்ப்பதற்காக வாசலுக்கு வந்தனர்.

கயிற்றின் ஒரு முனையில் சந்தனக்கூட்டைக் கட்டி, மெழுகுதிரியைப் பற்றவைத்து மெதுவாக மிகமிக மெது வாக கயிறை இழுத்து, சந்தனக் கூட்டை மேலே உயர்த்தி னேன்.

வேப்பமரக் கிளையை சந்தனக்கூடு அடைந்ததும் கயிறு இழுப்பதை நிறுத்தி கயிற்றின் தொங்கலை மரத்தைச் சுற் றிக் கட்டினேன்.

சந்தனக்கூட்டின் ஒவ்வொரு பக்கத்துக்கும் வெவ்வேறு நிறத் தாள் ஒட்டி இருந்ததால், வெளிச்சம் பக்கத்துக்குப் பக்கம் நிறம் மாறிக் காட்டியது.

மெல்லிய வாடைக்காற்று வீசியது. கூடு அசைந்தது. சுற்றிவர வெளிச்சம் நிறம் மாறி அசைந்தது.

சந்தோசத்தால் நானும் நஜீமாவும் கைகொட்டிச் சிரித்தோம். வாப்பா சிரித்தார். உம்மாவும் சிரித்தார்.

சிறிதுநேரம் சென்றிருக்கும்.

எங்கள் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

காற்று சற்று வேகமாக வீச, கூடு காற்றின் வேகத்திற் கேற்ட அசைய, மெழுகுதிரி ஒருபக்கமாக சரிய... நெருப்பு .. கூடு பற்றி எரியத்தொடங்கியது.

கயிற்றின் தொங்கலை அவிழ்த்து கூட்டை கீழே இறக் கினேன்.

நஜீமாவின் முகம் என்னுடையதைப்போன்று கூம்பியது.

அது ஓர் அபசகுணமா? ஒருவேளை அடுத்த வருடத்தில் என் வாழ்க்கையில் ஏற்படப்போகும் பயங்கர மாற்றங் களுக்கு அது ஓர் அறிகுறியோ?

★ ★ ★

பெருநாள் அன்று காலை. வாப்பா கிணற்றடிக்கு என்னை அழைத்துச்சென்று தண்ணீர் வார்த்துவிட்டார் என் கால் களை அவர் கைகளால் தேய்த்து... என் முதுகைத் தேய்த்து வாளி வாளியாக தண்ணீரை அள்ளி என் தலையில் ஊற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுர். அடிக்கடி சப்தமிட்டு தக்பீர் சொல்லச் சொன்ளுர். நான் ''அல்லாஹு அக்பர்'' எனச் சொல்ல அவரும் அதையே வாய்க்குள் முணுமுணுத்தவாறு தண்ணீரை ஊற்ற ...

புதுச் சாரன், சேர்ட் அணிந்து, காலை ஆகாரம் அருந்தி மாமியின் வீட்டுக்குப் போக ஆயத்தமானேன்.

என் வீட்டில் மட்டுமல்ல, தெரு முழுவதுமே தாள் துண்டுகள் சிதறிக்கிடந்தன. எல்லாமே கடந்த இரவு வெடிக்கப்பட்ட பட்டாசுவெடித் தாள்கள். இன்னும் சில வீடுகளில் வெடிச் சப்தம் கேட்டது.

தெருக்களில் பார்க்கும் இடமெல்லாம் மதிய உணவுக்காக அறுக்கப்பட்ட கோழி இறகுகள்.

மாமியின் வீட்டை அடைந்தேன். மாமி கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தார். அவருடைய உடலில் பெரிய மாறுதல் எனக்கு விளங்கிவிட்டது. இன்னும் சில நாட்களில் அவருக்கு அடுத்த குழந்தை கிடைக்கப்போகிறது என நினைத்துக்கொண்டேன்.

நஜீமா புதுச் சட்டை போட்டு தலைமுடியை நடுவால் பிரித்து வாரி அழகாக நின்ருள். என்னைப்பார்த்து சிரித்தாள்.

''உன் மதிரோன்டியைக் காட்டு பார்க்கலாம்'' என்ருள்.

என் வலதுகையைக் காட்டினேன். அது சிவந்திருந்தது. கடந்த இரவு நான் படுத்தபின் உம்மா என் கையில் மதிரோன்றி தடவிவிட்டிருந்தார்.

''உன் கையைக் காட்டேன்'' நான் கேட்டேன்.

அவள் கையை விரித்தாள். கொச்சிப்பழம்போல் அவ்வளவு சிவப்பு.

''உன் கை எவ்வளவு அழகா இருக்கு தெரியுமா? கையைக் கொஞ்சம் நீட்டேன்''

அவளுடைய வெண்தளிர் விரல்களை மெதுவாகப் பற்றி, என் முகத்தருகில் கொண்டுசென்று, உள்ளங்கையில் மூக்கைப் புதைத்து மென்மையாக முத்தமிட்டேன். மதிரோன்றியின் மணம் என்னைக் கிறங்கவைத்தது.

''உனக்குத் தெரியுமா? உனக்கு தங்கச்சி பொறக்கப் போவுது''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கு எப்படியோ தெரியும்''

''அப்படின்ன எனக்கு தங்கச்சி வாண தம்பிதான் வேணும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்ல. உனக்கு தங்கச்சிதான் பொறக்கணும்''

''ஏன் சொல்றே?''

''உன்னைவிட தங்கச்சி அழகா இருந்தா நான் அவளத் தான் முடிச்சுக்குவேன்'' கூறிவிட்டு சிரித்தேன்.

நஜீமா என்னை உற்றுப்பார்த்தாள். அவள் கண்கள் கலங்குவதுபோலிருந்தது.

திடீரென கண்களைக் கசக்கியவாறு அழத்தொடங்கினாள்.

''ஏன் அழுவுறே?''

''சொல்லமாட்டேன்''

தொடர்ந்து விசித்து விசித்து அழுதாள்.

''சொல்லேன். ஏன் அழுவுறே?''

''மாட்டேன்''

''அப்போ அழுவதை நிறுத்து''

''மாட்டேன்''

''அதுக்கும் மாட்டேன். இதுக்கும் மாட்டேன். சொல் லேன். ஏன் அழுவுறே?''

''ஒங்க உம்மா எனக்குத்தானே சாணைக்கூறை போட்ட, நீ என்னத்தான் முடிக்கணும். என்னை முடிப்பேன்னு சொன் ளுத்தான் அழுகையை நிறுத்துவேன்''

சொல்லிவிட்டு பெரிதாக அழுதாள்.

''நஜீமா... என்னடி அழுவுறே?'' மாமி கிணற்றடியில் நின்றவாறு சப்தமிட்டார்.

''உம்மா கேக்கிரு ஏய் நிறுத்து''

''அப்ப சொல்லு என்னைத்தான் முடிப்பேன்னு சொல்லு''

''நான் உன்னைத்தான் முடிப்பேன். போதுமா? இப்ப நிறுத்தேன்''

நஜீமா கன்னங்களில் குழிவிழ சிரிக்க.. நான் சிரிக்க.. நாங்கள் இருவரும் கையுடன் கை கோர்த்தவாறு ஊஞ்சலை நோக்கி ஓடினோம்.

சிறிதுநேரத்தில் வாப்பா மாமியின் வீட்டுக்கு வந்தார். மாமாவும் வீட்டிலேயே இருந்தார். அவர்கள் இருவரும் சேர்ந்து பள்ளிவாசலுக்குப் போக ஆயத்தமானார்கள்.

''நவாஸ். நீயும் வாடா. பள்ளிவாசலுக்குப் போக'' மாமா அழைத்தார்.

எனக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை.

தலையில் கட்டுவதற்கு மாமா கைக்குட்டையொன்று தந்தார். மூவரும் பள்ளிவாசலுக்குச் சென்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை தொழுவதற்காக பள்ளிவாசலில் ஏற்பட்ட கூட்டம் ஹவுலில் வுழூச் செய்வதற்கே வரிசையில் நிற்கவேண்டி ஏற்பட்டது.

பள்ளிவாசலுக்குள் ஒரே மனிதத் தலைகள் .. புத்தம் புது உடுப்பு அணிந்தவர்கள் நீளமான கறுப்புநிற தொப்பிகளை அணிந்தவாறு, சால்வைகளைத் தோளில் போட்டவாறு .. மண் விழுந்தால் கேட்கும் நிசப்தம்.

தக்பீர் ஒலி தொடங்கியது.

முஅத்தின் தக்பீரை ஓதத்தொடங்க, தொழுகைக்காக வந்து இருந்தவர்கள் அதைத் தொடர அல்லாஹ்வின் நாமம் பள்ளிவாசலின் கனத்த சுவர்களில் எதிரொலித்து வெளியேறி காற்ருேடு கலக்க ..

மௌலவி மேடையில் ஏறி பெருநாள் கொத்பா பிரசங்கத்தை நிகழ்த்தத்தொடங்கினுர்.

இருந்த இடத்திலிருந்து முன்னும் பின்னுமாகப் பார்த்தேன் மனித வெள்ளம் .. மனித சமுத்திரம்.

பெருநாள் தொழுகை முடிந்து, ஆளுக்காள் ஸலாம் சொல்லி மாமியின் வீட்டை அடைந்தோம்.

நஜீமா எனக்காக பலகாரம் வைத்திருந்தாள். இருவரும் ஊஞ்சலில் எதிரும், புதிருமாக இருந்து பலகாரங்களைக் கொறித்தோம்.

''நஜீமா .. வாறியா உத்து ஊஞ்சல் பார்க்கப்போவம்'' நான் கேட்டேன்.

''எங்க?''

''ஆலமர சந்தியில''

நஜீமா மாமியிடம் சொல்லிவிட்டு என்னேடு வந்தாள்.

''மாமி. நஜீமா எங்கிட வீட்டிலதான் பகலைக்கு சாப்பிடுவா'' பதிலை எதிர்பாராமல் நான் அவளுடன் நடந்தேன்.

ஆலமரச் சந்தியில், பெரிய தென்னைமரங்கள் இவ்விரண்டை ஒவ்வொரு பக்கத்துக்கும் நட்டி, அவைகளை மேலே சேர்த்து கத்தரிக்கோலாக கட்டி, நடுவில் வேருெரு தென்னைமரத்தை வளையாக வைத்து, அதில் பலமான கயிறு போட்டு, அகன்ற பலகை கொழுவி, உத்து ஊஞ்சல் போடப்பட்டிருந்தது.

இரண்டு இளைஞர்கள் இரு பக்கங்களிலும் நின்று கயிறுகளைப் பிடித்து வேகமாக உத்த, இடைநடுவில் வேறுசில இளைஞர்கள் பலகையைக் கையால் பிடித்தவாறு இருக்க... ஊஞ்சல் கிழக்கு மேற்காக பறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபக்கத்தில் நின்று உத்துபவன் கயிற்றைப் பலமாக பற்றி, கால்களை மடித்து, பின்பக்கத்தை கீழே பணித்து - உயர்த்தி வேகமாக உத்த... அதேபோன்று மறுபக்கத்தில் நின்றவனும்... ஊஞ்சல் பறக்க... பார்த்துக்கொண்டுநின்ற எனக்கும், நஜீமாவுக்கும் மயிர்க்கால்கள் சிலிர்க்க...

''என்னடா சும்மா ஆடுறீங்க? விருத்தம் சொல்லுங்கடா'' என்றான் உத்து ஊஞ்சல் ஆடுவதைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒருவன் சப்தமிட்டு.

''படிங்கடா'' என்றான் இன்னுமொருவனும்.

பலகையில் வீற்றிருந்த ஐந்தாறு ஆட்களில் ஒருவன். இருந்தாற்போலிருந்து சப்தமிட்டு ''தந்தநதி'' எனத் தொடங்க, மற்றவர்களும் கோரஸாக சேர்ந்து ''தந்தநதி நாதிநதி நாதிநதி நானு... திரு நாதிநா தந்தநா தந்த நானு...'' என்றார்கள்.

''ஒட்டோட்ட புளியமரம் உடைஞ்சி உடைஞ்சி தகர
ஒருதுளிச் சந்தாணம் துள்ளி விளையாட
பொழுதுபட பொழுதுபட பூசி முடியாதோ
பொன்னுன கொண்டைக் குத்து குத்தி முடியாதோ''

என்றான் ஓசையுடன் தந்தநாதியைத் தொடங்கிவைத்தவன். மற்றவர்கள் தந்தநாதியைத் தொடர, அவன் மீண்டும் பாடலின் ஒரு சீரைப் படிக்க... ஊஞ்சல் ஆட்டம் தொடர்ந்தது.

---

## 18

அன்று நஜீமாவுக்கு பெருநாள் சாப்பாடு எங்களுடைய வீட்டில்தான். உம்மா நஜீமாவை அருகில் வைத்து, பீங்கானுக்குள் சோற்றைப் பிசைந்து, கோழி இறைச்சியை நார்நாராகக் கிழித்து அதனுள் போட்டுக்கொடுத்தார். கறி உறைப்பதாக நஜீமா அடிக்கடி முணு முணுத்தாள். இயற்கையிலேயே சிவந்த அவளுடைய உதடுகள் உறைப்புப் பட்டதும் இன்னும் சிவந்து கோவைப்பழங்களாகின. கன்னங்கள் மேலும் சிவந்தன.

''டேய். உன் மச்சிக்கு உறைக்குதாக்கும். சீனி எடுத்துக் கொடுடா'' சாப்பிட்டவாறே வாப்பா கூறினார். சீனி எடுத்துக்கொடுத்தேன். நஜீமா வாய்க்குள் போட்டுச் சுவைத்தாள்.

பிற்பகலாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நஜீமாவும் பெருநாள் விளையாட்டுக்கள் பார்ப்பதற்காக பிரதான வீதிக்குச்செல்ல ஆயத்தமானோம்.

வீதி நிறைய சனக்கூட்டமாக இருந்தது. சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் நிரம்பிவழிந்தனர். புத்தாடை உடுத்தி உலாவினர். சந்திக்குச்சந்தி கரும்புக் குவியல்கள். நாரத்தங்காய் குவியல்கள். சைக்கிள் டயர்கள் பொருத்திய கண்ணாடிப்பெட்டி கொண்ட வண்டிக்குள் நிறைய இனிப்புப் பண்டங்கள். வளையல், ஊதுகுழல் விற்பவர்கள் 'வா ராஜா வா' எனச் சத்தமிட்டவாறு. கிறுகுகட்டை கிறுக்கி ஐந்து சதம் வைத்தால். வென்றவர்களுக்கு பத்து சதம் கொடுப்பவர்கள்.

வளையம் எறியும் இடத்தைச்சுற்றி ஒரே கூட்டம். தற்காலிக ஓலைக்கொட்டில் அமைத்து, நீண்ட மேசையொன்றில் ஓரடி உயரமான கம்பிகளை அங்கும் இங்குமாக நட்டி, அவைகளின் அருகில் பெறுமதி கூடிய, குறைந்த பொருட்களை வைத்து இருப்பர். வளையமொன்றை பத்துசத வீதம் வாங்கி பொருட்களுடன் கூடிய கம்பி குத்தப்பட்ட மேசைக்கு சுமார் இருபதடி தள்ளிநின்று கம்பியினுள் விழக்கூடியவாறு எறிவர். பொதுவாக வளையங்கள் கம்பியினுள் விழாது. அவ்வாறு விழாதபோதெல்லாம், விளையாட்டை நடாத்துபவன் 'பிளாங்கி' என கத்துவான். எபபோதாவது ஒரு தரம் கம்பிக்குள் வளையம் விழுந்தால் 'பிறைஸ்' என கத்துவான். கம்பியின் அருகில் உள்ள பொருள் வளையம் எறிந்தவனுக்கு சொந்தமாகும்.

நானும் நஜீமாவும் நீண்டநேரமாக வளையம் எறியும் விளையாட்டைப் பார்த்துக்கொண்டு நின்றோம். 'பிளாங்கி' என்ற சப்தம் மட்டும் அடிக்கடி கேட்டவாறிருந்தது.

குடுகுடு கரத்தையொன்றை வாங்கித் தருமாறு நஜீமா என்னைக்கேட்டாள். நீளமான இரண்டு தடிகளில் கீழே சக்கரம் பொருத்தி, மேலே மாட்டுவண்டி கூடு அமைத்து அதனுள் இரப்பரால் மூடிய மண்சட்டி ஒன்றிருக்கும். கரத்தையை உருட்டும்போது இரப்பரில் கட்டிய ஈர்க்கில் சட்டியில் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் பலூனில் படும்போது குடுகுடு சப்தம் கேட்கும்.

உம்மா தந்த பணம் இரண்டு ரூபா என்னிடம் இருந்தது. ஐம்பது சதத்துக்கு கரத்தையை வாங்கி நஜீமாவிடம் கொடுத்தேன். அதை பாதையில் உருட்டும்போது .. அப்போது ஏற்படும் குடுகுடு சப்தத்தால்... அவள் உள்ளம் மலர்ந்து சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களில் நிறம்நிறமான சர்பத் விற்றனர். அன்ஞெசி சர்பத் கடைகளை சிறுவர்கள் ஈய்க்களாக மொய்த்து நின்றனர். கூட்டத்தோடு கூட்டமாக நாங்களும் நின்று இருபது சதத்துக்கு இரண்டு சர்பத் கிளாஸ் வாங்கிக் குடித்தோம்.

பாதையில் சற்று தனியான இடத்தில் தொட்டி ஊஞ்சல் அமைத்து இருந்தனர். சுமார் பத்தடி உயரமான தென்னை மரமொன்றை நட்டி, அதன் முனையில் இரும்புக் கம்பி ஏற்றி, ஆறு ஊஞ்சல்கள் தொங்கக்கூடியவாறு கம்பி யில் விட்டங்களை அமைத்து இருந்தனர். ஆறு ஊஞ்சல் களிலும் சிறுவர்கள் அமர்ந்ததும் கீழே நிற்கும் ஒருவன் ஊஞ்சலொன்றைப் பிடித்துக்கிறுக்க, தொடர்ந்து ஏனைய ஊஞ்சல்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஆடிச்கொண்டிருக்கும்.

''நஜீமா. வாறியா தொட்டி ஊஞ்சல் ஆடலாம்?'' நான் கேட்டேன்.

''வாணு. எனக்குப் பயமா இருக்கு. நீ வேணும்ஞ ஆடு.

''உனக்கு வாணும்ஞ எனக்கும் வாணு''

ஊஞ்சல்கள் வளைந்து வளைந்து செல்வதை நீண்டநேர மாக வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ரேம்.

பாதையெங்கும் வர வர சனக்கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. எங்கும் மகிழ்ச்சி. உற்சாகம்.

இருட்டத்தொடங்கியது. வாங்கிய நாரத்தங்காய்களு டனும், கரும்புகளுடனும் வீட்டுக்கு வந்தோம்.

நஜீமாவை அவளுடைய வீட்டுக்குக் கூட்டிச்சென்று விட்டேன். மாமி பாயொன்றில் படுத்திருந்தார். அவரால் இலேசில் எழுந்திருக்க முடியாத நிலை.

''எங்கடி போனே இவ்வளவு நேரத்துக்கு?'' மாமி கேட்டார்.

நஜீமா மௌனமாக நின்ருள்.

''உங்ககிட்ட சொல்லிட்டுதானே மாமி நஜீமாவைக் கூட்டிச்சென்றேன்''

''அதுக்காக இவ்வளவு நேரமா? இருட்டிட்டு. இனிமே இப்புடி சுணங்கக்கூடா. தெரியுமாடி'' மாமி அதட்டினர்.

நஜீமாவை வாசலுக்கு அழைத்துவந்தேன்.

''உத்து ஊஞ்சல் போட்ட இடத்துக்கு பக்கத்திலே ராவைக்கு கோடுகச்சேரி நடத்துருங்களாம். வாறியா

PUBLIC LIBRARY SAMMANTHURAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்போகலாம்?'' அவளுடைய கையை என்னுடைய தில் கோர்த்தவாறே கேட்டேன்.

''என்னால ஏலா. உம்மா கோவமா இருக்கா''

''நான் உன் உம்மாவின் கோபத்தை இல்லாம ஆக்கிறன்''

''எப்பிடி?''

''வாவேன்''

வீட்டினுள்சென்று, வாங்கிச்சென்ற கரும்பை சிறு துண்டங்களாக அரிந்து, ஒரு தட்டுநிறைய போட்டு படுத்திருந்த மாமியின் முன்னால் கொண்டுசென்று வைத்தேன்.

''என்னடா நவாஸ் இது?''

''கரும்பு மாமி''

''ஏது?''

''உம்மா தந்த காசிலே வாங்கினேன்''

''வேறு என்ன வாங்கினே?''

''நாரத்தங்காய்''

''அது எங்கே?''

''இங்கதான் இருக்கு''

''அதயும் உரியேன் இனிப்பைவிட புளிதான் வாய்க்கு நல்லா இருக்கும்''

நாரத்தங்காயை தோலுரித்து, சுளைகளாக எடுத்து நஜீமாவுக்கும் கொடுத்து மாமிக்கும் கொடுத்தேன்.

மாமி ருசித்துச் சாப்பிட்டார்.

''மாமி. ஆலமர சந்தி திட்டியிலே ராவைக்கு கோடு கச்சேரி நடத்துறாங்களாம், நஜீமாவையும் அழைச்கிட்டு பார்க்கப்போகட்டா?''

''நாரத்தங்காய் புளி நல்லாத்தான் இருக்கு. என்ன சொன்னே?''

''அதுதான் கோடு கச்சேரி. நஜீமாவும் நானும்...''

''அதுக்கென்ன. போய்ப்பாருங்க. அவளைப் பத்திரமா கூட்டிட்டுப்போ. உன் மாமாகூட அதைப் பார்க்க போகணும்ணு''

''அப்ப நான் இங்கேயே நின்று இரவு சாப்டுட்டு மாமாவோட போறன்''

''உன்னே உங்க உம்மா தேடுவாவே''

''இல்ல. நான் அவங்ககிட்ட சொல்லிப்புட்டேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நஜீமாவும் கிணற்றடிக்குச்சென்று முகம் கழுவினோம். அவள் உடை மாற்றினாள். இருவரும் பலகாரம் கொறித்தோம்.

நேரம் சென்றது.

இரவு சாப்பாட்டின்பின் ஆலமரத் திட்டிக்குச் சென்றோம். மாமாவும் கூடவே வந்தார்.

நீதிமன்றம் நடத்துவதற்காக ஓலையால் தற்காலிக குடிசையொன்று அமைத்திருந்தனர். நீதிபதி அமர்வதற்காக சிறிய மேசையும் கதிரையும்... அந்த மேசைக்கு முன்பாக எதிர்பாட்டில் நீண்ட மேசையொன்று இரண்டு பக்கங்களிலும் சில கதிரைகள். சற்றுத்தள்ளி ஒரு சாட்சிக்கூண்டு.

ஜே... ஜே.. என ஒரே சனக்கூட்டம். கடலை, கச்சான்கொட்டை கூறி விற்பவர்கள். சர்பத் விற்பவர்கள். ஒரே கசமுச சப்தம்.

''கோடு நடத்த தொடங்கப்போறாங்க'' என்றான் பலத்த தொனியில் ஒருவன்.

அங்குமிங்குமாக சிதறிக்கிடந்த கூட்டம் ஓலைக்குடிசையைச் சுற்றி மொய்த்தது.

நீண்ட மேசையைச் சுற்றிவரப் போடப்பட்டிருந்த கதிரைகளில் பலர் உட்கார்ந்து இருந்தனர். பொதுவாக எல்லோரும் நீண்ட கால்சட்டை அணிந்து, கழுத்தில் கறுப்பு பட்டி கட்டி இருந்தனர். அவர்களில் சிலரை எனக்குத் தெரியும். அவர்கள் நான் படிக்கும் பாடசாலையின் ஆசிரியர்கள்.

சிறிது நேரத்தில், சிவப்பு நிற பட்டி அணிந்த ஒருவன் கோலொன்றுடன் முன்னேவந்து ஏதோ சொல்ல, உள்ளே இருந்த அத்தனைபேரும் எழுந்துநிற்க, நீதிபதி வேடம் பூண்டவர் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

ஒவ்வொரு வழக்காக விசாரணைக்கு எடுத்தார்கள்.

அடிபிடி சண்டை எனச்சொல்லி பொலீஸ் உடையிலிருந்த ஒருவர் இரண்டு நபர்களை நீதிபதி முன் நிறுத்தினார். அந்த வழக்கு விசாரிக்கப்பட்டது. பெருச்குதோர் வேடம் பூண்ட ஒருவர் எழுந்துநின்று நீதிபதியைப் பார்த்து முரட்டுத் தொனியில் ஏதோ கூற, பொலீஸ்காரர் எதையோ சொல்லி மறுத்துரைக்க, பார்வையாளர்கள் கொல் என சிரிக்க, நீதிபதி கட்டையொன்றால் மேசையைத் தட்டி ஆர்டர் சொல்ல... காட்சி களைகட்டத்தொடங்கியது..

அடுத்து ஒரு வழக்கு. கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்டது. வழக்கு விசாரணையின்போது பார்வையாளர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து விழுந்து சிரிக்கத்தொடங்கினர். வழக்கை நடாத்திய பெருச்குதோர் வேடம் பூண்டவர் வார்த்தைக்கு வார்த்தை ஹாஸ்ய வெடிகளை வெடித்துக்கொண்டிருந்தார்.

ஒவ்வொரு வழக்காகக் கூப்பிடப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். வழக்காளிகளாக, எதிரிகளாக வந்தவர்களின் வேடப் பொருத்தம். பொலிஸ்காரர்களின் மிரட்டல் சேஸ்டைகள்... பார்ப்பதற்கு ஹாஸ்யமாக இருந்தன.

வழக்குகளில் மிகவுமே ருசிகரமாக அமைந்தது கோழி களவெடுத்த வழக்குதான். கோழிக் கள்ளனாக நடித்தவர் வேறு யாருமல்ல. மாமியின் தம்பி 'ஏன்டாம்பி' தான்.

ஏன்டாம்பி சாரன் அணிந்து, தோளில் துவாய் ஒன்றால் போர்த்தி அடக்கவொடுக்கமாக கோர்ட்டில் வந்துநின்று திருட்டுமுழி முழித்தபோது பார்வையாளர்கள் சிரித்தசிரிப்பு!

''நஜீமா. உன் மாமா ஏன்டாம்பிதான் கோழிக்கள்ளன்'' என்றேன் நான்.

''ஓ! மாமா மாமா ...'' என்றாள் நஜீமா சப்தமிட்டு.

''சத்தம் போடாதே. ஆக்கள் ஏசுவாங்க''

கோழி திருடிய வழக்கு தொடங்கியது. ஏன்டாம்பி ஒரு வீட்டுக்குச்சென்று மூன்று கோழிகளைத் திருடிவிட்டாராம். தண்ணீரில் நனைந்த கோணிச் சாக்குகளை படுத்திருந்த கோழிகளுக்கு மேல் போட்டு தூக்கிச்சென்றாராம்.

பொலீஸ்காரன் மூன்று கோழிகளை கோர்ட்டில் காட்ட, அவைகள் சிறகுகளை அடித்தவாறு பொலீஸ்காரனுக்குக் கொத்தப்போக, அவன் பயத்தால அவைகளைக் கீழே எறிய கோழிகள் பறக்க, கோழிக்கள்ளனாக நடித்த ஏன்டாம்பி அங்கும் இங்கும் திருட்டுமுழி முழித்தவாறு ஓடி அவைகளைப் பிடிக்க ஒன்றைப் பிடிக்க மற்றது பறக்க . கையிலிருந்ததை விட்டுவிட்டு மற்றதைப்பிடிக்க . ஏன்டாம்பி துள்ளிப் பாய கோழிக்குப் பதிலாக பொலீஸ்காரர் ஏன்டாம்பியின் கைகளுக்குள் அகப்பட . எழுந்துநின்ற பெருக்குதோர் ஒருவர் கோழிக்குப்பயந்து பின்னுக்குவர, ஏன்டாம்பியின் காலில் சிக்கி அவர் தடாலென கீழே விழ கோர்ட் ஒரே அமர்க்களம். சிரிப்பென்றால் சிரிப்பு. அவ்வளவு சிரிப்பு. போதாக்குறைக்கு நீதிபதிவேறு வாய்விட்டுச் சிரிக்க ..

சிரிப்பு அடங்குவதற்கு நீண்டநேரம் எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

அடுத்தநாள். பெருநாள் உற்சாகம் இன்னும் முடியவில்லை

பிற்பகலில் நானும் நஜீமாவும் பிரதான பாதைக்குச் சென்ருேம். இன்றும் ஒரே சனக் கூட்டம்.

இரவாகியது. நேற்று இரவு நீதிமன்றம் நடைபெற்ற வளவில் இன்று பஜனை ஒழுங்கு செய்திருந்தார்கள். நஜீமா நேரத்தோடு நித்திரையாகிவிட்டதால் நான்மட்டும் தனியாக பஜனை பார்க்கச் சென்றேன்.

திறந்தவெளியில் ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. சிலர் மேடையில் அமர்ந்திருந்தனர். ஒரு மிருதங்கம், செப்புவட்டா, ஒரு பெரிய தகரபேசன், சல்பஞ பெட்டி ஒன்று இவைகள்தான் சங்கீத உபகரணங்கள்.

ஒரு வயதானவர் சற்று காலை இழுத்து இழுத்து நடந்துவந்து மேடையில் ஏறினுர். அவர்தான் பாட்டுப் படிப்பவர்.

மேடையைச்சுற்றி ஏகப்பட்ட கூட்டம். மேடையில் இருந்தவர்களுக்கு முதலில் தேனீர் பரிமாறப்பட்டது. தொடர்ந்து பீடி புகைத்தார்கள்.

மிருதங்கம் வாசிப்பவன் இருகால்களையும் மடித்து மிருதங்கத்தை இடைநடுவில் வைத்து, சப் சப் எனத் தட்டி, சில கயிறுகளை இழுத்து பலப்படுத்தி ஏதோ செய்தான்.

செப்புவட்டா, தகர பேசன்கள் ஒவ்வொருவர் கைகளுக்கும் சென்றன,

காலை இழுத்து நடந்தவன் நடுநாயகமாக வீற்றிருந்து தொண்டையைக் கனைத்து ''சொர்க்கலோகமே, சுந்தர வதனமே ....'' என்ற பாடலைப் பாடத் தொடங்க ..

திடீரென மேடை உடைந்து பாடகன் கீழேவிழ, கூடியிருந்தவர்கள் கொல் என சிரிக்க...

ஒரே அமர்க்களம்.

நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் ஓடிவந்து பாடகனை எழுப்பி உட்காரவைத்து, மேடையை சரிசெய்து, மீண்டும் பாடவைத்தனர்.

சொர்க்கலோகம் பாட்டு களைகட்டத்தொடங்கியது.

மிருதங்கம், செப்புவட்டா, தகரபேசன் சப்தங்கள் அதிர, பாடகனின் ஒலி மற்ற சப்தங்களையும் மீறி கர்ண கடூர குரலில் ஒலிக்க...... பஜனை தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரஞ் செல்லச் செல்ல எனக்கு கொட்டாவி வரத் தொடங்கியது. அங்கேயே விழுந்து நித்திரை செய்ய வேண்டும் போன்ற ஓர் உணர்வு.

நஜீமா இல்லாமல் பஜனைக் கச்சேரி பார்ப்பது எனக்கு வெறுப்பை ஏற்படுத்தியது பாலாக பொழிந்த நிலவு வெளிச்சத்தில் வீட்டைநோக்கி நடந்தேன்.

★ ★ ★

மாமியின் வீட்டில் ஏகப்பட்ட பெண்கள் கூடியிருந்த னர். உம்மாவும் வந்திருந்தார். மாமா சோகமே உருவாக ஒருபக்கமாக நின்றார். மாமி அறைக்குள் முக்கி முனகும் சப்தம் வெளியே கேட்டது.

மாமிக்கு கருமாதி வருத்தம். சற்று கண் புகைச்சலான மருத்துவிச்சி ஒருத்தி குந்திக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு வரும் வாய்க்கு வந்தமாதிரி மாமிக்குக் குழந்தை பிறக்க தாமதமாகுவதற்கான காரணத்தைப்பற்றி அலசிக் கொண் டிருந்தனர்.

மருத்துவிச்சியின் வேண்டுகோளுக்கிணங்க ஏன்டாம்பி நாட்டு மருத்துவர் ஒருவரை அழைத்து வருவதற்காக வெளியே ஓடினான். சிறிது நேரத்தில் மருத்துவர் பெட்டி ஒன்றுடன் வந்தார். மாமியின் கையைப்பிடித்து நாடி பார்த்தார்.

மாமா மருத்துவரின் அருகில் சென்றார்.

''என்னங்க. எப்பிடி இருக்கு?''

''பிள்ளைத்தாச்சிமேலே பார்வை விழுந்திருக்கு. குழை அடிக்கணும். உலக்கை விடணும்''

''அவ்வளவு மோசமா இருக்கா?''

''அவைகளை உடனே செய்யலேன்னு தாயும் குழந்தை யும் தப்புவதே கஸ்டம்''

''இப்ப அதுக்கு என்னங்கவேணும்?''

''முதலிலே கொஞ்சம் பச்சிலைக்கொத்து வேணும். குழை அடிக்கிறேன். அபபுறம் உலக்கை எறிகிறேன். உலககை எறிய குழந்தை புறக்கும்''

''டேய், போயி கொஞ்சம் வேப்பிலைக்கொத்து முறிச் சிட்டு வாடா''

ஏன்டாம்பி ஓடினான்; வேப்பஇலைக் கொத்துகளுடன் வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டுக்குள்ள இருக்கிற எல்லாரும் வெளியே வாங்க'' கூறியவாறு மருத்துவர் உள்ளே சென்றார். மருத்துவிச்சி உட்பட அனைவரும் வெளியே வந்தனர்.

மாமி மட்டும் உள்ளே. இன்னும் முனகும் சப்தம்.

மருத்துவர் வேப்பையிலையைக் கையில் எடுத்து தலையிலிருந்து கால்வரை மாமியை கொத்தால் தடவித்தடவி மந்திரம் சொல்லி ஊதினார். ஆரம்பத்தில் மெதுவாக தடவத் தொடங்கியவர் நேரம் செல்லச்செல்ல வெறிகொண்டவர்போல் மாமியின் தலையிலும் தோளிலும் வேகமாக கொத்தால் அடித்து அடித்து மந்திரங்களை உச்சாடனம் செய்தார். மாமிக்கு பிள்ளைப்பேறு வருத்தம் ஒரு பக்கம். மருத்துவருடைய அடிபடுவதால் ஏற்படும் வேதனை மறுபக்கம். வலி பொறுக்கமுடியாமல் மாமியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. மருத்துவர் குழை அடிக்கும் பணியைத் தொடர்ந்தார்.

நீண்டநேர மந்திர உச்சாடனத்தின் பின் மருத்துவர் தனது வேகத்தைக் குறைத்தார். அவருடைய கால்கள் தள்ளாடின. கைகள் துவண்டன.

''மருத்துவிச்சியை உள்ளே அனுப்புங்க. நான் உலக்கை எறியப்போகிறேன். இப்போ குழந்தை பொறந்திடும்'' கூறியவாறு மருத்துவர் வெளியே வந்தார்.

''நஜீமா. வா. உலக்கைவிடுவதைப் பார்க்கலாம்'' அவளுடன் நானும் வெளியேவந்தேன்.

வாசலில் மருத்துவர் உலக்கையொன்றை கையில் பிடித்தவாறு சடசடவென மந்திரங்களை உச்சாடனம் செய்தார். உலக்கையின் மேலும் கீழுமாக ஊதினார். மாமியின் முனகல் சப்தம் வெளியே கேட்டது. மருத்துவர் மந்திரங்களைத் தொடர்ந்தார். அவருடைய கண்கள் கொவ்வைப் பழமாக சிவந்தன. கனவுலகத்தில் சஞ்சரிப்பவர் போன்று பாவனை செய்தார். உலக்கையை மேலும் கீழுமாக அசைத்தார். தொடர்ந்து மந்திரம்... மாமியின் முனகல் சப்தம் .. மந்திரம் .. உலக்கை அசைப்பு... பெரிய அளவிலான மாமியின் அழுகைச்சப்தம். திடீரென...

மருத்துவர் கையிலிருந்த உலக்கையை ஒரு நுனியில் பிடித்து வாசல் பக்கமிருந்து வீட்டுக்குமேலால் புழக்கடைக்குள் சென்று விழக்கூடியவாறு எறிந்தார்.

உலக்கை விழுந்த சப்தம் கேட்கவில்லை. ஆனால், வீட்டுக்குள் குழந்தை வீறிட்டு தொடர்ச்சியாக அழும் சப்தம் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க பெரிய வைத்தியர்தான். நீங்க சொன்னது போல உலக்கை விழும்போதே குழந்தை பொறந்துட்டுதே'' என்றார் மாமா மகிழ்ச்சி தாங்கமுடியாமல்.

''காதர் மொகிதீன் பரிசாரியா, கொக்கா. இது ஒரு வருத்தமா? அன்றைக்கு பாருங்க. பெரிய மரிக்காருட பொண்டிலுக்கு பத்து நாளா வருத்தம். ஆனைப்பட்ட வைத்தியர்களெல்லாம் வந்து பார்த்தாங்க. குழந்தை பொறக்கல்ல. கடைசியில இந்த காதர் முகைதீனுக்கிட்ட வந்தாக. நான்போய் குழை அடிச்சமட்டும் தான். உலக்கையும் விடல்ல. குழந்தை பொறந்துட்டு''

காதர் முகைதீன் தனது சுயவிளம்பரத்தைத் தொடர்ந்தார்.

காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையோ என நான் நினைத்தேன்.

சிறிது நேரத்தின்பின் நானும் நஜீமாவும் மாமி படுத்திருந்த அறைக்குள் சென்று தூரநின்று குழந்தையைப் பார்த்தோம்.

நஜீமா பிறந்தபோது எப்படிக் கிடந்தாளோ, அதே சிவப்பு. அதே அழகு.

''என்ன பிள்ளையாம்?'' நஜீமா என்னிடம் கேட்டாள்.

''தெரியல்லியா. உன்னைப்போல பெண்தான்''

நஜீமா அவளையே நான் திருமணம் செய்யவேண்டுமென அடம்பிடித்த நிகழ்ச்சி எனக்கு திடீரென ஞாபகத்தில் எழுந்தது.

★ ★ ★

பாடசாலைக்கு ஒழுங்காக போய்க்கொண்டிருந்தேன். நான் இப்போது மூன்றும் வகுப்பு. வகுப்பில் நான்தான் முதல் ஆள். வகுப்பில் கடைசியாக வருபவன் மீரான் என்பவன்.

ஆங்கில பாடம் நடப்பது ருசிகரமான ஒரு நிகழ்ச்சி. அதிலும் ஆங்கிலச் சொற்களுக்கு எழுத்துக்கூட்டுவதென்றால் மழையில் நனைவதுபோன்ற மகிழ்ச்சி எனக்கு.

ஆசிரியர் வகுப்புக்கு வருவார். மாணவர்களை மேசையை வளைத்து நிற்குமாறு கூறுவார்.

முதலில் நிற்கும் மாணவனிடம் ஓர் ஆங்கில சொல்லைச் சொல்லி எழுத்துக்கூட்டுமாறு கூறுவார். அவன் பிழையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் மற்றவனிடம் கேட்பார். அவனும் பிழையாக எழுத்துக்களைக் கூறினால், அடுத்தவன்.. இவ்வாறு ஒவ்வொருவராக தொடரும். யார் சரியாகச் சொல்கிறானோ அவன் தனக்கு முன்னால் நிற்பவர்களுக்கெல்லாம் தலையில் ஒவ்வொரு குட்டு குட்டிவிட்டு முன்னால் போய் நிற்கவேண்டும். பொதுவாக அவர்கேட்கும் எல்லா வார்த்தைகளையும் நான் சரியாக எழுத்துக்கூட்டிச் சொல்வேன். எனக்கு மற்றவர்களுக்கு குட்டும் வாய்ப்பு கூடவே ஏற்படும். மீரான் ஒவ்வொருவர் கையாலும் குட்டுப்பட்டுக்கொண்டே இருப்பான். அவனைப்பார்க்க பெரிய பரிதாபமாக இருக்கும். மீரானுக்கு குட்டும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கும்போதெல்லாம் நான் அவன் பின்தலையில் மெதுவாகவே குட்டுவேன். இதை ஆங்கில ஆசிரியர் கவனிப்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

இப்படித்தான் ஒருநாள்.

ஆசிரியர்கேட்ட ஒரு சொல்லுக்கு வகுப்பிலிருந்த மாணவர்கள் யாரும் எழுத்துக்களைச் சரியாக சொல்லவில்லை. நான் கூறிவிட்டு சகலருக்கும் குட்டினேன். மீரானின் தலையில் மட்டும் மெதுவாக கையை வைத்துவிட்டு எடுத்துவிட்டேன்.

ஆசிரியருக்கு மீரான் இவ்வளவு மந்தைத் தனமாக இருப்பது விருப்பமில்லை. அவனை பாடத்தில் கூடிய கவனம் எடுப்பிக்க மாணவர்களைக்கொண்டு தண்டிப்பதுதான் உசிதமான வழியாக அவருக்குத் தெரிந்திருக்கலாம். நான் மெதுவாக அவனுக்குக்குட்டியது அவருக்குப் பொறுக்கவில்லை.

''டேய் மீரான். நவாஸுக்கு குட்டத்தெரியாதாக்கும். குட்டிக்காட்டு'' என்றார் அவனைப்பார்த்து.

அவன் என் அருகில்வந்து, நான் இவ்வளவு நாளும் அவனுக்கு பச்சாதாபப்பட்டதை மறந்து, முஷ்டியை மடித்து மடார் என என் தலையில் குட்டினான். அவனுக்குக் கிடைத்த ஒரேஒரு சந்தர்ப்பம். வலி பொறுக்கமுடியாமல் தலையைக் கையால் பொத்தினேன்.

''நவாஸ். குட்டுவது எப்படி என இப்போது தெரிகிறதா?'' ஆசிரியர் கேட்டார்.

என் கண்கள் பனித்தன.

அவர் அடுத்த ஆங்கிலச் சொல்லைக்கூறி எழுத்துக்களைக் கேட்டார். அனைவரும் பிழையாக கூறினர். நான் மட்டும் சரியாக சொன்னேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி. எல்லோருக்கும் குட்டு''

நான் தொடங்கினேன். மீரானுக்குக் குட்டும் முறை வந்தது. முஸ்டியை உயர்த்தி, என் பலம் முழுவதையும் முன்னங்கையில் எடுத்து, ஓங்கி அவன் தலையில் குட்டினேன். ''உம்மா...'' என்றவாறு தலையை இருகைகளாலும் பொத்திக்கொண்டு அவன் திடீரென கீழே குந்தினுன். மீண்டும் எழுந்துநிற்க பல நிமிடங்கள் எடுத்தன.

எங்களுக்கு பாடசாலையில் இடைவேளை நேரத்தில் ஒரு பனிஸ் தருவார்கள். மீரான் ஏழைக்குடும்பத்துப் பையன். கல்வியில் எவ்வளவுக்கு அசிரத்தை காட்டுவானே, அதே அளவு துஸ்டன்.

நான் பனிஸ் சாப்பிடத்தொடங்கும்போது என் அருகில் வந்துநிற்பான். அவனுடைய பனிசை வாய்க்குள் கொதுப்பிக் கொண்டிருப்பான்.

''நவாஸ். பனிசைத் தாடா'' கேட்பான்.

''இல்லடா. நான் தின்னனும்''

''அப்போ... எனக்குப்பாதி, உனக்குப்பாதி''

''பாதியும் தரமாட்டேன். உனக்கும்தான் பனிஸ் தந்ததுதானே''

''தரமாட்டியா?''

''இல்லடா''

''தரமாட்டே?''

''இல்ல''

''நீ திங்கிறதை நான் பார்த்துக்குறேன்''

''என்னடா செய்வே? அடிப்பியா? அடிச்சியென்ரு மஜீதுக்கிட்டே சொல்வேன்''

மீரானுக்கு மஜீது என்ருல் சிம்மசொப்பனம்.

''நான் ஏன் உனக்கு அடிக்கேன்...? பாரேன். நான் உன்னைத் தின்னுமல் ஆக்குறேன்''

நான் சற்றும் எதிர்பாராமல் நிற்க, அவன் தன்னுடைய மூக்கில் விரல்களை வைத்து, மூக்கைச் சீறுவதுபோல் நடித்து விரல்களை எனது கையிலுள்ள பனிசில் பூசுவதுபோல் பாசாங்கு செய்வான்.

எனக்கு வயிற்றைக் குமட்டும்.

''இந்தாடா. நீயே தின்னு''

பனிசை அவன் கையில் திணிப்பேன். அவன் கொதுப்பத் தொடங்குவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநேரங்களில் அவன் இன்னொன்றையும் செய்வான்.

நான் வகுப்பில் பாவித்த மேசையின் மேற்பலகை திறந்துமூடக் கூடியவாறு இருக்கும். மேசையின் உள்பகுதி ஓரே அழுக்காக இருந்தது.

நான் மீரானுக்கு பனிஸ் கொடுக்க மறுத்தால், காகம் சொட்டுவதுபோல் என்னுடையதைச் சொட்டி, மேசையின் மேற்பலகையை அமர்த்தி அதை அழுக்காக்கி "இந்தா, இப்போ தின்னுபார்க்கலாம்" என்பான்.

"சீ! எனக்கு வாணுடா. நீயே விழுங்கு" நான் கூறுவேன்.

மீரான் எப்போதும் அழுக்காகவே காட்சியளிப்பான்.

சிலநேரங்களில் என்னுடனும், மஜீதுடனும் சேர்ந்து கோவிக்குண்டு விளையாடுவான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. எனக்கு பாடசாலை இல்லை. புது விளையாட்டு ஒன்றைக் காட்டுவதாக மஜீது என்னை ஆலமரச்சந்திக்கு அழைத்திருந்தான். நஜீமாவையும்கூட கூட்டிக்கொண்டு சென்றேன்.

திட்டியின் நடுவில் ஓர் இடத்தில் வாகை மரக்கிளைகள் போடப்பட்டிருந்தன மஜீது அருகில் நின்றான். அவனைச் சுற்றி பத்துப்பன்னிரெண்டு சிறுவர்கள்.

"நவாஸ் வந்திட்டியா? வா. இப்போ நான் பழகின மந்திரமொன்றை உனக்கு செய்துகாட்டப் போறன்" என்றான் மஜீது.

"என்னடா செய்துகாட்டப் போறே?"

"பார்த்துக்கொண்டே இரு. நான் மந்திரம் சொல்வேன். அப்புறம் இந்த வாகைக்கொத்தெல்லாம் கிடுகிடுவென அசையத்தொடங்கும்"

"எங்கே செய் பார்க்கலாம்"

மஜீது வாய்க்குள் எதையோ முணுமுணுத்தான் கையை வானத்தைநோக்கி அசைத்தான். அதே கையை மெதுவாக கீழே கொணர்ந்து "அசை" எனக் கத்தினான்.

என்ன ஆச்சரியம்! வாகைக் கொத்துகள் சலசலவென அசைந்தன. மஜீது சிரித்துக்கொண்டு நின்றான். கொத்துகள் தொடர்ந்து அசைந்தன.

"போதும்! நிறுத்து!" மஜீது கட்டளையிட்டான்.

அசைதல் நின்றது.

"டேய். டேய். மஜீது. எப்படிடா செய்தே? சொல்லுடா" நான் கெஞ்சினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முடியாது. அது மந்திரம். உனக்குச் சொல்லித்தந்தா என் தலையே வெடித்திடும்'' மஜீது பிகு பண்ணினான்.

கூட்டத்தில் நின்ற ஒருவன் வாகைக்கிளைகளை உற்றுப் பார்த்தான். அவனுடைய குரல் ஏறக்குறைய மஜீதினுடையதை ஒத்திருந்தது. என்ன நினைத்தானோ ''அசை'' என்றான்.

வாகைக் கொத்துகள் அசையத்தொடங்கின.

எனக்கு பலத்த ஆச்சரியம்.

அவன் ''போதும். நிறுத்து'' என்றான். அசைதல் நின்றது.

அவன் கொத்துகளுக்கு அருகில்சென்று மளமளவென அவைகளைக் கைகளால் கோரி தூரே எறிந்தான். உள்ளே பார்த்தால்...

மடுவொன்றினுள் மீரான் படுத்துக்கொண்டிருந்தான். நான், நஜீமா, கூடிநின்ற அத்தனைபேரும் சிரித்தோம். மஜீதின் முகத்தில்மட்டும் எண்ணெய் வழிந்தது.

---

## 20

சோகமே உருவாக வாப்பா வீட்டுக்கு வந்தார். அவர் முகம் நிறைய கவலை ரேகைகள். மாநிறமான வாப்பா கறுத்துப்போனவர்போல் காணப்பட்டார்.

ஒரு கிழமைக்கு மேலாக வாப்பா வீட்டில் இல்லை. வயலுக்கு சூடு மிதிக்கப்போனதாக உம்மா கூறியிருந்தார்.

வாப்பாவின் கோலத்தைக் கண்டதும் உம்மா பதறிப் போனார்

''என்னங்க . என்ன நடந்தது?'' உம்மா கண்கலங்கக் கேட்டார்.

''நான் பயந்ததுபோலவே எல்லாம் பதராய் போயிட்டு. பூக்கிற காலத்தில் கச்சான் காத்து வீசியதாலே நெல்லெல்லாம பதராயிட்டு''

''அதற்காக இப்படி இடிஞ்சிபோயிட்டீங்களே!''

''உனக்குத் தெரியும்தானே. நம்ம வயலைவிட வேற வயல்களையும் இம்முறை குத்தகைக்கு எடுத்துச் செய்தேன. ஒன்றுமே கைகொடுக்கல்ல. கடைசியில கணக்குப் பார்த்தா கையில இருந்த முதலெல்லாம் போய் இன்னும் கடனு கொடுக்கவேண்டி ஏற்பட்டுப்போச்சு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன செய்யலாம். வேளாண்மை என்றாலே ஒருதரம் லாபமும் ஒருதரம் நட்டமும்தானே''

உம்மா எவ்வளவுதான் ஆறுதல் சொன்னாலும் வாப்பாவின் துக்கம் என்னவோ குறைந்ததாக இல்லை இரவு படுக்கும்போது உம்மாவும் வாப்பாவும் குசுகுசு என நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். உம்மா வாப்பாவுக்கு இன்னும் ஆறுதல் சொல்லலாம் என எண்ணிக்கொண்டேன்.

அடுத்தநாள் காலையில் சில மாட்டுவண்டில்களில் நெல் மூடைகள் வந்தன. வேறுநாட்களில் என்றால் வண்டில்கள் நிரை நிரையாக நெல்மூடைகளை ஏற்றிவரும். மூடைகளை இறக்கிவைப்பதில் வாப்பா சிரத்தை காட்டவில்லை. ஏனோ தானோவென நடந்துகொண்டார்.

வாப்பாவின் துக்கம் இன்னும் மறையவில்லைப்போலும்.

★ ★ ★

நஜீமா மடியில் பொம்மையொன்றை வைத்து விளையாடிக்கொண்டிருந்தாள். ஏன்டாப்பி கொழும்புக்குப்போன போது வாங்கிவந்து கொடுத்திருந்தான். அழகான பொம்மை.

''பார்த்தியா. மாமா வாங்கிவந்த'' நஜீமா என்னிடம் தந்தாள்.

அதைத் தூக்கிப்பார்த்தேன். வயிற்றை நசித்தேன். 'கீச்' என ஒலி.

''இதைப் பாத்தியா. பெரிய பலூன்''

பலூனை என்னிடம் தந்தாள்.

''ஊதித்தரட்டா?''

''இப்ப இல்ல. முதலிலே பொம்மையை வைச்சு விளையாடுவம்''

''என்ன விளையாட்டு?''

''வீடுகட்டி விளையாடுவம்''

''வா. வாசலுக்குப் போவம்''

ஒரு பழைய பாயை எடுத்துக்கொண்டு வாசல் மூலையில் நின்ற பலாமர நிழலுக்குச் சென்றோம்.

கம்புகள் சிலதைச் சேகரித்து, மணலில் குத்தி, கயிற்றினால் வளைகட்டி வீடு அமைத்தேன். நஜீமா எனக்கு உதவினாள். கம்புகளை பொறுக்கித்தந்தாள். வீட்டுக்குள் தேடி கயிற்றுத் துண்டுகள் கொண்டுவந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மேலே கூரைக்கு என்ன போடப்போறே?''

''ஒரு பழைய பாய் இருந்தா எடுத்துவா. அதைப் போடலாம்''

''இதைப் போடேன்'' அங்கு கிடந்த பழைய பாய்த் துண்டைக் காட்டினுள்.

''இல்ல. இத உள்ளே போட்லாம். இது நல்லது. பழசா ஏதாவது கிடக்கும். எடுத்துவா''

நஜீமா பழைய பாயொன்றை எடுத்துவந்தாள்.

இப்போது வீடு தயாராகிவிட்டது.

நஜீமா கூட்டுமாற்றைக் கொண்டுவந்து உள்ளுக்குள் கூட்டிவிட்டாள்.

நாங்கள் அதனுள் பாயைப்போட்டு உட்கார்ந்தோம்.

"என்ன விளையாட்டு விளையாடலாம்?'' நான் கேட்டேன்.

''உம்மா வாப்பா விளையாட்டு விளையாடுவோமா?''

''அது எப்படி?''

''நீ வாப்பா. நான் உம்மா. இது நம்ம மகள்'' பொம்மையைக் காட்டிச் சொன்னுள்.

''சரி. அப்படீன்னு, நான் சந்தைக்குப் போயி கறி வாங்கிவாறதாம். நீ சமைச்சித்தாறதாம். நாம ரெண்டு பேருமா நம்ம மகளுக்கு சோறு தீத்திவிடுவதாம்''

''அப்ப நீ போயிட்டு கறி வாங்கிவா''

''சரி. நான் போறன்''

''கொஞ்சம் நில்லு. இந்தா பணியாரம். தின்னுட்டுப் போ''

கடதாசிக்குள் சுற்றிக்கொண்டு வந்திருந்த பெருநாளைக்குச் சுட்டு மீதியாகக் கிடந்த சில பலகாரங்களை எனக்குத் தந்தாள். நாளாகிவிட்டதால் சற்று பாண்டல் மணம் வீசினுலும் சாப்பிட ருசியாக இருந்தது.

இருவரும் சாப்பிட்டோம்.

''இந்தா தண்ணி''

தண்ணீரைக் குடித்துவிட்டு, சந்தைக்குப் போவதாகப் பாவனைசெய்து வெளியேறினேன்.

சிறிதுநேரத்தில் வந்தேன். கடதாசிக்குள் சில முருங்கை இலைகளை சுற்றிக்கொண்டு வந்தேன்.

''இந்தா கறி. சமை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சிரட்டையினுள் மணல்சோறு சமைத்து, வேறு சிரட்டையொன்றினுள் முருங்கை இலைப் பாலாணம் செய்து, பூவரசு இலைகளைப் பரவி சோறு வைத்து. என்னைச் சாப்பிட அழைத்தாள்.

நானும் அவளும் நீண்டநேரம் விளையாடினோம்.
''கொண்டா பலூனை ஊதித்தாறன்''
அவள் தந்த பலூனை ஊதிக் கட்டிக்கொடுத்தேன்.

அவள் பலூனால் எனக்கு அடிக்க, அதைப் பறித்து நான் அவளுக்கு அடிக்க, அவள் என்னிடமிருந்து அதைப் பறிக்கமுயல, நான் அதைத் தூர எறிய, அவள் ஓடிச் சென்று பலூனில் விழ, அங்கு கிடந்த கல் ஒன்று அவள் நெற்றியில் சிராய்ப்பை ஏற்படுத்த, அவள் ''உம்மா...'' என சப்தமிட்டு அழுதாள். நெற்றியில் இரத்தம் பொசிந்தது.

நஜீமாவின் அழுகைச் சப்தம் கேட்டு மாமி ஓடிவந்தார்.
''என்னடி? என்ன?''
நஜீமா நெற்றியைக் கையால் பொத்தியவாறு அழுதாள்.
''சனியனே. என்னடி நடந்தது?''

மாமி அவளைப் பிடித்து கையை அகற்றி நெற்றியைப் பார்த்தார்.

''அல்லாவே! ரெத்தம் வருதே. இவனடி தள்ளிவிட்டான்?''

நஜீமா விக்கி விக்கி ஏதோ சொல்ல முற்படுகையில், மாமி சரேலென என் கையைப் பிடித்து, பளார் பளாரென முதுகில் இரண்டு அறை விட்டார்.

''உனக்கு எத்தனை தடவைடா சொல்லியிருக்கேன், அவளோட விளையாடுவதென்று அவளைத் தள்ளிவிடக்கூடாதுன்னு இனிமே இப்படிச் செய்தே உன்னைக் கொண்ணு புடுவேன்'' மாமி பொரிந்துதள்ளினார்.

மாமியை வெறுப்புடன் பார்த்தேன். நான் செய்யாத தவறுக்காக என்னைத் தண்டித்துவிட்டாரே. முன்கோபியான மாமி எதையுமே பகுத்துணரத் தெரியாதவரா?

''உம்மா. மச்சான் என்னைத் தள்ளிவிடல்ல. நான்தான் பலூனை எடுக்க ஓடும்போது உழுந்துட்டன்'' நஜீமா உண்மையைச் சொன்னாள்.

''பொய் சொல்லாதடி. அவனைக் காப்பாத்த பொய் சொல்றே. இல்லையா?'' கூறியவாறு மாமி நஜீமாவுக்கும் இரண்டு அறைகள் அறைந்தார். அவள் அழுகையை அதிகரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மனதுக்குள் சிரித்தேன். வக்ரபுத்தியுள்ள மாமியைப் பொறுத்தவரை பொய் என்பது உண்மை. உண்மை என்பது பொய்.

''நீ உங்க ஊட்டுக்குப் போடா. நீ வாடி. உள்ளே போகலாம்''

நஜீமாவின் கையைப்பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு மாமி வீட்டுக்குள் சென்ருர்.

நான் கட்டிய வீட்டை உற்றுப்பார்த்தேன். அது என்னைப்பார்த்து எள்ளிநகையாடிச் சிரிப்பதைப்போல் எனக்குத் தெரிந்தது.

★ ★ ★

மாமியின் குணத்தையிட்டுச் சிந்தித்தவாறு வீட்டை நோக்கி நடந்தேன். மாமி எவ்வளவுதான் சிரித்துச் சிரித்துக் கதைத்தாலும் அவர் கெட்ட பெண்தான். சிறு பிள்ளையான நஜீமாவின குணத்துக்கும் அவருடையதுக்கும் இடையில்தான் எத்தனை வேறுபாடு! எவ்வளவு இடைவெளி! போயும் போயும் நஜீமா இவர் வயிற்றில் பிறந்திருக்கிருளே!

''நவாஸ்...'' சப்தமிட்டு மஜீது என்னை அழைத்தான்.

நான் சிந்தனை கலைந்து நின்றேன்.

ஆலமரத் திட்டியில் சில பிள்ளைகள் நின்றனர். மஜீது என்னை நோக்கி ஓடிவந்தான்.

''எங்கடா போறே? ஏன் ஒருமாதிரி இருக்கே?''

''ஒண்ணுமில்லடா''

''நீதான் சொல்லமாட்டியே. உனக்கு என்னவோ நடந்திருக்கு. சரி. வா. சில்லுக்கட்டை விளையாடலாம்''

''ஏலாடா''

''வாடா. ஒரு ஆள் குறையுது''

அவன் என் கையைப்பிடித்து இழுத்துச்சென்ருன்.

சில்லுக்கட்டை விளையாடுவதற்கு எல்லாமே ஆயத்தமாக இருந்தன.

ஒரு செங்கல்லை செங்குத்தாக நட்டு அதன்மேல் தகர டேணிகள் சில அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. இரண்டு பிரிவாக நாங்கள் பிரிந்தோம். ஒரு பிரிவில ஐந்துபேர் நின்ரேம்.

செங்கல்லை நடுநாயகமாகக்கொண்டு குறிப்பிட்ட தூரத்தில் இரு தரப்பினரும் நின்ரேம். எங்களுடைய தரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து இருந்தது. மஜீது எங்களுடைய தரப்பு. மீரானும் நின்றான். அவன் எதிர் தரப்பு.

முதலில் மஜீது செங்கல்லைநோக்கி பந்தை வீசி எறிந்தான். குறி தவறாமல் பந்து கல்லில் பட்டதும் தகரபேணிகள் கீழே வீழ்ந்தன. மஜீது ஓடிப்போய் பந்தை எடுத்தான். அதேசமயம் எதிர் தரப்பிலிருந்தவர்கள் ஓடிவந்து பேணிகளைப் பொறுக்கி செங்கல்லில் அடுக்க முயற்சித்தனர். அவர்கள் பேணிகளைப் பொறுக்கமுடியாமல் ஆக்க நாங்கள் ஆள்மாறி ஆள் பந்தால் வேகமாக அவர்களுக்கு எறிந்தோம். எங்களுடைய பந்து எறி அவர்களுக்குப் படாமல் அவர்கள் தப்பித்தவாறு பேணிகளை சேகரிக்க முயன்றனர். நாங்கள் எறிய அவர்கள் வளைந்து, வளைந்து தப்பிக்க... நாங்கள் மீண்டும் எறிய... அவர்கள் ஒவ்வொரு பேணியாக செங்கல்லில் அடுக்க...

தகரபேணிகள் எல்லாம் அடுக்குப்பட்டதும் அவர்கள் கைதட்டினார்கள். நாங்கள் அவர்களுக்கு எறிவதை நிறுத்தினோம்.

இப்போது பந்தை எதிர்தரப்புக்குக் கொடுத்தோம். மீரான் முதல் பந்தை எறிந்தான். பந்து செங்கல்லில் படாமல் விலகிச்சென்றது. பின்னர் வேறு ஒருவன் பந்தை எறிய அது செங்கல்லில் பட்டதும் பேணிகள் கீழே விழ... நாங்கள் ஓடிச்சென்று அவைகளைப் பொறுக்க முயற்சிக்க... அவர்கள் தொப் தொப் என எங்களுக்கு எறிய...

மாமியின் செயலால் மனம் உடைந்திருந்த நான் என்னை மறந்து விளையாட்டில் ஈடுபடலானேன்.

---

## 21

இப்போதெல்லாம் வாப்பா மகிழ்ச்சியாகவே இல்லை. எப்போதும் சோகமாக காணப்பட்டார். அவருக்குக் கடன் தொல்லை என உம்மாவும் அவரும் கதைப்பதிலிருந்து நான் புரிந்துகொண்டேன்.

மாமா அடிக்கடி வீட்டுக்கு வந்து வாப்பாவுக்கு ஆறுதல் சொல்வார்.

ஒருநாள் பிற்பகல். வேஸ்டியும் சால்வையும் அணிந்த ஒருவரை மாமா வீட்டுக்கு அழைத்துவந்தார்.

நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். இறுதியில் எதையோ எழுதி வாப்பாவிடம் கையொப்பமிடக் கொடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். வாப்பா ஒப்பமிட்டபின் உம்மாவின் விரலடையாளத்தையும் பெற்ருர்.

வந்தவர் ஒரு கட்டு பணத்தை வாப்பாவிடம் கொடுத்தார். மாமா அதை எண்ணிப்பார்த்தார்.

வந்தவர்கள் சிரிந்தவாறு வீட்டைவிட்டுச் சென்றனர்.

''யாரும்மா வந்தவங்க?'' உம்மாவிடம் கேட்டேன்.

''நொத்தாரிசு''

''அப்பமுன்னு...?''

''வாப்பாவுக்கு கடன் தொல்லே. அதனுல நம்ம வயலே ஈடுவைச்சி பணம் எடுத்த''

உம்மா சொன்னது எனக்கு சரிவர புரியவில்லே. எப்படியோ வாப்பாவுக்கு பணம் கிடைத்ததே என்ற திருப்தி எனக்கு.

''மச்சான். புளியந்தீவில கமலா சேக்கஸ் நடக்குதாம். பார்க்கப்போவமா?'' மாமா வாப்பாவிடம் கேட்டார்.

''நானும் கேள்விப்பட்டேன். ரொம்ப நல்லா செய்கிருங்களாம். நாளேக்குப் போவோமா?''

''ஆகட்டும். நாளேக்கு அஸறு தொழுதாப்ல நான் இங்கவாறன். இருவரும் போவம்''

அவர்கள் இருவரும் மட்டும்தான் போகப்போகிருர்களா? என்னே விட்டுவிட்டா? என்னேயும் அழைத்துச் செல்லுமாறு வாப்பாவிடம் சொல்லச்சொல்லி உம்மாவின் காதுகளில் குசுகுசுத்தேன்.

''நீ என்னடா குசுகுசுக்கிறே?'' மாமா கேட்டார்.

உம்மா சிரித்தார். ''அவனேயும் அழைத்துச்செல்லட்டாம்''

''நீ எதுக்குடா?'' வாப்பா கேட்டார்.

''அவனும் பார்க்கட்டுமே. அவனேயும் அழைச்சிப் போங்க'' உம்மா கூறினுர்.

''சரி. சரி. அப்ப நீயும் வாடா'' மாமா கூறினுர்.

எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி. மறுபக்கம் நஜீமா வரமாட்டாளே என்ற துக்கம். நஜீமாவையும் அழைத்துச் செல்லலாமா எனக்கேட்க என் நா துடித்தது.

''இவன் தனியே வரமாட்டானே. நஜீமாவையும் கூட்டிட்டு போங்க'' என்ருர் உம்மா.

உம்மா! அவங்க சீதேவி! என் முகக்குறிப்பறிந்து நடந்துகொண்டாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மச்சினன் உன் மகளையும்தான் அழைச்சிட்டுவாவேன். எல்லோருமா போவம்'' என்றார் வாப்பா.

மாமா தலையசைத்தார்.

எனக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. உடனேயே சென்று இதை நஜீமாவிடம் சொல்லவேண்டும்போல் தோன்றியது. மெதுவாக அங்கிருந்து விலகி நஜீமாவின் வீட்டைநோக்கி ஓடினேன்.

★ ★ ★

கமலா சர்க்கஸ் நடைபெறும் மைதானத்தில் கூட்டமென்றால் கூட்டம். அவ்வளவு கூட்டம்.

நாங்கள் உள்ளே சென்று பலகைகளில் அமர்ந்தோம். நஜீமாவும் நானும் அருகருகே.

பலவித வர்ண பல்புகளால் சோடித்து இருந்தனர். நடுவே ஒரு வட்டமான இடத்தைச் சுற்றிவளைத்து ஆசனங்கள் ஒழுங்குசெய்து இருந்தனர்.

நேரஞ்செல்லச்செல்ல சனக்கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது கொட்டகை நிறைய மனித தலைகள். ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக... ஒரே மனிதர்கள்.

'டான்' என மணி அடித்தது.

முகம் நிறைய பவுடர் அப்பிய கோமாளிகள் இருவர் வந்தனர். ஆளுக்காள் குத்திக்கொண்டனர் அடித்துக் கொண்டனர். ஒரே சிரிப்பு. கொட்டகை அதிர சிரிப்பு.

சில பெண்கள் வந்தனர். ஸைசக்கிள் ஒன்றை பலவிதமாக செலுத்திக் ாட்டினர்.

மெல்லிய உடையணிந்த சில பெண்கள் மேலே தொங்கிய ஊஞ்சல்களில் ஏறிநின்று, அந்தரத்தில் ஆடியவாறு... ஒருவர் கால்களில் ஒருவர் தொங்கி கூடவே ஆண்களும் அவர்களுடன் சேர்ந்து ஊஞ்சலை வேகமாக ஆட்டியவாறு வந்து, ஊஞ்சலிலிருந்த கையை விட்டுவிட்டு அந்தரத்தில் பறப்பதுபோல் பறந்து... மற்ற ஊஞ்சலில் தொங்கிய ஆணின் காலைப்பற்றி... ஊஞ்சலாக ஆடியவாறு... திரும்பவும் அவனுடைய கால்களை விட்டுவிட்டு அந்தரத்தில் பறந்து அவர்களைநோக்கி வீசப்பட்ட ஊஞ்சல்களை அடைந்து

நான் மூச்சுவிடாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

கோமாளி ஒருவன் சரசரவென நூலேணி ஒன்றில் ஏறி, ஊஞ்சலொன்றைப்பற்றி, அதில் ஆடியவாறு மற்ற ஊஞ்ச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் ஆடிய பெண்ணின் காலைப்பற்ற முயற்சிக்கையில் தீடீரென கீழே தொங்கிய வலையில் வீழ்ந்தான். கொட்டகை சிரிப்பால் அதிர்ந்தது. திரும்பிப்பார்த்தேன். நஜீமா கை கொட்டிச் சிரித்தாள்.

சில பெண்கள் உயரத்தில் கட்டப்பட்டிருந்த கம்பியொன்றில் குடைகளைப் பிடித்தவாறு முன்னும் பின்னும் நடந்தனர். கோமாளி ஒருவனும் பெண்களைப்போல நடக்க முயற்சிக்க... அவனுடைய கால்கள் தவற அவன் கம்பியைப் பிடித்துத் தொங்க மற்றவன் வந்து அவனுக்கு ஒரு மட்டையால் அடிக்க... சிரிப்பு வெடி அதிர்ந்தது.

யானைகள் வந்து சலாம் போட்டன. பந்து விளையாடின. நாய்கள் வளையங்களுக்குள்ளால் பாய்ந்தன. சிங்கங்கள் .. புலிகள்... புலிகள் உறுமியதும் நஜீமா பயத்தால் என்னைக் கட்டிப்பிடித்தாள்.

நீண்டநேரம் சர்க்கஸ் காட்டினார்கள்.

இறுதியான நிகழ்ச்சி. தலை தெறிக்கும் வேகத்தில் ஒருவன் மோட்டார் சைக்கிளொன்றை செலுத்திவந்து உயர்ந்த மேடையொன்றிலிருந்து நீண்ட தூரத்துக்கப்பால் அமைக்கப்பட்டிருந்த மற்ற மேடையில் பாய்ந்தான்.

கொட்டகை நிறைய கையொலி.

நாங்கள் வீடுநோக்கித் திரும்பினோம்.

★ ★ ★

மழைகாலம் தொடங்கிவிட்டது. சுமார் இரண்டு, மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டும். கிராமத்திலுள்ள குளம், குட்டைகளெல்லாம் நிரம்பிவிடும். இரவு வேளையில் தவளைச் சப்தங்கள் காதுச்சவ்வை அதிரவைக்கும்.

மழைகாலம் வந்தால் எனக்கு தேன் குடிப்பதைப்போல. மழையில் நனைவதில் உள்ள ஆனந்தம்... மழை பெய்யும் போது பார்த்துக்கொண்டு நிற்பதில் ஏற்படும் மகிழ்ச்சி .. மழை நாட்களில் இழுக்கிப் போர்த்தியவாறு படுப்பதில் உள்ள சுகம் மழை நாட்களில் கிடைக்கும் மரவள்ளி, சோளம் குலைகளை அவித்து சுடச்சுட உண்பதில் கிடைக்கும் ருசி வாசலில் தேங்கிநிற்கும் வெள்ளத்தில் திண்ணையில் இருந்தவாறு கடதாசிக்கப்பல் விட்டு, அது அங்கும் இங்கும் அலைக்கழிந்து முட்டிமோதி நகர்வதை பார்க்கும்போது ஏற்படும் குதூகலம்... மழை நாட்களென்றால் மகிழ்ச்சி நாட்கள் தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களில் ஒரு கிழமைக்குமேல் தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருக்கும். அப்போதெல்லாம் நாங்கள் ஆகாய விமானம்கட்டி விளையாடுவோம்.

மழை பெய்யாத ஒருநாள். நஜீமாவை அழைத்துக் கொண்டு என் வீட்டுக்கு வந்தேன்.

''நஜீமா. ஆகாயவிமானம் கட்டி விளையாடுவோமா ?''

''எப்பிடி ?''

''நீ பார்த்துக்கொண்டே இரு. நான் ஈர்க்கிளால் கட்டுறேன்''

''நானும் உனக்கு உதவிசெய்றேன்''

''நான் கட்டும்போது இந்த ஈர்க்கிள்களை நான் சொல்றதுபோல புடிச்சிக்க''

இரண்டு பச்சை ஈர்க்கிள்களை எடுத்து வளையமாக கட்டினேன். அவைகளை சுமார் ஆறு அங்குல இடைத்தூரத்தில் வைத்து, அதற்குமேல் சில ஈர்ககிள்களைப் பொருத்தி, முன்னும் பின்னும் ஒன்றாக சேர்த்துக்கட்டினேன். நஜீமாவின் உதவியுடன் வண்ணத்தாள்களை சுற்றிவர ஒட்டினேன்.

இப்போது ஆகாய விமானம் தயார்.

ஏற்கனவேயே சேகரித்துவைத்திருந்த இரண்டு டார்ச் பெட்டரிகளை ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து, கம்பித்துண்டொன்றால் பல்பை இணைத்து வெளிச்சத்தை ஏற்படுத்தி விமானத்தினுள் வைத்தேன். விமானத்தை சணலில் கட்டி வீட்டினுள் எடுத்துச்சென்று கட்டிலில் தொங்கவிட்டேன்.

அதை மெதுவாக அசையவைத்தேன். சடுதியாக மழை சோ என கொட்டத்தொடங்கியது. வீட்டில் உம்மா மட்டும் தான் இருந்தார். தூவானம் அடிக்கும் என்பதால் கதவு ஜன்னல்களை உம்மா பூட்டிவிட்டார்.

''உம்மா. அறைக்குள்ள வாங்க. விமானம் பறப்பதைப் பார்க்கலாம்''

என் கோரிக்கைக்கிணங்கி, வெற்றிலை வட்டாவையும் கையோடு எடுத்துக்கொண்டு உம்மா அறைக்குள் வந்தார். நஜீமாவைத் தூக்கி மடிக்குள் வைத்துக்கொண்டார்.

நான் கதவை இழுத்துமூடினேன். வெளியே மழை பலத்த காற்றுடன் ஊற்றியது. அறை முழுதும் கும்மிருட்டு.

விமானத்தினுள் கையைவிட்டு பெட்டரியுடன் வயரை இணைத்துவிட்டேன். பல்ப் எரியத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணத் தாள்களினூடாக பலநிற ஒளி வெள்ளம் அறையெங்கும் பரவியது. மெதுவாக விமானத்தை அசைத்து விட்டேன், உயரத்தில் தொங்கிய வியானம் மேலும் கீழு மாக அசையும்போது அறைக்குள் உமிழும் ஒளிக்கற்றை களும் அசைய... பார்ப்பதற்கு மிக அழகாகத் தெரிந்தது.

''நஜீமா. உன் மச்சானின் வேலையைப் பார்த்தாயா?'' மடிக்குள் இருந்த நஜீமாவிடம் உம்மா கேட்டார். அவள் சிரித்தாள்.

''நீங்க ரெண்டுபேருமா அதில ஏறி உலகத்தை எல்லாம் சுத்திட்டு வாங்க'' உம்மா கூறிவிட்டுச் சிரித்தார். நஜீமா வின் தலையை வாஞ்சையுடன் தடவிவிட்டார்.

ஆகாய விமானம் இன்னும் அசைந்துகொண்டிருந்தது. வெளியே இன்னும் மழை பெய்தது.

''இருங்க. அடுப்பில சோளம்குலை அவியுது. எடுத்து வாறன். தின்னுங்க'' உம்மா எழுந்துசென்று சுடச்சுட சோளம் குலைகளைக் கொண்டுவந்தார்.

முற்றிபதாகவும் பிஞ்சாகவும் இல்லாத மத்திய பருவத் தில் குலைகள் இருந்தன. விமானத்தினூடாக தெறித்த வண்ண ஒளியில் நானும், நஜீமாவும், உம்மாவும் சோளம் குலைகளை ஒவ்வொன்றாக சாப்பிடத் தொடங்கினோம். உம்மா சோளம் குலையொன்றை எடுத்து ஒவ்வொரு கொட்டையாக உதிர்த்து நஜீமாவின் வாய்க்குள் திணித்துவிட்டார்.

நாங்கள் நீண்டநேரம் சோளம் குலைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

---

## 22

என் உம்மா சாதாரண அவர் வயதுடைய மற்றப் பெண்களைவிட சற்றுக் கொழுத்தவர். மஜீது என்னிடம் அடிக்கடி ''நவாஸ். உங்க உம்மாட கை இந்தளவு பெருப்பம்டா'' என்பான் கைகள் இரண்டையும் அகல விரித்தவாறு.

கை வலிக்கிறது, கால் வலிக்கிறது என உம்மா அடிக் கடி வாப்பாவிடம் சொல்வார். வாப்பா மருத்துவரிடம் சென்று ஏதாவது எண்ணெய் வாங்கிவந்து கொடுப்பார். சில சந்தர்ப்பங்களில் வாப்பாவே தடவியும் விடுவார்.

கடந்த நாலைந்து நாட்களாக உம்மாவுக்கு காய்ச்சல். படுத்த படுக்கையாக இருக்கிறார். கை கால்களை நீட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடக்க முடியாதவாறு இருப்பதாகக் கூறுகிறார். கனத்த சோமன் பிடவையால் போர்த்தியவாறு தொடர்ந்து படுக்கிறார்.

சாச்சி, மாமி ஆகியோர் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். உம்மாவுக்கு சுகயீனம் என கேள்வியுற்று அண்டை அயலில் வசிக்கும் பெண்களெல்லாம் வந்து உம்மாவைப் பார்த்தனர்.

''சீதேவி. இப்படி இளைச்சிட்டாவே''

''பாவம்! இந்தச் சீதேவிக்கு இப்பிடி காய்ச்சல் காயுதே'' வருத்தம் பார்க்கவந்த பெண்கள் இவ்வாறெல்லாம் சொல்லி ஆறுதல் அடைந்தனர்.

உம்மாவுக்கு தொடர்ந்து காய்ச்சல் அடித்தது. வாப்பா காதர்முகைதீன் மருத்துவரை அழைத்துவந்து உம்மாவைக் காண்பித்தார். அவர் குளிகைகளும், எண்ணெய்யும் கொடுத்தார்.

உம்மா எழும்பமுடியாமல் படுத்துக்கொண்டிருந்தார். வீட்டில் வேலைகளெல்லாம் வாப்பாதான் செய்வார். சமைப்பது, பாத்திரங்கள் கழுவுவது எல்லாமே வாப்பாதான். நான் வீடுவாசலைப் பெருக்கிவிடுவேன்.

சிலசந்தர்ப்பங்களில் சாச்சி வந்து ஏதாவது வேலைகளைச் செய்துவிட்டுப் போவார். சாச்சி உம்மாவைப்போல சாந்தமான பெண். சாச்சாதான் ஒருமாதிரி. சற்று முன்கோபி.

வாப்பா உம்மாவுக்காக அரிசிக்கஞ்சி காய்ச்சுவார். அதை ஒரு பீங்கானில் ஊற்றி ஆறவைத்து உம்மாவுக்குப் பருக்கிவிடுவார்.

வீட்டுக்குப் பெண்கள் வருத்தம் விசாரிக்கவராத நேரங்களில் வாப்பா உம்மாவுக்கு அருகில் குந்தியிருந்து தலையைத் தடவிவிடுவார். அவருடைய கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

''ஏன் அழுவுறீங்க?'' உம்மா கேட்பார்.

''உன்னைப் பார்க்கும்போது வயிறு பதறுதே. ஒரு நோயுமே இல்லாம இருந்த உனக்கு இப்படி காய்ச்சல் போட்டு அடிக்குதே; இது எப்பதான் விடுமோ?''

''அதற்காக நீங்க ஏன் அழுவுறீங்க? இப்பதான் நான் குளிசை குடிக்கேனே''

வாப்பாதான் நேரத்துக்கு நேரம் சிரட்டையில் குளிகைகளை உரைத்து சுடுநீரில் கலக்கி உம்மாவிடம் குடிக்கக் கொடுப்பார். சிலநேரங்களில் பருக்கியும்விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவைப் பார்க்க நஜீமா அடிக்கடி வீட்டுக்கு வருவாள். உம்மா நஜீமாவை அருகே அழைத்து அணைத்து வைத்துக்கொள்வார். சிலநேரங்களில் உம்மா நஜீமாவைப் பார்த்து அழுவார்.

''ஏன் மாமி அழுவுறீங்க?'' நஜீமா கேட்பாள்.

''என்னமோ தோணிச்சு. அழுதிட்டேன்''

''அழாதீங்க மாமி'' கூறியவாறு உம்மாவின் கண்களில் வடியும் நீரை நஜீமா தன பிஞ்சு விரல்களால் துடைத்து விடுவாள்.

உம்மா என்ன நினைத்தார்? ஏன் அழுதார்? அது யாருக்கும் புரியாத புதிர்.

படிப்படியாக காய்ச்சல் குறைந்துகொண்டு வந்தது. உம்மா எழுந்து நடமாடத்தொடங்கினர். கால் கைகள் தொடர்ந்து கடுப்பதாகக் கூறினர்.

உம்மா குளிப்பதற்காக வாப்பா சுடுநீர் வைத்துக் கொடுத்தார்.

சுமார் பத்து நாட்கள் அடித்த காய்ச்சலில் உம்மா பாதி சரீரம் உடைந்து காணப்பட்டார்.

★ ★ ★

சுமார் இரண்டு மாதங்கள் ஓடின.

மீண்டும் உம்மாவுக்கு காய்ச்சல் அடிக்கத்தொடங்கியது. இம்முறை மிகவும் உக்கிரம். வேதனை தாங்கமுடியாமல் உம்மா அடிக்கடி முணங்கினர். இறுக்கிப் போர்த்திக் கொண்டு சதா படுத்த படுக்கையாக இருந்தார்.

நான் உம்மாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தேன். நெருப்பாக கொதித்தது.

காதர் முகைதீன் மருத்துவர் வந்தார். வழமைப் பிரகாரம் குளிகைகளும், எண்ணெய்யும் கொடுத்தார்.

''என்னங்க. என்ன வருத்தம் இது?'' வாப்பா மருத்துவரிடம் கேட்டார்.

''வேற என்ன? பார்வைதான்''

''அப்படீன்னு?''

''வெள்ளிக்கிழமை மதியநேரத்திலே எங்கேயோ போயிருக்கா. மரத்திலே நின்னுகிட்டிருந்த ஏதோ பார்த்துட்டுது''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிசாசா ?''

''வேறென்ன ?''

''குளிசைகளைக் கொடுத்தா நீங்கிடுமா ?''

''இன்னைறக்கு குழை அடிச்சிட்டுப் போறன். அப்புறம் குளிசைகளைக் கொடுங்க. அப்புறம் பாருங்க. பிசாசு எந்த மூலைக்கு ஓடுதுண்டு''

நான் வேப்பை இலைக் கொத்துக்களை எடுத்துவந்து கொடுத்தேன்.

''நான் குழை அடிச்சுமுடிகிறவரை நீ வெளியே போய் நில்லு'' மருத்துவர் என்னை விரட்டினார். நான் அறை வாசலுக்கு வந்து உள்ளே நடப்பதை எட்டிப்பார்த்துக்கொண்டு நின்றேன்.

வைத்தியர் மந்திரங்களை உச்சாடனம் செய்தவாறு குழை அடிக்கத்தொடங்கினார். கருமாதி வருத்தத்தால் அவஸ்தையுற்ற மாமிக்கு எவ்வாறு குழை அடித்தாரோ அதே முறையை இங்கும் பின்பற்றினார். ஆரம்பத்தில் மெதுவாக வேப்பை இலைகளால் தடவத்தொடங்கி, நேரம் ஆக ஆக பிசாசு பிடித்தவர்போல் அவரே மாறி உக்கிரமான வேகத்துடன் குழைகளால் உம்மாவின் தலையில் அடித்தார்.

படிப்படியாக வேகத்தைத் தணித்து கை கால்கள் தொய்ய மெதுவாக கீழே இருந்தார்.

குழை அடித்து முடிந்துவிட்டது என நான் நினைத்தேன். இப்போது நான் அறைக்குள் செல்லலாம். எதற்கும் வைத்தியரிடம் கேட்டுக்கொண்டு உள்ளே போவது நல்லது. இல்லாவிடில் முகத்தில் ஏசிவிடுவார்.

''நான் உள்ளே வரட்டா ?''

மருத்துவர் எனது கேள்விகுறித்து என்ன நினைத்தாரோ ''சீ! சனியன்! உள்ளேயா வரப்போறே? போ வெளியே'' காட்டுக் கத்தலாக கத்தினார்.

நான் திடுக்குற்று தூர ஓடினேன்.

அவர் எதற்காக அப்படிச் சொன்னார் என்பது எனக்கு பின்னர் தெரியவந்தது. அவர் குழை அடித்து துரத்திய பிசாசு என் உடலில் புகுந்து, மீண்டும் உள்ளே வரலாமா என வினவிற்றும். அதனுல்தான் அவர் அந்தக் காட்டுக் கத்தல் கத்தி வெளியே துரத்தினாராம்.

காதர் முகைதீனின் குழை அடிப்புக்கோ, குளிசைகளுக்கோ உம்மாவின் காய்ச்சல் கட்டுப்படவில்லை. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்துக் காலையும், கையையும் அசைக்கமுடியாது உள்ள தாக உம்மா இப்போது கூறினர்.

உம்மாவைப் பார்க்க நிறைய பெண்கள் வந்தனர். உம்மாவின் தலையைத் தடவி, முகத்தைத் தொட்டு முத்த மிட்டனர். நோயைப்பற்றி ஒவ்வொரு விதமாகக் கதைத் தனர். மாமா அடிக்கடி வந்தார். உம்மாவின் அருகில் நின்று கண்ணீர் சிந்துவார். சாச்சி வந்து வீட்டு வேலை களைச் செய்து வைத்துவிட்டுப் போவார். சில சந்தர்ப்பங் களில் அவருடைய வீட்டில் இருந்து சமைத்த உணவு கொண்டுவந்து தருவார். இருந்து இருந்துவிட்டு எப்போதா வது மாமி வருவார். கைக்குழந்தை இருப்பதால் அவரால் அடிக்கடி வரமுடியாதுள்ளதாக கூறுவார்.

மாமா வேறொரு வைத்தியரை அழைத்துவந்து உம்மா வைக் காட்டினர். அவர் நீண்டநேரம் நாடிபிடித்துப் பார்த் தார். அவருக்குக் காது கேட்பது சற்றுக் குறைவு.

''எவ்வளவு நாளா காய்ச்சல் அடிக்குது?'' வைத்தியர் மரமரத்த குரலில் பலமாக கேட்டார்.

''அஞ்சு நாளா'' வாப்பா சொன்னர்.

''அம்பது நாளாவா?''

நான் கொல் எனச் சிரித்துவிட்டேன். வாப்பா கோப மாக என்னைப் பார்த்தார். சிரிப்பை அடக்குவது எனக்கு சிரமமாக இருந்தது.

''இல்ல. அஞ்சு நாளா'' என்ருர் மாமா.

''அம்பது நாளா ஒருத்தரிடமும் காட்டல்லியா?''

''இல்ல. அஞ்சு... அஞ்சு நாள்'' மாமா ஐந்து விரல் களையும் காட்டி மிகவும் பலத்த சப்தத்தில் கூறினர்.

''அஞ்சு நாள்தான. அப்ப குணப்படுத்திட லாம். காய்ச் சலை விட வேற என்ன வருத்தம் இருக்கு?''

''ஒருபக்கத்து கையும் காலும் அசைக்கமுடியாம இருப்ப தாக சொல்ரு'' வாப்பா சொன்னர்.

''ஒருபக்க தலையிடியாவா இருக்காம். இருக்கும். இருக் கும். இந்தக் காய்ச்சல் வந்தா இந்த தலையிடியும் சேர்ந்து வரும்''

''தலையிடி இல்ல. இந்த காலும் கையும் விறைச்ச மாதிரி'' மாமா பீரங்கியானர்.

''அ.. விறைப்பு. இந்தக் காய்ச்சலுக்கு அதுவும் வரும். வாகடத்திலே போட்டு இருக்காங்க. தலையிடியும் காய்ச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் தானே வராது. கூடவே விறைப்பும் இருந்தால்... இருந்தால்... இப்படீன்னு அது நீண்டுபோகும். மலம், சலம் நல்லா போகுதா?''

''அஞ்சு நாளா மலமே போகல்ல'' வாப்பாதான் சொன்னார்.

''வயிற்றுல போகுதாமா. இந்த நோய்க்கு அப்படித் தான் போகும்''

''இல்ல. அஞ்சுநாளா போகல்ல''

''ஒருநாளைக்கு அஞ்சு தரமா போகுது?''

''இல்ல, அஞ்சு நாளும் போகல்ல'' மாமா மீண்டும் பீரங்கியினுள் குண்டைப்போட்டு வெடித்தார்.

என்னால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. கொல் என நானும் வெடித்தேன்.

வாப்பா என்பக்கம் திரும்பி கண்களை உருட்டினார்.

''அப்ப மலம் போகல்ல. அதுதானே பார்த்தேன். இந்த நோய்க்கு மலமே போகாதே. என்னடாது! வயிற்றுல போகுது. ஒருநாளைக்கு அஞ்சு தடவைகள் போகுதுண்ணு சொல்றுங்க. அப்படி இருக்கக்கூடாதே என யோசித்தேன். வாகடத்தில முனிவர்கள் சொல்லி இருக்காங்க. அஞ்சுநாள் என்ன, சரியான மருந்து சாப்டலேன்னு அம்பது நாளுக்கும் போகாது''

''இப்போ மருந்து தாறீங்களா?'' வாப்பா கேட்டார்.

''சே. சே. பயப்படாதீங்க. அப்படியெல்லாம் மௌத் தாகிட மாட்டாங்க. இது ஒரு வருத்தமா? சுண்டைக்காய் வருத்தம்''

''இல்ல. மருந்து தாறீங்களான்னுதான் மச்சான் கேட்டாரு''

''மருந்து தராமவிடுவனா? அதக் கேக்கயாவேணும். என்ன உங்க மச்சான் என்னைக் கேலிபண்ணுறாரா? சரி. சரி. ஒரு போத்தலை எடுத்துட்டு வீட்ட வாங்க. மருந்தும், எண்ணெய்யும் தாறன். நான் சொல்றப்ல கொடுத்திடணும்''

ஒருவழியாக வைத்தியர் வீட்டைவிட்டு நீங்கினார்.

உம்மாவின் நோய்குறித்து எனக்கு ஒருபக்கம் வேதனை யாக இருந்தாலும், வைத்தியரின் செவிட்டுத் தன்மையை நஜீமாவிடம் சொல்லி சிரிக்காதுவிட்டால் தலை வெடித்து விடும்போல் இருந்தது.

நஜீமாவைத் தேடி ஓடினேன். அவளை வீட்டில் சந்தித்து, வைத்தியரின் உரையாடல்களை அபிநயத்துடன் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினேன். அவருடைய மறமறத்த குரலில் கதைத்துக் காட்டினேன்.

நஜீமா சிரித்தாள். என் உரையாடல் சற்றி தள்ளி கைக்குழந்தைக்கு பால் ஊட்டிக்கொண்டிருந்த மாமியின் காதுகளிலும் விழுந்திருக்கவேண்டும். அவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

---

# 23

உம்மாவுக்கு நோய் குணமடையவில்லை. இடைக்கிடை காய்ச்சல் ஏற்பட்டது. கால்கள் வீங்கத் தொடங்கின பார்ப்பதற்கு பெரிய பரிதாப மாக இருந்தது. உம்மா சரிபாதியாக மெலிந்து விட்டார்

வாப்பாவும் இளைத்துவிட்டார். வயல் வேலைகளைக் கவனிப்பதில்லை. உம்மாவின் அருகிலேயே சதா குந்திக்கொண்டிருப்பார். வாப்பாதான் வீட்டில் சமைப்பார். அடிக்கடி வந்துகொண்டிருந்த சாச்சியும் இப்போது வருவதைக் குறைத்துக்கொண்டார். இருந்து இருந்துவிட்டு எப்போதாவது வருவார். வீட்டைப் பெருக்கி துப்புரவாக்கிவிட்டுச் செல்வார்.

வாப்பா சோறு சமைத்து சட்டியிலிட்டுக் கடைந்து, உம்மாவுக்கு ஊட்டிவிடுவார். உம்மா இயற்கைக் கடன்களைக் கழிக்க வசதியாக வாசலுக்கு தூக்கிக்கொண்டுபோய் விடுவார். சுடுநீர் வைத்து உம்மாவை முழுக்காட்டுவார். உம்மாவின் அழுக்குப் பிடவைகளை கழுவி காயவைத்துக் கொடுப்பார்.

மாமா அடிக்கடி வருவார். பல வைத்தியர்களைக் கூட்டி வந்தார். ஒருவருடைய மருந்துக்கும் உம்மாவின் வியாதி குணமடையவில்லை. மாருக வியாதி அதிகரிக்கத்தொடங்கியது

''மச்சான். இது பிசாசின் வேலையாகத்தான் இருக்கும். பக்கத்து கிராமத்தில் ஒரு பேய் வைத்தியன் இருக்கிறுன். செலவு நிறையப் போகும். அவனை அழைத்துக் காண்பிப்போமா?'' மாமா ஒருநாள் கேட்டார்.

''யாரை என்ருலும் கூட்டிவா. எப்படியாவது இவளின் வருத்தம் சுகமானுல சரி. செலவைப்பற்றி கவலைப்படாதே. ஈடுவைச்ச காணியை யாருக்கென்ருலும் வித்துவிட்டு காசை எடு இவளுக்கு சுகமாயிட்டா எனக்கு மனசு சரியாயிடும். அப்புறம் சொத்து சேர்த்துடலாம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டொரு நாட்களில் மாமர் மாந்திரிக வைத்தியன் ஒருவனை அழைத்துவந்தார். மெலிந்தவன். பயங்கரமான கண்கள். முகம் முழுதும் கொடுவாள் மீசை. பஞ்சடைந்து சுருண்டுகிடந்த தலைமுடி.

உம்மாவை நீண்டநேரம் பரிசோதித்தான். வாயால் முணுமுணுத்து உம்மாவின் முகத்தில் ஊதினான்.

''போடியார். இந்த வருத்தத்தை கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கு. இரவைக்கு பேயாடித்தான் கண்டுபிடிக்கணும். நான் ஒரு பட்டியல் தர்றன். அதிலுள்ள சாமான்களை வாங்கிவைங்க. ராவைக்கு வர்றன்'' என்றான் மாமாவைப் பார்த்து.

வாப்பாவும் மாமாவும் தலை அசைத்தனர். உம்மாவைப் பார்க்கவந்ததற்கான பணத்தை மாமா கொடுக்க பெற்றுக் கொண்டான்.

பட்டியலில் கொடுத்த பொருட்கள் சேகரிக்கப்பட்டன. வாழைப்பழங்கள், செவ்வரத்திப் பூக்கள், இளநீர், அரிசி, வெல்லம்... இவ்வாறு பட்டியல் நீண்டது.

வைத்தியன் கூறியதுபோல் அன்று இரவு வீட்டுக்கு வந்தான். கூடவே வேறு ஒருவனையும் அழைத்துவந்தான்.

சேகரித்த பொருட்களை அவனிடம் கொடுத்தோம். இளநீர் குலையை வெட்டி வெல்லமும் வேறு இனிப்புப் பண்டங்களும் சேர்த்து கரைத்து எடுத்தான்.

அரிசிக்குமேல் தேங்காய் முடியை வைத்து செவ்வரத்திப் பூக்களால் ஜோடனை செய்தான். கற்பூரம் கொளுத்தினான்.

வாப்பாவும், மாமாவும் உம்மாவைத் தூக்கி அவளிருந்த அறைக்குள் கொண்டுசென்றனர். கீழே விரித்திருந்த பாயில் அவர்கள் இருந்தனர். நான் மூலையொன்றில் பதுங்கி நின்றேன்.

வைத்தியன் தன்னுடன் கூடவந்தவனை நிற்கச்சொல்லி, நெற்றி, கழுத்து, மார்பு ஆகியவைகளில் சந்தணம் பூசிவிட்டான். கையில் வேப்பை இலைக் கொத்தை எடுத்து மந்திரங்களை உச்சாடணம் செய்யததொடங்கினான். வேப்பை இலைகளால் அவனைத் தடவித் தடவி வேகமாக மநதிரங்களை செபித்தான். நேரஞ்செல்லச்செல்ல மந்திரம் உச்சாடணம் செய்தல் அதிகரித்தது. இருந்தாற்போலிருந்து திடீரென மற்றவன் தன் தலையை வேகமாக அசைக்கத் தொடங்கினான். கைகளை ஆட்டினான். கூச்சலிட்டான். வேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக தலையை ஆட்டினான். தலை பிய்ந்துவிடுமோ என்று அஞ்சும் அளவுக்கு தலையை ஆட்டினான்.

''டாய்... ஏன்டா அழைச்சே?'' கடூரமான தொனியில் விளங்கியும், விளங்காததுமாக கதைத்தான்.

''சாமி. நீ யாரு?'' வைத்தியன் பவ்யமாக கேட்டான்.

''நான் தான்டா வைரவன். ஏன்டா அழைச்சே?''

''சாமி. நீதானா? உன்னைத்தான் அழைச்சேன்''

''ஏன்டா அழைச்சே?''

''இதோ படுத்திருக்கிற இந்தப் பெண்ணுக்கு என்ன வியாதின்னு சொல்லு சாமி''

''சொல்லுவன்டா. என்ன தருவே?''

''என்ன வேணும் சாமி?''

''என்னடா தருவே?''

''நீ சொல்லு சாமி''

''ரெத்தம் வேணும்டா. தருவியா?''

''பலிதானே. தருவன் சாமி. இப்ப சொல்லு''

''இதுக்கு சூனியம்டா''

''சூனியமா?''

''ஆமாடா. இவள் சாகுறதுக்கு சூனியம் செய்திருக்கிடா. செம்புத் தகட்டிலே செய்து வாசலில புதைச்சிருக்கிடா''

''எவடத்திலே சாமி?''

''பச்சை மரத்துக்கு கீழடா. தோண்டிப் பாருடா'' கூறியவாறு அவன் இன்னும் வேகமாக தலையை அசைத்தான். ஆய்.. ஊய் என காட்டுக் கூச்சல் போட்டான்.

''ஆதாரம் சாமி. ஆதாரம்'' என்றான் வைத்தியன்.

''இன்டைக்கே தோண்டிப்பாக்கட்டா சாமி?''

''இல்லடா. நாளைக்கு இதே நேரத்திலே தோண்டு. நீ எனக்கு ரெத்தம் தரல்லே, தகட்டை மறைச்சிடுவன்''

''சரி சாமி''

''டேய் நான் மலையேறப்போறன்டா''

''சரி சாமி''

வைத்தியன் மீண்டும் மந்திரங்களை வேகமாக உச்சாடனம் செய்தான். பேய்பிடித்து ஆடியவன் மெள்ள மெள்ள ஆட்டத்தை நிறுத்தி, அடியற்ற மரமாக திடீரென தரையில் வீழ்ந்தான்.

சிறிதுநேர மௌனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய் பிடித்து ஆடியவன் எழுந்து உட்கார்ந்தான். எதுவுமே நடைபெருததுபோல் மலங்க மலங்க முழித்தான்.

வைத்தியன் அமைதியைக் கலைத்தான்:

''உங்க மனைவிக்கு யாரோ சூனியம் செய்திருக்காங்க. செப்புத் தகட்டிலே செய்து புதைத்திருக்காங்க. அதைத் தோண்டி எடுக்கணும்''

''ஏதோ பலி வேணும்னு சொல்லிச்சே'' மாமா கேட்டார்.

''ஆமா. பலி கொடுக்கணும். ஒரு நல்ல பெரிய சாவலைக் கொடுத்தா போதும்''

நாளை இரவைக்கு சூனியத் தகட்டைத் தோன்றி எடுப்பதற்கு தேவையான பொருட்களின் பட்டியலொன்றைக் கொடுத்துவிட்டு மாமா கொடுத்த பணத்தையும் பெற்றுக் கொண்டு வைத்தியன் சென்ருன்.

அடுத்தநாள் இரவு.

வைத்தியனும், மற்றவனும் வந்தார்கள்.

நாங்கள் சேகரித்து வைத்திருந்த பொருட்களைக் கொண்டு பெரியதொரு மடை வைத்தார்கள்.

வாசலில் நின்ற கொய்யா மரத்தடியில் வெட்டிப் பார்க்கலாமென வைத்தியன் சொன்னுன்.

வைத்தியன் மடைக்குமுன்னுல் நின்று மந்திரங்களை உச்சாடணம் செய்யத்தொடங்கினுன். எலுமிச்சம் பழங்கள் சிலதை எடுத்து இரண்டாக வெட்டி கீழே போட்டான். சேவலை எடுத்து அதன் சிவந்த கொண்டைப்பூவின் ஓரத்தில் மெலிதாக அறுத்தான். இரத்தம் சொட்டுச் சொட்டாக கீழே சிந்தியது. கோழியை அப்பால் எறிந்தான்.

''ம். அந்த இடத்திலே வெட்டு'' உத்தரவிட்டான்.

கூட வந்தவன் மண்வெட்டியால் தரையில் கொத்தினுன். வைத்தியன் தொடர்ந்து மந்திரங்களை இடைவிடாது உச்சாடணம் செய்துகொண்டிருந்தான்.

சுமார் இரண்டு அடி ஆழத்துக்கு, ஐந்து அடி விட்டத்தில் குழி தோண்டப்பட்டது.

''கை வலிக்குது. யாராச்சும் வெட்டுங்களேன்'' வைத்தியனுடன் கூட வந்தவன் கேட்டுக்கொண்டதும், மாமா மண்வெட்டியை வாங்கி வெட்டத்தொடங்கினுர். அவன் சிறுநீர் கழித்துவிட்டு வருவதாகக்கூறி ஒரு மூலைக்குச் சென்று குந்திவிட்டுத் திரும்பினுன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய். நீதாண்டா வெட்டு. வைரவன் உனக்குத் தான்டா வாலாயப்படுவான்'' என்ருன் வைத்தியன்.

மற்றவன் திரும்பவும் வெட்டுவதற்காக மண்வெட்டியை வாங்கினுன்.

''அதோ... அதோ பார். வைரவன்டா! ஆகாயத்திலே காட்சியளிக்கான்டா'' என்ருன் திடுமென வைத்தியன். அவன் கையால் சுட்டிக்காட்டிய திக்கில் நாங்கள் பார்வையை நிலைநாட்டினேம். அங்கு ஆகாயத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமே தெரியவில்லை. வாப்பாவும், மாமாவும் ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் இருந்தனர்.

''வைரவா. வா. சாமி வா. வந்து சூனியத் தகட்டை எடுத்துத்தா'' வைத்தியன் சொல்லிமுடியவில்லை. ''இதோ. இதோ கிடக்குதே'' என்ருன் மற்றவன்.

நாங்கள் சரேலென கீழே பார்த்தோம்.

மடுவினுள் கரிய நிறமான செப்புத்தகடு காட்சியளித்தது.

வாப்பா நீண்ட பெருமூச்சை ஊதினுர். மாமாவின் முகத்தில் மகிழ்ச்சி.

''அதை மண்வெட்டியாலே வெளியே எடுடா''

மண்வெட்டியால் செப்புத்தகட்டை எடுத்து தரையில் போட்டான்.

''யாரும் தொடாதீங்க. நான் எடுக்கறேன்'' வைத்தியன் அதைக் கையால் எடுத்து, மண்ணைத் தட்டிவிட்டு எங்களிடம் காட்டினுன்.

சற்சதுரமான தகட்டில் குறுக்கும் நெருக்குமாக கோடுகள் வரைந்து ஏதோ எழுதப்பட்டிருந்தது.

''போடியார். இதிலே காலக்கெடு போட்டிருக்கு. இன்னும் ஒரு கிழமைக்குள்ள நீங்க இதை எடுக்கலேன்னு உங்க மனைவி செத்துப்புடுவாங்க''

வாப்பா திணுக்குற்ருர்.

''என்னமோ. உங்க தயவாலே இதை எடுத்துட்டோம், எந்தப் பாவி செய்தானே ..? என் பெண்சாதிக்கு செய்து இருக்கானே''

''போடியார். இப்போ வைரவன் என் கைவசம் இருக்கான். உங்க பொண்டிலுக்கு சூனியம் செய்தவனை இப்பவே சாகடிக்கலாம். என்ன சாகடிக்கவா?''

''வேண்டாங்க அது பாவம். நாம எதுக்காக அவனைத் தண்டிக்கணும். அதுக்குத்தான் ஆண்டவன் இருக்கானே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்லா யோசிச்சு சொல்லுங்க போடியார். நீங்க சொன்னா, இப்பவே அங்கம் விடுவேன். சொல்லுங்க''

''வேணும் வைத்தியர், என் தங்கச்சி குணமடைஞ்சா போதும்''

''உங்களுக்காக விடுறன். சரி. மடுவை மூடுங்க''

வைத்தியன் தண்ணீர் ஓதி உம்மாவின் முகத்தில் எறிந்தான். உம்மாவைப் பிடித்திருந்த பிசாசை ஓட ஓடத் துரத்துவதாகக் கூறி மீண்டும் மந்திரங்களை உச்சாடணம் செய்து குழை அடித்தான்.

நேரம் நள்ளிரவாகியது. சகல வேலைகளும் முடிந்தன.

வைத்தியன் செப்புத்தகடு, கோழிச்சேவல், அரிசி, பழம் ஆகியவைகளுடனும், மாமா கொடுத்த ஒருகட்டு பணத்துடனும் வீட்டைவிட்டுச் சென்றான்.

சூனியத் தகட்டை எடுத்தது எங்களுக்குப் புதுமையாக மட்டும் அல்ல, மனதுக்கு திருப்தியையும் கொடுத்தது.

---

## 24

சுமார் இரண்டு மாதங்கள் சென்றன.

உம்மா உரித்த நாராக சுருண்டு படுத்தார். வர வர அவருடைய நோய் அதிகரித்ததேதவிர சுகமடைவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

சூனியத் தகடு எடுத்தபின் நோய் குணமடைந்துவிடும் என நாங்கள் எதிர்பார்த்தோம். ஏமாந்தோம். குழி தோண்டும்போது சிறுநீர் கழிப்பதற்காகச் சென்று சாரனுக்குள் ஒழித்துவைத்திருந்த செப்புத் தகட்டை எடுத்துவந்து வைத்தியன் எங்களையெல்லாம் வானத்தை அண்ணார்ந்து பார்க்குமாறு கூறியவேளையில் மடு வெட்டியவன் மடுவுக்குள் போட்டிருக்கலாம் என 'ஏன்டாம்பி' பின்னர் கூறினான். எது உண்மையோ... நாங்கள் ஏமாற்றப் பட்டது என்பது மட்டும் உண்மை.

உம்மா எலும்புந் தோலுமாக ஆகிவிட்டார். வாப்பாவைப் பார்க்க பெரிய பரிதாபமாக இருந்தது. முகம் நிறைய மயிர்வளர்ந்து, மெலிந்து கிழமாக காட்சியளித்தார்.

நான் இப்போதெல்லாம் தொடர்ச்சியாகப் பாடசாலைக்குப் போவதில்லை. சிலநாட்களில் போவேன். சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில் வீட்டிலேயே வாப்பாவுக்கு உதவியாக நிற்பேன். இரவு நேரங்களில் நீண்ட நேரத்திற்கு உம்மாவின் சதைப் பிடிப்பற்ற கால்களை பிடித்துவிடுவேன். சில வேளைகளில் உம்மாவின் கால்களிலேயே தலையை வைத்து நித்திரையாகி விடுவேன்.

வாப்பா உம்மாவின் முகத்தை தடவி அடிக்கடி ஆறு தல் சொல்வார்.

வேறுசில வைத்தியர்களை மாமா அழைத்துவந்தார். அவர்களில் கடைசியாக வந்தவர் நீண்ட கால்சட்டை, சேர்ட், சப்பாத்து அணிந்திருந்தார். கையோடு கொண்டு வந்திருந்த வயர் போன்ற ஒன்றின் இரண்டு முனைகளை தனது காதோடு பொருத்தி மற்ற முனையை உம்மாவின் நெஞ்சில்வைத்து பரிசோதித்தார். அகலமான றப்பர் ஒன்றை உம்மாவின் மேற் கையில்கட்டி காற்றடித்து எதையோ பார்த்துக் குறித்தார்.

''நீங்க இவவுக்கு என்ன வைத்தியம் இதுவரை செய் தீங்க?'' அவர் கேட்டார்.

மாமா விபரமாக சகலதையும் கூறினர்.

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''இதோ பாருங்க. இவங்களுக்கு வாதம். பாரிச வாதம்''

''டாக்டர்! என் பெண்சாதிக்கு பாரிசவாதமா?'' வாப்பா கேட்டார்.

''ஆமாங்க''

''சுகப்படுத்திடலாமா டாக்டர்?''

''ஆரம்பத்திலென்றால் சுகப்படுத்திவிடலாம். ஆனல் இப்போ முற்றிப்போச்சு''

''ஏற்கனவேயே என் வயலை வித்துப்போட்டேன். இப்போ நான் குடியிருக்கிற இந்த வீட்டை வித்துப் போட்டு செலவழிக்கிறேன். எப்படியாவது இவளைக் குணப் படுத்தித் தந்துடுங்க டாக்டர்...'' வாப்பா கெஞ்சினர்.

''என்னல பொய் சொல்லமுடியாது. இதைச் சுகப் படுத்தக் கூடியளவு வைத்திய வசதி இன்னும் முன்னே றல்ல. ஆரம்பத்திலேயே நீங்க என்னிடம் காட்டியிருந்தால் ஏதாவது செய்திருக்கலாம்''

''டாக்டர்! இவளுக்கு ஏதாச்சும் நடந்துதுன்னு என் நெஞ்சே வெடித்துடும டாக்டர்''. வாப்பா கூறியவாறு வாய்விட்டு அழத்தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கவலைப்படாதீங்க, நான் மருந்து தாறன், கொடுங்க. ஆண்டவன் விட்டவழி நடக்கும்''

டாக்டர் போய்விட்டார். உம்மாவுக்கு என்ன நோய் என்னும் உண்மை எங்களுக்குத் தெரிந்துவிட்டது.

★ ★ ★

உம்மாவின் நிலைமை மிகவும் மோசமடைந்தது. பல நாட்களாக உணவு அருந்தமுடியாமல் இருந்தார். வாப்பா பசும்பால் வாங்கிவந்து கொதிக்கவைத்து குளிராக்கி சொட்டுச் சொட்டாக நாக்கில் வைப்பார். வாப்பாவும், நானும் பல நாட்களாக இராப் பட்டினி, பகல் பட்டினி. சாச்சி அடிக்கடி வீட்டுக்கு வருவார். மாமா சாச்சியின் வீட்டுக்குச் சென்று அவருக்கு ஏசியதாகக் கேள்வி.

சாச்சி வந்து ஏதாவது சமைத்து வைப்பார்.

''வாப்பா, ஏதாவது சாப்பிடுங்க'' நான் கூறுவேன்.

''வாணை மகன். இந்த சீதேவி ஒண்ணுமே தின்னும இருக்கும்போது எனக்கு எதுவுமே வேணு'' வாப்பா மறுத்து விடுவார்.

''ஏன்மச்சான், நீங்க ஒண்ணுமே சாப்பிடுவதில்லையாமே. நீங்க சாப்டாட்டா இவனும் சாப்பிடமாட்டான். எதுக்காக நீங்க இருவரும் பட்டினி கிடக்கணும்? என்ன செய்யலாம்! அவங்க அவங்க பெற்றுவந்த வரம்'' என்பார் மாமா.

''வாணை மச்சினன், என்னை வற்புறுத்தாதே. அவள்ட கண்ணுக்கு முன்னுலே நான் போயிடணும்னு நினைச்சுக் கொண்டிருந்தேன். ஆனு எனக்கு முன்னுலேயே என் சீதேவி போயிடும்போல இருக்கு. அவள் போயிட்டா எனக்கு இந்த உலகத்திலே வேறுயார் இருக்கா?'' வாப்பா கூறியவாறு தேம்பித் தேம்பி அழுதார்.

''நீங்க எதையெதையோ நினைச்சி துக்கப்படுறீங்க. ஒன்றையும் பெரிசா எடுக்காதீங்க. போய் சாப்பிடுங்க''

வாப்பா சாப்பிடுவதற்காக பாயில் இருப்பார். ஒரு கவள சோற்றை கையில் எடுப்பார். துரும்பாகத் துவண்டு கிடக்கும் உம்மாவைத் திரும்பிப் பார்ப்பார். கையை உதறி விட்டு எழுந்து விடுவார்.

வாப்பாவையும், உம்மாவையும் பார்க்க எனக்கும் துக்கமாக ஏற்படும். அவர்கள் இருவரையும் பார்த்து நான் கண்ணீர் வடிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவைப் பார்க்க நிறையப் பெண்கள் வந்தனர். உம்மாவைப் பார்த்துப் பாா த்து அழுவார்கள்.

''சீதேவி இப்பிடி போயிட்டியே. உன் கையால இனி எப்ப கை முழுத்தம் வாங்குவேன்?'' என்ருள் ஒரு கிழவி. ஒவ்வொரு மாத பிறை பிறந்ததும் என் உம்மாவிடம் கை முழுத்தம் பெற வருபவர்களில் அவளும் ஒருத்தி.

''ஒரு சபைக்கு வந்தா ராஜாத்திபோல இருப்பியே. இப்ப துரும்பா இளைச்சிப்போயிட்டியே'' என்ருள் வேருெருத்தி

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கதைத்தனர், அழுதனர், வெதும்பினர்.

நான் இரவில் நீண்ட நேரத்துக்கு உம்மாவின் கால்களைப் பிடித்துவிடுவேன். என் தலையை மெதுவாக தடவி விடுவார். சில நேரங்களில் உம்மாவின் கால்களை முத்தமிடுவேன், மிருதுவாக இருக்கும்..

ஒரு வியாழக்கிழமை பிற்பகல் உம்மாவுக்கு வருத்தம் மிகவும் அதிகரித்துவிட்டது. மூச்சு விடுவதற்கு கஸ்டமுற்ருர். மார்பு உயர்ந்து, உயர்ந்து பணிந்தது.

வாப்பா உம்மாவின் தலைமாட்டில் இருந்தவாறு ஒரே அழுகையாக அழுதார்.

மாமாமாமியையும், நஜீமாவையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்.

சாச்சி பிள்ளைகளுடன் வந்தார்.

உம்மாவுக்கு நோய் அதிகரித்துவிட்டது எனக் கேள்வியுற்று வீடு நிறையப் பெண்கள் கூடிவிட்டனர்.

ஜும்ஆ பள்ளிவாசல் மௌலவி வந்து குர்ஆன் ஓதினுர்.

உம்மா நஜீமாவை அருகே அனுப்புமாறு மாமியிடம் ஜாடை காட்டினுர். நஜீமா அருகே சென்ருள். கையை நீட்டி நஜீமாவை மெதுவாக உம்மா அணைத்தார். அவளுடைய கன்னங்களைத் தொட்டுத் தடவினுர். தலையைத் தடவி விட்டார். உம்மா இருந்த அந்த நிலையில் நஜீமாவை அவர் அணைப்பதை மாமி விரும்பவில்லைப் போலும். முகத்தில் வெறுப்பைக் காட்டினுர்.

மறுபக்கம் திரும்பி உம்மா என்னை அருகே வருமாறு சாடை காட்டினுர். மற்ற கையால் என் தலையைத் தடவினுர். என்னை மெதுவாக அணைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாவின் ஒருபக்கத்தில் நஜீமா. மறுபக்கத்தில் நான். மிகவும் கஸ்டப்பட்டு உம்மா ஒரு மூச்சை விட்டார். சற்று கண்ணை உயர்த்தி வாப்பாவைப் பார்த்தார். வாப்பா உம்மாவின் முகத்தருகே குனிந்தார். உம்மா மெதுவாக வாப்பாவின் கையைப்பற்றி என் தலையில் வைத்தார். ஏதோ சொல்ல வாயெடுத்தார். மூச்சு பொறுத்தது. மூச்சு எடுக்க மிகவும் சிரமப்பட்டார். ஆனால்......

உம்மாவின் தலை துவண்டது.

வாப்பா ''ஹோ .....'' வென பெரிய சப்தமிட்டு அழுதார். மாமி வெடுக்கென ஓடிவந்து நஜீமாவைத் தூக்கினார்.

மாமா சுவரில் மோதி அழுதார். சாச்சியைக் கட்டிப் பிடித்து அழுதார்.

வாப்பாவை சிலர் தாங்கிப்பிடித்தனர்.

நான் சரேலென எழுந்து உம்மாவின் பாதங்களுக் கடியில் சென்று அவைகளைக் கட்டிப்பிடித்து பலத்த சப்தத்தில் அழுதேன். ''உம்மா... உம்மா...'' என ஓலமிட்டேன்.

நஜீமா அழுவதும் எனக்குக் கேட்டது.

---

# 25

உம்மா மௌத்தாகி சுமார் ஒரு மாதகாலம் கரைந்தது. இப்போது வீட்டில் நானும் வாப்பாவும்தான்.

வாப்பா முகம் சவரம் செய்யாமல் நீண்ட முடிகளுடன் பரிதாபமாகக் காட்சியளித்தார். வாப்பாவின் நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வந்து ஆறுதல் வார்த்தை சொல்வார்கள். வாப்பாவின முகத்தில் இப்போதெல்லாம் நான் சிரிப்பைப் பார்ப்பதே இல்லை. சதா சோகம்... சோகம்.

உம்மா மௌத்தாகியபின்னர் சில நாட்களுக்கு சாச்சி சாப்பாடு சமைத்து அனுப்பிவைத்தார். வேறுசில நாட்களில் மாமியும் சமைத்து அனுப்புவார்.

வாப்பா சாப்பிடமாட்டார். நான் வற்புறுத்தினால் மட்டும் ஒருபிடி சாப்பிடுவார்.

இரவுவேளைகளில் படுக்கும்போது நான் வாப்பாவின் அருகில் படுப்பேன். என்னை நெஞ்சில் கையைப்போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துக்கொள்வார். சிலசமயங்களில் என் கன்னத்தில் சொட்டுச் சொட்டாக சுடுநீர் விழுவதுபோல் இருக்கும்; வாப்பா அழுகிருர் என நினைத்துக்கொள்வேன்.

''வாப்பா... அழுவுறீங்களா?'' நான் கேட்பேன்.

''நீ இன்னும் நித்திரை கொள்ளல்லியா மகன்?''

''இல்ல வாப்பா. அழுவுறீங்களா?''

''என்னமோ உன் உம்மாவின் எண்ணம். அழுகை, அழுகையாக வருகிறது''

வாப்பா இப்படி சொன்னதும் எனக்கும் அழுகை வெடிக்கும் நான் வாய்விட்டு அழுவேன். வாப்பா என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுவார்.

சிலநாட்களில் வாப்பா மஃரிப் தொழுதுவிட்டு, குர்ஆன் ஓதுவார். நான் தலையில் தொப்பி போட்டு அவர் ஓதுவதைக் கேட்டுக்கொண்டிருப்பேன். ஓதிமுடிந்து குர்ஆனை முத்தமிட்டு மூடிவைப்பார்.

''கையை ஏந்து மகன். துஆ ஓதுகிறேன்''

நான் கையை ஏந்த வாப்பா துஆ பிரார்த்தனை செய்வார். உம்மாவுக்காகப் பிரார்த்திப்பார். உம்மாவுக்கு சொர்க்கத்தை அருளவேண்டுமென அல்லாஹ்விடம் வேண்டுவார்.

இரண்டொரு இரவுகளில் நித்திரையில் ஏதாவது கனவு கண்டு திடீரென கண் விழிப்பேன். விடி விளக்கு எரிந்து கொண்டிருக்கும். வாப்பாவைப் பார்த்தால் அருகே படுக்க மாட்டார். சற்று தூரத்தே உள்ள சுவரில் சாய்ந்தவாறு கைகள் இரண்டையும் மேலே உயர்த்தி பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்.

''வாப்பா, படுக்கல்லியா?'' என்பேன்.

''இல்ல மகன். நித்திரையே இல்ல. அந்த சீதேவிட எண்ணமாகவே இருக்கு. ஏன்தான் உங்க உம்மா என்னை விட்டுட்டுப் போனுவோ? என்னையும் கூட்டிட்டுப் போயிருக்கலாமே. இந்த நரகத்திலே கிடந்து நான் இப்படி மனக் கஷ்டப்படத்தேவலியே'' வாப்பா கூறியவாறு அழுவார்.

''வாப்பா... நீங்களும் இல்லேன்னு நான் என்ன செய்வது..?'' நான் அழுதவாறு கேட்பேன்.

''உண்மைதான் மகன். நான் உனக்காகவாவது வாழத் தான் வேண்டும். நீ படு மகன்''

''நீங்களும் படுங்க''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா மெதுவாக நகர்ந்துவந்து என் அருகில் படுப் பார்.

இன்னுமொரு நாள்.

மாமா வீட்டிலிருந்து ஒரு பெரிய சகனில் சாப்பாடு அனுப்பி இருந்தார். நஜீமா தூக்கிவந்தாள். மாமாவும் கூடவே வந்தார்.

''மச்சான். ஒரு பெரிய சுருமீன் வாங்கினேன். உங் களுக்கு சுருமீன் விருப்பம்னு ஆக்கிக் கொண்டுவந்திருக் கேன். சுடச்சுட சாப்பிடுங்க மச்சான்''

சாப்பிடுவதற்கு ஏற்றவாறு தரையில் பாய் விரித்து பீங்கான்களைக் கழுவிவைத்தேன்.

வாப்பா பாயில் உட்கார்ந்து தட்டைக்குள் சில கவள சோற்றை அள்ளிவைத்து, சுரு கறியையும் ஊற்றிப் பிசைந்து ஒரு பிடியை அள்ளி வாய்க்குள் வைக்கப்போனார். என்ன நினைத்தாரோ திரும்ப சோற்றுப் பிடியை பீங்கானுக்குள் வைத்தார். கையை உதறியவாறு எழும்ப முயற்சித்தார்.

''மாமா. வாப்பா சாப்பிடல்ல'' நான் மாமாவைப் பார்த்து சொன்னேன்.

மாமா வாப்பாவின் அருகில் வந்தார்.

''ஏன் மச்சான் சாப்பிடல்லியா?''

''வேணும் மச்சினன். சுருமீன்னு உன் தங்கச்சிக்கு உசிர். மீனைப் பார்க்கும்போது அவ எண்ணமாவே வருது. அவ இருந்தா எவ்வளவு ஆசையா சாப்பிடுவா. அந்த சீதேவி தான் என்னை உட்டுட்டுப் போயிட்டாளே'' வாப்பா கேவத் தொடங்கினார்.

''சும்மா சாப்பிடுங்க மச்சான். சதா அதையே நினைச் சுக்கொண்டிருக்கலாமா?''

''என்னை வற்புறுத்தாதே. உன் மருமகன் சாப்பிடட்டும். அவனுக்குக் கொடு''

நான் ஏதோ சாட்டுக்கு சாப்பிட்டு முடித்தேன்.

மாமா போய்விட்டார்.

நஜீமா எங்கள் வீட்டிலேயே நின்றாள்.

நானும், அவளும் பாயொன்றை கொய்யாமர நிழலில் போட்டு அதில் இருந்தோம்.

''இஞ்ச. உன் வாப்பா ஏன் சாப்பிடல்ல?'' நஜீமா கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்க உம்மா மவுத்தான நாளில இருந்து வாப்பா சரியா சாப்பிடுறதே இல்ல''

''ஏன்?''

''அவருக்கு உம்மா மௌத்தாப்போனதாலே துக்கம்''

''ஏன் துக்கப்படணும்?''

''உம்மாவும், வாப்பாவும் அவ்வளவு அன்பா இருந்தாங்க. அவ இல்லியேன்னு வாப்பாவுக்குத் துக்கம்''

''அப்போ நான் மௌத்தாகிஞ நீயும் இப்படித்தான் துக்கப்படுவியா?''

''மடச்சி. என்ன கதை கதைக்கிறே. வாயை மூடு''

''மாட்டேன். சொல்லு. நீ துக்கப்படுவியா?''

''நீ அப்பிடியெல்லாம் மௌத்தாகமாட்டே''

''நீ பொய் சொல்றே. நான் மௌத்தாகிஞ நீ அழமாட்டே. சொல்லு. அழுவியா?''

''நீ இப்பிடி எல்லாம் கதைச்சா நான் உனக்கு அடிச்சிப்பிடுவன். வேற ஏதாவது கதை''

''இல்ல. சொல்லு. நீ அழுவியா மாட்டியா?''

''நான் உண்மையைச் சொல்லட்டா?''

''சொல்லேன்''

''நான் உனக்கு முன்ஞலேயே மௌத்தாயிடுவேன்''

அவள் என்னை உற்றுப்பார்த்தாள். அவள் கண்கள் கலங்கின.

''நீ இப்பிடி சொன்ஞ நான் அழுவேன்''

''அப்போ நீமட்டும் சொல்லலாமா? வேற ஏதாவது கதை''

நாங்கள் இருவரும் எதைக் கதைக்கத்தொடங்கிஞலும் அது ஈற்றில் என் உம்மாவின் மௌத்து தொடர்பாகவே வந்து நின்றது.

★ ★ ★

உம்மா மௌத்தாகி சுமார் ஒரு வருடமாகிவிட்டது. வாப்பா வயல் செய்வதை நிறுத்திவிட்டார். உம்மா நோயாக இருக்கும்போதே வயலை மாமா விற்றுவிட்டார். சமீபத்தில் நாங்கள் குடியிருக்கும் வீடுவளவையும் வாப்பா ஈடுவைத்து பணம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன்.

வாப்பாவின் அதிகநேரம் பள்ளிவாசலிலேயே கழிந்தது. தொழுவதற்கு பள்ளிவாசலுக்குப் போஞல் நீண்ட நேரம் அங்கேயே தங்கிவிடுவார். இரவில் நீண்டநேரம் குர்ஆன் ஓதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் முழுவதும் தாடி வளர்ந்து முதுமையுற்ற கிழவனாகக் காட்சியளித்தார்.

இரவில் சாப்பிடமாட்டார். யாருடனும் அதிகம் பேச மாட்டார். சதா விரக்தியுடன் இருந்தார்.

வாப்பாவும், நானுமாக சேர்ந்து சமைப்போம். அவர் மீனை வெட்டினால் நான் தேங்காய் துருவிக் கொடுப்பேன். வெங்காயம் தோலுரித்துக் கொடுப்பேன். பச்சைமிளகாயை நறுக்கிக் கொடுப்பேன். சமைத்துக்கொண்டிருக்கும்போது சில சந்தர்ப்பங்களில் உம்மாவை நினைத்து மாலையாகக் கண்ணீர் உதிர்ப்பார்.

வாப்பாவுக்கு இனந்தெரியாத ஒரு நோய் உள்ளுக்குள்ளாக வளர்ந்துவருவது யாருக்கும் தெரியவில்லை.

நாள் செல்லச் செல்ல வாப்பா மெலிந்துகொண்டு போனார். ஒருகாலத்தில் நீண்ட கொம்பு மீசையும், சற்று முரட்டு சுபாவமுமாக இருந்தவர் இப்போதெல்லாம் சாந்த சொரூபியாகக் காட்சியளித்தார்.

உம்மா மௌத்தாகியபின் தனது வாழ்க்கையையே இழந்துவிட்டதாக அவருடைய நினைப்பு.

எனக்கு வயது பதினொன்றாகிவிட்டது. நான் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் இப்போது படித்துக்கொண்டிருந்தேன். பாடசாலைக்கு ஒழுங்காக போகாவிட்டாலும் வகுப்பில் நான்தான் முதல் ஆள். வீட்டில் வாப்பா விரக்தியாய் வாழ்க்கை நடத்துவதால் என் மனதிலும் பூரண மகிழ்ச்சி நிலவவில்லை.

மஜீது அடிக்கடி வீட்டுக்கு வருவான். நானும், அவனும் எங்கள் வீட்டு முற்றத்திலேயே சிலநேரங்களில் சறுக்கால் விளையாடுவோம்.

வாப்பாவுடன் கூட சேர்ந்து சமையலில் நானும் ஈடுபடுவதால் எனக்கு ஓய்வுநேரம் கிடைப்பது குறைவு. காலையில் பாடசாலைக்குப் போவேன். மதியத்தில் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்து வாப்பாவுடன் சமையலில் ஒத்தாசை புரிவேன். மதிய சாப்பாட்டின் பின்னர் சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவி வைப்பேன். சற்றுநேரம் ஊஞ்சல் ஆடிவிட்டு குர்ஆனை எடுத்துக்கொண்டு மதரஸாவுக்கு ஓதப் போவேன். பிற்பகலானதும் மதரஸா விட்டுவந்து வாப்பாவுக்கு தேனீர் போட்டுக் கொடுப்பேன். பின்னர் சிறிது ஓய்வு ஏற்படும். அதை நஜீமாவின் வீட்டுக்கு சென்று அவளுடன் விளையாடப் பயன்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நஜீமாவும் அவளுடைய வீட்டுக்கு சமீப மாகவுள்ள பாடசாலையொன்றில் முதலாவது வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். மாமாவின் கோரிக்கைக்கிணங்க நான் அவளுக்கு பாடங்கள் சொல்லிக்கொடுப்பேன். விரலைப் பிடித்து எழுதப் பழக்குவேன். சொற்களுக்கு எழுத்துக்கூட்டப் பழக்குவேன்.

மாமிக்கு அடுத்த குழந்தையொன்றும் சமீபத்தில் கிடைக்கக்கூடிய அறிகுறிகள் தெரிந்தன.

நஜீமாவின் தங்கை மொழுமொழுவென அழகாக இருந்தாள். அவளை மடியில் வைத்து நாங்கள் விளையாடுவோம். அவள் வாய் மலர்ந்து சிரிப்பது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

''நீகூட அந்த நாட்களில் இப்படித்தான்'' நஜீமாவைப் பார்த்து சொல்வேன்.

''எப்படி?''

''இப்படித்தான். கண்களை மூடிக்கொண்டு சிரித்தாயென்றால் பகலெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். நானும் எங்க உம்மாவும் உன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் சிரிக்கமாட்டாயா என பார்த்துக்கொண்டே இருப்போம்''

நஜீமா இதைக்கேட்டுச் சிரிப்பாள். நானும் அவளுடன் சேர்ந்து சிரிக்க முயல்வேன். எனினும், என்னுடையது வரட்டுச் சிரிப்பு.

★ ★ ★

சுமார் இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன. முன்னர் படித்த பாடசாலையிலிருந்து விலகி வேறு ஒரு பாடசாலையில் இப்போது ஏழாம் வகுப்பில் படிக்கிறேன்.

வாப்பா நோயால் படுத்த படுக்கையாகிவிட்டார் அவருக்கு ஏதோ நரம்பு தொடர்பான வியாதி எனப் பேசிக்கொண்டார்கள்.

நாங்கள் குடியிருந்த கல் வீட்டை வாப்பா விற்றுவிட்டார். அதே வளவில் ஒரு மூலையில் ஓலைக்கொட்டில் அமைத்து அதில்தான் நாங்கள் குடியிருந்தோம்.

நஜீமா மூன்றாம் வகுப்பு படித்தாள். மாமிக்கு மூன்றாவதும் பெண் குழந்தையே பிறந்திருந்தது.

ஏனோ தெரியாது, மாமி இப்போதெல்லாம் என்னுடன் அடிக்கடி சற்று கடுகடுப்புடன் நடந்துகொள்வார். எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கெல்லாம் எனக்கு ஏசுவார். நாங்கள் குடியிருந்த வீட்டை மாமி வாங்குவதற்கு முயற்சித்ததாகவும், வாப்பா வேறு யாருக்கோ அதை விற்றுவிட்டதால் மாமி கோபமுற்று இருப்பதாகவும் நான் அறிந்தேன்.

மாமா அடிக்கடி வீட்டுக்கு வருவார். வாப்பாவும் அவரும் மச்சான், மச்சினன் முறையானாலும் இருவரும் நல்ல நண்பர்களைப்போல பழகுவர். படுக்கையிலிருக்கும் வாப்பாவுடன் மாமா நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருப்பார்.

''எப்ப உன் தங்கச்சிக்கு நோய் புடிச்சுதோ அப்பவே என் வாழ்க்கை தோல்வியடையத் தொடங்கிற்று'' என்றார் வாப்பா.

''நீங்க அதையே நினைச்சி, நினைச்சி உங்களை மண்ணாக்கிறீங்களே. அவட எண்ணம் உங்களை ரொம்பத்தான் வாட்டுது''

''உன் தங்கச்சி இருந்தாளே. அவ சீதேவி. நான் அவளை கைபிடிச்ச நாளையிலே இருந்து அவ மௌத்தாகிற வரையில என்னோட ஒருநாளாவது எதிர்த்துக் கதைக்கல்ல. முகம் சுளிக்கல. எனக்கு அவள்தான் ராணியா இருந்தாள். என்னைத் தனியா விட்டுட்டு அவள் போயிட்டாளே...'' வாப்பா அழத்தொடங்கினார்.

''அதற்காக இப்ப என்ன செய்யலாம்? அவ மௌத்தாகி பல வருடங்களாச்சே. அதையே நினைச்சி நினைச்சி .. நீங்க''

''நான் தனியே கிடந்து அவளை நினைச்சி வேதனையடையாம நானும் போயிட்டா..?''

''ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறீங்க மச்சான்?''

''இவன் நவாஸை நினைக்கும்போதுதான் எனக்கு வேதனையா இருக்கு. அவன் பாவம். சிறுவயதிலேயே தாயை இழந்துட்டான். எனக்கு மகனாகவும், பணிவியாகவும் இப்ப அவன்தான் இருக்கான். அவன்தான் சமைக்கிறான். அவன்தான் என்னைக் கழுவிவிடுகிறான். அவனுக்காக நான் எந்த சொத்துக்களையுமே சேர்த்துவைக்கல்ல. கடைசியில குடியிருந்த வீடுவளவையுமே வித்துப்பூட்டன்'' வாப்பாவின் கண்களில் நீர் ஆறுக ஊற்றெடுத்தது.

''மச்சினன். எனக்கு ஒரு உதவி செய்வியா?'' திடுதிப்பென வாப்பா கேட்டார்.

''சொல்லுங்க மச்சான். முடிஞ்சா செய்யிறன்''

''உன்னால முடியும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொல்லுங்க''

''எனக்கு ஏதாச்சும் நடந்தா .... இவனை வளர்க்கிற பொறுப்பை நீதான் ஏத்துக்கணும்''

தூரநின்று இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த நான் ''வாப்பா...'' என வாய்விட்டு அழுதேன்.

வாப்பாவை நினைத்து நினைத்து நான் அழவேண்டிய நாள் மிகத் தூரத்தில் இருக்கவில்லை.

வாப்பா கேட்டுக்கொண்ட பிரகாரமே மாமா அவருடைய வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டு போக வேண்டிய நாள் அடுத்த இரண்டு மாதங்களுக்கிடையே ஏற்பட்டுவிட்டது.

ஆமார்! சீதேவிகளான எனது உம்மாவையும், வாப்பாவையும் சொர்க்கத்தில் ஓரே வீட்டில் ஒன்றாக வைக்க வேண்டுமென அல்லாஹ்விடம் மன்றாடத் தொடங்கிவிட்டேன்.

---

# 26

நான் இப்போது மாமியின் வீட்டுக்கு அனாதையாக வந்துவிட்டேன். நஜீமாவின் அருகில் சதா இருக்கிறேனே என்பதில் என்னமோ எனக்கு மகிழ்ச்சிதான்.

நஜீமா, மாமி, மற்ற பிள்ளைகள் எல்லாம் உள் அறைக்குள் படுப்பார்கள். நானும், மாமாவும் மண்டபத்தினுள் படுப்போம்.

நஜீமாவுடன் சேர்ந்து மாமிக்கு மூன்று பிள்ளைகள். இன்னொரு குழந்தைக்கு மாமி ஆளாகிக்கொண்டிருப்பது தோற்றத்தில் தெரிந்தது.

மாமியின் வீட்டில் காலையில் எழுந்ததும் வாசல் முழுவதும் பெருக்கிக் கொடுப்பேன். வாளிகளில் தண்ணீர் மொண்டுவந்து குசினிக்குள் வைப்பேன். நஜீமா குளிப்பதற்காக அண்டாவில் தண்ணீர் அள்ளி ஊற்றிவைப்பேன். நானும் குளித்துவிட்டு ஏதாவது பழைய உடுப்பை அணிந்து பாடசாலைக்குச் செல்வேன். பிற்பகலில் வந்து சாப்பிட்ட பாத்திரங்களை நானும், நஜீமாவும் கழுவுவோம். குழந்தைகள் அழுதால் தூக்கிவைத்து ஊஞ்சலாட்டுவேன். பாட்டுப் பாடி கைக்குழந்தைக்கு தொட்டிலை ஆட்டிவிடுவேன்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் நஜீமாவுக்கு பாடம் சொல்லித்தருவேன். தூரத்திலுள்ள சில்லறைக் கடைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி ஓடிச்சென்று மாமி சொல்லும் பொருட்களை வாங்கிவந்து கொடுப்பேன்.

மாமிக்கு என்னவோ என்னுடன் எப்போதும் ஒரு கடு கடுப்பு.

மாமா, மாமி, நஜீமா, நான் எல்லோரும் ஒன்ருக இருந்து சாப்பிடுவோம். சாப்பிட்டு முடிந்ததும் மாமி வெற்றிலை போடுவதற்காக வட்டாவை எடுத்துக்கொண்டு ஊஞ்சலுக்குச் சென்றுவிடுவார், சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்காக நானும், நஜீமாவும் கிணற்றடிக்கு அள்ளிக் கொண்டு செல்வோம்.

நஜீமா எச்சில் பாத்திரங்களைக் கழுவுவது மாமிக்கு விருப்பமில்லைப்போலும்.

''டியேய் நஜீமா. நீ வாடி. அவன் கழுவட்டும்'' என்பார்.

நஜீமாவுக்கு என்னை தனியே விட்டுவிட்டுப்போக விருப்பமில்லாமல் இருக்கும். உம்மாவிடம் பகைத்துக்கொள்ளவும் அவளுக்கு விருப்பம் இருக்காது.

சில சந்தர்ப்பங்களில் நானும், அவளும் வாசல் பெருக்குவோம். நான் வாசலைக்கூட்ட, அவள் மரங்களிலிருந்து வீழ்ந்த இலைகளை ஒவ்வொன்ருக பொறுக்குவாள். மாமிக்கு அது பொறுக்காது.

''டியேய். நீ இஞ்சவாடி. அவன் கூட்டட்டும்'' என்பார்.

ஒருநாள் நான் எச்சில் பாத்திரங்களை கழுவும்போது பீங்காஞென்று கீழே வீழ்ந்து உடைந்துவிட்டது. இதை மாமி அறிந்துவிட்டார்.

''அடப்பாவி! தறுதலை. இப்படி உடைச்சிப்போட்டியேடா. அவருக்கு வேலை இல்லைன்னு இந்த மூதேவியை ஊட்டுக்குக் கூட்டிவந்திருக்காரே. இனிமே இப்படி உடைச்சே உன் மூஞ்சியை உடைச்சிப்புடுவன்'' என்ருர்.

மனதுக்குள் என் சிநேகவி உம்மாவை நினைத்துப்பார்த்து நீண்ட பெருமூச்சை உதிர்ப்பேன்.

இன்னுமொரு நாள். மாமா வீட்டில் இல்லை. வயலுக்குப் போயிருந்தார். நான் பாடசாலைக்குப்போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன்.

''எங்கேடா போப்பிறே?'' மாமி கேட்டார்.

''பாடசாலைக்கு''

PUBLIC LIBRARY ... 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாடசாலைக்கும் போகவேணும். ஒரு மண்ணுக்கும் போகவேணும். ஊட்டிலே நில்லு. சந்தைக்கு மீன் வாங்கப் போகவே ணும்''

''ஸ்கூல்ல சோதனை நடக்குது மாமி''

''தறுதலை. எதுத்தாடா கதைக்கிறே??' எழுந்துவந்து கன்னத்தில் பளார் என அறைந்தார்.

நஜீமா கூட நின்றாள். அவளைப்பார்த்தேன். அவள் கண்கள் கலங்குவதைப்போல் இருந்தன.

''நீ என்னடி சும்மா நிக்கிறே? பாடசாலைக்குப் போகல் லியாடி, புத்தகத்தை எடுத்துட்டுப்போடி'' மாமி நஜீமா மேல் குரைத்தார்.

மாமி என்மேல் காட்டும் பாராமுக மனப்பாங்கு எனக் குத் துல்லியமாகத் தெரிந்தது.

நான் அன்று ஸ்கூலுக்கு செல்லவில்லை. சந்தைக்குச் சென்றேன். மீன் வாங்கிவந்தேன்.

மாமி மீன்களை வெட்ட கிணற்றடிக்குச் சென்றார். சில நிமிடங்களில் பாம்பை மிதித்ததுபோல் பதறப்பதற என் னைக் கூப்பிட்டார்.

''ஏன்டா மூதேவி. ஏன்டா இந்த நாத்தமீனை வாங்கி வந்தே?'' கூறியவாறு அப்படியே மீன்சட்டியை சரேலெனத் தூக்கி என் முகத்தைநோக்கி வீசினார். நான் சற்று நகர்ந் திருக்காதுவிடின் சட்டி என் மூக்கை உடைத்துவிட்டிருக்கும்.

''அங்கதான் உம்மாவையும், வாப்பாவையும் கொண் ணுட்டே. இங்க ஆரைக் கொல்லடா வந்திருக்கே?'' மாமி ஏசியவாறு எழுந்துசென்று நாற்றமடையாமல் கிடந்த சில மீன்களை பொறுக்கி எடுத்தார்.

சில நாட்களில் காலை ஆகாரத்துக்காக மாமி சுடச்சுட சோறு சமைப்பார். என் உம்மாகூட சில நாட்களில் இவ் வாறு சுடச்சுட சோறு சமைத்து முதல்நாள் கறியை சுண்டவைத்து வைத்திருந்து இரண்டையும் பிசைந்து எனக் குத்தருவார். மாமி சுடுசோறு சமைக்கும் நாட்களில் எனக்கு மட்டும் முதல் இரவு மிஞ்சிககிடந்த தீய்ந்த பழைய சோற்றை தண்ணீர்விட்டுத் தருவார்.

நஜீமாதான் எனக்கு அந்த வீட்டில் பாலைவனச்சோலை. உம்மாவுக்குத் தெரியாமல் அவளுக்கு சாப்பிடக் கொடுப்ப வற்றில் சிலதை ஒழித்துவைத்திருந்து எனக்குத்தருவாள்.

நான் மாமியிடம் அனுபவிக்கும் கொடுமைகளில் எது வும் மாமாவுக்குத் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். மாமி அவரை கண்களை உருட்டி ஒரு பார்வை பார்த்தால் போதும். பெட்டிப்பாம்பாகிவிடுவார்.

ஏன்டாம்பி அடிக்கடி அங்கு வருவான். அவன் மாமியின் தாய்வீட்டில் தான் வசிப்பவன். சகோதரியைப் பார்க்க வருவான்.

வேறு ஒருநாள் காலை. நான் கிணற்றடியில் சமையல் பாத்திரங்களை தென்னந்தும்புடன் சாம்பல் கலந்து தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தேன். பானைகள், சட்டிகள், உலை மூடிகள் கரி பிடித்தவைகளாக, தேய்த்தும் தேய்க்காதவைகளாக என் அருகில் கிடந்தன. மாமியின் இரண்டாவது மகள் கிணற்றடிக்கு ஓடிவந்தாள்.

''டேய். அவளுக்கு தண்ணியை ஊத்தி நல்லா கழுவி விடுடா'' மாமி குசினிக்குள்ளிருந்து கட்டளையிட்டார்.

அவர் கூறியது எனக்கு விளங்கிவிட்டது. சீ! இந்த அசிங்க வேலையை நான் செய்யவேண்டுமா? இவ்வளவு நாளும் மாமிதான் இந்த வேலையைமட்டும் செய்வார். இனி இதையும் நான்தான் செய்யவேண்டுமா?

நான் மாமியை எதிர்ப்பதற்கு முதன்முதல் தயாரானேன்.

''எனக்கு ஏலாது எண்டு உங்க உம்மாக்கிட்டபோய் சொல்லுடி''

''உம்மா...''

''என்னடி?''

''இவனுக்கு ஏலாதாம். நீதான் வா...''

''என்னடி? தறுதலைக்கு ஏலாதாமா?'' மாமி பயங்கரமாக விழிகளை உருட்டியவாறு என்னை நோக்கி வந்தார்.

''ஏன்டா மூதேவி நீ சின்னப்புள்ளயா இருக்கும்போது நஜீமாவுக்கு கழுவி விடுவியே. இப்ப ஏன்டா ஏலாங்கிறே?''

''எனக்கு கை முழுதும் கரி''

''அப்பிடியா? குநதுடி''

மாமி என்னுடைய இனிமையான நினைவுகளில் ஒன்றை ஞாபகப்படுத்திவிட்டார். என் மனம் உற்சாகமடைந்தது. மனதால் சிரித்தவாறு பாத்திரங்களைத் தேய்த்து சுத்தமாகக் கழுவத்தொடங்கினேன்.

மாமியின் வீட்டில் வேலைக்காரனே இப்போது நான் தான். பாடசாலைக்கு ஒழுங்காக செல்வதில்லை. இருந்து இருந்துவிட்டு எப்போதாவது செல்வேன். நான் பாடசாலைக்குப்போகாத விசயம் மாமாவுக்குத் தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவாஸ் நீ ஏன் ஒழுங்கா பாடசாலைக்கு செல்வதில்லை?" மாமா ஒருநாள் கேட்டார்.

நான் மௌனமாக நின்றேன்.

"சொல்லுடா. ஏன் போவதில்லை? கட்டுப்படுத்த உம்மா வாப்பா இல்லைன்னு பாடசாலைக்குப் போவதில்லையா? சொல்லுடா. ஏன் போறல்ல?"

நான் தரையைப்பார்த்தவாறு மனதில் புயலாக எழும் துயரத்தை வெளியே கக்காதவாறு கண்களில் ஊற்றுகப் பாயநிற்கும் கண்ணீரை சுரக்கவிடாமல்.. மௌனமாகவே நின்றேன்.

"இப்படி பேசாமல் நின்றால் என்னடா அர்த்தம்? அறைஞ்சேன்னு சொல்லுடா?"

மாமா என்னை மிரட்டுவது மாமிக்கு கேட்டிருக்கவேண்டும்.

"என்ன? என்ன அவனை மிரட்டுறீங்க?" மாமி என்னைக் கண்களால் குதறியவாறு மாமாவைநோக்கி கேட்டார்.

"இதைப் பாரேன். இவனுடைய ஆசிரியர் என்னை வழியிலே கண்டார். இவன் ஒழுங்கா பாடசாலைக்குப் போவதில்லையாம். வகுப்பிலே இவனதான் முதல் ஆளாம். இப்படி இவன் பாடசாலைக்குப் போகாம ஏமாத்தினு எப்பிடி படிப்பிலே முன்னேறுவான்?" மாமா உண்மையைச் சொன்னார்.

"அப்போ... உங்க செல்ல மருமகன் பாடசாலைக்கு போய்க்கொண்டு இருக்கட்டும். நீங்க வயல்வேலையைக் கவனிக்காம ஊட்டிலே நின்னு இந்த வேலைகளையெல்லாம் செய்ங்க.. ஏற்கனவேயே மூணு. இஞ்ச வயித்தில இன்னு மொண்டு. காலைல எழும்பினு ராவு வரை ஒரே வேலை. அதுக்குள்ள துரைவேற படிக்க போகணும். இப்ப சொல்லுங்க. அவன் படிக்க போகத்தான்வேணுமா?" மாமி மாமாவைப் பார்த்து கண்களை உருட்டினார்.

மாமா பெட்டிப் பாம்பானார். மாமியின் சுபாவம் அவருக்குத் தெரியும்.

நாட்கள் சென்றன.

மாமியின் உடலில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவருக்கு குழந்தை கிடைப்பதற்கான நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. மாமியின் சுபாவத்திலும் பல மாறுதல்கள். இப்போதெல்லாம் எடுத்ததற்கெல்லாம் அவர் எனக்கு ஏசுவார். பலசமயங்களில் கைநீட்டி அடிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்துக்கொள்வேன். வேறு என்னதான் செய்ய லாம்? இவருடன் கோபித்துக்கொண்டால் எனக்கு வேறு போக்கிடம் ஏது?

ஒருநாள்.

மாமி அவருடைய சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் ஏதோ நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்றுவிட்டார். கைக் குழந்தையையும் தூக்கிக்கொண்டு சென்றார். மாமாவும் வீட்டில் இல்லை. வயலுக்குப் போய்விட்டார்.

வீட்டில் நானும், நஜீமாவும் அவளுடைய தங்கையும். தங்கை வாசலில் விளையாடிக்கொண்டு நின்றாள்.

''உனக்கு எங்க உம்மாவுடன் கோபம். இல்லையா?'' நஜீமா கேட்டாள்.

''அப்பிடி ஒண்ணும் இல்ல''

''நீ பொய் சொல்றே. எனக்கு எல்லாமே தெரியும்''

''என்ன தெரியும்?''

''உனக்கு உம்மா அடிப்பது ஏசுவது எல்லாமே தெரி யும்''

''நான் என்ன செய்யலாம்? எல்லாமே என் தலை யெழுத்து''

''எங்க உம்மாவோட கோவிச்சுக்கிட்டு எங்க ஊட்டை விட்டு போயிடுவியா?''

''நான் வேற என்னதான் செய்யலாம்?''

''அப்படீன்னு... என்னை விட்டுட்டுப் போயிடுவியா?''

''நான் வேற என்னதான் செய்யலாம்? இருந்தாலும் நஜீமா உங்க உம்மா என்னைக் கொடுமைப்படுத்தும்போ தெல்லாம் நான் ஆயிரம்தடவை இந்த ஊட்டில இருந்து போக நினைச்சேன். ஆனா உன்னை விட்டுட்டு உன்னைப் பார்க்கமுடியாத இடத்துக்கு எனக்குப் போக விருப்பம் இல்ல''

''அப்படீன்னு... எனக்காகத்தான் இந்த ஊட்டில இருக்கியா?''

''உனக்காகத்தான்''

''உனக்கிட்ட ஒரு விசயம் சொல்லுவன். யாருக்கிட்ட யும் சொல்லமாட்டியா?''

''சொல்லமாட்டேன். என்ன விஷயம்?''

''எங்க உம்மா சொன்னா உன்னோட பேசக்கூடாதாம். உன்னோட விளையாடக்கூடாதாம்''

''ஏனும்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன் உம்மாவையும், வாப்பாவையும் நீதான் மௌத் தாக்கினியாம்''

''அது எப்படி?''

''நீ அவங்களுக்குப் புறந்ததாலதானே அவங்க மௌத் தாகினுங்களாம்''

''அதுக்காக நீ என்னோட கதைச்சா என்னவாம்?''

''நீ எங்க வீட்டிலே இருந்தா இங்கேயும் ஆக்கள் மௌத்தாகுவாங்களாம்''

''நீ இதை நம்புறியா?''

''நான் நம்பல்ல... உம்மாதான் சொன்னு''

மாமி என்னுடன் கடுகடுப்பாக இருப்பதற்கான அடிப் படைக் காரணம் இப்போது எனக்குப் புரிந்தது. அவர் அடிக்கடி எனக்கு ஏசுப்போதெல்லாம் என்னைக் குத்திக் காட்டுவாரே. இந்தச் சின்னஞ் சிறுமியின் மனதில் மாமி எப்படி நச்சு விதையை விதைக்கிறுர்!

''அப்போ நான் எங்கேயாவது போய்விடட்டா?''

''போவே! என்னை உட்டுட்டுப் போவியா?'' அவள் கண்கள் கலங்கக் கேட்டாள்.

''மாட்டேன். போகவேமாட்டேன்''

''அப்ப வா. உஞ்சில் ஆடுவோம்''

இருவரும் ஊஞ்சலில் எதிரும் புதிருமாக இருந்தோம்.

''நீ என்னை மடிக்குள் வச்சிக்கயேன்''

நான் மடித்திருந்த கால்களைப் பரப்பி நீட்டி ஊஞ்சல் பலகையில் வைத்தேன். எதிர்ப்புறமாக இருந்த நஜீமா திரும்பி என் மடிக்குள் அமர்ந்தாள்.

''அம்பாவோ இம்பாவோ படியேன்''

''அம்பாவோ இம்பாவோ''

''ஏலேலம். ஏலேலம்''

''அப்பாக்காரன் காசல்லவோ''

''ஏலேலம் ஏலேலம்''

பாடலைத் தொடர்ந்தேன்.

நீண்ட நாட்களின்பின் என்னை மறந்து... என் கவலை களை மறந்து... இந்த உலகத்தையே மறந்து... சந்தோஷ மாக இருந்தேன். சிரித்தேன். சிரித்தோம். மகிழ்ந்தேன். மகிழ்ந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27

மாமிக்குப் பிறந்த அடுத்த குழந்தையும் பெண்தான். அடுக்கடுக்காகப் பிறந்த எல்லாம் பெண்களாக இருந்ததால் மாமி மிகவுமே கோபமுற்று இருந்தார். இம்முறை பிறப்பதாவது ஆணாகப் பிறக்கமாட்டாதா என அவர் நேர்த்திக்கடன் வைத்திருந்ததாக வருவோர் போவோரிடமெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்.

மாமி பிள்ளைபெற்ற நாட்களில் எனக்கு வீட்டில் சரியான வேலை. சில சமயங்களில் வீட்டுவேலை செய்வதில் மாமாவும் என்னுடன் ஒத்துழைப்பார். காலையில் எழும்பி வாசல் கூட்டுவது தொடக்கம் இரவு சாப்பாடு முடிந்து பாத்திரங்களைக் கழுவி அடுக்கி வைப்பதுவரை சகல வேலைகளும் என் தலைமேல்தான். மாமியின் தாய்க்கிழவி வீட்டுக்குவந்து சமைத்துமட்டும் தருவார்.

மாமியின் அழுக்குப் புடவைகளைக்கூட சில நாட்களில் என்னைக் கழுவிப்போடுமாறு கூறுவார். இழுவை மாடாகக் கட்டளைகளுக்குக் கீழ்படிவேன்.

மாமி தான்பெற்ற குழந்தையுடன் அறைக்குள் படுத்துக் கொண்டிருப்பார். அவருக்குத் தெரியாமல் நஜீமா என் வேலைகளில் எனக்கு கைகொடுத்து உதவுவாள். நாங்கள் இருவருமாக பிள்ளைகளின் அழுக்குத் துணிகளைக் கழுவுவோம்.

நான் எவ்வளவுதான் வேலை செய்தாலும் மாமிக்கு என்னவோ திருப்தியில்லை. அடிக்கடி என்மீது சள் எனப் பாய்வார்.

மாமா வயலுக்குப் போய்விட்டதால், மீன் வாங்கி வருமாறு மாமி என்னைச் சந்தைக்குப் போகச்சொன்னார்.

“டேய். செத்தல்மீன் கிடந்தாமட்டும் வாங்கு. திராயும் வாங்கிக்க” எனக்குத் தெரியும் மாமிக்கு பால் சுரப்பதற்கு செத்தல்மீன் சாப்பிடவேண்டுமென்று.

நீண்ட நாட்களாக மஜீதை சந்திக்கவில்லை. மாமி வீட்டில் நான் அனுபவிக்கும் அவஸ்தைகள் அவனு தெரியும். இருந்து இருந்துவிட்டு எப்போதாவது உ சந்தித்தால் எனக்காக அனுதாபப்பட்டுக் கதைப்பா தலையெழுத்தை நொந்து கொள்வான். எப்ே நேரம் கிடைக்கும்போது நானும், அவனும் எ வாப்பா அடக்கம் செய்யப்பட்டிருக்கும் க சென்று ஊதுபத்தி கொளுத்தி அவர்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போம். ''உன் உம்மா சீதேவிதான்டா'' என்பான் மஜீது அடிக்கடி. என் நெஞ்சம் பூரிக்கும்.

சந்தைக்கு மீன்வாங்கப் போகும்போது மஜீதை சந்திக்கவேண்டும போலிருந்தது எனக்கு.

மஜீது வீட்டில் நின்றான். வீட்டில் வளர்க்கும் மாடுகளுக்கு வைக்கோல் போட்டுக் கொண்டிருந்தான். மஜீதின் தாய் எப்போதுமே என்மீது இரக்கம் காட்டுவார்.

''வா மகன். நல்லா இளைச்சிப் போயிட்டியே. நான் எல்லாம் கேள்விப்பட்டேன். அந்த வட்டிக்காரி உன்னைக் கஸ்டப்படுத்துறாளாமே?''

''இல்ல பெரியம்மா, அப்படி ஒண்ணும் இல்லே. மாமி என்னை நல்லாத்தான் வைச்சிருக்கா''

''உன் உம்மாட குணம் உனக்கிட்ட அப்படியே இருக்கு. இல்லாட்டி அவள் உன்னை இவ்வளவு கஸ்டப்படுத்தும் போதும் அவளைப்பத்தி நல்லாக் கதைப்பியா? என்னமோ நீ பெற்றுவந்த வரம்'' கூறியவாறு பெருமூச்சு விட்டார்.

''மஜீதைப் பார்க்கவந்தேன் பெரியம்மா. சந்தைக்குப் போகணும். மஜீதையும் கூட்டிப்போகட்டா?''

''அதுக்கென்ன, கூட்டிப்போ. அவன் வைக்கோலை போட்டுட்டு வரட்டும். நீ அப்பிடி இரு. தேத்தண்ணி தாறன். குடிச்சிட்டுப்போ''

''வாணா பெரியம்மா. இப்பத்தான் சாப்பிட்டேன்''

''நல்ல சாப்பாடு! ஏதாவது பழசை தந்திருப்பாள். கொடுமைக்காரி? இந்தா, இதை முதலிலே தின்னு. அடுப்பிலே தேயிலேப்பானை கிடக்கு. ஊத்திட்டு வாறன்''

ஒரு பெரிய துண்டு சட்டியப்பம் தந்தார். மேல் கீழ் பக்கங்கள் பொன்நிறமாக அளவுக்குத் தீய்ந்திருந்தன.

மெதுவாக சாப்பிட்டேன். சட்டியப்பத்தினுள் போடப்பட்டிருந்த பயறு கடிபடும்போது மிக சுவையாக இருந்தது. பெருநாள் காலங்களில் என் உம்மாகூட இதைச் செய்து தருவார். உம்மாவை நினைத்தவுடன் என் நெஞ்சு பொங்கியது.

''பெரியம்மா, சட்டியப்பம் நல்ல ருசியா இருக்கு. ஒரு கடதாசித்துண்டு தாறீங்களா?

''எதற்கு?''

''இதில ஒரு துண்டை நான் நஜீமாவுக்குக் கொண்டு போய் கொடுக்கணும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ இதை முழுசா தின்னு மகன். நான் உன் நஜீமா வுக்கு வேறயா தாறன்''

'உன் நஜீமா ..' இந்த வார்த்தை எனக்கு இனித்தது.

வேலேமுடிஞ்சு மஜீது வந்தான்.

''மஜீது, வா சந்தைக்குப் போகலாம்''

அவன் மறுக்கவில்லே. சேர்ட்டை அணிந்தான். சந்தை யில் பொருட்கள் வாங்குவதற்கு அவனுடைய தாய் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டான்.

நாங்கள் இருவரும் நடந்தோம்.

''நவாஸ். இப்பவும் உன் மாமி அடிக்கிருளா?'' மஜீது கேட்டான். மாமியின் வீட்டில் நான் அனுபவிக்கும் கொடுமைகள் அத்தனையும் அவனுக்குத் தெரியும். அவனிடம் நான் எதையும் மறைப்பதில்லே. எனக்கு ஆறுதல் கூறுவது .. பச்சாதாபப்படுவது... எனக்கு ஏற்படும் துயர நெருப்பை நீரூற்றி அணைப்பது... எல்லாமே அவன்தான்.

''மாமி ஆண்குழந்தை பொறக்குன்னு எதிர்பார்த்துக் கொண்டிருந்தா. பொறந்தது பெண். இப்ப தொடர்ச்சியா முகத்திலே நாயைக் கட்டிக்கொண்டிருக்கிரு''

''அதுதான் பழகின நாயாச்சே... கண்டவுடன் வாலாட்டுமே''

''அதுதான்டா மஜீது இல்ல. என்னேக் கண்டவுடனேயே பாயுது'' கூறிவிட்டுச் சிரித்தேன். அவனும் சிரித்தான்.

''நவாஸ்... நான் நினேக்கிறேன். உன் மாமி ஏதோ காரணமாகத்தான் உன்ஞேடு இப்படி நடந்துக்கிரு''

''அதுதான் உண்மை. அந்தக் காரணம் எனக்குத் தெரிஞ்சுபோச்சி''

''என்ன காரணம்?''

''நான் பொறந்ததாலதான் என் உம்மா, வாப்பா மௌத்தானுங்களாம். நான் மாமிட வீட்டில தொடர்ந்து இருந்தா அங்கேயும் மையத்து விழும்னு அவவுக்கு பயமாம்''

''அடிப்பாவி. உன் உம்மா பாரிசவாதம் ஏற்பட்டு மௌத்தானதுக்கும், அவ பிரிவைத் தாங்கமுடியாம உன் வாப்பா மௌத்தானதுக்கும் உங்கமாமி இப்படி முடிச்சுப் போடுருளே. அவ நல்லா இருக்கமாட்டா''

''மாமி. பாவம்டா மஜீது. ஏன் திட்டுறே?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான்மட்டும் உன் நிலையிலே இருந்தா கொள்ளிக் கட்டையால தலையில அடிச்சு அவனையே மையத்தாக்கிடு வேன்''

''மாமியும் அடிக்கடி சொல்ருடா. கொள்ளிக்கட்டை யால எனக்கு சூடு போடணும்னு''

''போடுவாள்! போடுவாள்! நீ பயந்தாங்கொள்ளியா இருப்பதாலே இப்படி சொல்ருள்''

''எனக்கு பயம் இல்லடா மஜீது. மாமியோட பசைச் சிக்கிட்டா நான் எங்க போவன்? எனக்கு யார் இருக்கா? அத்தோட... நஜீராவைப் பிரிஞ்சு போறதுண்ணு என் இருதயமே வெடிச்சுடும்போல இருக்குடா''

''ஏன் உன் சாச்சிட வீட்டில இருக்கலாமே?''

''உனக்குத் தெரியுமே. சாச்சா முன்கோபி சாச்சியின் குணமும் ஒருமாதிரி. சாச்சாட முகத்தைப் பார்த்தாலே ஏன் வந்தேம்னு ஆகிடும். அதுதான் போகட்டும் உம்மா மௌத்தாகி இத்தினி நாளா ஒருநாளாவது வீட்டுக்கு வரச்சொல்லி சாச்சி சொன்னுவா? எங்கபோனுலும் அங்க மட்டும் நான் போகமாட்டேன்''

''உன் நிலம ரொம்ப பரிதாபம்டா''

நாங்கள் இருவரும் தொடர்ந்து நடந்தோம். தொடர்ந்து கதைத்தோம்.

''டேய் தம்பி. இஞ்ச வாடா'' குரல்வந்த திக்கை இருவரும் நோக்கினோம்.

ஒருவன் இரண்டு பெட்டிகள் நிறைய அரிசி வைத்துக் கொண்டு ஒரு வீட்டுவாசலில் நின்றுகொண்டிருந்தான். அவன்தான் என்னை அழைத்தான்.

''என்ன?'' கேட்டேன்.

''வழக்கமாக சந்தைக்கு இந்த அரிசிப் பெட்டியை தூக்கிக்கொண்டு தருபவன் இன்னும் வரலை நேரம்போகுது. நீ தூக்கிக்கொண்டு தாறியா? காசு தர்றேன''

மஜீது 'வேண்டாம்' என என்னிடம் கண் காட்டினுன். ஆனல் திடீரென ஒரு தீப்பொறி என்னுள் பளிச்சிட்டது.

''தலையில ஏத்திவிடுங்க'' மஜீது என்னை உற்றுப்பார்த் தான். என் செய்கை அவனுக்குப் புதுமையாக இருந்தது.

''குனிடா''

நான் குனிந்தேன். தலையில் சுமை ஏற்றப்பட்டது.

அரிசிப்பெட்டிகள் பாரமாக இருந்தன. கழுத்து வலித் தது. நான் பொறுத்துக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையில் சுமையை இறக்கி வைத்தேன். இருபத்தைந்துசதம் தந்தான். நன்றியுடன் பெற்றுக்கொண்டேன்.

''மஜீது. பின்னேரம் ஒரு இடத்துக்குப் போவோம். வர்றியா?'' நான் கேட்டேன்.

''எங்கே?''

''என் உம்மா, வாப்பாவின் கப்றடிக்கு''

''எதற்காக?''

''இந்தக் காசுக்கு ஊதுபத்தி வாங்கி அவங்க கப்றிலே கொளுத்துவோம்''

''இதுக்காகத்தான் இந்த சுமையை சுமந்து வந்தியா?''

''ஆமா''

''மாமி மீன்வாங்க தந்த பணத்திலே ஊதுபத்தியை வாங்கிட்டு கூடியவிலைக்கு மீன் வாங்கியதாக மாமிக்கிட்ட சொல்விடலாமே''

மஜீதை வெறுப்புடன் பார்த்தேன்.

''சீ! என் உம்மா, வாப்பாட கப்றிலே கொளுத்திற ஊதுபத்திக்காக நான் களவெடுக்கணுமா? பொய் சொல்லணுமா?''

மஜீது என்னை உற்றுப்பார்த்தான். அவன் எண்ணத்தில் நான் மலையாக உயர்ந்து தெரிந்திருக்கவேண்டும்.

★ ★ ★

''டேய் சந்தைக்குப்போய் வாறதுக்கு ஏன்டா இவ்வளவு நேரம்?'' மாமி கேட்டார்.

நான் மௌனமாக நின்றேன்.

''சொல்லுடா. ஏன்டா பேசாம நிக்கே? இங்க ஊட்டில எவ்வளவு வேலைகிடக்கு. மாடு. வெளியே போனுன்னு வரவேமாட்டான்''

மாமி உண்மையைச் சொன்னார். நான் மாடுதான். வாய்பேசாத மாடுதான்.

இப்போதெல்லாம் நான்தான் மீன் வெட்டுவேன். வாங்கிவந்த மீன்களை வெட்டி, வாசலில் குழிதோண்டி புலால் நீரை ஊற்றி, குழியை மூடிவிட்டு, வெட்டிய மீன் துண்டுகளைக் கழுவி சட்டிக்குள் வைத்தேன். காலையிலேயே சமையல் பாத்திரங்களை கழுவி வைத்திருந்தேன். தேங்காய் துருவி, வெங்காயம், பச்சைமிளகாய் ஆகியவற்றை நறுக்கி வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாமி இவ்வளவையும் அரைக்கட்டா'' கொஞ்சம் காய்ந்த கொச்சிக்காயையும், மல்லியையும் எடுத்துக் காட்டினேன்.

''இன்னும் கொஞ்சம் கொச்சிக்காய் போடு''

மாமி கூறியவாறு போட்டு அம்மியில்வைத்து அரைத்து திரணையாக ஆக்கி எடுத்து வைத்தேன். கத்தரிக்காயை வெட்டிவைத்தேன்.

''மாமி. எல்லாமே செய்துட்டேன். வாங்க''

மாமி வந்து கறிகளைக்கூட்டி நான் பற்றவைத்த அடுப்பில் வைத்தார்.

இன்று மாமியின் கோபத்துக்கு ஆளாகிவிடக்கூடாது என்பதில் கூடியகவனம் செலுத்தினேன். இல்லாவிட்டால் பிற்பகலில் ஊதுபத்தி கொளுத்தப்போக விடமாட்டார்.

கபுறடிக்கு நஜீமாவையும் அழைத்துப் போகவேண்டும் என்பது என் விருப்பம். கிணற்றடியில் வைத்து நஜீமாவிடம் இரகசியமாக என் திட்டத்தை சொல்லிவைத்திருந்தேன். பிற்பகலில் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென மாமியிடம் அவள் அனுமதி பெறுவதாகவும், அவளை அழைத்துக்கொண்டு நான் செல்வதாக அனுமதி பெறுவதெனபதும் எங்கள் திட்டம்.

மதிய சாப்பாட்டின்பின் எச்சில் பாத்திரங்களைக் கழுவி வைத்தேன். பிள்ளைகளின் அழுக்கு உடுப்புகளைக் கழுவி கொடியில் காயப்போட்டேன். வீடு மண்டபத்தைக் கூட்டி தூசு தட்டிவிட்டேன்.

மாமியின் மூன்றுவது குழந்தை அழுதது. ஊஞ்சலில் வைத்து பாட்டுப்பாடி நித்திரையாக்கினேன்.

நாலாவது கைக்குழந்தை அழுதது. தொட்டிலை நீண்ட நேரம் ஆட்டிவிட்டேன்.

பிற்பகலாகியது.

நஜீமா மாமியிடம் பாடசாலைக்குச் செல்ல அனுமதி பெற்றுக்கொண்டாள்.

''நஜீமா எங்கே போப்பிறே?'' நான் கேட்டேன்.

''பாடசாலைக்கு. நீ துணைக்கு வாறியா?''

''அவன் எதுக்குடி? இவ ராசாத்தி. துணை வேணும்! நீ தனியே போயிட்டுவாடி'' எனக்கு இருதயம் 'திக்' என்றது.

''வரக்குள்ள இருட்டாயிடும். தனியே வரப் பயமா இருக்கும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவ்வளவுநேரம் அங்க என்னடி?''

''விளையாட்டுப் போட்டியாம்''

''அவங்க விளையாடிட்டுப் போருங்க. நீ அப்ப போக வாணு. ஊட்டிலே நில்லு''

''ஐயா வரச்சொன்ன'' நஜீமா சிணுங்கத் தொடங்கினுள்.

''சரி. சரி. போடி. டேய் பத்திரமா இவளைக் கூட்டிப் போயிட்டு வாடா''

நானும் நஜீமாவும் வெளியே ஓடினேம். மஜீதின் வீட்டுக்குச் சென்ரேம். அவன் ஏற்கனவே என் காசுக்கு ஊதுபத்தி வாங்கி வைத்திருந்தான்.

மூவருமாக உம்மாவும், வாப்பாவும் அடங்கப்பட்டிருந்த கபுறடிக்குச் சென்ரேம். இருவரின் கப்றுகளும் அருகருகே இருந்தன. விரித்துக்கிடந்த இரண்டு பாய்களில் இருவரும் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதுபோல் என் கண்களுக்குத் தெரிந்தது.

நாங்கள் அருகில் சென்ரேம். கப்றுகளைப் பார்த்ததுமே என் இருதயம் விம்மிப் புடைக்க..... கண்கள் தாரை தாரையாக கண்ணீரைச் சொரிந்தன. ஏங்கி . ஏங்கி... விம்மி விம்மி.. அழத்தொடங்கினேன். நஜீமா என்னை உற்றுப்பார்த்தாள். அவள் கண்களும் கலங்குவது எனக்குத் தெரிந்தது.

உம்மாவின் கப்றின் கால்மாட்டில் நான் அப்படியே குந்திவிட்டேன் அவருடைய வெண்மையான மலர்ப் பாதங்களை அள்ளி அணைத்து என் முகத்தை அவைகளில் புதைத்து... என் ஆசைதீர முத்தமிடுவதாக நினைத்தேன். உம்மா... என் சீதேவி உம்மா... என்னைத் தனியே விட்டுட்டுப் போயிட்டியே..... என் மனம் கதறிக் கதறி அழுதது. ஏங்கி ஏங்கி அழுதது.

என்னையே மறந்து... என் உம்மாவின், வாப்பாவின் எண்ணத்தில் ஆழ்ந்து... நான் நீண்டநேரம் குந்திக் கொண்டிருந்தேன்.

''அல்லாஹ்வே! என் பெற்ரேரின் பிழைகளை மன்னித்தருள். அவர்களை சொர்க்கத்தில் ஒன்ருக சேர்த்துவிடு. அவர்களின் பாவங்களை மன்னித்தருள்'' என் இதயம் அவர்களுக்காகப் பிரார்த்தித்தது.

''நவாஸ் எழும்பு''

மஜீது என் கரங்களைப்பற்றி தூக்கி நிறுத்தினுன்.

ஊதுபத்திகளைக் கொளுத்தி இருவரின் கப்றுகளிலும் குற்றிவிட்டோம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

மாமியின் தொல்லைகள் நாள் செல்லச்செல்ல அதிகரிக்கத் தொடங்கின. என்னுடைய பொறுமை உச்சக்கட்டத்தை அடையும் அளவுக்கு அவை சென்றன.

எப்போதாவது ஒருநாள் பாடசாலைக்கு சென்றுவந்தேன். மாமா வீட்டில் நிற்கும்போதுதான் செல்வேன்.

எட்டாம் வகுப்பு. கடைசிப் பரீட்சை நடைபெற்றது. சில பாடங்களுக்கு மட்டுமே நான் சமுகமளித்திருந்தேன்.

பாடசாலை விடுமுறை தினம். நானும் பாடசாலைக்குச் சென்றேன்.

அதிபர் என்னை அவருடைய அறைக்குள் அழைத்தார்.

அவருடைய மேசைக்கு முன்னால் அமைதியாக நின்றேன். அருளொழுகும் முகம். சற்று வழுக்கைத்தலை. கண்ணாடி போட்டிருப்பார்.

''நவாஸ்! உன்னுடைய றிப்போர்ட் புத்தகத்தைப் பார்த்தேன். வரவர உன்னுடைய புள்ளிகள் குறைந்து வருகின்றன. இந்த வருடத்திலேயே நீ ஐம்பது நாட்கள் தான் ஸ்கூலுக்கு வந்திருக்கே. ஒவ்வொரு பரீட்சையிலும் முதலாவதா வாற நீ. இம்முறை இருபதாவது ஆளா வந்திருக்கே. என்ன காரணம்?''

அவர் என்னுடைய வாப்பாவைப்போல. அவரிடம் மனம்விட்டுக் கதைக்கலாமா என ஒருகணம் சிந்தித்தேன். எனினும் மாற்றார் ஒருவரிடம் என்னுடைய குடும்ப நாற்றத்தை வெளியிடுவது எனக்கு பண்பாகத்தெரியவில்லை.

மௌனமாக நின்றேன்.

''ஏன் பேசாம நிக்கிறே? எனக்கு எல்லாமே தெரியும். உன் வகுப்பு ஆசிரியர் என்னிடம் எல்லாமே சொன்னார். பெற்றோரை இழந்த உனக்கு இத்தகைய ஒரு நிலை வரக் கூடாதுதான். அதற்காக படிப்பிலே கவனம செலுத்தாம விடக்கூடாது. உன்னைப் படிப்பித்து இந்த சமூகத்திலே ஒரு பெரிய ஆளாக ஆக்கணும்னு உன் தகப்பன் எவ்வளவு மனக்கோட்டை கட்டியிருப்பார். அதை நினைத்துப்பார்''

தொடர்ந்தும் மௌனமாக நின்றேன். இவருக்குத்தான் எல்லாமே தெரிந்திருக்கிறதே. நான் எதற்காகக் கதைக்க வேண்டும்?

''நவாஸ். நான் இந்தவருட முடிவிலே இந்த ஸ்கூலில இருந்து கொழும்புக்கு மாறிப்போறன். ஆனா என் ஸ்கூலிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த உன்னைப்போன்ற ஒரு கெட்டிக்கார மாணவனின் கல்வி இடைநடுவிலே மண்ணுப்போவதை நினைக்கும்போது துக்கமா இருக்கு. உன்னைப்போன்ற மாணவர்கள்தான் இன்றைக்கு இந்த சமுதாயத்துக்குத் தேவை. அந்நியர் ஆதிபத்தியத்திற்கு ஆளாகி அபிவிருத்தியடையாம இருந்த இந்த நாட்டை கட்டிஎழுப்ப உன்னைப்போன்றவர்கள் தேவை. இதை நல்லா உணர்ந்துக்க. பிச்சை எடுத்தாவது படி''

தொடர்ந்து அமைதியாக நின்றேன். இவர்தான் என்னைப்பற்றி எவ்வளவு அறிந்து வைத்திருக்கிறார்! என்னிடமிருந்து எவ்வளவு எதிர்பார்க்கிறார்! என்மேல் .. என் எதிர்காலத்தின்மேல் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறார்!

''நவாஸ். பிள்ளையே இல்லாத எனக்கு அல்லா உன்னைப்போன்ற ஆயிரக்கணக்கான பிள்ளைகளைத் தந்திருக்கிறார். நான் உன்னைப் பெறுவிட்டாலும், நீ எனக்குப் பிள்ளையப்போல. உனக்கு என்ன வேண்டுமோ நான் உங்க ஊரை விட்டுப்போக முன்னாலே என்கிட்டே கேள். நான் வாங்கித் தாறன். ஆனா நீமட்டும் படிப்பை விட்டுவிடாதே. உன் வாழ்க்கையிலே நீ நல்லா இருந்தா, அதற்கு நானும் காரணமாயிருந்தேன் என்ற மனநிம்மதியை எனக்கு ஏற்படச் செய்''

அதிபருடைய ஒவ்வொரு வார்த்தையும் என் இதயத்தில் தேனைப் பாய்ச்சின. ஓடோடிச்சென்று அவரை அணைத்து அவர் தோளில் என் முகத்தைப்புதைத்து அழவேண்டும் போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

அறிவாளிகள் அறிவாளிகள்தாம்.

''நவாஸ். ஏன் மகன் பேசாம நிக்கிறே?''

என் நெஞ்சு துக்கத்தால் வெடித்துவிட்டது. நான் ஏங்கி ஏங்கி அழத்தொடங்கினேன்.

அவர் கதிரையில் நின்றும் எழுந்தார். அறைக்கதவு சாத்தியிருந்தது. என் அருகில் வந்தார். என் தலையைத் தடவிவிட்டார். கண்ணீரைத் துடைத்துவிட்டார்.

''மகனே! உன் கதை முழுதுமே எனக்குத்தெரியும். நீ இப்போது அனுபவிக்கும் வேதனைகளும் எனக்குத்தெரியும். நீ அரிசிப்பெட்டி சுமந்து. அதிலே கிடைச்ச பணத்திலே ஊதுபத்தி வாங்கி உன் பெற்றோரின் கபுறுகளில் கொளுத்தி வைத்ததும் எனக்குத்தெரியும். எப்படி உன் வாழ்க்கை எனக்குத் தெரியும் என நினைக்கிறாயா? உன் சிநேகிதன் மஜீதின் தகப்பன்தான் எனக்கு தினசரி பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவார். அவர்தான் சொன்னார்'' கூறியவாறு அவருடைய சேர்ட்டினுள் இருந்து பத்துரூபா நோட்டுக்கள் இரண்டை எடுத்து என்னிடம் தந்தார்.

''வேண்டாம் சார். வேண்டாம் சார். யாருக்கிட்டயுமே கைநீட்டி வாங்கக் கூடாதுண்ணு வாப்பா அடிக்கடி சொல்வார் சார்'' நான் மறுத்தேன்.

''நானும் உன்னுடைய தகப்பனைப்போல்தான். இதை நீ வாங்கு. உன் வாழ்க்கையில என்ன கஸ்டம் வந்தாலும் படிப்பை நிறுத்திவிடக்கூடாதுண்ணு மனதிலே சத்தியம் செய்துக்க''

அவர் நீட்டிய நோட்டுக்களைப் பெற்று கண்களில் ஒற்றிக்கொண்டேன்.

''நீ வகுப்பிலே இருபதாவது ஆளா வந்தாலும் உன்னை வகுப்பேற்றி இருக்கிறேன். அடுத்த வருடம் ஒவ்வொரு பரீட்சையிலும் நீ முதலாவது ஆளா வரணும். அப்படி வந்ததும் எனக்கு கடிதம் எழுதி தெரிவி. இந்தா என்னுடைய கொழும்பு வீட்டு விலாசம்'' ஒரு சிறிய கடதாசி அட்டையை என்னிடம் தந்தார்.

''சரி. போ''

நான் கண்களைத் துடைத்தவாறு அறையிலிருந்து வெளியேறினேன்.

திடீரென என் வாப்பாவின் எண்ணம் எழுந்தது.

''வாப்பா... நான் உங்க கபுறடியிலே குந்தியிருந்து உங்களுக்காகப் பிராத்தித்தேன். ஆனா வாப்பா.. உங்களுக்குப் பதிலாக தகப்பனாக என்மீது அன்புகாட்ட எனக்கு ஒருவரைக் காட்டித் தந்துட்டீங்களே'' வாப்பாவை நினைத்து அழத்தொடங்கினேன்.

★ ★ ★

மார்கழிமாத மழை காலம் முடிந்து அடுத்த வருடம் தொடங்கியது.

நான் ஒன்பதாம் வகுப்புக்கு ஏற்றப்பட்ட செய்தியை மாமியிடம் கூறினேன். அவர் காதால் கேட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை.

சஜீமா ஐந்தாம் வகுப்புக்கு ஏற்றப்பட்ட செய்தியை மாமியிடம் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கேட்டீங்களா, நஜீமா வகுப்பேத்தப் பட்டுட்டாளாம். வகுப்பிலே முதல் ஆள் அவள்தானும்'' மாமாவிடம் கூறி குதூகலித்தார்.

''நீ வகுப்பிலே எத்தினியாவது ஆள்டா?'' மாமி கேட்டார்.

''இருபது''

''இரு...ப...தா? அதுதானே பார்த்தேன். உனக்கு மூளை இருந்தாத்தானே. புத்தியில்லாதவனுக்கு படிப்பு எதுக்கு?'' மாமி விரல்களைச் சொடித்தவாறு வெறுப்புக் கொட்டினுள்.

''டேய். உனக்குத்தேவையான புத்தகங்களைச் சொல்டா. நான் வாங்கித்தாறன். ஒழுங்கா ஸ்கூலுக்குப் போடா'' மாமா கூறியதும், மாமி கண்களை உருட்டியவாறு அவரைப் பார்த்தார். அதற்கிடையில் மாமா மறுபக்கம் பார்த்த வாறு தூர நடந்துவிட்டார். அவருக்கு மாமியைப்பற்றித் தெரியாதா?

''சரிதான். அவரு இவனைப் படிக்கச்சொல்லி உற்சாகம் கொடுக்கிருரு. இவன் படிக்கப்போஞ இத்தினி பிள்ளைகளையும் வைச்சுக்கொண்டு இந்த இழவு வேலைகளையெல்லாம் நான் தான் தனி ஆளா செய்யணும். என் தலையெழுத்து! இந்த தறுதலை, உம்மாவையும், வாப்பாவையும் தின்னுட்டு என்னைத் தின்ன இங்க வந்திருக்கு'' மாமி தலையில் இரு கைகளாலும் அடித்தவாறு முணுமுணுத்தார்.

சில நாட்கள் சென்றன.

ஒருநாள் மாமா தலையைத் தொங்கப்போட்டவாறு வீட்டுக்கு வந்தார். வேளாண்மைச் செய்கையில் பாரிய நட்டம் ஏற்பட்டுவிட்டதாக மாமியிடம் கூறினுர். கடந்த வருடம் கூட அவருக்கு நட்டம் ஏற்பட்டது எனக்கு நினைவு இருக்கிறது.

''நான் படிச்சுப்படிச்சு சொன்னேன். இந்த பீடை எப்ப வீட்டுக்கு வந்தானே, அப்பவே நமக்கு சனியன் புடிச்சிட்டென்று. போன வருசமும் நட்டம். இந்த வருசமும் நட்டம். இவன் இங்க இருக்கப்போற ஒவ்வொரு வருசமும் நட்டந்தான் ஏற்படும். இவனுக்கு பாலும் தேனும் கொடுத்து வளர்த்ததுக்கு நமக்கு இதுவும் வேணும், இன்னும் வேணும்'' மாமி புறுபுறுத்தார்.

''எதுக்காக அதுக்கும் இதுக்கும் முடிச்சுப்போடுறே? வேளாண்மை பூக்கிற நேரத்தில்ல மழை பிடிச்சிட்டு. நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெல்லாம் பதராயிற்று. அதுக்கு இவன் என்ன செய்வான்? அவன் அனதை. அவனை நீ நல்லா வைச்சிருந்தா .. அல்லாஹ் நமக்கு முகம்பார்பான். நீ அவனை நடத்துறது தான் எனக்குத் தெரியுமே''

''ஆ மா நான் உங்க மருமகனை அடிச்சி திங்கிறேனுக்கும். வாப்பா உம்மா இல்லாத அனதை. பாவம். வீட்ட கிடக்கட்டும் என்று நான் இங்க வைச்சுக்கொண்டிருக்கிறதும் காணும உங்க கதைவேற கேட்கவேண்டியிருக்கு. அவனை இங்க வைச்சுக்கொள்ள அனுமதித்தேனே. அதுக்கு எனக்கு பழசால அடிக்கணும்'' மாமி தலைமயிரை பிய்த்துக்கொண்டு சப்தமிட்டு அழத்தொடங்கினர்.

நான் சமையல் பாத்திரங்களை கழுவுவதற்காக கிணற்றடிக்கு விரைந்தேன்.

---

# 29

இருந்தாற்போலிருந்து மாமியின் கைக்குழந்தைக்கு காய்ச்சல் அடிக்கத்தொடங்கியது. மாமி பதறிபோனர். சதா குழந்தையை மடிக்குள் வைத்துக்கொண்டிருந்தார். மாமாவின்மேலும் என்மேலும் 'வள் வள்' எனப் பாய்ந்தார் நான் அங்கு இருப்பதற்கு மாமாதான் காரணமென்று அவர்மேல் மாமிக்கு சரியான கோபம். மாமாவும் அதைத் தெரிந்து வைத்திருந்தார்.

''குழந்தைக்கு நெருப்பா காய்ச்சல் அடிக்குது. ஏன் பார்த்துக்கொண்டு நிக்கிறீங்க. போய்க் காதர் முகைதீன் பரிசாரியாரைக் கூட்டிவாங்க'' மாமி கட்டளையிட்டார்.

''அந்தப் பரிசாரி பச்சைக் கள்ளன். என் தங்கச்சிக்கு அவன் பார்த்து ஒன்றுமே சுகமாகல்ல. வேற யாரையும் பார்க்கலாம்''

''யாரையும் பார்க்கவாணு. அவரத்தான் கூட்டிவாங்க. உங்க தங்கச்சி மவுத்தானதுக்கு அவரா காரணம்? இந்தா நிக்கானே. இவன்தான் காரணம். போங்க. போய்க் கூட்டிட்டு வாங்க''

மாமா வெளியேசென்று பரிகாரியைக் கூட்டிவந்தார்.

''இதிலே பாருங்க. ஒரு பெரிய தோசம் குழந்தைக்கு இருக்கு. கோழி நேந்துவிடணும். தண்ணிக்கரையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்பு களிக்கணும்'' என்றார் பரிகாரி, குழந்தையின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு.

''தோசம்தாங்க. அதுதான் முன்னுக்கே தோசம் நிக்குதே. அங்க உம்மாவையும், வாப்பாவையும் தின்னிச்சு. இப்ப இங்கவந்து இந்தப் பச்சிளம் குழந்தையைத் தின்னப் போகுதாக்கும்'' மாமி மாமாவுக்கும், எனக்கும், வைத்தியருக்கும் கேட்கக்கூடியவாறு புறுபுறுத்தார்.

''நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு'' மாமா மாமியைப்பார்த்துக் கடிந்தார்.

''ஏன் வாயை மூடணும்? நான் உண்மையைத்தான் சொல்றேன். இவன் இங்க வந்தப்புறம்தான் வேளாண்மை ரெண்டு வருசம் நட்டமாயிட்டு ஆண் குழந்தைதான் பொறக்கும்னு நம்பிக்கிட்டிருந்தேன். பொண் குழந்தை தான் மறுபடியும் பொறந்திருக்கு. இப்போ குழந்தைக்கு அஞ்சுநாளா விடாம காய்ச்சல் அடிக்குது. இதுக்கெல்லாம் யாரு காரணம்? இவன்தான். இந்த மூதேவிதான்''

அங்கு நிற்கவே எனக்கு அவமானமாக இருந்தது. எங்கேயாவது ஓடிவிடலாமா என தோன்றியது எங்கே ஓடலாம்? நான் எங்கே போகலாம்? நான செக்குமாடு. சுற்றிச்சுற்றி அந்த வீட்டுக்குள்ளேயே வளைய வரவேண்டியதுதான். என் தலையெழுத்தை நொந்தவாறு வாசலுக்குச் சென்றேன்.

★ ★ ★

இரண்டு கிழமைகள் சென்றன.

மாமா வயலுக்குச் சென்றுவிட்டார். ஒரு கிழமைமட்டில் வயலில் நிற்பதாகக் கூறிவிட்டுச் சென்றார்.

திரும்பவும் திடீரென கைக்குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டது மாமி பதறினார். ஏதேதோ கைவைத்தியம் செய்தார். இரவாகியது. யாரோ ஒரு கிழவி வீட்டுக்கு வந்து வட்டிக்காசு கொடுத்துவிட்டுச் சென்றாள். கிழவியிடம் மாமி குழந்தையின் நோயைப்பற்றி ஒரு புராணமே பாடினார். மாமாவுக்கு ஏசினார். எனக்கு ஏசினார். குழந்தைக்கு அடிக்கடி நோய் ஏற்படுவதற்கு நான்தான் காரணமெனச் சொன்னார்.

என் இதயம் கொதித்தது.

நேரம் செல்லச்செல்ல குழந்தை நோயின் அவஸ்தையால் வீரிட்டு அழுதது. மாமி அதை ஆறுதல்படுத்த எவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவோ முயற்சி எடுத்தார். குழந்தை அழுகையை விட வில்லே. தொடர்ந்து அழுதது.

நான் மெதுவாக மாமியின் அருகில் சென்று ''மாமி, குழந்தையை என்கிட்டே தாங்க. ஊஞ்சலில் வைத்து நித்திரையாக்கி தர்றேன்'' என்றேன்.

அவர் என்னை வெறுப்புடன் பார்த்தார்.

''போடா அங்கால! தோசம்! உன்னாலதான்டா எனக்கு இவ்வளவு கஸ்டம். என் முன்னுக்கு வராதடா. போடா'' குரைத்தார்.

சுவர் ஓரமாக பழைய பாயொன்றை விரித்து படுத்தேன்.

குழந்தை விடியவிடிய அழுவதும் அடங்குவதுமாக இருந்தது. மாமியும் முழு இரவும் நித்திரைகொள்ளவில்லே.

அந்த இரவு எனக்கும் மாமிக்கும் விடியாத இரவு. இரவெல்லாம் எனக்கு என்னுடைய தற்போதைய வாழ்க்கையைப்பற்றிய சிந்தனே.

'நான் கல்வியில் முன்னேறவேண்டும் என அதிபர் எவ்வளவு அன்பாக சொன்னர். இந்த சமுதாயத்திற்கு என்னேப்போல் ஆட்கள் தேவையாமே. நான் படித்து பெரிய ஆளா வரணும்னு என் வாப்பா எவ்வளவு கற்பனே செய்து இருந்திருப்பார். இந்த வீட்டில் நான் தொடர்ந்து இருந்தால் என்னால் முன்னேறமுடியுமா?'

'முடியாது! முடியாது!' என் மனம் மறுத்தது.

'அப்படியானல் நான் எங்கே போகலாம்? சாச்சியின் வீடு? அது மகியாதார் முற்றம். அங்கே என்னல் போக முடியாது. மஜீதின் வீட்டில் இருக்கலாமா? சே! சே! இந்த கிராமத்திலேயே இன்னுமொருவர் வீட்டில் இருந்தால் நாலுபேர் என்ன சொல்வார்கள்? மாமா தான் விடுவாரா? செவியைப் பிடித்து இழுத்துவந்துவிடுவார். அப்படித்தான் போவதென்ருலும் நஜீமாவைப் பிரிந்து நான் எப்படி போவேன்? அவள்தான் எனது உயிர். அவள்தான் எனது பாலேவனச் சோலே'

நான் திரும்பத் திரும்ப எண்ணங்களே அசைபோட்டேன். குழந்தை அழுதுகொண்டிருப்பதும், மாமி தனக்குள்ளேயே முணுமுணுப்பதும், குழந்தையை சாந்தப்படுத்துவதும் என் காதுகளில அடிக்கடி ஒலித்துக்கொண்டிருந்தன.

அதிகாலே சுப்ஹு தொழுகைக்கான ஜும்ஆ பள்ளி வாயலின் பாங்கு ஒலி எனக்கு துல்லியமாகக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள். பிள்ளைகள் எல்லாம் எழுந்துவிட்டனர். நான் அடுப்படியில் தேநீர் தயாரித்துக்கொண்டு நின்றேன். மாமி இன்னும் எழும்பவில்லை. அதிகாலையில்தான் அவர் நித்திரையாகியிருக்கவேண்டும். கைக்குழந்தையை அணைத்தவாறு படுத்தார்.

நஜீமா என் அருகில் வந்தாள்.

''நீ விலகு. உம்மா எழும்புவதற்கு முன்னால நான் உனக்குத் தேத்தண்ணி போட்டுத்தாறன்'' என்றாள்.

''வேணும் நஜீமா. உனக்குத் தேத்தண்ணி போட தெரியா. அப்படித்தான் தெரிந்தாலும் உங்க உம்மா கண்டுட்டா எனக்கு ஏசுவாங்க. உன் தங்கச்சியின் காய்ச்சலுக்கு நான்தான் காரணமாம்''

''அவவுக்கு பைத்தியம். ஆமா. ஏன் உன் கண்கள் சிவந்திருக்கு? அழுதியா?''

''எனக்கு ரா விடிய விடிய நித்திரையே இல்ல''

''ஏ?''

''என் தற்போதைய நிலையைப்பத்தி யோசித்துக்கொண்டிருந்தேன். எனக்கு இந்த வீட்டிலே இருக்கவே பிடிக்கல்ல. ஒவ்வொரு விணுடியும் ஒரு யுகமா போகுது''

''அப்போ இந்த வீட்டைவிட்டுப் போப்பிறியா?''

''போகலாமா, வேண்டாமா என்பதுதான் என் சிந்தனை. உங்க உம்மாவின் கதைகளைக் கேட்டா உடனேயே போகணும்போல இருக்கு. ஆனா உன்னை நினைச்சா இங்கேயே இருக்கணும்போல தோணுது. நீ என்னைப் போகச்சொன்னா நான் போறன்''

''நீ என்னை விட்டிட்டுப் போயிடுவியா? எங்க உம்மா வாப்பாவைவிட எனக்கு உன்னோடதான் இரக்கம். நீ என்னை விட்டுட்டுப் போயிடாத. சொல்லு போவியா? சொல்லேன்''

''இல்ல நஜீமா. நான் போகமாட்டேன். போகவே மாட்டேன்''

''அப்ப விலகு. நான் உனக்கு தேத்தண்ணி கலந்து தாறன்''

நான் சற்று விலக... அவள் அடுப்பின் அருகில் குந்தி .. அடுப்பை ஊதி விறகை எரியவைத்து .. பானைக்குள் தண்ணீரைக் கொதிக்கவைத்தாள்.

நான் நான்கைந்து அடிகள் முன்னால்சென்று சீனி வைத்திருந்த போத்தலைத் தேடி எடுத்துத் திரும்புவதற்குள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்பில் தண்ணீர் கொதித்த பானையை வெறுங் கையால் நஜீமா தூக்க பானை தீயாக அவளுடைய விரல் களைச் சுட திடீரென கொதிநீர்ப் பானையை அவள் கீழே போட... அவளுடைய கை, கால், தொடைகளில் கொதி நீர் சிதற .

ஒரு விணடியில் இவ்வளவும் நடந்துவிட்டது.

நஜீமா வேதனை தாங்காமல் சப்தமிட்டு அழத்தொடங் கினாள். 'ஹோ 'வெனப் பெரிய சப்தத்தில் அழுதாள்.

மாமி திடுக்குற்றுக் கண்விழித்தார்போலும். நஜீமா வின் ஒப்பாரி அவருடைய காதுகளில் நாராசமாக ஒலித் திருக்கவேண்டும். ஆழ்ந்த நித்திரையிலிருந்த அவரை தூங்க விடாமல் எழுப்பிய நஜீமாமீது அவருக்கு திடீர் கோபம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

பதறப்பதற எழுந்து குசினிக்குள் ஓடிவந்தார். அவர் எழுந்த வேகத்தில் அணைப்பில் படுத்திருந்த குழந்தை கண் விழித்து அழத்தொடங்கியது. ஒரு பக்கம் நஜீமாவின் ஒப் பாரி. மறுபக்கம் குழந்தையின் ஓலம்.

''என்னடி? என்னடி நடந்தது?'' மாமி பதறினார்.

நஜீமா தொடர்ந்து வேதனையால் ஆ ஊ என அழு தாள் நான் பயத்தில் நடுங்கியவாறு ஒரு மூலையில் திரு திருவென முழித்துக்கொண்டு நின்றேன்.

''அல்லாவே! கொதிதண்ணி ஊத்திக்கிடக்குதே! கொப்புளிச்சுட்டுதே! எப்படிடி ஊத்துணட? ஆருடி ஊத் துன? நீ ஏன்டி இங்க வந்த? எங்கடி அந்த கழுதை?'' கேள்விக்குமேல் கேள்வியாக மாமி அடுக்கினார்.

நான் சற்று முன்னால் வந்தேன்.

''நீ இங்கதான் நிக்கிறியா? என்னடா நடந்தது?''

நடந்தவற்றைச் சொன்னேன்.

''நீ பொய் சொல்றுடா. நீதான்டா அவளை தண்ணி யைக் கொதிக்கவைக்க சொல்லியிருப்பாய். இஞ்ச பாருடா. பணியாரம். பணியாரமா கொப்பளிக்குதேடா. ஏன்டா இங்ககிடந்து தொல்லைப்படுத்தறே?''

''அதுதான் மாமி செய்யப்போறதா சொல்லிச்சு'' நான் நடுங்கியவாறு கூறினேன்.

''நீ பொய்சொல்றுடா. அவள்தான் சொன்னாலும் நீ ஏன்டா அவளை விட்டே? என்னை ஏன்டா கொலருய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை .. உன்னை சும்மா விடக்கூடாடா. உனக்கு புத்தி வரணும்னு உனக்கு சூடு வைச்சுத்தான் உன்னைத் தூரத்தணும். அவளுக்கு கொப்பழிக்கிருப்ல உனக்கும் கொப்பழிக்கணும்'' கூறியவாறு திடீரென அடுப்பில் எரிந்துகொண்டிருந்த விறகுக்கட்டையை கையில் எடுத்து மறுகையால் எட்டி என்னைப் பிடித்தார்.

''வேணும் மாமி. வேணும் மாமி. என்னை உட்டுடுங்க. என்னை உட்டுடுங்க மாமி. நான் போயிடுறன். நான இங்க வரவேமாட்டன். நான் போறன் மாமி. என்னை உட்டுடுங்க'' நான் பதறினேன். புழுவாக துடித்தேன்.

மாமியின் கோபம் எனக்குக் கருணைகாட்ட விடவே இல்லே. அறைக்குள் கைக்குழந்தை வீரிட்டுக் கதற... ''உம்மா... மச்சானை உட்டுடும்மா .. மச்சானுக்கு சூடு போடாதம்மா '' என நஜீமா வீடு அதிர ஒப்பாரிவைக்க ''மாமி என்னை உட்டுடுங்க மாமி .. நான் போறன் மாமி .. நான் இங்க வரவேமாட்டன். மாமி எனக்குச் சூடு போடாதீங்க மாமீய் ..'' என நான் அலறித்துடிக்க... அவர் எரிந்து தணலாக இருந்த விறகுக்கட்டையால் என் வலது காலில் சரேலென இழுத்துவிட்டார். நான் ''உம்மா '' என விண்ணதிர சபதமிட்டேன். என் காலில் தோல் பொசுங்கி மணத்தது. நஜீமா ''என்ட அல்லாவே .'' என அலறினள்.

''போடா போடா நாயே வெளியே... இனிமே இந்த வீட்டுப்பக்கம் வந்தே காலை முறிச்சு கைலே தருவேன். நான் சூடுபோட்டதை ஆருக்கிட்டயாவது சொன்னே, இல்ல உங்க மாமாகிட்ட சொன்னே .. ஏன்டாம்பிக்கிட்ட சொல்லி உன்னைக் கழுத்தை முறிச்சி கொண்ணு போடுவேன். போடா... போடா வெளியே .'' மாமி ஆர்ப்பரித்தார்.

''வாணு உம்மா. மச்சானை போகச்சொல்லாதே அவன் வாப்பா உம்மா இல்லாத அனுதம்மா... போகச்சொல்லாதம்மா .. நீ போகாத மச்சான .. நீ போகாத .'' நஜீமா அனல் புழுவாக துடித்தாள்.

''ஓய்டி. அவன் உன்ட மாப்பிள்ளை பாரு. போடி உள்ளே. போடின்னு .. டேய் .. ஏன்டா நிக்கிறே...? போடா...'' என் பிடரியில் கையை வைத்து தள்ளிவிட்டார். நான் வாசலில் குப்புற வீழ்ந்தேன்.

எழுந்தேன். எழுந்து நிமிர்ந்து நின்றேன். கூடவே என் தன்மானமும் எழுந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை இழுத்து, இழுத்து அடுத்த கதவால் மண்டபத்தினுள் சென்றேன் எனது புத்தகங்கள், கொப்பிகள், உடுப்புக்களை ஒன்றாக சேர்த்து கைகளில் எடுத்தேன்.

என் செய்கைகளை நஜீமா சுவர் ஓரமாக பார்த்துக் கொண்டு நின்றாள் அவள் கண்கள் குளமாக... அந்த அழகு முகம் நிறைய நீரோடைகளாக...

மெதுவாக வெளிக்கதவருகில் சென்று, மீண்டும் நஜீமாவைத் திரும்பிப்பார்த்தேன்.

''வா...வாறேன், நஜீமா...'' என்றேன். அவளின் பதிலுக்காக நான் காத்திருக்கவில்லை. அவளின் ஹோ என்ற கூக்குரல் என் செவிப்பறைகளில் மோதி, உள்ளே புகுந்து இருதயத்தில் சங்கமித்தது.

தெருவுக்கு வந்தேன். என் நெஞ்சு விம்மி வெடித்து என்னை அறியாமல் பலமான சப்தம் வெளிக்கிளம்பியது.

வலதுகாலை இழுத்து, இழுத்து போக்கிடம் இன்றி போகிறேன்.

---

# 30

கால்கள் தானாகவே மஜீதின் வீட்டை நோக்கிச் சென்றன.

மஜீதின் உம்மா என் நிலைமையைப் பார்த்து பதறிப் போனார்.

''என்னமகன் நடந்தது? உனக்கு என்ன நடந்தது?''

நான் உண்மையைச் சொல்லலாமா என நினைத்தேன். அந்த சந்தர்ப்பத்திலும் மாமியைக் காட்டிக் கொடுக்க நான் விரும்பவில்லை.

''காலேலே தேத்தண்ணி வைக்கும்மோது நெருப்புக் கொள்ளி கால்ல பட்டுட்டு. மாமி ஏசினாங்க. அங்க இருக்கப் பிடிக்கல்ல. அதுதான் உடுப்பை எல்லாம் எடுத்துட்டு வந்துட்டன்''

என் கதையை மஜீதின் தாய் நம்பினாரோ என்னவோ, மஜீது நம்பவில்லை என அவன் முகம் சொல்லிற்று.

''கொண்டா மகன். மருந்து போட்டுடுறன்''

''இல்ல பெரியம்மா. மருந்தைத் தாங்க. நானே போட்டுக்கிறேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் அருகில் சென்று காலைக்காட்ட எனக்கு விருப்ப மில்லை. அவர் காயத்தை உற்றுப்பார்த்தால் சூடு போடப் பட்டுள்ளதாக அறிந்துகொள்வார்.

ஏதோ குளிசைகளைப் பொடியாக்கித் தந்தார்.

சாரனை மேலே உயர்த்தி, சீலைத்துண்டொன்றால் இரத் தத்தைத் துடைக்கும்போது மஜீது அருகில்வந்தான்.

''நவாஸ், என்ன நடந்ததென்ற உண்மையை என்னி டம் அப்புறமா சொல்லு. கொண்டா நான் மருந்துகட்டி விடுறன்''

அவன் காயத்தைத் துடைத்து துப்புரவாக்கி, மருந்துத் தூளை அமர்த்தி சீலையால் கட்டுப்போட்டான். மருந்துத் தூள் பட்டதும் ஒரே எரிவாக எரிந்தது.

அன்று பகல் மஜீதின் உம்மா எனக்கு உணவு தந்தார். மூன்று சுறிகள், சோறு. அவரே சோற்றைப் பிசைந்து தந் தார். போதாதற்கு தயிரும், வாழைப்பழமும், சீனியும் சோற்றிலிட்டு பிசைந்து தந்தார். காலையில் ஒன்றும் சாப் பிடாததால் எனக்கு பசித்தது. வயிறு நிறைய சாப்பிட்டேன்.

''வா நவாஸ், வண்டியிலே ஏறி இருந்து கதைத்துக் கொண்டிருப்போம்'' மஜீது என்னை அணைத்தவாறு வாசலில் ஒருமூலையில் கிடந்த இரட்டை மாட்டுவண்டிலுக்கு அழைத் துச் சென்றான். நான் வண்டிலில் ஏற உதவிசெய்தான்.

''இப்போ சொல்லு. உனக்கு காலைல என்ன நடந்தது?''

''மஜீது, உன்கிட்ட உண்மையைச் சொல்றன். யாருக் கிட்டயும சொல்லாதே. வெளியே தெரிந்தா மாமிக்கு அவமானம். மாமி, என் நஜீமாவுக்கு உம்மா. தவிர, நான் அவருக்கு சோற்றுக்கடன் பட்டிருக்கேன்'' என்ற பீடிகை யுடன் காலையில் நடந்த அத்தனையையும் ஒன்றையும் ஒழிக் காமல் சொன்னேன்.

''அடி சண்டாளி! உன் மாமி இவ்வளவு கெட்டவளா?'' என்றான் மஜீத்,

நாங்கள் நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருந்தோம்.

''நவாஸ், நீ இப்போ என்ன செய்யப்போறே?''

''அதுதான் எனக்குத் தெரியல்ல. திரும்பவும் என்னால அவங்க வீட்டுக்குப் போகஏலா. நா போகக்கூடிய அடுத்த இடம் எங்க சாச்சிட வீடு. அங்க நான் போகவே மாட் டேன். சாச்சாட மூஞ்சைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது. உண்மையைச் சொல்லப்போனு, நான் இந்த கிராமத்திலே இருப்பதென்னு அடிக்கடி நஜீமாவைப் பார்க்கக் கூடியமாதிரி இருக்கணும். இல்லே, கிராமத்தைவிட்டே எங்காவது தூர போயிடணும். அப்படி போவதென்னு, உடனேயே போகணும். ஏன்னென்னு, வயலுக்குப் போயிருக்கிற எங்க மாமா வந்தா என்னை எப்படியும் அந்த வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடுவார்''

''அப்பிடின்னு எங்கே போவே?''

''கொழும்புக்குப் போயிடலாமான்னு யோசிக்கேன்?'

"நீ இதுவரையில கொழும்புக்குப் போனதே இல்லையே''

''அது எனக்கு கஸ்டம் இல்ல. அங்கபோனு ஏதாவது ஒரு கடையிலே கூலிக்கு சேர்ந்துடலாம். ஒரு ஓட்டல்ல ஒரு புடவைக் கடயிலே சேர்ந்துடலாம்''

''கொழும்புக்குப் போகப் பணம்?''

''எங்கிட்ட இருபதுரூபா இருக்கு. மாறிப்போன பிறின்ஸிபல் எனக்குத் தந்த பணம் இன்னும் எங்கிட்ட பத்திரமா இருக்கு''

''இவ்வளவு தூரத்துக்கு நீ தனியா போப்பிறியே. ஏன் நவாஸ், ஒரு வேலை செய்யேன்''

''என்ன?''

''பேசாம எங்க வீட்டிலே இருந்திடேன்''

''வேணு மஜீது. நா இந்த கிராமத்திலே இருந்தா நஜீமாவை அடிக்கடி பார்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும். அதனுலே வேறு பிரச்சினைகள் ஏற்படலாம்''

நான் கொழும்புக்கு செல்வதில் உள்ள சாதகபாதகங்களை நீண்டநேரமாக ஆராய்ந்தோம். ஈற்றில் அடுத்தநாள் பிற்பகல் நான் கொழும்புக்கு கோச்சு ஏறுவதாக தீர்மானித்தோம்.

''மஜீது. நான் ஊரைவிட்டுப் போகமுன்னுலே ரெண்டு காரியங்கள் செய்யணும். ஒன்று என் உம்மா, வாப்பாவின் கப்றடிக்குச் சென்று ஊதுபத்தி கொளுத்தி பிரார்த்திக்கணும். மற்றது நஜீமாவை எப்படியாவது ஒருதரம் சந்திச்சுடணும்''

''நஜீமாவை எப்படி சந்திக்கப்போறே?''

''நாளைக்கு அவ ஸ்கூலுக்கு வருவா. அங்க சந்திக்கலாம்''

பிற்பகலில் நானும், மஜீதும் என் பெற்றோரின் கப்றுகளுக்குச் சென்ருேம. ஊதுபத்திகள் கொளுத்திஞேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டநேரம் மௌனமாக நின்று என் பெற்றோர்களுக்காக இறைவனிடம் முதலில் பிரார்த்தித்தேன். என் கண்கள் கண்ணீர் வடிக்க... என் இதயம் குமுறிக் குமுறிக் கதைக்கத் தொடங்கியது.

''உம்மா... நீங்க இருவரும் என்னைத் தனியே விட்டுட்டு போயிட்டீங்க. நான் இப்போ இந்த ஊரைவிட்டே போப்பிறன்மா. என்னால மாமாட வீட்டை இருக்க ஏலா. நான் இப்பபோனா, எப்பவருவேனோ எப்ப உங்க கப்றடிகளுக்குவந்து உங்க பாதங்களை முத்தமிடப்போறேனோ.. எனக்குத் தெரியா நான் எங்க இருந்தாலும் நீங்க சொர்க்கத்திலே இருந்து எனக்காக பிரார்த்திங்க உம்மா. வாப்பா... நீங்களும் எனக்காக பிரார்த்திங்க''

மஜீது என் தோள்களைப்பற்றி உலுக்கும்வரை என்னை மறந்து நின்றேன்.

அடுத்தநாள்

நானும் மஜீதும், நஜீமா படிக்கும் பெண்கள் பாடசாலைக்குச் சென்றோம்.

அங்கு எங்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நஜீமா ஸ்கூலுக்கு வரவில்லையாம்.

அவளைச் சந்திப்பதானால் பிற்பகலுக்கிடையில் சந்தித்து ஆகணும். என் பிரயாணத்தை ஒத்திபபோடவும் முடியாது மாமா வருவதன்முன் ஊரைவிட்டு கிளம்பி ஆகணும். என் மூளை நரம்புகள் ஒன்றோடொன்று சிக்குறுவதுபோல உணர்ந்தேன். அவளுடைய வீட்டுக்குச்சென்று அவளைச் சந்திப்பதை தவிர வேறு ஒரு வழியுமே இல்லை. ஆனால் அதை நான் செய்யப்போவதே இல்லை. மீண்டும் ஒருதரம் என் மாமியின் முகத்தை நான் பார்க்கப்போவதே இல்லை.

நான் அல்லாடினேன். நேரம் கரைந்தது. பிற்பகலாகியது.

''மஜீது, எனக்கு ஓர் உதவிசெய். நீ எப்படியாவது நஜீமாவைச் சந்தித்து என் முடிவைச்சொல். ஊரில இருந்தா அவளைப் பார்க்காம என்னால இருக்க ஏலாதுன்னுதான் நான் இப்படி போறதா சொல். நான் எங்க இருந்தாலும்... என் உடலைவிட்டு உயிர் பிரியும்வரை அவள் என் மனதிலே என்னோடேயே இருப்பாள் என்பதைமட்டும் அவகிட்டே சொல்லிடு. தாய் தகப்பன் இல்லாத அனாதையான நான் அவளுக்காகத்தான் வாழப்போறன் என்பதையும் அவகிட்டே சொல்லிடு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஜீதின் உம்மாவிடம் விடைபெற்றேன். என் உடுப்புக்கள் கட்டப்பட்ட சிறிய ஒரு பார்சலைக் கையில் எடுத்துக் கொண்டேன். எங்கேயாவது சென்று ஒரு தொழில் கிடைத்தால் ஓய்வுநேரங்களில் படித்துக்கொள்ள சௌகரியமாக பாடசாலைப் புத்தகங்களையும் வைத்துக்கொண்டேன்.

நானும், மஜீதும் கிராமத்து ஒழுங்கைகளால் பிரதான பாதையை நோக்கி நடந்தோம்.

எனது இதயம் கதறத்தொடங்கியது. ஊரைவிட்டே போகிறேனு? எனது கால்கள் ஒவ்வொரு அடிகளாக வைக்க .. என் நஜீமாவுக்கு .. நான் நடந்து ஓடி விளையாடித் திரிந்த என் கிராமத்து மண்ணுக்கு... எனக்கு நிழல் தந்த ஆலமரத்துக்கு .. திட்டிக்கு நான் வாழ்ந்த பழைய வீட்டுக்கு . நான் தொழுத பள்ளிவாசலுக்கு குர்ஆன் ஓதிய மத்ரசாவுக்கு... நான்படித்த பாடசாலைகளுக்கு .. என் குடும்பத்தாருக்கு... என் நண்பர்கள் மீரான் போன்றவர்களுக்கு... என் ஆசிரியர்களுக்கு . என் மாமாவுக்கு .. வக்ர புத்தியுடைய என் மாமிக்கு... மீண்டும் என் நஜீமாவுக்கு .. பிரியாவிடை கூறுகிறேன்.

''நீங்க எல்லோரும் சந்தோசமா இருங்க. நான் போய் வாறன்...'' என் இதயம் கிராமம் முழுவதுமே கேட்க கூவி அழுதது.

நானும், மஜீதும் பிரதான பாதையை அடைந்து, பஸ்ஸுக்காக காத்துநின்று .. பஸ்ஸில் ஏறி அமர்ந்து . பஸ் கிராமத்து எல்லையைத் தாண்டும்வரை கண்ணுடிகளினூடாக கிராமத்தையே வைத்தகண் வாங்காது பார்த்திருந்து .. மட்டக்களப்பை அடைந்து .. புகையிரத நிலையத்துக்கு சென்று... டிக்கட் எடுத்தேன்.

புகையிரதம் புறப்பட ஆயத்தமாக நின்றது.

என் அருகில் மஜீது நின்றுன். நானும், அவனும் ஆளையாள் உற்றுப்பார்த்தோம். இருவர் கணகளிலும் கண்ணீர் பொலபொலத்தது. நான் என்ன நினைத்தேனே, சடுதியாக அவனை என் இருகைகளாலும் கட்டிப்பிடித்தேன். அவனும் என்னைக் கட்டிப்பிடிக்க... நாங்கள் ஆளுக்காள் ஒருவரையொருவர் அணைக்க...

''நா .. வாறன் மஜீது'' நாத்தழதழக்க கூறினேன்.

''போயிட்டுவா மச்சான். போனதும் கடிதம்போடு''

''நான் சொன்னதை நஜீமாக்கிட்டே சொல்லிடு''

''சொல்றேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் அவளைச் சந்திக்காம ஊரைவிட்டுப் போறதுக் கான காரணங்களைச் சொல்லிடு''

''சொல்றேன்''

''அவளை அடிக்கடி சந்தித்து, அவள் தொடர்பான விசயங்களை எனக்கு எழுது''

''செய்றேன்''

''நான் உனக்கு கடிதம் எழுதினாலும், நா இருக்கு மிடத்தைமட்டும் யாருக்கிட்டயும் சொல்லாதே. குறிப்பா மாமாவுக்குத் தெரியக்கூடாது''

''செய்றேன்''

புகையிரதம் புறப்பட கூச்சலிட்டது.

''நா வாறன் மஜீது ''

அவனைப் பிரியாமல் பிரிந்து புகையிரதத்தில் ஏறி... தொடர்ச்சியாக அவனைப் பார்த்துக் கையசைத்து .

புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது.

---

## 31

புகையிரதத்தில் ஒரு மூலையில் இடம் கிடைத்தது. கூட்டம் அதிகமில்லை. பலதரப்பினர் பிரயாணம் செய்தனர். எனக்கு அருகில் ஒரு பெண்மணி இருந்தாள். முன் இருக்கையில் இருவர் இருந்தனர்.

புகையிரத ஜன்னல் ஊடாக வெளியே பார்த்தேன். ஒரே இருட்டு. என் வாழ்க்கையின் எதிர்காலமும் இனி ஒரே இருட்டுதானு?

என் மனம் கிராமத்திலேயே இன்னும் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. நஜீமாவையே சுற்றிச்சுற்றி வலம்வந்தது.

நீண்டதூரம் புகையிரதம் ஓடியது.

நான் எங்கே செல்கிறேன்? கொழும்புச்குச் சென்ருல் எங்கே போவது? யாரிடம் உதவி கேட்பது? புகையிர தத்திலேயே யாரிடமாவது என் கதையைச்சொல்லி உதவி கேட்க முடியாதா? யாரிடம் கதைக்கலாம்? பக்கத்தி லுள்ள பெண்ணிடம் கதைத்தால் என்ன? அவருடன் கதைக்கக்கூடியவராக அவர்முகம் தெரியவில்லை. முகத்தில் ஒரே கடுகடுப்பு.

வயிற்றில் பசித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாகோ' பெயர்ப்பலகையை வாசித்தேன். என் அருகில் இருந்த பெண் இறங்கிச்சென்ருள். வடை விற்ருர்கள். வாங்கிச் சாப்பிட்டேன். வேறு யாரோ ஒருவர் என் அருகில் வந்து உட்கார்ந்தார். கால்சட்டை போட்டிருந்தார்.

என் கவனம் வேறு எங்கேயோ இருந்ததால் நான் அவரை அவ்வளவுக்கு சட்டைசெய்யவில்லை.

புகையிரதம் புறப்பட்டது. சாவகாசமாக பக்கத்தில் இருந்தவரை உற்றுப்பார்த்தேன். என் மனம் திடுக்குற்றது.

'இவரை எங்கேயோ சந்தித்ததுபோல் இருக்கே? எங்கே? எங்கே?' மனம் பதறியது.

''தம்பி எங்கே போறே?'' அவர் அன்பாகக்கேட்டார்.

'இவருடைய குரல் ஏற்கனவேயே கேட்ட குரலாக இருக்கிறதே. எங்கே? எங்கே? '

''ஐயா. நான் கொழும்புக்குப் போறேன்''

''தனியே வர்றியே? கொழும்புக்கு எங்கே போறே?''

எங்கு போவதாக சொல்லலாம்? உண்மையைச் சொல்லிடலாமா? வேண்டாம் ஆளை யார் என முதலில் தெரிஞ்சுக்கணும். கடந்த இரவு மஜீதீன் வீட்டில் அருகருகே பாயில படுக்கும்போது அவன் கூறியது, திடீரென ஞாபகத்தில் எழுந்தது. 'கோச்சியில நீ தனியே போறதாக யாருக்கிட்டயும் சொல்லிடாத. புள்ள புடிக்கிறவங்க வருவாங்க. உன்னை எங்காவது கூட்டிட்டுப் போயிடுவாங்க'

மௌனமாக இருந்தேன்.

''ஏன் பேசாம இருக்கிறே? நீ எங்கேயிருந்து வர்றே?'' அவர் மீண்டும் கேட்டார்.

என் கிராமத்தைக் கூறினேன்.

''நீ படிக்கலியா?''

''ஒன்பதாம் வகுப்பு படிக்கேன்''

''எந்த ஸ்கூல்ல படிக்கே?''

சென்ற கிழமைவரை படித்த என் பாடசாலையைக் கூறினேன்.

''அப்போ என் நாநாவை உனக்குத் தெரிந்திருக்கணுமே?''

''யார் சார் உங்க நாநா?''

''அப்துல்லா. உங்க ஸ்கூலிலே சென்ற வருசம்வரை அவர்தானே அதிபரா இருந்தாரு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனம் திடீரென இறைவனுக்கு நன்றி சொல்லியது.

''சார். நீங்க எங்க பிறின்ஸிபலின் தம்பியா? உங்களை முதன்முதல்ல பார்த்த நேரமா எங்கேயோ பார்த்தமாதிரி எனக்கு தோணிச்சு. உங்க நாநாவுக்கு நான் மகன்போல. அவரே என்கிட்ட சொல்லி இருக்காரு நான் அவருக்கு பிள்ளை போலன்னு''

''ஆமா. நீ இப்போ எங்கே போறே?''

என்னுடைய கதையை அவரிடம் சொல்வதில் எனக்கு ஒன்றும் பிழையாகத் தெரியவில்லை. அவர் எனக்கு அந்நியன் இல்லை. எதற்காக கொழும்புக்குப் போகிறேன் என்ற காரணத்தை அவரிடம் கூறினேன்.

''சார். எங்க அதிபர் எனக்கு இருபது ரூபா பணம் தந்ததாக சொன்னேனே. அதிலதான் டிக்கட் எடுத்து கொழும்புக்குப்போறேன். எனக்கு யாரும் உதவி செய்யல்லேன்னு அவருடைய வீட்டுக்காவது போகலாம்னு அவர் எனக்கு எழுதித்தந்த விலாசத்தையும் கையோட கொண்டு வாறேன்''

கையோடு கொண்டுவந்த பார்சலைப்பிரித்து அதனுள் இருந்த புத்தகமொன்றினுள் வைத்திருந்த விலாச அட்டையை எடுத்துக்காட்டினேன்.

''உன் கதை ரொம்ப பரிதாபமா இருக்கு. அல்லாதான் உன்னை என்கிட்டே சேர்ப்பிச்சு இருக்காரு. நீ எதுக்குமே பயப்படாத. நான் யாழ்ப்பாணம் இருந்து வியாபார விசயமா வாறன், நேரே எங்க நாநா வீட்டுக்குத்தான் போறேன். நீ என்னோட வா''

என் உள்ளம் மலர்ந்தது.

''சாப்பிட்டியா?''

''ஆமா சார்''

''என்ன சாப்பிட்டே?''

''வடை வாங்கி தின்னேன் சார்''

''வடையா? இரு. நான் கட்டுச்சோறு கொண்டு வாறன். இருவருமா சாப்பிடலாம்''

என்னுடைய அதிபர் மட்டுமல்ல, அவருடைய உடன் பிறப்பே அவரைப்போல்தான். கற்றவர்கள் பண்பாடு உள்ளவர்கள்தாம்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கொழும்பை அடையும்போது பொலபொல வென விடிந்துவிட்டது. புகையிரதத்தில் இருந்தும் இறங்கி வெளியே வந்தோம்.

எனக்கு பிரமிப்பாக இருந்தது. எவ்வளவு பெரியபெரிய கட்டிடங்கள்.. சாரிசாரியாக வாகனங்கள் பெருநாள் காலங்களில் கூட்டம்கூட்டமாக ஆட்கள் செல்வதுபோல பார்க்கும் இடமெங்கும் மனித கூட்டங்கள்.. நடைபாதை வியாபாரிகள்...

எதிரே வந்த பஸ்ஸில் ஏறி சிறிதுதூரம் பிரயாணம் செய்து ஓர் இடத்தில் இறங்கி... சற்று நடந்து... பெரிய வீடொன்றின்முன் நின்றோம்.

''இதுதான் என் நாநா வீடு''

எவ்வளவு பெரிய வீடு! அதிபரின் பெயர் ஆங்கில எழுத்துக்களில் எழுதி பொருத்தப்பட்ட செப்பு தகட்டுடன் கூடிய மதில் சுவர். உள்ளே சிறிய ஒரு பூந்தோட்டம். நிறைய அழகழகான பூக்கள். சற்றுத்தள்ளி திறந்த கராஜினுள் கறுப்புவண்ண கார்.

அதிபரின் தம்பி சுவரில் பொருத்தப்பட்டிருந்த விசையை நசிக்க உள்ளே எங்கோ மணி ஒலி கேட்க .. தொடர்ந்து யாரோ நடந்துவந்து கதவைத்திறக்க ..

அதிபர் நின்றார்.

''வா'' அவருடைய தம்பியைப்பார்த்து சொன்னார்.

இப்போதுதான் அவர் என்னைக் கண்டு இருக்கவேண்டும். ''இது யார்...'' என்றார்.

''சார். நான் நவாஸ் சார்''

''அடட ! நவாஸ் .. வா மகன். வா. உள்ள வா''

அவருடைய வரவேற்பு சோர்ந்துகிடந்த என் மனதில் நீரை பாய்ச்சியது.

''ஆமா. நீ எங்கே இவனைக்கண்டே ?''

அதிபரின் தம்பி சவிஸ்தாரமாக என் கதையைக் கூறினார்.

''எனக்கு அப்போதே தெரியும். உனக்கு உன் மாமியால கிடைச்ச தொல்லைகள் எல்லாமே எனக்குத்தெரியும். உனக்கு தாங்கமுடியாத ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டா நீ என்கிட்டே வரலாம் என்ற நோக்கத்தோடுதான் என் வீட்டு விலாசத்தையே நான் உனக்குத் தந்தேன். உன்னைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான இடத்திலேயே அல்லா கொண்டுவந்து விட்டுட்டார். நீ அனாதை. எனக்குப் பிள்ளையில்லே. நீ என் வீட்டிலேயே இருக்கலாம். கொழும்பிலுள்ள மிகப்பெரிய ஸ்கூலிலே உன்னை நான் சேர்ப்பிக்கிறேன். என் மகனாக இங்கேயே இருந்து நீ படி. உன் சேர்ட்டிபிகேட்டை அனுப்பச் சொல்லி நீ படிச்ச ஸ்கூலுக்கு கடிதம் எழுதறேன்.

சந்தோசத்தால் திணறினேன். நிகழ்வன் கனவா என நினைத்தேன். அவசர அவசரமாக இறைவனுக்கு மனதால் நன்றி தெரிவித்தேன். உம்மா வாப்பாவை நினைத்தேன். எனக்குக் கிடைத்த இந்த அதிர்ஸ்டத்தை அவர்களோடு பகிர்ந்தேன். என் உம்மாவுடன் .. என் வாப்பாவுடன்... சேர்ந்து சிரித்தேன். என் நஜீமாவிடம் கூறினேன். அவளுடைய களங்கமற்ற முகம் முத்துப்பற்கள் தெரிய சிரித்து எனக்கு வாழ்த்துக்கள் வழங்கின... என் உம்மாவின் மல்லிகைப்பூப் பாதங்களைத் திடீரெனப் பற்றி .. அவைகளில் என் முகத்தைப் புதைத்து முத்தமிட்டு... என் கண்கள் ஆனந்தக் கண்ணீரை சொரிய .....

''பரீதா...'' அதிபர் யாரையோ அழைத்தார்.

ஒரு பெண்மணி உள்ளேயிருந்து வந்தார். அப்போது தான் குளித்து இருந்தார்போலும். நீண்ட கூந்தலில் நீர் ஒழுகியது. என் உம்மாவைவிட சற்று மாநிறம். என் உம்மாவைப்போலவே பரந்த வட்டமுகம். சற்று கொழுத்தவர்.

''பரீதா. நான் உன்கிட்டே சொன்னேனே, நான் இருந்த ஸ்கூலிலே நவாஸ்னு ஒரு பையன்னு. அவன்தான் இவன்'' என்னை அறிமுகப்படுத்திவைத்தார்.

''அரிசிப்பெட்டியைத் தூக்கிக்கொடுத்து, பெற்றோரின் கப்றுகளில ஊதுபத்தி கொளுத்தியதா நீங்க சொன்ன பையன்தானே?'' அந்தப் பெண சிரித்தவாறே கேட்டார்.

''ஆமா. அவன்தான் இவன். இனி இங்கதான் இருக்கப்போறான். நான் இவனை றோயல் கொலிச்ல சேரத்து விடலாமனு நினைக்கிறேன். படிக்கிற நேரத்தில படிக்கட்டும். மற்றநேரத்தில உனக்கு வீட்டுவேலைகளுக்கு உதவியா இருக்கட்டும். உள்ள கூட்டிப்போய் குளிக்கவைச்சு நல்லா சாப்பாடு கொடு''

அந்தப் பெண்மணியை அவர் எனக்கு அறிமுகப்படுத்தாதுவிட்டாலும், அவர்தான் அதிபரின் மனைவி என்பதை தெரிந்துகொளள எனக்கு நீண்டநேரம் எடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கொழும்புக்கு வந்ததையோ, அதிபரின் வீட்டில் இருப்பதையோ என் கிராமத்திலுள்ள யாருககும், குறிப்பாக எனது மாமாவுக்கு அறிவிக்கவேண்டாம் என்பதையும், அதற்காக நான் சொன்ன காரணத்தையும் அதிபர் ஏற்றுக் கொண்டார்.

அடுத்த இரண்டு கிழமைகளுக்குள் நான் ரோயல் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். அதிபர் எனக்கு நிறைய உடுப்புகள் வாங்கித்தந்தார். மூன்றுவேளையும் திருப்தியாக சாப்பாடு கிடைத்தது. அதிபரின் மனைவி தன் சொந்த மகனாகவே என்னை நினைத்து என்னைப் பராமரித்தார். இரவில் அதிபர் ஆங்கிலம் சொல்லித்தருவார்.

அதிகாலையிலேயே அதிபரும், மனைவியும் எழுவதற்குமுன்னால் எழுந்து... வீடுவாசல் பெருக்கி பாத்திரங்கள் கழுவிவைத்து சமீபத்திலுள்ள பெட்டிக்கடைக்குச் சென்று ஆங்கிலப் பத்திரிகையும், பாலும், பாணும் வாங்கி வந்து வைத்து... அடுப்பில் காலைத் தேனீருக்கு தண்ணீர் கொதிப்பதற்காக வைத்து. சவரில் குளித்து... சலவை செய்த உடுப்பு அணிந்து .....

அதிபரின் மனைவியை எழுப்பிவிடுவேன். நான் இந்த வேலையைச் செய்வதற்காக அவர் தினமும் என்னைக் கண்டிப்பார். அவர் கண்டிக்கக் கண்டிக்க மேலும் மேலும் வீட்டு வேலைகளைச் செய்துவைத்துவிட்டு ஸ்கூலுக்குப் போவேன்.

என் தற்போதைய நிலையைத் தெரிவித்து .. நஜீமாவை விசாரித்து மஜீதுக்கு கடிதம் எழுதினேன். மூன்று நான்கு மாதங்களுக்குள் ஐந்து ஆறு கடிதங்கள் அவனுக்குப் போட்டேன். அவனிடமிருந்து பதிலே வரவில்லை.

நாள் ஆகஆக நஜீமாவின் எண்ணம் என்னை அலைக்கழிக்கத்தொடங்கியது. அவளைச்சுற்றியே என் மனம் வலம் வந்தது.

மஜீிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. நஜீமாவுக்கு அவளுடைய பாடசாலை விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதலாமா என நினைத்தேன். நினைப்பை செயற்படுத்தினேன். அவளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

மஜீதுக்கு அனுப்பிய பதிவுத்தபால் ஒன்று திரும்பி எனக்கே வந்தது. சரியான விலாசம் கொடுபடவில்லை என அதில் காட்டப்பட்டிருந்தது.

கிராமத்திலிருப்பவர்களுடன் எந்த தொடர்பும் இல்லாமல்... மகிழ்ச்சியாக... நஜீமா தொடர்பான வேதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான எண்ணங்களுடன்... சுமார் ஒரு வருடத்தைக் கடத்தி விட்டேன். வகுப்பில் பாடங்களில் மிகவுமே அக்கறை செலுத்தினேன். வீட்டில் அதிபருடன் இலேசான ஆங்கிலத்தில் உரையாடுவேன்.

கடந்த ஒரு வருடமாக.. நான் அவளைப் பிரிந்துவந்த தன்பின்னர் அவள் என்ன செய்தாளோ... எவ்வாறு வாழ்ந்தாளோ... எதுவுமே எனக்குத் தெரியாது.

ஒருவேளை அவளையே நீங்கள் கேட்டுப்பார்ருங்கள் தயவு செய்து எனக்காக... எனது கிராமத்துக்குச் செல்லுங்கள். நஜீமாவை சந்தியுங்கள். அவளிடம் கேளுங்கள்.

---

# நஜீமா

## 32

நவாஸ் மச்சான் வீட்டிலிருந்து எங்களை எல்லாம் பிரிந்து செல்லும்போது என் இதயம் வெடித்தது. நிலைப் படியில் அவரையே பார்த்துக்கொண்டு நின்றேன். அவர் என்னிடம் 'நான் போறேன் நஜீமா...' என்று சொன்னபோது என் இதயம் அடைந்த வேதனை எனக்குத்தான் தெரியும். அவர் புத்தகங்களையும், உடுப்புக்களையும் அள்ளிக்கொண்டு .. யாருமே அற்ற அனாதையாக தெருவில் சென்றார். தாய் தந்தையற்ற அவர் 'இந்த உலகத்திலே எனக்கு எல்லாமே நீதான்' என அடிக்கடி சொல்வாரே. என்னையே பிரிந்து இப்போது செல்கிறார். அவர் திரும்பிவருவாரா? மாட்டாரா?

என் கண்களிலிருந்து அருவி பாய, பயங்கரமாக கண்களை உருட்டிக்கொண்டு நிற்கும் உம்மாவைப் பார்க்கிறேன். வாப்பாவின் மௌத்துக்குப்பின் எங்கள் வீட்டுக்கு அவர் வந்தநாள் தொடக்கமே அவரை அங்கிருந்து விரட்டி விட உம்மா ஒவ்வொரு விநாடியும் முயன்றார். இப்போது வெற்றியடைந்துவிட்டார். அந்த மகிழ்ச்சி அவருக்கு.

நான் உம்மாவை உற்றுப்பார்க்கிறேன். 'அவன் என்ன உன் மாப்பிள்ளையாடி?' உம்மா என்னிடம் கேட்டது நீர்ச்சுழியாக மனதில் அசைந்தது.

சே! என் உம்மா எவ்வளவு கேவலமான பெண்! போயும் போயும் இவருக்கு நான் மகளாகப் பிறந்தேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடி இடிவிழுந்தவளைப்போல பார்த்துக்கொண்டு நிக்கிறே? அந்த சனியன்தான் தொலைஞ்சி போயிட்டான். புள்ள அழுகுது. ஊஞ்சில்ல வைச்சு ஆட்டுடி'' உம்மா கட்டளையிட்டார்.

கதவு நிலையைவிட்டு நான் அசையவில்லை. பாவம்! மச்சானின் கால் நெருப்புச் சூட்டால் பொங்கி இருக்குமே. யார் அவருக்கு மருந்துகட்டி விடப்போகிறார்? அவர் எங்கு தான் போவாரோ? வாப்பாகூட ஊரில் இல்லையே. அவர் இருந்து இருந்தால் இந்த சம்பவம் நடந்தே இருக்காது.

''என்னடி குத்துக்கல்லாட்டம் அங்கேயே நிக்கிறே? வாடி இங்க'' உம்மா மீண்டும் காட்டுக் கத்தல் கத்தினார்.

மச்சானை வெளியே துரத்திவிட்டதற்காக உம்மாவிடம் சண்டை இடலாமா? அவரைத் தேடிச்சென்று அழைத்து வரப்போவதாக கூறலாமா? வாப்பாவிடம் நடந்த சம்பவங் களை கூறிவிடுவதாக உம்மாவை மிரட்டி, மச்சானை மீண்டும் வீட்டுக்கு அழைக்குமாறு கூறலாமா?

முடியாது. உம்மாவிடம் எனக்குப் பயம். அவ்வளவு பெரிய மச்சானுக்கே சூடு போட்டவர் எனக்கு ஏதாவது செய்யமாட்டார் என்பது என்ன நிச்சயம்? அவரை யாரும் மிரட்டமுடியாது. அவருக்கு யாரிடத்திலும் பயம் இல்லை. ஆணைப்பட்ட வாப்பாவையே அடக்கிவைத்திருக்கிறாரே. நான் என்னதான் செய்யலாம்? எனக்கு இப்போ வயது பதினொன்று. என் புத்திக்கு எட்டியவரை மச்சானுக்கு நடந்த அசம்பாவிதத்துக்காக அழுவதைத்தவிர வேறு எது வுமே செய்யமுடியாது.

மச்சானை அழைக்கச்சொல்லி ஒரே ஒரு தரம் உம்மா விடம் சொன்னால் என்ன? சொல்லத்தான் வேண்டும் என முடிவு செய்தேன்.

உள்ளே என் கடைசி தங்கை அழுதுகொண்டிருந்தாள். அவளுக்கு இன்னும் காய்ச்சல்.

''டியேய், உன்னத்தான்டி. வந்து புள்ளயத் தூக்குடி. எழும்பின நேரத்துக்கு நான் முகம் கழுவவும் இல்லடி'' என்றார் உம்மா மீண்டும்.

கண்களைத் துடைத்தபடி உம்மாவின் அருகில் மெது வாக நடந்துசென்றேன்.

''உம்மா, இது உனக்கே நல்லா இருக்கா? நாய்மாதிரி மச்சான் உனக்கு வேலைசெய்து தந்தாரே. அவருக்குப்போய் சூடு வைச்சிட்டியே. இது ஆகுமா?'' என்றேன நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடி சொல்றே? எனக்காடி புத்தி சொல்றே? அவன்தான்டி உன்னைக் கெடுத்துட்டான். அந்த தறுதலை இன்னும் இங்க இருந்தா என்னென்ன நடந்திருக்குமோ?'' ஒப்பாரி வைக்கத் தொடங்கினர்.

''மச்சான் உனக்கு என்னதான் செய்தாரு? ஏன் அவருக்கு சூடு வைச்சே?''

''நீ சின்னபொண்ணுடி. உனக்குத் தெரியாடி. அவன் சனியன் புடிச்சவன்டி. அவன் அவங்க ஊட்டில உம்மா வாப்பாவைத் திண்டான். அவங்க வயலே, வீட்டை விற்க வைச்சான். அவன் இங்க வந்ததுக்குப் புறகுதான்டி உங்க வாப்பா நட்டத்துக்குமேலே நட்டம் அடையிருரு. அவன் இருக்கிற இடம் பாழ்விழுந்து போகும்டி. அதுதான்டி உன் வாப்பா இல்லாத சமயமா பார்த்து அவனைத் துரத்தினேன்''

''இதுக்கெல்லாம் மச்சான்தான் காரணமுன்னு நீ நம்புறியா?''

''நம்புற என்னடி. அதுதான்டி உண்மை''

''நீ மச்சானை துரத்தினதை வாப்பா அறிந்தா?''

''கொண்ணுடி போட்டுடுவாரு? ஒண்ணுடி. அவனுக்கு நா சூடு போட்டதைமட்டும் நீ அவருக்கிட்டே சொல்லிடாதடி. சொன்னே... உனக்கு கம்பியை காய்ச்சி சூடு போடுவேன்''

''நான் சொல்லமாட்டேன். மச்சானே வாப்பாவைக் கண்டு சொன்ன?''

''அவன் சொல்லமாட்டான். அதுக்குத்தான் அவனை எச்சரித்து அனுப்பினேன்''

''மச்சான் எங்கம்மா போவாரு? ரோட்டிலே அலை வாரோ?''

''அலையட்டுமே. நமக்கென்ன? அவன் நமக்கு யாரு? உன் வாப்பாவுககு வேணுமானு மருமகன். எனக்கு யாரு? தறுதலே. எங்காவது கடையிலே போயி நிப்பான்''

''ஏன்மா அவரைத் தேடிப்போய்க் கூட்டிக்கிட்டு வரட்டா?''

''என்னடி கேட்டே? தேடிப் போப்பிறியா? ஏன்டி. உனக்குப் பைத்தியமாடி? சனியன் வீட்டில இருந்து தொலைஞ்சுதுன்னு நான் இருக்கேன், கூட்டி வரப்போருளாம். வெளியேபோனே காலை முறிச்சுடுவேன். உள்ளபோயி புள்ளயத்தூக்குடி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மா என் காதுகளுக்கு சரிவர கேட்காத ஏதேதோ வார்த்தைகளால் முணுமுணுத்தவாறு கிணற்றடிக்கு நடந்தார்.

நான் என்னதான் செய்யலாம்?

அடுத்தநாள்.

கடந்த இரவெல்லாம் எனக்கு நித்திரையே இல்லை. சதா மச்சான் நவாஸின் எண்ணமாகவே இருந்தது. அவர் எங்கே போனாரோ? என்ன சாப்பிட்டாரோ? எங்கே படுக்கிறாரோ? ஒரே சிந்தனை. நேற்றுமுழுதும் பட்டினியாக தெருக்களில் அலைந்து திரிந்திருப்பார். தனியே ஏதாவது கடை வராந்தையில் படுத்திருப்பார்.

அடிக்கடி அவரை நினைத்து அழுதேன். நான் சிறு குழந்தையாக இருக்கும்போது நோன்பு நாட்களில் உம்மா தராவீஹ் தொழப் போனபின் எனக்குத் துணையாக வந்து இருந்து என்னை ஊஞ்சலில் வைத்து 'அம்பாவோ' சொல்வாரே. இப்போ நான் அவரைத் தனியாக விட்டுவிட்டேனே.

மச்சான் வீட்டிலிருந்து சென்றநேரத்துக்கு இதுவரை நான் சாப்பிடவே இல்லை. உம்மா எவ்வளவோ என்னை வற்புறுத்தினார். நான் மறுத்துவிட்டேன். என்உடல் மெலிதாக கணகணத்தது. காய்ச்சல் வரப்போவது போன்ற உணர்வு.

காலையில் பாடசாலைக்கு போவதா வேண்டாமா எனத் தடுமாறினேன். உடல்முழுதும் மூட்டுக்கு மூட்டு வலித்தது. தலையில் ஏதோ பாரத்தை ஏற்றினாற்போன்ற உணர்வு. பாடசாலைக்கு போகாமல்விடலாம் என்ற முடிவுக்கு நான் வரப்போகையில் திடீரென ஓர் எண்ணம் என்னுள் எழுந்தது பாடசாலைக்குப் போகும்சாட்டில், மச்சானின் நண்பன் மஜீதின் வீட்டுக்குப்போய் அவரை விசாரிக்கலாம். ஒருவேளை மச்சான் அங்கேயே இருந்தால் .. அல்லது அவரின் சாச்சியின் வீட்டுக்குசென்றும் விசாரிக்கலாம்.

பாடசாலைக்குப் போவதாக முடிவெடுத்து, குளிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றேன். உம்மாவிடம் பாடசாலைக்குப் போவதாக கூறிவிட்டு வெளியே சென்று மச்சானைத் தேடப்போகிறேன். அவரைச் சந்தித்து ... அவரிடம் கதைத்தால்தான் எனக்கு மனதில் நிம்மதி ஏற்படும்போல் தெரிந்தது.

உம்மா சரேலென கிணற்றடிக்கு வந்தார்.

''என்னடி செய்யப்போறே?''

''குளிக்கப்போறேன்''

''எதுக்குடி?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்கூலுக்குப் போகணும்''

''இன்றைக்கு ஒண்ணுக்கும் போகவேணும், வீட்டிலே நிறைய வேலைகிடக்கு. உன் வாப்பா வயலில இருந்து வந்தபிறகு போகலாம். வீட்டிலேயே நில்லு''

''இல்ல .. நான் போய்த்தான் ஆகணும். போகல் லேன்னு அக்கா அடிப்பா''

''ஒண்ணும் அடிக்கமாட்டா. நீ படிச்சி என்னடி செய்யப்போறே? எவனையாவது கட்டிக்கிட்டு என்னைமாதிரி கஸ்டப்படப் போறவதான்டி நீ''

'எவனையாவது கட்டுவதா?' உம்மாவின் வார்த்தை எனக்குக் காய்ச்சிய இரும்பாக இதயத்தினுள் பாய்ந்தது.

'மச்சான்தானே எனக்கு மாப்பிள்ளை. அவருக்குத்தானே எனக்கு சாணைக்கூறை போட்டாங்க. அவரை விட்டுட்டு எவனையாவது ஒருத்தனை எனக்குக் கட்டி வைப்பதுதான் உம்மாவின் நினைப்பா?'

பாடசாலைக்குப் போய்த்தான் தீருவேன் என உம்மா விடம் அடம் பிடித்தேன். என்முயற்சி வெற்றியளிக்கவில்லை. மாருக, அழுதகண்களுடன் கிணற்றடியில் குந்தியவாறு, சமையல் பாத்திரங்களில் படிந்திருந்த கரியை தென்னந் தும்பில் சாம்பல் துவைத்து கழுவிக்கொண்டிருந்தேன். என் எண்ணம் நிறைய நவாஸ் மச்சான்.

---

## 33

நான்கு நாட்கள் சென்றன. இந்த நான்கு நாட்களும் நான் பாடசாலைக்குச் செல்லவில்லை. வீட்டில் சரியான வேலை நவாஸ் மச்சான் செய்த வேலை களை எல்லாம் இப்போது நான்தான் செய் கிறேன். வீட்டுக்கு வந்த இரண்டொரு பெண் கள் நவாஸ் மச்சானைப்பற்றி உம்மாவிடம் விசாரித்தனர்; ஏதோ காரணங்களைச் சொல்லி, அவர் வீட்டைவிட்டுப் போய்விட்டதாகக் கூறி சமாளித்தார். வாப்பா வந்தபின் னர்தான் வீட்டில் புயல் அடிக்கப்போகிறது என காத்துக் கொண்டு இருந்தேன்.

அடுத்தநாள் வாப்பா வந்தார். ஒருகிழமையாக வயலில் நின்றதால் முகம் கறுத்து களைப்புற்று இருந்தார். சவரம் செய்யாததால் முகம்நிறைய மயிர்க்கால்கள்.

உம்மா கொடுத்த தேனீரை அருந்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் மயான அமைதி. மச்சானுக்கு சூடுபோட்டதை வாப்பாவிடம் கூறக்கூடாதெ ன உம்மா வீட்டிலிருந்த என் தங்கைகளிடமும் கூறியிருந்தார்.

''மரியம். நவாஸ் ஸ்கூலுக்குப் போயிட்டானு?'' என்ருர் வாப்பா திடுமென.

உம்மா என்னையும், தங்கைகளையும் பார்த்து கண்களால் எச்சரித்தார்.

''அவன் ஸ்கூலுக்குப் போகல்ல. வீட்டைவிட்டே போயிட்டான்'' என்ருர் உம்மா அமைதியாக.

வாப்பா திணுக்குற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''மரியம். நீ என்ன சொல்றே? நவாஸ் வீட்டைவிட்டுப் போயிட்டானு?'' அவர் குரலில் ஆச்சரியம்.

''உங்க மருமகனின் வேலையை ஏன் கேக்கிறீங்க? கள்ளப் பயல்''

''நீ என்ன சொல்றே?''

''உங்க மருமகனைப்பற்றித்தான் சொல்றேன். கெட்டவங்களோட கூடாதடா, கூடாதடா என்று ஆயிரம் தடவை சொல்லியிருப்பன். அவன் கேட்கல்ல. அவங்க சொல்லிக் கொடுத்தாப்ல வீட்டிலேயே திருடிட்டான். கையும் களவுமா நான் அவனைப் புடிச்சி விசாரிச்சேன். நீங்க வாறதுக்கு முன்னுலேயே உங்களுக்குப் பயந்து ஓடிட்டான்''

''மரியம். நீ என்னதான் சொல்றே? எனக்கு ஒண்ணுமே புரியல்ல''

''புரியாதே. லேசிலே உங்களுக்குப் புரியாதே. அவன்ட உம்மாட தம்பிதானே நீங்க''

''அதையும் இதையும் கதைக்காம விசயத்தைச் சொல்லு. நவாஸ்தான் யாரோடும் கூடமாட்டானே. அவன் ஏன் களவெடுக்கப்போனுன்? விபரமா சொல்லு. என்ன நடந்தது?''

உம்மா முகத்தைத் திருப்பி கண்களால் மீண்டும் எங்களை எச்சரித்தார்.

''நீங்க வயலுக்குப் போயி ரெண்டாவது நாள். அரிசி விக்கிற பாத்தும்மா நூறுரூபா காசு கொண்டுவந்து தந்தா. அதை நான் தைலாப் பொட்டிக்குள்ளதான் வைச்சேன். நவாஸ் தொட்டில ஆட்டுற சாட்டில நான் பணம் வைப்பதைப் பார்த்துக்கொண்டு நின்றிருக்கான். அடுத்தநாள் காலையில பெட்டிய பார்த்தா காசைக் காணல்ல. பிள்ளைகளை எல்லாம் விசாரிச்சேன். ஒருத்தரும் எடுக்கல்லண்டாங்க. நவாஸை விசாரிச்சேன், தான எடுக்கல்லண்டு சத்தியம் செய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். எனக்கு அவனிலதான் சந்தேகம். அவன்ட புத்தகங்களை ஒவ்வொன்று எடுத்துப் பிரித்துப்பார்த்தேன் ஒரு புத்தகத்துக்குள்ள நூறுரூபா தான் இருந்திச்சி. ஏன்டா எடுத்தேன்னு, திருதிருவென முழிக்கத்தொடங்கிவிட்டான். இரு. இரு. உன் மாமா வரட்டும். சொல்லிக்கொடுத்து உன் தோலே உரிக்க சொல்கிறேன்னேன். அப்புறமா பார்த்தா ஆளையும் காணல்ல. அவன்ட புத்தகங்களையும் காணல்ல'' உம்மா கூறிவிட்டு புஸ்புஸ் என மூச்சு இரைத்தார்.

''அப்படியா? ஆச்சரியமா இருக்கே!''

''எனக்கு அடிக்குமேலே இடியாப்போயிட்டு. ஒருபக்கம் அவன் வீட்டைவிட்டுப் போயிட்டான். மற்றப்பக்கம் நீங்க வயலால வந்ததும் எனக்கு ஏசுவீங்க. அதனால ஏண்டாம்பியைச் சொல்லி இந்த ஊர்பூரா தேடச்சொன்னன். அவனைக் காணல்ல. அவன் போனநாளைக்கு மையத்து விழுந்த வீடு போலதான் நம்ம வீடு இருக்கு. பாவம்! நல்ல பையன். எங்க போனானோ? என்ன கஷ்டப்படுறானோ?'' கூறியவாறு உம்மா நீலிககண்ணீர் வடித்தார்.

''அவனிடம் கள்ளப்பழக்கம் இருப்பது எனக்கு இப்பதானே தெரியுது''

''எனக்கும் இப்பதானே தெரியும். பலதடவைகளிலே அங்க இங்க வைச்ச பணத்தைக் காணல்லேன்னு நான் தேடுவன். அப்புறம் ஒருவேளை நீங்கதான் எடுத்திருப்பீங்கன்னு நினைச்சுக்குவன். இப்பதான் தெரியுது. அதையெல்லாம் இவன்தான் எடுத்திருப்பான்னு''

''நான் அவனைப்பத்தி எவ்வளவு பெரிய எண்ணம் வைச்சிருந்தேன். எல்லாவற்றையும் கெடுத்துட்டான்''

''அவன்ட உம்மாதான் அவனுக்கு செல்லம்கொடுத்து அவனைப் பழுதாக்கி இருக்கா''

''சரி. சரி. நானும் அவனைத் தேடிப்பார்க்கேன். எத்தனை நாளைக்கு ஒழிச்சித்திரியப்போறான். ஒருநாளைக்கு இங்க வரத்தானேசெய்வான். அப்போ நீ சொன்னமாதிரியே நா அவன் தோலே உரிச்சி கைல கொடுக்கன்''

''நீங்க அவனை எங்க தேடப்போறீங்க? வயல்ல இருந்து களைச்சிப்போய் வந்திருக்கீங்க. சந்தைக்குப்போய் கறி வாங்கிட்டு வாங்க. சமைச்சு தாறன். பேசாம படுத்துத் தூங்குங்க''

உம்மா வாப்பாவை சமாளித்துவிட்டார். வாப்பாவிடம் உண்மையைச் சொல்லிவிடலாமா என என் நாக்கு துடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. முடியவில்லை. உம்மா பயங்கரமான பெண். வாப்பா வீட்டில் இல்லாத நேரத்தில் என்னை புரட்டி எடுத்துவிடுவார்.

''நீ ஏன் பாடசாலைக்குப் போகல்லே?'' வாப்பா என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் மௌனமாக நின்றேன். உம்மா என்னை கண்களால் அச்சுறுத்தியவாறு பார்த்தார்.

''நான்தான் போகவேணுமென்று சொன்னேன். அவன் நவாஸ் போனப்புறம் வீட்டில வேலைசெய்ய ஆளே இல்ல. சின்னதுக்கு ஒரே காய்ச்சலா அடிச்சிது. ஒரே அழுகையா அழுகுது. இவ படிச்சி என்னதான் செய்ய? இன்னும் இரண்டொரு வருசத்திலே இவள் பெரியாளா ஆயிட்டா வீட்டில தானே இருக்கணும். இப்பவே பாத்தவன் எல்லாம் ஆசைப் படுறாப்ல இப்படி வளர்ந்து இருக்காள். அதுதான் நானே சொல்லிட்டன். வீட்டில இருடின்னு''

''ஒருபக்கத்தில அதுவும் சரிதான்''

வாப்பாவை சகல விசயங்களிலும் திருப்தியடைய வைத்த மகிழ்ச்சி உம்மாவுக்கு. அந்த மகிழ்ச்சி நீடிக்கப் போவதில்லை என்பது அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

★ ★ ★

இரண்டு நாட்கள் கழிந்தன.

சந்தைக்குச் சென்றிருந்த வாப்பா வீட்டுக்கு வந்தார். அவர் முகம் கறுத்துக் காணப்பட்டது. கையோடு கொண்டு வந்த கூடையை வேகமாக கீழே எறிந்தார். அதனுள் கிடந்த மீன்கள் மூலைக்கொன்றாக சிதறி வீழ்ந்தன. முதலில் அவருக்கு எதிர்ப்பட்டவள் நான்தான்.

''நஜீமா. எங்கடி உம்மா?'' அவர் குரலில் கண்டிப்பும், கோபமும்.

''உம்மா கிணற்றடியில உடுப்பு கழுவுறா''

''மரியம்...! ஏய் மரியம் ! வாடி இங்கே'' சப்தமிட்டார்.

உம்மா உடனேயே வரவில்லை.

''ஏய் மரியம். வாடி இங்கே''

வாப்பா உம்மாவை 'அடியேய்' என அழைத்ததை இன்றுதான் கேட்கிறேன். இவருக்கு என்ன நடந்தது? உம்மாவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாதவர் .... உம்மாவின் உருட்டும் விழிகளை எதிர்க்க திராணியற்றவர் .. 'பெட்டிப் பாம்பு' என அடிக்கடி மச்சான் நவாஸால் வர்ணிக்கப்படுபவர்... இன்று வாப்பாவுக்கு என்னவோ நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. சந்தையிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் யாருட னும் சண்டையிட்டாரோ? வேளாண்மை வயல் தொடர் பாக ஏதும் பிரச்சினையோ?

நான் இல்லாததையும், பொல்லாததையும் சிந்திக்கத் தலைப்பட்டேன்.

உம்மா அசைந்துவந்தார். கைநிறைய சவர்க்கார நுரை.

''என்ன கூப்பிட்டீங்க?''

''வாடி இங்க''

உம்மா வாப்பாவை உற்றுப்பார்த்தார். வாப்பா அழைக் கும் முறை உம்மாவுக்கு புதிதாக இருந்திருக்கவேண்டும்.

உம்மா வாப்பாவின் அருகில் செல்ல... வாப்பா திடீ ரென கையை உயர்த்தி... உம்மா எதிர்பாராமல் நிற்கும் போதே... பளீர் என முகத்தில் அறைந்தார்.

உம்மா ''அல்லாவே...'' என அலறியவாறு பின்பக்க மாக சரிந்தார். நான் சரேலென பாய்ந்து அவரைத் தாங்கி யிராதுவிடின் அவர் அப்படியே கீழே வீழ்ந்துவிட்டிருப்பார்.

''இந்தாளுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிட்டு! எனக் குப்போட்டு அறையிறாரே!'' அறைவிழுந்த கன்னத்தை ஒரு கையால் பொத்தியவாறு உம்மா அழத்தொடங்கினார்.

''மரியம்! நான் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவ னுக்கு கெட்டவன். மரியாதையா உண்மையைச் சொல்லிடு. இல்லாட்டி இந்த வீட்டிலே இப்போ கொலையே விழும்'' வாப்பா உச்ச தொனியில் கத்தினார்.

''இந்த மனிசன் எந்த உண்மையைக் கேக்குது? நான் இவருக்கிட்ட எதை ஒழிச்சேனும்? இவருடைய எந்தப் பணத்தைக் களவெடுத்தேனும்? பைத்தியகார மனிசன் கை நீட்டி அடிச்சிப்போட்டாரே''

வாப்பா அறைந்ததை உம்மா எதிர்பார்க்கவே இல்லை. அவருக்குப் பொறுக்கவேமுடியவில்லை. எதையெதையோ சொல்லி ஒப்பாரிவைக்கத் தலைப்பட்டார்.

''நிறுத்துடி ஒப்பாரியை! உண்மையைச் சொல்லு! நவாஸுக்கு என்னடி செய்தே? ஏன்டி அவன் வீட்டை விட்டுப் போனான்? சொல்லுடி'' பாய்ந்தவாறு உம்மாவின் கூந்தலைப் பிடிக்க வாப்பா முயற்சித்தார். உம்மா எப்படியோ வாப்பாவின் பிடியில் நின்றும் தப்பிக்கொண்டார்.

வாப்பாவுக்கு நவாஸ் மச்சான் தொடர்பாக எல்லாமே தெரிந்துவிட்டதுபோலும். உம்மா திடீரென என்னைப் பயங் கரமாகப் பார்த்தார். நான்தான் சொல்லியிருப்பேன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நினைத்திருக்கலாம். நான் உம்மாவைப் பார்த்து கண்களால் மறுத்தேன்.

''ஏன் பேசாம நிக்கிறே? அவனுக்கு என்ன செய்தே?'' மீண்டும் கேட்டார்.

''நான் உங்க செல்ல மருமகனுக்கு என்ன செய்தேனும்? களவெடுத்தான். ஏன்டா எடுத்தான்னு கேட்டேன். அப்படி கேட்கப்படாதா? வீட்டை விட்டுட்டுப் போயிட்டான். அந்தக் கழுத்தறுப்பானுல நான் அடிபடவேண்டியிருக்கு''

''ஆஹாஹா! நல்ல கதை! களவெடுத்தது! புடிபட்டது! நீ களவு கொடுத்தது! பத்ரகாளி! எனக்கு எல்லாம் தெரியும்டி! அந்த அப்பாவிக்கு நெருப்புக்கட்டையால சூடு போட்டு புறடியைப் புடிச்சி தள்ளி அனுப்பிட்டியேடி. பாவி'' கூறியவாறு திரும்பவும் அறைவதற்காக வாப்பா பாய்ந்தார். உம்மா விலகிக்கொண்டார்.

''நான் எதுக்காக சூடுபோட்டேன்? உங்ககிட்ட இதைச் சொல்லித்தந்த அந்த தறுதலேக்கிட்டே கேட்டீங்களா? இவளுக்கிட்டே கேளுங்க. இவள்ட காலேப் பாருங்க. கொதி தண்ணியை அவன் இவள்ட காலில ஊற்றினு அது உங்களுக்கு ஒண்ணும் இல்ல. நான் செய்ததுதான் உங்களுக்கு பெரிசாபோச்சி''

'நவாஸ் மச்சான்தான் வாப்பாவைச் சந்தித்து எல்லாவற்றையும் கூறியிருக்கிறார்போலும். அப்படியானல் அவர் இந்த ஊரிலேதான் இன்னும் இருக்கிறார்' நான் நினைத்தேன்.

''எனக்கு எல்லா உண்மையும் தெரியும். நஜீமா வாடி இங்க''

வாப்பாவின் அருகில் சென்றேன்.

''நீ உண்மையைச் சொல்லணும். இல்லே கொண்ணுடுவேன். கொதிநீரை நவாஸ்தான் உன் காலிலே ஊற்றினு?''

நான் மெதுவாகத் திரும்பி உம்மாவைப் பார்த்தேன். உண்மையைச் சொல்லவா என கண்களால் கேட்டேன்.

''ஏன்டி அவளேப் பார்க்கிறே? சொல்லு உண்மையை''

''நான் தண்ணீர்ப்பானையை அடுப்பிலிருந்து இறக்கும்போது தவறி விழுந்துட்டு'' பயத்தால் நடுநடுங்கியவாறு கூறினேன்.

''இதை உன் உம்மா அவனுக்கு சூடுபோடுவதன் முன்னுலே ஏன் நீ அவளிடம் கூறல்ல?''

''நான் சொன்னேன். உம்மா கேக்கலே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவள் கேட்டிருக்கமாட்டாள். ஏனென்னு அவனை இந்த வீட்டில இருந்து துரத்திவிட இவள் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தவளாச்சே''

''நான் ஒன்றும் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கல்ல. ஏதோ கோபமா நின்றேன். அப்படி நடந்துட்டு''

வாப்பா சிறிதுநேரம் மௌனமாக நின்றார்,

''அடிப்பாவி. அந்த அப்பாவிப் பையனைத் துரத்திட்டியேடி. அவன் வாப்பா மௌத்தாகுவதன் முன்னாலே அவனின் கையைப்பிடித்து என்கிட்டே தந்தாரே. அவனை வளர்த்து பெரியவனாக்கணும்னு என்கிட்டே கெஞ்சி கேட்டாரே. நான் எப்படிடி மறுமையில அவருக்கு பதில் சொல்வேன்? நவாஸ் எங்க போனானோ? எங்க அலைகிறானோ? எந்த தெருவில அனாதையாப் படுக்கிறானோ?'' வாப்பா கண்களைக் கசக்கியவாறு அழத்தொடங்கினார்.

'அப்படியென்றால் நவாஸ் மச்சான் வாப்பாவை சந்திக்கவில்லையா? இதையெல்லாம் யார் இவரிடம் கூறினார்?'

''அல்லாவே! இது என்ன சோதனை. நான் இல்லாத நேரத்தில இந்தப் பாவி இப்படிச் செய்துட்டாளே! அந்த அப்பாவியைத் தண்டிச்சுட்டாளே! இவள் சொன்னதையெல்லாம் நான் உண்மையென நம்பிக்கொண்டு அவனைத் தேடாம இருந்துட்டேனே'' வாப்பா தொடர்ந்தார்.

''வாப்பா... நீங்க மச்சானை சந்திக்கலியா?'' நான் மெதுவாக கேட்டேன்.

''மச்சான்! நீயும்தான்டி உங்க உம்மாவோட சேர்ந்து அவனை தண்டிச்சு துரத்திவிட்டிருக்கிறீங்க. உன்னோட அவன் எவ்வளவு இரக்கமா இருந்தான்! அவனைத் தனியே அனுப்பிட்டீங்களே. நான்மட்டும் மஜீதுட வாப்பாவை இன்றைக்கு சந்திக்காமவிட்டிருந்தா எனக்கு எதுவுமே தெரிந்திருக்காதே. இப்போ நான் அவனை எங்கே தேடுவேன்?''

'அப்படியென்றால் மச்சான் மஜீதின் வீட்டுக்குத்தான் இங்கிருந்து போயிருக்கிறார். இப்போது அங்கும் அவர் இல்லை போல் இருக்கிறதே!'

எனக்கு உம்மா தொடர்பான பயம் இப்போது நீங்கிவிட்டது. வாப்பாதான் கைநீட்டி உம்மாவுக்கு அடித்து அவரை மடக்கிவிட்டாரே. நடந்த உண்மைகளை வாப்பாவிடம் கூறிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தேன்,

''வாப்பா. மச்சானுக்கு சூடு போடவேண்டாமென நான் உம்மாக்கிட்டே கெஞ்சினேன். அவரை வீட்டைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தவேண்டாமென எவ்வளவோ கேட்டேன். உம்மா எனக்கு ஏசினு. மச்சானை வெளியே தள்ளிவிட்டா''

வாப்பாவிடம் நான் எதையும் ஒழிக்கவில்லை. உம்மா ஏசிய அத்தனையையும் சொன்னேன்.

உம்மா என்னை வெறுப்பாகப் பார்த்தார். எனக்குத் தெரியும் அவர் என்னைப் பின்னர் தண்டிப்பாரென்று. எனக்கு பயம் இல்லை. வாப்பா என்பக்கத்தில் இருக்கிறுர்.

''அவன் எங்கே போனுனே தெரியவியே. கொழும்புக்குப் போறதா சொன்னுனும். எங்கே போனுனே? என்ன கஸ்டப்படுறுனே? நான் அவனை எங்கே தேடலாம்? எதுக்கும் பொலிசுக்குப் போய் ஒரு முறைப்பாடு கொடுக்கிறேன்'' வாப்பா தனக்கே கூறிக்கொண்டார்.

''மரியம்... நான் இத்தனை நாளும் உனக்கு இடம் கொடுத்து, உன்னையும் ஒரு பெண்ணுக நினைத்து நடந்தேனே, எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்'' வெறுப்பாக கூறியவாறு வாப்பா கிணற்றடிக்குச் சென்றுர்.

'நவாஸ் மச்சான் ஊரைவிட்டு கண்காணுத ஏதோ இடத்துக்கு சென்றுவிட்டார்' இதை நினைக்கும்போது என் இதயம் குலுங்கியது. அறைக்குள்ளே ஓடினேன். என் உடுப்புகள் வைத்திருக்கும் பெட்டகத்தின் உள்ளே கிடந்த, மாமி எனக்குப் போட்ட சானைக்கூறையைக் கையில் எடுத்தேன். அதைப் பார்த்து அழத்தொடங்கினேன்.

---

## 34

சுமார் இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன.

பாடசாலைக்கு போவதை அடியோடு நிறுத்திவிட்டேன். என்னேடு படித்த ஏனைய சிறுமிகளும் இப்போது பாடசாலைக்கு போவதில்லைதான். பாடசாலைக்கு போகாமல்விட்டது ஒரு குறையாகத் தெரியவில்லை. கிராமத்தில் ஐந்தாம் வகுப்புக்கு மேல் பெண்கள் படிப்பது இல்லை. வீட்டில் அடங்கிவிடுவார்கள்.

உம்மாவுக்கு மீண்டும் ஒரு குழந்தை பிறந்திருந்தது. அதுவும் பெண். இப்போது எல்லாமாக நான்கு பெண்கள். உம்மா வரவர சற்று மெலிந்துகொண்டு வந்தார். மழைக் காலங்களில் 'கர்கர்' என மூச்சு இழுக்கத் தொடங்கினுர்.

வாப்பா வயல்வேலைகளை மிகவும் குறைத்துக்கொண்டார். நவாஸ் மச்சான் வீட்டிலிருந்து போனபிறகு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா சிந்தித்துக்கொண்டிருக்கத் தலைப்பட்டார். மச்சானைத் தேடி பல ஊர்களுக்கும் சென்றார். பலபேரிடம் விசாரித்தார். அவரைத் தேடுவது தொடர்பாக நிறைய பணம் செலவழிந்ததாக அடிக்கடி சொல்வார். வீட்டில் எப்போதாவது மச்சானின் பெயரை யாராவது நினைவுகூர்ந்தால், அன்றெல்லாம் பேய் பிடித்தவர்போல் இருப்பார். உம்மாவுக்கு ஏசுவார். உம்மாவுடன் சண்டைபிடிப்பார். மனதில் நிம்மதியே இல்லை என்பார் அடிக்கடி.

இந்த இரண்டுவருடமாக மச்சானைப்பற்றிய எந்த தகவலும் இல்லை. அவருடைய நண்பன் மஜீதின் தங்கை ஆமினா எனனுடைய சிநேகிதை. அவள் என்னைவிட ஒரு வயதுதான் இளமை. என்னைவிட ஒருவகுப்பு குறையப் படித்தவள், அவளும் இப்போது பாடசாலைக்கு போவதில்லை. அவள் இப்போதெல்லாம் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவாள். நவாஸ் மச்சான் எங்கள் வீட்டில் இருந்து முதலில் அவர்களுடைய வீட்டுக்குச் சென்றதும், பிற்பகல் அவருடைய பெற்றோரின் கப்றடிகளுக்குச் சென்று ஊதுபத்தி கொளுத்தி பிரார்த்தனை செய்ததும், அடுத்தநாள் என்னைச் சந்திப்பதற்காக பாடசாலைக்குச் சென்று ஏமாந்ததும், என் வாப்பா வயலிலிருந்து வருமுன் ஊரைவிட்டுச் சென்றுவிட வேண்டும் என கோச்சு ஏறியதும் எல்லாமே எனக்கு பின்னர்தான் தெரியவந்தது. மச்சானுக்கு எங்கள் வீட்டில் நடந்த எதையும் யாரிடமும் கூறவேண்டாம் என மஜீதிடம் சொல்லியிருந்தாராம். எனினும் என் வாப்பாவின் செவிகளுக்கு எட்டிவிடவேண்டும் என்றுதான் மஜீது தன் தகப்பனிடம் கூறினாராம்.

மச்சான் இதுவரை மஜீதுச்கும் ஒரு கடிதமும் எழுதவில்லையாம். மச்சானைப்பற்றி யாருக்கும் எதுவும் தெரியாதாம். அவர் உயிருடன்தான் இருக்கிறாரா என்பதுகூட சந்தேகந்தானாம்.

நான் இப்போது பெரிதும் வளர்ந்து விட்டிருந்தேன். என் உடலில் பல மாறுதல்கள். பல இடங்களில் சதைப் பிடிப்புகள். அமினா அடிக்கடி சொல்வாள் "நஜீமா, இந்த ஊரிலே உன்னைவிட அழகான பெண் யாருமே இல்லை" என்று.

ஒருநாள் பிற்பகல்.

வாசல்கொடியில் உலரப்போட்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டு நின்றேன். அகஸ்மாத்தாக வாசலுக்கு வந்த உம்மா என் பின்பக்கமாக நின்று எதற்காகவோ உற்றுப் பார்த்தார். அவருக்கு என்ன தோன்றிற்றோ, "நஜீமா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியில கிடக்கிற துணிகளை நான் எடுக்கிறேன். நீ உள்ளே வா'' என்று அழைத்தார். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. என்னை அறைக்குள சென்று உட்காருமாறு கூறினார்.

உம்மா வெளியேசென்று சில பெண்களை அழைத்து வந்தார். என்னை எல்லோருமாக கிணற்றடிக்கு அழைத்துச் சென்று தண்ணீர் வார்த்துவிட்டனர். வெள்ளைத் துண்டைத் தந்து அணியச் சொன்னார்கள். வெளியே வரவேண்டாமென என்னிடம்கூறி அறைக்குள்ளே இருக்குமாறு கூறினர்.

நான் வயதுக்கு வந்துவிட்டேனும். இனிமேல் வீட்டை விட்டு வெளியே எங்கும் செல்லக்கூடாதாம்.

ஏழு நாட்கள் அறைக்குள்ளேயே இருக்கவேண்டி ஏற் பட்டது.

ஆமினு என்னை அடிக்கடி வந்து பார்த்தாள். என்னைக் கேலி செய்வாள். நான் சத்து இல்லாமல் சிரிப்பேன். என்னைமறந்து நான் சிரித்ததெல்லாம் நவாஸ் மச்சான் என்னுடன் இருக்கும்வரைதான்.

நான் இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் மச் சான் என்ன சொல்வார் என மனதுக்குள் நினைத்துப் பார்ப்பேன். அவரின் எண்ணம் வரும்போதெல்லாம் என் நெஞ்சைப் பிளந்து பெருமூச்சு விடுவேன். அவர் உயிருடன் தான் இருக்கிருரோ என்னவோ?

சில நேரங்களில் அவரை நினைத்தால் எனக்கு கோபம் கோபமாகவரும். கல்நெஞ்சன்! என்னைப்பிரிந்து இவ்வளவு நீண்டகாலம் இருக்கிருரே. ஒருவரி எழுதக்கூடாதா? மஜீதுக் காவது எழுதக்கூடாதா? ஒருநாள் வந்து என்னைப் பார்த்து விட்டுப் போகக்கூடாதா?

'இந்த உலகத்திலே உன்னைத்தவிர எனக்கு வேறு யார் இருக்கார்? நான் வாழ்வதே உனக்காகத்தான்' என அடிக் கடி சொல்வாரே. எனக்காக வாழ்வதானல் இப்படித்தான் கல்நெஞ்சனுக வாழ்வதா? என்னைப்பார்க்காமல் இருப்பதா?

எப்போதாவது இரவு நடுஜாமங்களில் திடீரென முழித்துவிடுவேன். சாமக்கோழி கூவும் சப்தம் கேட்கும். இடைவிட்டு இடைவிட்டு ஆந்தை அலறும் சப்தம் பயங்கர மாக காதில்விழும். நவாஸ் மச்சானின் எண்ணம் புயலென நெஞ்சில்வந்து மோதும். பாவம்! இந்நேரங்களில் என்ன செய்கிருரோ? எங்கே படுக்கிருரோ? நினைக்க நினைக்க ஏக்கமாகவரும்.

பல இரவுகளில் நான் அவரைக் கனவு காண்பேன். நானும் அவரும் ஆலமர விழுதுகளில் ஊஞ்சல்போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் எதிரும் புதிருமாக அமர்ந்து, 'அம்பாவோ இம்பாவோ' பாடுவதாக... அவர் மரக்கிளையொன்றில் அமர்ந்து மாம்பழங்களைப் பறித்து எறிய, நான் அவைகளை ஓடி ஓடிப் பொறுக்க அவர் மாம்பழத்தைக் கடித்துவிட்டு என்னிடம் தர, நான் அதைக் கடித்துவிட்டு அவரிடம் கொடுக்க... அவர் ஏதோ ஊருக்குப் போவதற்காக பெட்டியும், ஆளுமாக பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டு நிற்கிறார் அருகில் சென்ற என்னைப் பார்க்கிறார். எதிரே வந்த பஸ்ஸில் ஏறாமல் நானும், அவருமாக பக்கத்திலிருந்த கொய்யா மரமொன்றருகில் சென்று, அதில் ஏறி, அருகருகே இருந்து பழுத்த கொய்யாப்பழங்களைப் பறித்து அணில் கடிகடித்து தூக்கி எறிகிறோம்.

ஒருநாள் இரவு பயங்கரமான கனவு ஒன்று. அவர் என்னைத்தேடி வீட்டுக்கு வருகிறார். நீண்ட கால்சட்டை அணிந்து, சப்பாத்துச் சப்தம் ஒலிக்க அவர் வருவதை நான் நிலையருகில் நின்று பார்க்கிறேன். என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. அகஸ்மாத்தாக உம்மா அவரைப் பார்த்துவிடுகிறார். தூர படுத்திருந்த கடி நாயொன்றை அவர்மேல் ஏவி விடுகிறார். அவர் ''உம்மா உம்மா'' என ஓலமிட்டவாறு வந்தவழியே திரும்பி ஓடுகிறார். நான் நாயைக் கட்டுப்படுத்த வாசலுக்கு விரைகிறேன். கோபமுற்ற நாய் என்மீது பாய்ந்து, என்னைக் குதறத் துடிக்கிறது. நான் ''உம்மா'' என்ற சப்தத்துடன் திடுக்குற்று கண் விழிக்கிறேன். வேகமாக மூச்சுக்களை ஊதித் தள்ளுகிறேன். நவாஸ் மச்சானையே நினைத்தவாறு நீண்டநேரம் நித்திரையில்லாமல் புரள்கிறேன்.

'நவாஸ் மச்சான்! நீ எங்கே இருக்கிறாய்? உயிருடன் இருக்கிறாயா? உயிருடன் இருந்தால் என்னைவந்து பார்க்க மாட்டாயா? என் உம்மாமீது உனக்கு கோபமென்றால் நான் உனக்கு என்ன செய்தேன்? என் வாப்பா உனக்கு என்ன செய்தார்? ஏன் என்னை சோதிக்கிறாய்? உன் உம்மா எனக்குப்போட்ட சாணைக்கூறையை மறந்துவிட்டாயா?' நான் எனக்குள்ளேயே கேள்விகளைக் கேட்டு எனக்குள்ளேயே பதில்களைச் சொல்லி அசைபோடும் மிருகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

★ ★ ★

சுமார் ஒருவருடம் சென்றது.

குளிர் காலங்களில் உம்மாவின் ஆஸ்மா வியாதி அதிகரித்தது. அரைவாசிக்கு மேலாக மெலிந்துவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாவுக்கும் வேளாண்மை பெருத்த நட்டம். வயலை யாரோ ஒருவரிடம் ஈடுவைத்து பணம்பெற்று கடன் செலுத்தியதாக உம்மா மூலமாக அறிந்தேன்.

நவாஸ் மச்சானை நினைத்து வாப்பா இன்னமும் அழுவார். அவருக்கு துரோகம் செய்ததாக குமைவார். அவருக்காக பிரார்த்திப்பார்.

நான் இப்போதெல்லாம் பிடவை உடுக்கத் தொடங்கிவிட்டேன். சில நேரங்களில் பிடவை உடுத்து நிலைக்கண்ணாடிமுன் நின்று என்னை நானே நீண்டநேரம் பார்த்துக் கொண்டு நிற்பேன். தூரத்தே கண்ணாடிக்குள் என்னை யாரோ பார்த்துக்கொண்டு நிற்பதுபோன்ற எண்ணம் ஏற்படும். அவருடைய முகம் இலேசாக எனக்குத் தெரிவதுபோல் தோன்றும். வெட்கத்தால் முகம் சுளித்து தலைகுனிவேன். நீண்ட நேரத்தின்பின் அது வெறும் பிரேமை என தோன்றும்.

ஆமினு வயதுக்குவந்து வீட்டில் இருப்பதாக அறிந்தேன். நான் வீட்டில் இருக்கும்போது அவள் அடிக்கடி வந்து என்னைப் பார்த்துச் செல்வாளே. அவளைப்போய் பார்க்க வேண்டும்போல் தோன்றும். நீண்ட நாட்களாக நான் வெளியே எங்கும் செல்லவில்லை. நான்கு வேலிகளுக்குள் தான் என் வாழ்க்கை.

கடந்த நாலைந்து நாட்களாக நவாஸ் மச்சானின் எண்ணம் அடிக்கடி தலைகாட்டியது. அவரைப்பற்றியே சதா நினைத்துக்கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றியது.

ஒருநாள் காலை ஆமினுவின் உம்மா வீட்டுக்கு வந்தார். இருந்து இருந்துவிட்டு எப்போதாவது ஒருநாள் அவர் வருவார். உம்மாவுடனும், என்னுடனும் கதைத்துக் கொண்டிருப்பார்.

''ஆமினு சுகமா இருக்காளா?'' நான் கேட்டேன்.

''அதுக்குத்தானே நான் வந்தேன். அவளுக்கு உன்னைப் பார்க்க ஆசையா இருக்காம். கூட்டிவரச் சொல்லித்தான் என்னை அனுப்பினுள்''

''உம்மாகிட்ட கேளுங்க''

''அவ என்ன சொல்லப்போரு? நீ என்னோடதானே வரப்போறே?''

''உம்மா, ஆமினுவைப்போய் பார்த்துட்டு வரட்டா?'' நான் உம்மாவைப் பார்த்துக் கேட்டேன்.

''போயிட்டு வா. சுணங்காத. உங்க வாப்பா வந்தா உன்னை வெளியே அனுப்பினதுக்காக ஏசுவாரு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றடிக்குச் சென்று முகத்துக்கு சவர்க்காரம்போட்டு கழுவி, பிடவை மாற்றுவதற்காக அறைக்குள் சென்றேன். ஆமினுவின் உம்மா என்னைப் பின்தொடர்ந்து அறைக்குள் வந்தார்.

''நீண்ட நாட்களுக்குப் பின்னர் வெளியே போப்பிறே. இருக்கிற புடவைக்குள்ளே நல்லதா பார்த்து உடுத்துட்டு வா'' என்றார்

பாவாடை கட்டி, என் மாமா ஏன்டாம்பி கொழும் பிலிருந்து வாங்கிவந்து தந்த 'அதை'யும் அணிந்து, மேக நிறத்தில் என்னிடம் இருந்த சாரி ஒன்றைக்கட்டி, முகத் துக்கு பவுடர்போட்டு, தங்கச்சங்கிலி அணிந்து, உம்மா விடம் போய்வருவதாகக் கூறி விடைபெற்று ஆமினுவின் உம்மாவுடன் தெருவில் நடக்கத்தொடங்கினேன்.

பிடவை அணிந்து தெருவில் நான் செல்வது இதுதான் முதல்தடவை. இதே தெருவில் பாவாடை கட்டிய சிறுமி யாக நாவாஸ் மச்சானுடன் கையோடு கைசேர்த்து எத்தனை தடவை சென்றிருப்பன். திடீரென ஏற்பட்ட அவர் எண் ணம் என் கண்களில் திடீரெனவே கண்ணீரைச் சுரக்க வைத்தது.

பாதையில் ஓர் ஓரமாக நடந்தேன். தூரத்தே பலர் நடந்துவருவது தெரிந்தது. ஏனோ தெரியாது, ஆண்களெல் லாம் வைத்தகண் வாங்காமல் என்னையே பார்த்துக்கொண்டு நடந்துவருவதாக எனக்குத் தோன்றியது. என்னைக் கடந்து சென்ற சிலர், பின்பக்கமாக திரும்பித் திரும்பி என்னைப் பார்த்தவாறு சென்றனர்.

''தெருப் புறக்கிகள்! ஒரு குமருப்புள்ளை தெருவால போனா இவனுகளுக்கென்ன? பிசாசி மடையைப் பார்க் கிறுப்ல எப்படித்தான் பார்த்துப் பார்த்து முளிச்சுட்டுப் போறானுகள்!'' ஆமினுவின் உம்மா எனக்குக் கேட்கக் கூடியவாறு முணுமுணுத்தார்.

ஆமினுவின் வீட்டருகில் வந்தோம்.

''புள்ள, நீ எங்க வீட்டுக்குப் போ. காலமில்லாக் காலம் வீட்ட வாற உனக்குத் தர கடைக்குப் போயி ஏதா வது வாங்கிட்டு வந்துடறேன்'' என்பதிலே எதிர்பாராமல் அவர் முன்னே நடந்தார்.

வாசல் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றேன். ஒருவேளை மஜீது நின்றால் என்னைப் பார்த்துவிடுவாரோ என்ற வெட்கம் எனக்கு.

என் நல்லகாலம். வாசலில் யாரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தினுள் காலடி வைக்குமுன் வெளியில் நின்று ''ஆமினு '' என அழைத்தேன்.

''நஜீமா, உள்ளேவந்து பாயில இரு. இதோ வந்துடறேன்'' அறைக்குள் இருந்து ஆமினு கூறினுள்.

மண்டபத்தினுள் கிடந்த பாயில், சாரியை சற்று ஒதுக்கியவாறு அமர்ந்தேன். தலையில் முக்காட்டை சரி செய்தேன்.

இரண்டொரு விஞடி சென்றிருக்கும்.

''நஜீமா..'' என்ற ஓர் ஆண்குரல் எனக்குக் கேட்டது. அடிக்கடி கேட்டு எனக்குப் பழக்கமான குரல். ஆனுல் சற்று கரகரப்பு.

சரேலென அண்ணுந்து பார்த்தேன்.

எதிரே......

நீண்ட கால்சட்டை, சப்பாத்து, அரைக்கை வெள்ளை சேர்ட் அணிந்து படியப்படிய வாரிய கேசத்துடன்... முகத்தில் அரும்பியும் அரும்பாததுமான மீசையுடன் உயரமாக... அதற்கேற்ற பருமனுக ஓர் இளம் வாலிபன் நின்றுன். என்னைப் பார்த்துச் சிரித்தான். என் இதயத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் சதா ஒளிவிடும் அதே கள்ளங் கபடமற்ற சிரிப்பு. சந்தேகமே இல்லை. இது நவாஸ்தான். என் மச்சான் நவாஸ்தான்.

வெட்கத்தால் திடீரென தலையைக் குனிந்தேன். எழுந்து அறைக்குள் ஓடிவிடலாமா என நினைத்தேன்.

---

# 35

நவாஸ் என் அருகில் மெதுவாக நெருங்கிவந்தார். நான் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. என் மனதில் ஆயிரம் எண்ணங்கள் சூழ்ந்தன.

நவாஸை அந்த இடத்தில் சந்திப்பேன் என நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆமினுவின் உம்மா என்னை அழைத்துவந்தது... என்னைத் தனியே வீட்டுக்குப் போகுமாறு சொல்லிவிட்டு அவர் பக்கத்துக் கடைக்கு போவதாக போக்குக்காட்டியது.. எல்லாமே திட்டமிட்டு நான் நவாஸை சந்திப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்பதை தெரிந்துகொண்டேன்.

மெதுவாக கடைக்கண்ணுல் அவரைப் பார்த்தேன். எப்படி வளர்ந்து இருக்கிறுர்? கால்சட்டை, சேர்ட் எல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அணிந்து இருக்கிறூரே. நான் நினைத்ததுபோல் அப்படி ஒன்றும் தெருக்களில் அலைந்து திரிந்திருக்கமாட்டார். அல்லாவே! அவர் சந்தோசமாக இருந்தது ஒன்றே எனக்குப் போதும்.

''நஜீமா... ஏ முகத்தை அப்டியே புடிச்சிக்கொண்டிருக்கிறே? என்னைப் பார்க்கக்கூடாதா?'' கேட்டார். அவருடைய குரல் எப்படி மாறி இருக்கிறது! கதைக்கும்போது தான் எவ்வளவு நாகரீகமாக கதைக்கிறூர்!

குனிந்தவாறே சிரித்தேன்.

''நஜீமா சுகமா இருக்கியா?'' மெதுவாக கேட்டார்.

''ஓ நீங்க ?'' நானும் மௌனமாக.

''நா நல்லா இருக்கேன் நஜீமா''

''எங்க இருக்கீங்க?''

''கொழும்பில றோயல் கொலிஜ்ல படிச்சிட்டிருக்கேன்''

''படிக்கிறீங்களா?''

''ஆமா. கடந்த வருசம் எஸ். எஸ் சி. பாஸ் பண்ணிட்டன். இப்போ எச். எஸ். சி. படிக்கேன். நீ என்ன படிக்கே?''

' நான் இப்போ ஸ்கூலுக்கு போறல்ல''

''என்ன? ஏ?''

''நீங்க வீட்டைவிட்டுப்போன அடுத்த நாளில இருந்தே என்னை ஸ்கூலுக்கு போகவேணும்னு உம்மா சொல்லிட்டா''

''ஓ! எனக்கு எல்லாமே இப்பத்தான் புரியுது''

''எது புரியுது?''

''நான் ஊரைவிட்டுப் போறப்போ உன்னைக் கடைசி தடவையா பார்த்துச் சொல்லிட்டுப் போகலாம்னு உங்க ஸ்கூலுக்கு போனேன். நீ வரல்லென்னுங்க. எனக்குப் பெரிய ஏமாற்றம். அப்புறம் உனது ஸ்கூல் விலாசத்துக்கு ரெண்டு மூணு கடிதம் எழுதினேன். உன்னிடமிருந்து பதில் வராததால நான் எப்படியெல்லாம் வேதனைப்பட்டேன் தெரியுமா''

ஆமினு அறைக்குள் இருந்து வெளியே என்னை எட்டிப் பார்த்து கள்ளச் சிரிப்பு சிரித்தாள். நானும் அவளைப் பார்த்து சிரித்தேன்.

''நஜீமா. நீ எப்படி வளர்ந்திருக்கே தெரியுமா? நான் எல்லாமே கேள்விப்பட்டேன். ஆனு நீ இவ்வளவு அழகா இருப்பேன்னு நான் நினைக்கல்ல. ஆமா.. ஏன் இன்னும் குனிஞ்சுகொண்டிருக்கிறே? என் முகத்தைப் பாரேன். நீ கள்ளங்கபடமற்று என்னைப் பார்த்துச் சிரிப்பதைப் பார்க்கணும்னு நான் எவ்வளவு ஆசையோட வந்தேன் தெரியுமா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறியவாறே இன்னும் சற்று என் அருகில் வந்தார். எனக்கு இப்போதெல்லாம் இயல்பாகயாக ஏற்படும் கூச்சம் என்னை சிறிது தள்ளி உட்காரவைத்தது.

''என்மேலே உங்களுக்கு அவ்வளவு ஆசையா?'' நான் எதற்காகவோ இவ்வாறு கேட்டுவிட்டேன். பின்னர்தான் வெட்கத்தால் நாக்கைக் கடித்தேன்.

''நஜீமா... நான்தான் உங்கிட்ட அடிக்கடி சொல்வேனே. நான் உம்மா வா பா இல்லாத அனாதை. நான் வாழுறதே உனக்காகத்தான்னு''

''அதுதான் இவ்வளவு நாளும் என்னைப் பார்க்கவராம இருந்தீங்களாக்கும்? உங்களை நினைச்சி, நினைச்சி... நீங்க தனியா என்ன கஸ்டப்படுறீங்களோன்னு என்னாலதானே நீங்க வீட்டைவிட்டுப் போக நேர்ந்திச்சுன்னு .. உங்களை நினைக்கும்போதெல்லாம் நான் அழுதுக்கிட்டே இருப்பேன்''

எங்கள் வீட்டிலிருந்து புறப்பட்ட நாள் தொடக்கம் அவர் அனுபவித்த வாழ்க்கையைச் சொன்னார்.

''இப்ப நான் எங்க அதிபருட வீட்டிலதான் இருக்கேன். என் பெற்றோரைப்போல அவங்க என்னைக் கவனிக்கிறாங்க. நான் இப்போ படிக்கிற எச். எஸ். சி. பரீட்சையை பாஸ் பண்ணிட்டா, அப்புறம் மேல்படிப்புக்கு சேர்ந்திடலாம். எங்க அதிபர் அடிக்கடி சொல்வார். நான் ஒரு டாக்டராகணும்னு. எனக்குக்கூட அதுதான் விருப்பம். நான் ஒரு டாக்டராகி எங்க உம்மாவை எந்த பாரிசவாத நோய் சிறுகச்சிறுக பலிவாங்கிச்சோ, அந்த வியாதிக்காரங்களுக்கு சிகிச்சை செய்யணும்னு எனக்கு உள்ளூர ஆசை''

நாங்கள் நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருந்தோம். ஆமினாவின் உம்மா வீட்டுக்கு வந்துவிட்டார். தேநீர் ஊற்றித்தந்தார். ஆமினா அடிக்கடி எட்டிப்பார்த்து, கண்களைக் கொட்டிச் சிரித்துவிட்டு உள்ளே மறைந்தாள். மஜீது வெளியே இருந்து வீட்டுக்கு வந்தவர் என்னைக் கண்டதும் மாட்டுக்கொட்டிலுக்குச் சென்று, மாடுகளுக்கு வைக்கோல் போடுவதில் ஈடுபட்டார்.

''நஜீமா. உன் வாப்பா சுகமா இருக்காரா?''

வாப்பாவைப்பற்றி அவரிடம் கூறினேன். மச்சான் வீட்டைவிட்டுப் போனபின் வீட்டில் நடந்த அனைத்தையும் கூறினேன். அவரை நினைத்து வாப்பா ஓடாக உருகிப்போய் உள்ளதையும் கூறினேன். வாப்பாவுக்கு வேளாண்மையால் ஏற்பட்ட நட்டங்கள்... வயலை ஈடுவைத்து பணம் பெற்று கடன் அடைத்தமை... வீட்டில் கூடுதலான பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக நாளாந்தம் குடும்பம் நடத்துவதில் வாப்பா அனுபவிக்கும் கஸ்டங்கள்... உம்மாவின் ஆஸ்மா நோய்... எல்லாமே கூறினேன்.

''நீ சந்தோசமா இருப்பே என நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் எல்லாமே மாறாக நடந்திருக்கு'' அவர் பெருமூச்சு விட்டவாறே கூறினார்.

'நீங்க எப்ப போறீங்க?'' நான் கேட்டேன்.

''இன்றைக்கோ அல்லது நாளைக்கோ நான் போகலாம்''

''போசமுன்னாலே வீட்டுக்கு வந்துட்டுப் போங்களேன்''

''வேண்டாம் நஜீமா. உன்னைச் சந்திக்கணும்னு தான் நான் வந்தேன். சந்திச்சுட்டேன். இப்போ என் மனதிலிருந்த பாரம் கணிசமான அளவு குறைஞ்சாப்போல இருக்கு''

''வாப்பாவைப் பார்க்காமலேயே போப்பிறீங்களா?''

''உங்க வாப்பாவை பள்ளிவாசலிலே சந்திக்கறேன். அவரைச் சந்தித்துவிட்டுத்தான் போவேன்''

''திரும்ப எப்ப வருவீங்க?''

''சொல்லமுடியாது. எனக்கு நிறைய படிக்க இருக்கு. எத்தனையோ இலட்சியங்களோட நான் இப்போ வாழ்ந்து கொண்டிருக்கேன். நான் ஒன்றுக்குமே உதவாதவன் என்று தானே உங்க உம்மா நினைச்சா. என் வாழ்க்கையிலே முன்னேற எனக்கு இப்ப சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. உங்க உம்மாவின் எண்ணத்தை நான் மாற்றிக்காட்டப்போறேன்'' உற்சாகமாக கூறினார்.

''நீங்க பெரிய ஆளா ஆகிட்டா என்னை மறந்துடுவீங்களா?'' நான் மெதுவாக கேட்டேன்.

''நான் பெரிய ஆளா ஆகணும்னு நினைப்பதே உனக்காகத்தானே. நஜீமா.. நான் உண்மையா சொன்னா.. நீ என் இதயத்திலே சதா சுடர்விட்டு எரிஞ்சுகொண்டிருக்கிறே''

நவாஸ் இவ்வாறு சொன்னதும் எனது நெஞ்சில் நிறைவு ஏற்பட்டது.

சிறிதுநேரம் சென்றதும், அவர் ''இந்தா'' என என்னிடம் எதையோ நீட்டினார்.

''என்ன அது?''

''பணம். இதிலே ஐநூறு ரூபா இருக்கு. நான் ஓய்வு நேரத்திலே சில பிள்ளைகளுக்கு டியூசன் கொடுக்கிறேன். அதிலே கிடைத்த பணம். உனக்கு தருவதற்காக சேமித்து வைத்திருந்தேன்''

''எனக்கு எதுக்கு பணம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உனக்கு எதுக்காவது தேவைப்படலாம். வைச்சுக்கோ'' பணத்தை என் கையில் திணித்தார். அவர் விரல்களும் என் விரல்களும் ஒன்றுடன் ஒன்று உரசும்போது எனக்கு இனம் தெரியாத புல்லரிப்பு ஏற்பட்டது.

நாங்கள் தொடர்ந்து கதைத்துக்கொண்டிருந்தோம். அவருடைய பாடசாலையைப்பற்றி... குடியிருக்கும் வீட்டைப் பற்றி .. அதிபர் அப்துல்லாபற்றி .. அவருடைய மனைவி பற்றி... எல்லாமே என்னிடம் சொன்னார். அவருடைய பாணியில் ஹாஸ்யமாகக் கதைத்தார்.

''நஜீமா. ஒன்று செய்வோம். வர்றியா ?''

அவருடைய கேள்வி என்னைத் திடுக்குறவைத்தது.

''என்ன ?''

''வர்றியா. ரெண்டுபேருமா அந்த ஊஞ்சலிலே இருந்து அம்பாவோ சொல்லலாம்''

அவர் கூறியவாறு சிரித்தார். நானும் சிரித்தேன். நீண்ட நாட்களின்பின் நாங்கள் இருவரும் எங்களை மறந்து... இருக்கும் இடம் மறந்து .. மனம்விட்டு சிரித்தோம்.

★ ★ ★

நவாஸ் திரும்பவும் கொழும்புக்குச் சென்றுவிட்டார் என ஆமினு மூலமாக அறிந்தேன். அவர் வாப்பாவைப் பள்ளிவாசலில் வைத்து சந்தித்ததை வாப்பா என்னிடம் கூறினார். நான் அவருடன் கதைத்ததை வாப்பாவிடம் கூறினேன். உம்மாவுக்கு தெரியவேண்டாம் என வாப்பா என்னிடம் கேட்டுக்கொண்டார்.

நவாஸ் என்னிடம் தந்த பணத்தை வாப்பாவிடம் கொடுத்தேன் அவருக்கு ஒரே சந்தோசம். அந்தப் பணம் பெரிய பொறுப்பு ஒன்றுக்கு உதவியதாக வாப்பா சொன்னார்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

கோடையும், மாரியும் மாறி மாறி வந்தன.

தொடர்ந்து வாப்பாவுக்கு வேளாண்மையில் நட்டம் ஏற்பட்டது. வாப்பா வேளாண்மை செய்யும் வயலில் புதிதாக ஏற்பட்ட ஒருவகை புழுத்தாக்கம் எதிர்பார்த்த விளைச்சலைக் கொடுக்காமல் நட்டத்தை ஏற்படுத்தியதாக ஒருதரம் கூறினார். அடுத்தவருடத்தில் ஏற்பட்ட பெருமழை, குளத்தின் அணைக்கட்டை உடைத்துவிட்டதால் வெள்ளம் பெருகி வேளாண்மையை முற்றாக அழித்துவிட்டதாக அடுத்தவருடம் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்தொல்லே வாப்பாவுக்கு கழுத்துப்பிடியாக பிடித்தது. உம்மாவுக்கும் வாப்பாவுக்கும் வீட்டில் ஒரே சண்டை. நாங்கள் குடியிருந்த வீட்டை ஈடுவைத்து பணம் பெற முதலில் உம்மா முட்டுக்கட்டையாக இருந்தார். பின்னர் ஒத்துக்கொண்டார். வாப்பாவின் கடன்சுமை ஓரளவு குறைந்தது.

நவாஸ் மச்சானே நான் நினைக்காத நாட்களே இல்லே. எப்போதாவது இருந்து இருந்துவிட்டு மஜீதுக்கு கடிதம் அனுப்புவார். ஆமினு மூலமாக மச்சானேப்பற்றிய தகவல்கள் எனக்கு கிடைத்துக்கொண்டிருந்தன.

இரண்டு வருடங்கள் மேலும் கடந்தன.

மீண்டும் ஒருதரம் நவாஸ் மச்சானேச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சென்றதடவைபோலவே ஆமினுவின் உம்மா வீட்டுக்கு வந்து, உம்மாவிடம் ஏதோ சாக்குச் சொல்லி என்னே அழைத்துச்சென்ருர்.

நான் கற்பனே செய்யாத அளவுக்கு அவர் வளர்ந்து இருந்தார்.

நானும் அவரும் நீண்டநேரம் கதைத்தோம்.

அவர் எச் எஸ் சி. பரீட்சை சித்தியடைந்து, டாக்டருக்கு படிப்பதற்காக கல்லூரிக்குப் போவதாகக் கூறினர்.

''நஜீமா... இன்னும் நாலு வருசம் இருக்கு. அப்புறம் நான் டாக்டராகிடுவன்''

''டாக்டராகிட்டா?''

''நேரா ஒரு வீட்டுக்குப் போவேன்''

''எந்த வீட்டுக்கு?''

''ஏதோ ஒரு வீட்டுக்கு. அங்கே போயி, மாமி. மாமி. நான்தான் உங்க மருமகன் நவாஸ் நீங்க நெருப்புக்கட்டையால யாருக்கு சூடுபோட்டு உங்க வீட்டிலிருந்து துரத்திவிட்டீங்களோ அந்த நவாஸ். நான் இப்போ ஒரு டாக்டர். மரியாதையா உங்க மகளே எனக்கு கல்யாணம் முடிச்சி வைக்கிறீங்களா? இல்லே, உங்களுக்கு கொள்ளிக்கட்டையால சூடு வைக்கவா? என கேட்பேன்''

''ஆசையைப் பாரு!''

''ஏன்? உனக்கு அந்த ஆசை இல்லேயா?'' என்னே உற்றுப்பார்த்தவாறு கேட்டார்.

நான் மௌனமாக நின்றேன்.

''ஏன் பேசாம நிக்கிறே? சொல்லேன். உனக்கு அந்த ஆசை இருக்கா இல்லேயா?''

நான் தொடர்ந்து மௌனமாகவே நின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொல்லேன்''

''எனக்கு வீட்டிலே துக்கமோ, சந்தோசமோ ஏற்பட்டா நான் அழுவதோ, சிரிப்பதோ எதைப்பார்த்து என்று உங்களுக்குத் தெரியுமா?'' கேட்டவாறே அவரை உற்றுப் பார்த்தேன்.

''தெரியாதே''

''உங்க உம்மா எனக்குப் போட்ட சாணைக்கூறையை''

''அது இன்னும் உங்கிட்ட இருக்கா?''

''பத்திரமா இருக்கு''

''எனக்கு ஒண்ணு தோணுது. சொல்லட்டா?''

''என்னவாம்?''

''உன்னை அப்படியே கட்டிப்புடிச்சி '' அவர் எதையோ சொன்னார். நான் வெட்கத்தால் தலைகுனிந்தேன்.

''ஆளைப்பாரேன். கொழும்புக்குப் போய் இந்த நரகல் கதைகளைத்தான் பழகி இருக்கிறாராக்கும்''

''சரி. நான் இன்னுமொன்று சொல்றேன். அதைக் கேளேன்''

''என்னவாம்?''

''நம்ம ஊரிலிருந்து கொழும்பு வரையிலே உன்னைப் போல அழகான பெண்ணை நான் இன்னும் காணல்ல. நீ அவ்வளவு அழகா இருக்கே''

நான் மெய்மறந்தேன். இதுவரை என் சிநேகிதைகள், என்னுடன் கூட படித்தவர்கள் பலர் நான் அழகாக இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் எனக்கு ஏற்படாத மகிழ்ச்சி, நவாஸ் மச்சான் நான் அழகாக இருப்பதாக கூறியதும் ஏற்பட்டது.

''நான் டாக்டர் பரீட்சையிலே பாஸ் செய்து, உன்னையும் என் மனைவி ஆக்கிக்கொண்டா இந்த உலகத்திலேயே பாக்கியசாலி நான் மட்டும்தான்''

'என்னைத் திருமணம் செய்வதை அவர் பாக்கியமாகக் கருதுகிறாரா என்ன?'

என் மயிர்க்கால்கள் குத்திட்டன.

''நஜீமா .. நான் உனக்கு கொஞ்சம் சுவிற்ஸ்தான் வாங்கிவந்திருக்கேன். உனக்கு தருவதற்கு என்னிடம் பணம் இல்லை. மெடிகல் கொலீஜ்ல சேர்ந்தபிறகுதான் என் கஸ்டம் தெரியுது. பெரியவர கஸ்டப்படுத்தவும் நான் விரும்பல்ல நான் திறமையா சித்தியடைந்ததற்காக ஸ்கொலசிப் பணம் கிடைக்குது. வங்கி கடனும் எடுத்திருக்கேன். அத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞலதான் உனக்கு தருவதற்கு நான் பணமே கொண்டு வரல்ல''

''நான் உங்ககிட்டப் பணம் கேட்கவே இல்லையே. எனக்கு உங்கிட்ட இருந்து எதுவுமே தேவலே. என்னை நீங்க மறக்காம இருந்தா அதுவே போதும்''

''மறந்தா என்ன செய்வே?''

''நீங்க என்னை மறக்கமாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்''

''மறந்துட்டா?''

''நீங்க அப்டி திருப்பித் திருப்பி சொன்னு நான் அழு வேன். அழட்டா?''

''அழுவேன். அப்பத்தான் நான் உன்னை ஊஞ்சலிலே என் மடிகளுள்ளே படுக்கவைத்து எண்ணிஎண்ணிப் பார்க்க மனம் பாட்டுப் படிக்கலாம்''

''ஆசையைப் பாரேன்''

நான் சிரித்தேன். அவரும் சிரித்தார்.

ஆனல்......

அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து என் வாழ்வில் வீசப் போகும் புயலை நான் அப்போது தெரிந்திருக்கவில்லை.

---

## 36

சுமார் ஒரு வருடம் கடந்துவிட்டது.

நாங்கள் குடியிருக்கும் வீட்டை ஈடுவைத்து ஒரு வருடத் துக்குமேல் ஆகிவிட்டது. இன்னும் அதை மீட்கவில்லை. ஈடு எடுத்தவர் அடிக்கடி வீட்டுக்கு வந்து வாப்பாவிடம் கதைத்துவிட்டுச் செல்வார். வாப்பா ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அவரை அனுப்பிவிடுவார்.

வீட்டை மீட்கமுடியாமல் இருப்பதில் வாப்பாவுக்கு மிக வேதனை. உம்மாவிடம் அடிக்கடி சொல்வார். சில நேரங்களில் தன் பேச்சைக் கேட்காமல் வீட்டை ஈடுவைத்தது தொடர்பாக உம்மா வாப்பாவுடன் சண்டைபிடிப்பார்.

வாப்பாவுக்கு போதிய வருமானம் இல்லாததால் வீட்டில் அரைப்பட்டினி, கால்பட்டினி.

உம்மாவின் ஆஸ்மா வியாதி முற்றிவிட்டது. மழை காலங்களில் உம்மாவின் முகத்தைப் பார்க்கமுடியாமல் இருக்கும். ஒவ்வொரு மூச்சு விடுவதற்கும் உம்மா கயிறிழுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார். நல்ல வைத்தியரிடம் காட்டுவதற்கும் வீட்டில் பண மிருக்காது. 'நவாஸ் மச்சான் டாக்டராகி வந்தால் முதலில் உம்மாவுக்குத்தான் சிகிச்சை செய்ய சொல்லவேண்டும்' என நான் அடிக்கடி நினைத்துக்கொள்வேன்.

அது ஒரு வெள்ளிக்கிழமை.

வாப்பா வீட்டில் இல்லே.

வாசற்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

நான் சென்று கதவைத் திறந்தேன்.

எதிரே வாட்டசாட்டமான ஒரு வாலிபன் நின்றான். உயரமாக வளர்ந்து .. சற்று அடர்த்தியான முடி . முகத்தில் அகலமான மீசை வளர்த்து பார்ப்பதற்கு சற்று பயம் ஏற்படும் தோற்றத்தில்... சாரன் அணிந்து...

நான் கதவில் சரேலென மறைந்தேன்.

''யாரைத் தேடுறீங்க?''

''இதுதான் மூமீன் போடியாரின் வீடா?'' கரகரத்த குரலில் அவன் என்னைத் திருப்பிக் கேட்டான்.

''ஆமா''

''அவர் உங்க வாப்பாவா?''

''ஆமா. ஏன் கேட்கிறீங்க?''

''வாப்பா வீட்டில இருக்காரா?''

''இல்ல. வெளியே போயிட்டார். நீங்க யாரு? என்ன வேணும்?''

''நான் உங்க வாப்பாவைப் பார்க்கத்தான் வந்தேன். எப்ப வருவார்?''

''சொல்லிட்டுப் போகல்ல''

''அப்போ நான் போறேன். வாப்பா வந்ததும் நான் தேடிட்டுப் போனதா சொல்லுங்க''

''நீங்க யாரு?''

''முஸ்தபா போடியாருட மகன் என்று சொல்லுங்க. உங்க வாப்பாவுக்கு தெரியும்''

கதவை அடைப்பதற்காக முகத்தை வெளியே திருப்பினேன். வாசலில் நின்றவன் என்னை சற்று உற்றுப் பார்த்து விட்டுச் சென்றான்.

வாப்பா வீட்டுக்கு வந்தார். அந்த வாலிபனைப்பற்றி அவரிடம் கூறினேன்.

''முஸ்தபா போடியாருட மகனா? அவன் ரொம்ப கெட்டவனாச்சே. அவன் எதற்காக இங்கு வந்தான்?''

''யார் வாப்பா அவன்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவனுடைய வாப்பா முஸ்தபா போடியாரிடம்தான் நம்ம வீடும், வயலும் ஈட்டில இருக்கு''

''அவனே எதற்காக கெட்டவன்னு சொல்றீங்க?''

''அவனேப்பற்றி இந்த ஊரிலே எல்லாருக்கும் தெரியும். ஆள் பார்த்தா அழகன். ஆனல் அவ்வளவுவும் வஞ்சகம். போடியாருக்கு ஒரே மகன். செல்லமா வளர்ந்து குட்டிச் சுவராயிட்டான். போடியாருட வட்டிப்பணத்தை செலவழிக்கப் பொறந்தவன் என்று பேசிக்கொள்வாங்க''

''பணத்தைச் செலவழிப்பவன் கெட்டவனு என்ன? ஊதாரி. கெட்டவன்னு ஏன் சொல்றீங்க?''

''நஜீமா. நானும் நீயும் பேசிக்கொள்ளமுடியாத விசயங்களில எல்லாம் அவன் கைதேர்ந்தவன்மா. அவன் இந்த வீட்டிற்கு இனிமேல் வந்தா, நீ அவன்முன்னலே போகாதே''

வாப்பா அந்த வாலிபனே எவ்வளவுதான் கெட்டவன் என்று சொன்னலும் அவனுடைய முகத்தோற்றம் என்னவோ அடிக்கடி என் மனதில் அலே அடித்தது. அந்த முகத்தில் தெரிந்த பயங்கரம் எனக்கு என்னவோ பயப்பிராந்தியை ஏற்படுத்தியது.

அன்று இரவு சுமார் ஏழுமணி இருக்கலாம்.

முஸ்தபா போடியார் வீட்டிற்கு வந்தார்.

மூச்சிழுப்பதில் கயிறிழுத்த உம்மாவின் மார்பை நான் தடவிவிட்டுக்கொண்டிருந்தேன்.

அவரைக் கண்டதும் வாப்பா நடுங்கினர். ஈட்டை வட்டியுடன் மீட்குமாறு கேட்டு வந்திருப்பார் என வாப்பா நினைத்தார்போலும்.

அவர்களின் உரையாடல் என் செவிகளில் அலேயலேயாக மோதியது.

''மூமீன். என் மகன் சலீம் இன்று காலே உம்ம வீட்டுக்கு வந்தானே. வீட்டிலே சொன்னங்களா?''

''சொன்னங்க''

''என் மகன் எதற்காக வந்தான்னு உமக்குத் தெரியுமா?''

''ஈட்டை மீட்கச்சொல்லி கேட்க வந்திருப்பார்''

''ஆமா. அதற்காகத்தான் நான் அவனே அனுப்பி இருந்தேன். அதை உம்மிடம் சொல்லத்தான் இங்க அவன் வந்தான். ஆனல் ....''

''என்ன ஆனல்?''

''அவன் எதற்காக இங்கு வந்தானே அதை அடியோடு மறந்துட்டு வேறு ஏதோ ஒரு எண்ணத்தோட வீட்டுக்குத் திரும்பிவந்தான்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன எண்ணம்?''

''அது இருக்கட்டும். என் மகனைப்பத்தி நீ என்ன நினைக்கிறே?''

''நான் என்ன சொல்லலாம்? ஊரிலே நாலுபேரும் நாலுமாதிரி பேசிக்கிருங்க''

''ஊர்காறங்களை விடு. பொருமை பிடிச்சவங்க. நீ என்ன நினைக்கிறே?''

''நான் எதைச் சொல்லலாம்?''

''அப்படின்னு நீ அவனை நல்லவன்னு சொல்றே. அப்படித்தானே''

''அப்படியே வைச்சுக்கங்க''

''நீதான் சரியா சொன்னே. மூமீன்... எனக்கு அவன் ஒரே மகன். எங்கிட்ட உள்ள சொத்துக்களுக்கு அவன்தான் ஒரே வாரிசு. நம்ம ஊரிலேயே அவனைவிட யாருமே அழகான வாலிபன் இல்ல அதனுலே......''

''அதனுலே...?''

''அவனைப் பலபேர் கல்யாணம் கேட்டாங்க. அவன் யாருக்குமே பிடிகொடுக்கல்ல. இப்ப என்னடான்னு ''

''சொல்லுங்க''

''உன் வீட்டுக்கு இன்று காலைல வந்து உன் மகளைப் பார்த்தாளு. கல்யாணம் செய்வதாளு உன் மகளைத்தான் செய்வேன்னு இப்போ ஒத்தைக்காலில நிக்கான்''

''என்ன ?'' வாப்பா தலைதெறிக்க கேட்டார்.

நான் திடுக்குற்றேன். சற்றுமே எதிர்பாராமல் தலையில் குண்டு விழுந்து வெடிப்பதுபோல் எனக்கு அதிர்ச்சி.

''முடியாது. இது ஒருக்காலும் நடக்காது. கிளியை வளர்த்து கீரிப்புள்ளைக்குக் கொடுப்பதா? தயவுசெய்து இதை எங்கிட்டே சொல்லாதீங்க. அவளுக்கு முறை மாப்பிள்ளை காத்துக்கொண்டிருக்கான் என் மகளின் வழியில வராதீங்க'' வாப்பா நாக்குழறிஞர். வார்த்தைகள் தடுமாறிஞர்.

''மூமீன். ரெரம்பவும்தான் பதட்டப்படுறீர். கொஞ்சம் யோசித்துப்பாரும். என் மகனிடம் என்ன இல்லை? பணம் இருக்கு. அழகு இருக்கு. வாலிபம் இருக்கு. அவன் தங்களின் பெண்ணை விரும்பமாட்டாளு என நூறுபேர் ஆலாய்ப் பறக்கிருங்க. உம்ம காலடியிலே அதிர்ஸ்டம் வருகுது உம்ம கதவை அதிர்ஸ்டம் கையால தட்டுது. நல்லா யோசித்துப் பாரும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தேவைவல்ல. யோசிக்கவே தேவைவல்ல. என் மகளை உங்க மகனுக்கு நான் தரப்போறதே இல்லை. இதை விட்டுட்டு வேற எதையாவது கதைங்க''

''மூமீன். நிலைமையை யோசிக்காம சொல்லறே. உம்மாலே எட்டிப்பிடிக்கவே முடியாத நிலையில் உள்ள நான் உன் படியேறிவந்து உங்கிட்ட என் பையனுக்கு பெண் கேட்கிறதானு, உன் மகளை என் மகன் எவ்வளவுக்கு விரும்புகிறன் என்பதை யோசித்துப்பார். தவிர, நான் யார் என்பதும் உனக்குத் தெரியும்''

''நீங்க யாராவும் இருக்கலாம். எனக்குக் கவலை இல்லை. என் மக வழிக்கு வராதீங்க. அவளுக்கு முறை மாப்பிளை இருக்கான்''

''நான் யாராவும் இருக்கலாமா? அதாவது உம்ம வயல், நீ குடியிருக்கும் இந்த வீடுவளவு எல்லாமே இப்போ என் கிட்டே இருக்கு. நீ அவைகளை மீட்கும் காலம் ஏற்கனவேயே முடிவடைஞ்சிட்டு. நீ என் கோரிக்கைக்கு இணங்கல்ல, நீயும் உன் பிள்ளைகளும் நடுத்தெருவில நிப்பீங்க''

''தயவுசெய்து எனக்கு இந்த பரீட்சையை வைக்காதீங்க. நான் ஏதோ அரைப்பட்டினி கால்பட்டினியோட காலத்தைக் கடத்துறேன், என்னை விட்டுடுங்க'' வாப்பா அழுதார்.

''நீ ஒரு மடையன். வலியவாற சீதேவியை காலால உதைக்கிறீர். நீமட்டும் சரி சொன்னு, உம்ம வயல், வீடு எல்லாவற்றையுமே உமக்குத் திருப்பி தந்துடறேன். எதுக்கும் நாளை இரவைக்கு வர்றேன். யோசித்து நல்ல முடிவு சொல்லும்''

போடியார் சென்றுவிட்டார்.

வாப்பா என்னையும், உம்மாவையும் அழைத்தார். நடந்தவற்றைச் சொன்னுர்.

என் இதயம் இன்னும் அழுதது.

''ஏங்க. அவர் சொன்னதுபோல சீதேவி வலியவந்து கதவைத் தட்டுது. பேசாம இதுக்கு சம்மதீங்க. இவளை ஒரு பணக்கார வீட்டிலே கொடுத்தாத்தான், மற்ற பிள்ளைகளின் கருமங்களையும் ஒருவாறு முடிக்கலாம்'' என்றுர் உம்மா.

''நீ என்ன கதைக்கிறே? இவளுச்குத்தான் முறை மாப்பிள்ளை நவாஸ் காத்துக்கிட்டிருக்கானே''

''யாரு? அந்தக் காட்டுப்பயலா? அவன் இருக்கானே, மௌத்தாயிட்டானே? எந்த ரோட்டிலே மூட்டை சுமக்கிருனே? உங்களுக்கு பைத்தியம்தான் புடிச்சிருக்கு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவன் ஒண்ணும் ரோட்டில திரியல்ல. டாக்டருக்கு படிச்சிட்டிருக்கான். இன்னும் மூணு வருசத்திலே அவன் டாக்டராகிடுவான்''

உம்மா ஏனோ தெரியாது வெடிச் சிரிப்பு சிரித்தார்.

''உண்மையா சொல்லுங்க. உங்களுக்கு ஒண்ணும் மூளைக்குழப்பம் இல்லையே. அந்த மூதேவியாவது, டாகடருக்குப் படிக்கிறதாவது! ஏன் பொய் சொல்றீங்க?''

''நா ஒண்ணும் பொய் சொல்லல்ல''

''பொய்தான் சொல்றீங்க. ஏங்க. போடியாருட மகனைப்போல ஒரு மாப்பிள்ளை கிடைக்க இவள் கொடுத்து வைச்சிருக்கணும். அதையே முடிச்சிடுவோம்''

''அவனைப்பற்றி உனக்கு எதுவுமே தெரியா. அவன் ஒரு முரடன். கெட்டவன். அவனுக்கா நம்ம மகளைக் கொடுப்பது? நான் உயிரோட இருக்கும்வரை இது நடக்கப் போவதே இல்லை. நடக்க விடவும்மாட்டேன்''

''நானும் உயிரோட இருக்கும்வரை அந்தத் தறுதலைக்கு என் மகளைக் கொடுக்கப்போவதே இல்லை. கொடுக்க விடவும்மாட்டேன்''

உம்மா வாப்பாவை ஏச... வாப்பா உம்மாவுக்கு ஏச... மற்ற பிள்ளைகள் நனைந்த கோழிகளாக ஒளிந்துநின்று இவர்கள் வாய்ச்சண்டை பிடிப்பதைப் பார்க்க...

நான் அறைக்குள் சென்று. நவாஸ் மச்சானின் உம்மா எனக்காகப் போட்ட சாணைக்கூறையை கையில் எடுத்து, முகத்தை அதனுள் புதைத்து அழத்தொடங்கினேன்.

அன்று இரவெல்லாம் எனக்கு நித்திரையே இல்லை. அழுது, அழுது முகம் வீங்கியது.

நவாஸ் மச்சானை நான் உடனடியாக சந்திக்கவேண்டும். இதற்கு ஏதாவது மாற்றுவழி கண்டுபிடிக்கவேண்டும்.

நடுச்சாமம். வீட்டில் அனைவரும் நித்திரையாகிவிட்டனர்.

நான் மெதுவாக எழுந்து விளக்கைக் கொளுத்தி. ஏற்கனவேயே தயாராக எடுத்துவைத்திருந்த கடதாசியில் பென்சிலால் நவாஸ் மச்சானுக்கு ஒரு கடிதம் எழுதனேன். என் தற்போதைய நிலையைச் சொல்லி உடனடியாக என்னை வந்து சந்திக்குமாறு எழுதினேன்.

அடுத்தநாள் காலை. ஆமினாவை வீட்டுக்கு அழைத்து வருமாறு என் தங்கை ஒருத்தியை அனுப்பினேன்.

ஆமினா வந்தாள். கடந்த இரவு நடந்த விசயங்களை அவளிடம் கூறினேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆமினு. இதோபார். நான் நவாஸ் மச்சானுக்காக எழுதிய கடிதம். இதை உன் நாநா மஜீதிடம் கொடுத்து அவருக்கு உடனேயே அனுப்பிவிடுமாறு சொல். நவாஸ் மச்சான் உடனேயே வந்தால்தான் இந்தப் பிரச்சினையி லிருந்து நான் விடுபடலாம்'' என்றேன்.

கடிதத்தை மஜீத்மூலமாக அனுப்புவதாகக் கூறி ஆமினு பெற்றுச்சென்றுள்.

வாப்பாவை கிணற்றடியில் உம்மாவுக்குத் தெரியாமல் சந்தித்து, நவாஸ் மச்சானுக்கு கடிதம் அனுப்பியதைச் சொல்லி இன்னும் இரண்டு கிழமைகளுக்கு இந்த விச யத்தை ஒத்திப்போடக்கூடியவாறு முஸ்தபா போடியா ருடன் கதைக்குமாறு கூறினேன்.

அன்று இரவு முஸ்தபா போடியார் வீட்டுக்கு வந்தார். வாப்பாவின் முடிவுகுறித்து விசாரித்தார்.

''என்னை ரொம்ப இக்கட்டான நிலைக்கு நீங்க ஆக்கிட் டீங்க. என் மகளுக்கு முறை மாப்பிள்ளை இருக்கான். அவன் டாக்டருக்கு படிச்சிக்கொண்டிருக்கான். தவிர, இந் தக் கல்யாணத்திலே என் மகளுக்குத் துளிகூட விருப்பம் இல்ல. தயவுசெய்து நீங்க வற்புறுத்தாதீங்க'' வாப்பா கெஞ்சினுர்.

''நான் இதை நம்பல்ல. என் மகனை உங்களுக்குப் பிடிக்கல்ல. அதுதான் மறுக்கிறீங்க. என் மகன் இதுவரை யிலே யாரையுமே விரும்பி தனக்கு முடிச்சித்தருமாறு கேட் கல்ல. இப்ப கேட்கிறுன். அதுவும் உம்ம மகளை. இதுக்கு நீ சம்மதிக்கல்ல... நீரும் உம்ம குடும்பமும் நடுருேட்டில நிக்கவேண்டி ஏற்படும்''

வாப்பா ஏதேதோ சமாதானம் சொல்ல முயற்சிக்க.. போடியார் திரும்பத்திரும்ப தனது கட்சியை வற்புறுத்த... என் இதயம் நவாஸ் மச்சானை நினைத்து ஒப்பாரி வைக்க... உம்மா அடிக்கடி வாப்பாவை கண்களால் பார்த்து போடி யாரின் கோரிக்கைக்கு இணங்குமாறு சாடை காட்ட..

வாப்பா இறுதியாகக் கூறினுர்.

''போடியார். எனக்கு இரண்டு கிழமை தவணை தாங்க. இதைப்பற்றி யோசித்து முடிவு சொலறேன்''

''ஒரு கிழமை தவணை தாறன். இன்றைக்கு சனிக் கிழமை. அடுத்த சனிக்கிழமை இங்கே வருவேன். உம்ம முடிவு நல்ல முடிவா சொல்லணும். இல்ல... அதற்கு அடுத்த கிழமையே நீரும், உம்ம பிள்ளைகளும் நடுத்தெருவிலே நிக்கவேண்டி ஏற்படும். என் கோரிக்கைக்கு இணங்கிலந்தே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்ம வயல், வீடு எல்லாவற்றையும் உம்ம மகள் பேருக்கு திருப்பி எழுதித்தந்துடறேன்''

போடியார் வாப்பாவின் பதிலை எதிர்பார்க்காமல் சென்றார்.

என் இதயத்தில் இடி... மின்னல்... புயல்... கண்கள் அருவியாக நீரைச் சொரிந்தன.

---

# 37

நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்தன.

நவாஸ் மச்சானிடமிருந்து ஒரு பதிலும் கிடைக்கவில்லை. அவரும் வரவில்லை. நான் வாசற்படியில் உட்கார்ந்து அவரைப்பற்றிய ஏதாவது தகவல் வராதா என காத்துக்கொண்டிருந்தேன்.

மச்சானிடமிருந்து தகவல் எதுவுமே இல்லை. மஜீது என்னுடைய கடிதத்தை தபாலில் சேர்த்துவிட்டதாக ஆமினா மூலமாக செய்தி அனுப்பினார். வினாடி வினாடியாக அவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இரண்டு நாட்களில் அவருக்கு கடிதம் கிடைத்திருக்கலாம். மூன்றாம் நாளே புறப்பட்டால் இதுவரை வந்திருப்பாரே. ஏன் வரவில்லை?

நான் எதையெதையோ நினைத்தேன். இல்லாததையெல்லாம் கற்பனை செய்தேன்.

'அவர் இப்போது டாக்டருக்குப் படிப்பவர். அவர் டாக்டராகிட்டா ஆயிரம்பேர் அவருக்கு கல்யாணம் கேட்பாங்க. பெரியவீடு, வயல், நகை எல்லாமே கிடைச்சும். என்னைவிட அழகான பெண்கூட கிடைக்கலாம். அப்படி இருக்க, என்னை, இந்த ஏழையை விரும்புவாரா? அவருக்கு சூடுபோட்டு என் உம்மா வீட்டைவிட்டும் துரத்திவிட்டார். காலில் ஏற்பட்ட காயம் அவருக்கு மறைந்திருந்தாலும் அவர் மனதில் பட்டவடு மறைந்திருக்குமா? நான் என் உம்மாவின் மகள். என்னை மணமுடிக்க அவர் விரும்புவாரா? அவர் முன்னேறுவதற்கு ஒருசதமேனும் நாங்கள் செலவழியாமல் இருக்க, அவர் தானாக வாழ்க்கையில் முன்னேறி அதனால் கிடைக்கும் வசதிகளை என்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவாரா? அவர் படிக்கும் கல்லூரியில் எத்தனையோ அழகிகள் அவருடன்கூட படிக்கலாம், அவர்களில் யாராவது ஒருத்தியுடன் அவருக்கு ஏதாவது தொடர்பு ஏற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். அவர் இப்போது நாகரீகமானவர். அவருக்கு என்னை இப்போதெல்லாம் பிடிக்காது இருக்கலாம். நான் எக்கேடு கெட்டுப்போனாலும், நான் யாரையாவது முடித்து எப்படி வாழ்ந்தாலும் அவர் என்னைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை என்ற வைராக்கியத்தில் இருக்கலாம். அவர் என்னை மறந்துவிட்டார். நான் அவருக்கு வேண்டாதவளாக ஆகிவிட்டேன்.

என் மனம் ஆயிரம் எண்ணங்களை எண்ணியது. எவ்வளவு தான் அதீத கற்பனைகள் என் மனதில் எழுந்தாலும், அவர் என்னைத்தேடி ஓடிவருவார் என்பதில்மட்டும் என்னவோ அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு இருந்தது.

ஐந்து நாட்கள் கடந்துவிட்டன.

அவரைப்பற்றிய தகவல்... அவரிடமிருந்து ஏதாவது தகவல்... எதுவுமே இல்லை.

நான் முள்ளில் படுப்பதாக உணர்ந்தேன். எனக்கு நினைவுதெரிந்த நாள்தொடக்கம் அவருடன் என்னையும் இணைத்து வாழ்ந்த ஒவ்வொரு நாட்களும் என் மனதில் எழுந்தன. ஒவ்வொரு உரையாடலும்... ஒவ்வொரு சம்பவமும்... ஒவ்வொரு சிரிப்பும்... ஒவ்வொரு வேதனையும்... மனதில் அலையாக எழுந்து அடங்கின.

வாசற்படி சிலையாக மாறினேன். பாதையில் வைத்தவிழி எடுக்காமல் இருந்தேன். இரவு நேரங்களில் எனக்கு நித்திரையே இல்லை. கற்பனை... சிந்தனை... சிந்தனை... கற்பனை...

வினாடிகள் யுகமாக கழிந்தன.

ஆறுநாட்கள் கடந்தன. இன்று ஏழாவது நாள். சனிக்கிழமை. இறுதிமுடிவு பெறுவதற்காக முஸ்தபா போடியார் வீட்டுக்கு வருவதாக கூறியநாள்.

''நஜீமா... நவாஸிடமிருந்து ஒரு தகவலும் இல்லையே'' என்றார் வாப்பா.

'எனக்கும் அதுதான் பயமா இருக்கு'' கூறியவாறு கண்களைத் துடைத்தேன்.

''நவாஸ் வராமல்விட்டா, இப்போ வலிய வர்ற மாப்பிள்ளையை இழக்கலாமா?'' வாப்பா கேட்டார்.

போடியாரின் மகனை நான் முடிப்பதற்கு வாப்பாவுக்கு சம்மதமோ? உம்மா வாப்பாவைச் சம்மதிக்க வைத்து இருப்பார்.

''வாப்பா, இந்த கல்யாணத்தில உங்களுக்கு விருப்பமா?''

''நீ நவாஸை முடிக்கிறதுதான் எனக்கு விருப்பம். ஆனா, அவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லையே. அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை முடிக்கனும்னு எண்ணம் இருந்தா உன் கடிதத்தைக் கண்டதும் இதுவரை ஓடி வந்திருக்கமாட்டானு? அவன் இப்போ டாக்டருக்குப் படிக்கான். சமூகத்திலே பெரிய அந்தஸ்தை அடையப்போகிறவன். உன்னைப்போன்ற ஒரு ஏழையை தன் வாழ்க்கைத் துணைவியாக்க அவன் விரும்புவானு?''

''அவர் டாக்டராகி வெளிவந்ததும், என்னைத்தான் திருமணம் செய்வேன் என்று சென்றமுறை ஊருக்கு வந்தப்போ என் தலையில்தொட்டு சத்தியம் செய்தார் வாப்பா''

''ஆண்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப சத்தியம் செய்வாங்க. அப்புறம மறந்துடுவாங்க. இப்போ வலிய வாறதை கை நழுவிவிட்டா, போடியார்ர கோபத்துக்கு ஆளாகனும். நமம வீடுவாசலை இழந்து நடுத்தெருவில ஓட்டாண்டியா நிக்கவேண்டி ஏற்படும். இதுவும் இல்லாம, அதுவும் இல்லாம ஏமாறவேண்டி ஏற்படும். நீ மட்டுமா எனக்கு குமரா இருக்கே? உனக்குப் பின்னுலே நாலு இருக்கு''

''என்னை என்ன செய்யச் சொல்றீங்க?''

''இதைப்பற்றி யோசித்துப் பார்க்கச் சொல்றேன். இலவுகாத்த கிளியாக நீ ஆகிடக் கூடாதுன்னு சொல்றேன்''

வாப்பா என்மனதில் பூகம்பத்தை கிளப்பிவிட்டுச் சென்றூர்.

நேரம் செல்லச் செல்ல நவாஸ் மச்சான்மேல் எனக்கு கோபம் கோபமாக ஏற்பட்டது.

'நான் எத்தகைய இக்கட்டான நிலையில் இருக்கிறேன். என் நிலையைத் தெளிவாக எழுதியும் என்னைத் தவிக்க விட்டு அமைதியாக இருக்கிருரே. மஜீது அனுப்பும் கடிதங்கள் அவருக்கு இப்போதெல்லாம் கிடைப்பதாகத்தானே சொன்ஞர். இந்தக் கடிதமும் நிச்சயமாக கிடைத்திருக்க வேண்டுமே! என் கடிதத்தை தொடர்ந்து, என் நிலையை ஆமினு மூலமாக கேட்டறிந்த மஜீதும் ஒரு கடிதம் எழுதி அனுப்பினுராமே. அவருக்கு நிச்சயமாக கடிதங்கள் கிடைத்திருக்கும. அவர் என்னை மறக்க முயற்சிக்கிருர். நான் அவருக்கு வேண்டாதவள். நான் பட்டிக்காடு. நான் ஏழை'

நவாஸை நினைத்து நினைத்து அழுதேன். என் கண்களில் கண்ணீர் வற்றவில்லையா? நிலையான ஊற்றுக்கண்களா?

பிற்பகலாகிவிட்டது.

நவாஸ் தொடர்பாக ஒரு தகவலுமே இல்லை. என் இதயம் நடுங்கியது. தலைசுற்றியது. மயக்கம் வருவதுபோன்ற உணர்வு. வாசற்படியில் சாய்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மயக்கம் தெளியும்போது இருட்டாகிவிட்டது.

வாப்பா முகத்தில் நீர்தெளித்து என் மயக்கத்தைப் போக்கி இருந்தார்.

கண்விழித்ததும், வாப்பாவும், உம்மாவும் என் எதிரில் இருந்தனர்.

வாசலில் முஸ்தபா போடியார் நடந்துவருவது எனக்குத் தெரிந்தது.

மச்சானிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா என நான் அவசரமாக வாப்பாவிடம் விசாரித்தேன். அவர் இல்லை என தலையாட்டினார்.

போடியாரை வாப்பா மண்டபத்தினுள் அழைத்தார். நான் மெதுவாக எழுந்து அறைக்குள் சென்றேன்.

அவர்கள் இருவரும் கதைத்துக்கொண்டிருந்தனர். உம்மா தேனீர் கலந்து கொடுத்தார். அவர்களின் உரையாடலில் உம்மாவும் அடிக்கடி கலந்துகொண்டார்.

நீண்டநேரம் அவர்கள் கதைத்தனர்.

கடைசியில் .

போடியாரின் மகனுக்கு என்னைத் திருமணம் செய்வதாக அவர்கள் முடிவு செய்தனர்.

என்மனம் 'ஓ' என கதறி அழுதது.

நான் மெதுவாக எழுந்துசென்று மாமி எனக்காக போட்ட சாணைக்கூறையை கையிலெடுத்து, அதில் முகம் புதைத்து ஏங்கி ஏங்கி அழுதேன்.

'நவாஸ், என்னை மன்னிச்சுடுங்க. இதிலே எனக்கு எள்ளளவும் சம்மதமே இல்லை. எனது சம்மதம் இல்லாமலேயே அவங்க முடிவு செய்துட்டாங்க. நான் பலி ஆடு. ஈடு வைச்ச எங்க வீட்டையும், வயலையும் மீட்டு எடுப்பதற்காக என்னைப் பலி கொடுத்திட்டாங்க. என்னை மன்னிச்சிடுங்க .. என்னை மன்னிச்சுடுங்க ...'

என்னை மறந்து அழுதேன். இதயம் ஒப்பாரி வைத்தது. ஓலமிட்டது. சாணைக்கூறை என் கண்ணீரால் நனையுமட்டும்... இதய வேதனைகள் அருவியாக ஓடி சாணைக்கூறையில் சங்கமமாகும்வரை .. நான் அழுதேன்.

நாட்கள் நகர்ந்தன.

முஸ்தபா போடியாரின் மகன் சலீம், ஆடம்பரமில்லாமல், அமைதியாக, எளிமையாக நடந்த திருமண வைபவத்தில் என் கரம்பற்றி என்னை மனைவியாக ஆக்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38

ஆரம்பத்தில் சலீம் என்னுடன் அன்பாக இருந்தார். என் அழகைப்பற்றி புகழ்வார். என்னை முதன் முதலில் கண்ட நாள்தொடக்கம் என் நினைவாகவே வாழ்ந்ததாக சொன்னார். தன்னைத் திருமணம் செய்ய நான் மறுத்ததாக கேள்வியுற்று வேதனைப்பட்டதாக கூறினார்.

எனக்கு ஏதாவது வாங்கித்தருவதாக அங்கலாய்ப்பார். ஏதாவது தன்னிடம் வாங்கித்தருமாறு கேட்கவேண்டுமென வற்புறுத்துவார். பல சாரிகள் வாங்கித்தந்தார்.

வாப்பாவின் வயல் திரும்பவும் அவருக்குக் கிடைத்தது. அதில் அவர் வேளாண்மை செய்ய ஆயத்தங்கள் மேற்கொண்டார். எனது மாமனாருக்கு சொந்தமான வேறுசில வயல்களும் வேளாண்மை செய்வதற்காக வாப்பாவுக்குக் கிடைத்தன.

சலீம் என்னை அவருடைய சொந்தக்காரர்களின் வீடுகளுக்கு அழைத்துச்சென்றார். அவர்களெல்லாம் பணக்காரர்கள். பல இடங்களில் எங்களுக்கு விருந்து பரிமாறப்பட்டன.

எவ்வளவுதான் சந்தோசமான வாழ்க்கையை நான் அனுபவித்தாலும், என் மனதில் என்னவோ இடைக்கிடை நவாஸ் தொடர்பான எண்ணம் முள்ளாக தைத்தது. அவருக்கு நான் பெரிய துரோகம் செய்துவிட்டதாக என்னைக் குற்றம்சாட்டியது.

திருமணம் நடைபெற்று சுமார் ஒரு மாதம் கடந்திருக்கலாம்.

ஆமினா ஒருநாள் என் வீட்டுக்கு வந்தாள். வீட்டில் சலீம் இல்லை. வாப்பாவும் உம்மாவை யாரோ ஒரு டாக்டரிடம் காட்டுவதற்காக அழைத்துச்சென்றிருந்தார்.

''நஜீமா. சுகமா இருக்கியா?'' ஆமினா கேட்டாள்.

''பரவாயில்லை. நீ?''

''உனக்கு விசயம் தெரியுமா?''

''என்ன?''

''நேற்று நவாஸ் எங்க வீட்டுக்கு வந்தார்''

என் இதயம் திடீரென நின்று, மீண்டும் இயங்கத் தொடங்கியது. வேகமாக வேகமாக... இயங்கியது.

''நீ என்ன சொல்றே?''

''ஆமா. நவாஸ் நேற்று எங்க வீட்டுக்கு வந்துட்டு, உனக்கு கல்யாணம் ஆன செய்தியை நாங்க சொன்னதும் திரும்பி போயிட்டார்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்போ அவர் ஊரிலே இல்லையா?''

''நேற்று பிற்பகலே போயிட்டார்''

''அவருக்கென்ன! அவருதான் என்னை மறந்துட்டாரே. எனக்கு திருமணமானால் என்ன, ஆகாவிட்டால்தான் அவருக்கென்ன?''

''நீ புரியாம சொல்றே. உனக்கு திருமணம் ஆகிட்டென்று அவர் அறிந்ததும், அவருக்கு பைத்தியம் பிடிக்காதது ஒன்றுதான் இல்லே''

''ஏன்? அவருக்கு என்னோட அவ்வளவு ஆசையா? அப்படி ஆசை இருந்தா என் கடிதம் கிடைச்சதும் ஊருக்கு வந்து என்னைப் பார்த்திருக்கலாமே''

''நீ அவருக்கு கடிதம் எழுதினப்போ அவர் எங்கே இருந்தார் என உனக்குத் தெரியுமா?''

''எங்க இருந்தார்?''

''ஆஸ்பத்திரியிலே''

''என்ன ..?''

''ஆமா. அவரும் அவருடைய அதிபரும் மலைப்பாதையிலே காரில போறப்போ, கார் பாதையிலேயிருந்து வழுகி ஐம்பது அடி பள்ளத்திலே பாய்ந்து, இவருக்கு தலையிலே அடிபட்டு சுமார் இரண்டுமாத காலமாக உயிருக்குப் போராடி ஆஸ்பத்திரியிலே இருந்து இருக்காரு. சென்ற கிழமைதான் உன் கடிதமும், என் நாநா கடிதமும் அவருக்கு வாசிக்க கிடைச்சிருக்கு. ஆஸ்பத்திரியிலேயிருந்து அவரை வீட்டுக்குப் போகச்சொன்னதும், அந்த வேதனைகளின் மத்தியிலும் அவர் உன்னைப் பார்க்கவந்தாரு. நீ திருமணமான கதையை நாங்க அவரிடம் சொன்னதும், நடைப்பிணமாகி திரும்பி போயிட்டாரு''

என்னை அறியாமலேயே .. என் கட்டுப்பாட்டையும் மீறி என் கண்கள் நீரைச் சொரிந்தன.

'அல்லாவே! நான் அவசரப்பட்டுவிட்டேனே! நவாஸ்! என்னை மன்னிச்சுடுங்க! என்னை மன்னிச்சுடுங்க!'

என் இதயம் 'ஹோ'வென அழுதது.

★ ★ ★

நாட்கள் செல்லச்செல்ல என் கணவரின் பழக்க வழக்கங்கள் சில மாறத்தொடங்கின.

அவர் என்ன தொழில் செய்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே செல்வார். வீட்டுக்கு வருவார். சிலசமயங்களில் இரவு நீண்ட நேரம்வரை வீட்டுக்கு வரவேமாட்டார். அப்படியான இரவுகளில் நள்ளிரவு நேரத்தில் அவருடைய நண்பர்களுடன் காரில் வந்து வீட்டில் இறங்கி காரையும், நண்பர்களையும் அனுப்பிவிடுவார்.

எங்கள் வீட்டில் குடியிருப்பது தனக்குப் பிடிக்கவில்லை என்பார். வீட்டில் பிள்ளைகளின் இரைச்சல் தனது மன அமைதியைக் கெடுப்பதாக அடிக்கடி புறுபுறுப்பார்.

கையில் நிறைய பணம் வைத்திருப்பார். சிலநேரங்களில் அவருடைய முகத்தைப் பார்க்க பயமாகத் தோன்றும். அவரின் அருகில் சென்ருல் ஏதோ இனம்புரியாத வாடை வீசும்.

ஒருநாள் என் வாப்பா கேட்டார். ''நஜீமா, உன் மாப்பிள்ளை குடிக்கிருராமே. உண்மையா?''

''எனக்குத் தெரியாது''

''அவர் குடிப்பதாகத்தான் எனக்குக் கேள்வி. குடிப்பது நமது மார்க்கத்திலேயே விலக்கப்பட்டது. அவரை அந்தப் பழக்கத்திலிருந்து திருத்த முயற்சிசெய்''

அவர் குடிப்பதையிட்டு அவரிடம் கேட்கவில்லை. எனக்குப் பயம். நான் ஏதாவது கேட்டால் சள் என முகத்தில் பாய்ந்துவிடுவார்.

அவருடைய தகப்பனுருக்கு சொந்தமான வேறு ஒரு புது வீடு சற்று தள்ளி இருந்தது. அதில் வாடகைக்கு குடியிருந்தவர்கள் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டார்கள். என்னை அதில் தனிக்குடித்தனம் நடத்தவருமாறு அழைத்தார். நான் மறுத்தாலும், அவரின் வற்புறுத்தலுக்கு கீழ்ப்படிந்தேன்.

அது ஒரு விசாலமான வீடு. மின்சாரம், டெலிபோன் எல்லாமே இருந்தன.

என்னுடன் துணையாக இருப்பதற்கும், எனக்கு உதவி செய்வதற்குமாக ஒரு வேலைக்காரியை அமர்த்தித்தந்தார். வீட்டில் ரேடியோ இருந்தது. போட்டுக் கேட்பேன். ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு மனநிலையில் இருப்பார். சில சமயங்களில் சந்தோசம். பலசமயங்களில் கோபம். கோபம் வந்தால் முகத்தைப் பார்க்கவேமுடியாது. அவ்வளவு பயங்கரம்

வீட்டிலிருந்து அடிக்கடி டெலிபோன் செய்வார். யாருக்கு டெலிபோன் செய்கிருர், எதற்காக செய்கிருர் என்பதையெல்லாம்பற்றி நான் அலட்டிக்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் செய்யும் தொழிலைப்பற்றி மட்டும் என்னால் அறிய முடியவில்லை.

ஒருநாள். அவர் வீட்டில் இல்லை. பிற்பகலாகிவிட்டது. திடும் திடுமென காக்கி உடுப்பு அணிந்த சில பொலிஸ் காரர்கள் வீட்டுக்குள் ஓடிவந்தனர். வீட்டில் நானும், வேலைக்காரப் பெண்ணும்.

நான் பயத்தால் நடுங்கி ஓர் ஓரமாக ஒதுங்கிநின்றேன். வேலைக்காரப் பெண் சற்று துணிச்சலுள்ளவள்.

''சலீம் எங்கே?''

''அவங்க வெளியே போயிட்டாங்க''

''எப்ப வருவான்?''

''தெரியாதுங்க''

''உங்க வீட்டை சோதனைபோட வந்திருக்கோம்''

''எதுக்காக?''

''உங்க வீட்டிலே போதைவஸ்து இருப்பதாக தகவல் கிடைச்சிருக்கு''

''போதைவஸ்தென்றால் என்னங்க?''

''ஏன் தெரியாதா? கஞ்சாவும், அபினியும்''

''அப்படி எதுவும் இங்க இல்லியே''

''அங்காலபோ. பொய்சொல்றே. ம் தேடுங்கப்பா''

பொலிஸ்காரர்கள் ஒவ்வொரு அறையாக... ஒவ்வொரு மூலைமுடுக்காக... ஒவ்வொரு அலுமாரியாக... எதையும் விடாமல் தேடினர்.

''எங்குமே இல்லசார்'' ஒரு பொலிஸ்காரன் கூறினான்.

''நல்லா தேடுங்கபா''

தொடர்ந்து தேடினர்.

''வேறு எங்கேயோர் ஒளிச்சுவைச்சிருப்பான் சார். எதற்கும் ஸ்டேசனுக்கு வரச்சொல்லிட்டு போவம்''

''ஏம்மா. சலீம் உன் புருசனா?'' நீண்ட கால்சட்டை போட்ட உயர்ந்த பொலிஸ்காரன் என்னிடம் கேட்டான்.

எனக்கு பயநடுக்கம். ஆமென தலையசைத்தேன்.

''உன்னைப் பார்த்தா அப்பாவியா தோணுது. ஏன் உன் புருசனுக்கு இந்தத் தொழில்? எங்களுக்கு சவால் விட்டுக்கொண்டே பல வருடங்களாக அவன் இந்தப் போதைப் பொருட்கள் கடத்தல் தொழில் செய்கிறான். அவன்கிட்டே சொல்லி அவனைத் திருத்த முயற்சி செய்மா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மீண்டும் தலையசைத்தேன்.

''எதுக்கும் அவன் வந்ததும் ஸ்ரேசனுக்கு வரச்சொல்''

அவர்கள் அனைவரும் போய்விட்டனர்.

என் மனதை ஒரு பெரிய பாறுங்கல் தாக்கியதாக உணர்ந்தேன்.

போதைப் பொருட்கள் கடத்தல்...... பொலிசாருக்கு சவால்... இதுதான் என் கணவனின் தொழிலா? வாப்பா வட்டிக்கு பணம் கொடுக்கும் பெரிய போடியார். மகன் சமூகத்தையே அழிக்கும போதைப்பொருள் வியாபாரி. இரண்டுமே ஹறுமான தொழில்கள்.

அவருடைய மனநிலை அடிக்கடி மாறுதலடைவது எதற்காக என்பதை எனக்கு இப்போது அறியமுடிந்தது. அவருடைய நண்பர்கள்... அடிக்கடி அவர் கோபமடைதல்... கைநிறைய பணம் வைத்திருத்தல்... பகலெல்லாம் யார் யாருக்கோ டெலிபோன் செய்தல்... இரவுவேளைகளில் நேரஞ்சென்று வீட்டுக்கு வருதல்... நண்பர்களுடன் குடித்தல் எல்லாமே எனக்குப் புரிந்தது.

இரவானதும் அவர் வீட்டுக்கு வந்தார். பொலிஸ்காரர்கள் வந்து வீட்டைச் சோதனை போட்டதை நான் சொன்னேன்.

அவர் முகத்தில் திடீரென பயங்கரம் காட்சி அளித்தது.

''நீ எதற்காக அவர்களை சோதனைபோட விட்டே? வீட்டைச் சோதனையிட வரண்ட் கொண்டுவந்தான்களா?'' கேட்டார்.

நான் மௌனமாக நின்றேன்.

''நீதான் ஒரு மூடச்சி இருக்கிறியே, எனக்கென்று மனைவியாக'' அவர் வெறுப்புடன் கூறியவாறு எனக்கு ஏசினார். பொலீசாருக்கு ஏசினார். ஸ்டேசனுக்கு போய்விட்டு வருவதாக கூறிக்கொண்டு வெளியே சென்றார்.

எனக்கு திடீரென நவாஸ் மச்சானின் எண்ணம் எழுந்தது. ஒரு டாக்டர். ஏழைகளுக்கு சேவை செய்யவேண்டும் என நினைத்துக்கொண்டிருப்பவர். அவரின் மனைவியாக நான் வாழ்ந்தால்... என் இதயம் அழத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் நடந்தன. எனது திருமண வாழ்க்கையில் இரண்டு ஆண்டுகள் எப்படியோ ஓடிக்கழிந்தன. இப்போது நான் கருவுற்று இருந்தேன்.

# 39

எனக்கு அடிக்கடி தலையிடியும், வாந்தியும் ஏற்படத்தொடங்கியது. உம்மா வந்து பார்த்து விட்டுச் செல்வார். பகல் காலங்களில் நீண்ட நேரம் படுத்தே பொழுதைக் கழிப்பேன்.

எனது கணவர் தனது தொழிலை விட்டதாக இல்லை. நான் கருவுற்றது தொடர்பாக அவருக்கு பெருத்த மகிழ்ச்சி.

''நஜீமா. நான் உன்னோட சில சமயங்களிலே ரொம்ப முரட்டுத்தனமா நடந்துக்கிறேன் இல்லையா?'' கேட்டார்.

நான் சிரித்தவாறே தலையசைத்தேன்.

''அது என்னுடைய இயற்கையான குணம். அதை மாற்ற முயற்சிக்கிறேன், முடியாம இருக்கு. ஏன் பேசாம நிக்கிறே? எதையாவது கதையேன்'' என் கைகளைப் பற்றியவாறு கெஞ்சினார்.

''நான் ஒன்று கேட்பேன். கோபிக்கமாட்டீங்களா?'' என்றேன்.

''நான் எதற்காக கோபிக்கணும்?''

''நீங்க இதே தொழிலைத்தான் தொடர்ந்து செய்யப் போறீங்களா?''

அவருடைய முகம் சற்று கறுத்தது. இதை அவர் என்னிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

''இந்த தொழிலிலதான் இப்போ லாபம் நிறைய இருக்கு. கைநிறைய பணம் புரள்கிற தொழில் இது ஒன்று தான்''

''அதற்காக ஹறாமான ஒரு தொழிலைச் செய்கிறீங் களே!''

''என்ன செய்யலாம்? சின்னவயசில இருந்தே நான் இதைப் பழகிட்டேன். என்னுடைய நண்பர்களும் இந்த தொழில் சம்பந்தப்பட்டவர்கள். இந்த தொழிலை நான் விட்டா அவங்களையும் விடணும். ஆனா அவங்களை என்னால விடமுடியாது. என் வாழ்க்கையோட அவங்க அவ்வளவு ஐக்கியமாகிட்டாங்க. என் இரகசியங்களெல்லாம் அவங் களுக்கு தெரியும். அவங்களைவிட்டு நான் விலகினா அவங்க என்னைக் காட்டிக்கொடுத்துவிடுவாங்க''

''அப்படி ஒங்ககிட்ட என்ன இரகசியம் மறைஞ்சி இருக்கு?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்ஞ? ரெண்ஞ? நான் போதைவஸ்துக்களை எங்கே வாங்குகிறேன், எங்கே விற்கிறேன், இதிலே சம்பந்தப்பட்டவங்க யார் யார், நான் யார் யாரை மோசடி செய்திருக்கேன் என்பனபோன்ற எல்லா இரகசியங்களும் அவங்களுக்குத் தெரியும்''

''நீங்க மோசடியும் செய்வீங்களா?''

''இந்த தொழிலில எல்லாமே சகஜம்''

''அப்போ இந்தத் தொழில விடவே மாட்டீங்க இல்லையா?''

அவருடைய முகம் இன்னும் சற்றுக் கறுப்பதைப்போல் தெரிந்தது. மனநிலை மாறுவதை முகம் காட்டியது.

''இதோபார். இதற்குமேலே உன்கூட இது சம்பந்தமா நான் கதைக்க விரும்பல. என் தொழிலில் நீ தலையிடக் கூடாது. அப்படி தலையிடுவதானு நீயும் நானும் கணவன் மனைவியா வாழ்வதே கஸ்டமாயிடும். என்ன சொல்றே?''

நான் எதுவும் பேசவில்லை. என் தலையெழுத்தை நொந்தவாறு அறைக்குள் சென்றேன்.

★ ★ ★

நாளாக ஆக என் உடலில் பலமாற்றங்கள் தெரியத் தொடங்கின.

வாப்பா அடிக்கடி வீட்டுக்குவந்து என்னைப் பார்த்து விட்டுச் செல்வார். அவர் இப்போதெல்லாம் சொந்தக் காணியிலேயே வேளாண்மை செய்கிறார். வயலில் நல்ல விளைச்சல் கிடைத்ததாக சொன்னார். உம்மாவை ஆஸ்மா சம்பந்தப்பட்ட ஒரு நல்ல டாக்டரிடம் காட்டியதால் அவருக்கும் இப்போது தேவலை.

என் தங்கைகள் அடிக்கடி வீட்டுக்கு வருவர். ஏனோ தெரியாது, ஆமினு என்னைச் சந்திக்க வருவதே இல்லை. நான் நவாஸ் மச்சானுக்கு பெரிய துரோகம் செய்துவிட்டதாக அவள் கடைசி தடவையாக என்னைச் சந்தித்தபோது கூறினாள்.

நான் அவருக்கு எங்கே துரோகம் செய்தேன்?

நான் அவருக்கு என் நிலையை அறிவிக்கவில்லையா? அவருக்காக வினடி வினடியாக காத்திருக்கவலலையா? எங்கள் குடும்பமே நடுத்தெருவில் நிற்கவேண்டிய அந்தச் சூழ்நிலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் எனக்கு நானே சமாதானம் கூறிக்கொண்டாலும், மச்சானின் எண்ணம் என் இதயத்தில் முள்ளாக இடறிக்கொண்டே இருந்தது.

என்னை அடிக்கடி டாக்டரிடம் அழைத்துச் செல்வார். கவனமாக இருக்கவேண்டுமென என்னிடம் வற்புறுத்துவார்.

என்னைப் பார்ப்பதற்காக என் குடும்பத்தினரும் அவர் குடும்பத்தினரும் அடிக்கடி வீட்டுக்கு வந்தனர். நிறைய பெண்கள்தான். ஒவ்வொருவரும் எனக்கு ஒவ்வொரு ஆலோசனை சொல்வர்.

என் கணவனைமட்டும் என்னால் சரிவர புரிந்துகொள்ள முடியாமல்தான் இருந்தது. ஒரு கணம் சிரிப்பார் மறு கணம் முறைப்பார். திடீர் திடீரென் கோபம் கொள்வார்.

எனக்கு இப்போது ஒன்பதுமாதம்.

இரவுவேளைகளில் நித்திரையே இல்லை. அவர்கூட பல இரவுகளில் நடுச்சாமத்தில்தான் வீட்டுக்கு வருவார் நிறைய குடித்துவிட்டு வருவார். என்னை எதிர்கொள்ளாமலேயே அறைக்குள்சென்று படுத்துவிடுவார். நானும், வேலைக்காரப் பெண்ணும் வெற்றிலை பாக்கை மென்றவாறு இரவில் நீண்ட நேரத்துக்கு கதைத்துக்கொண்டிருப்போம். அவள் தன்னுடைய வாழ்க்கையை பகுதி பகுதியாக என்னிடம் சொல்வாள். சீதனக் கொடுமையினால் பாதிக்கப்பட்ட வாழ்க்கை அவளுடையது. பரிதாபமான கதை.

எனக்கு ஆண் குழந்தைதான் பிறக்குமென்று அவள் சொல்வாள். எனக்குக்கூட அண் குழந்தைதான் விருப்பம். எனது உம்மாவுக்கு அடுக்கடுக்காக பிறந்ததெல்லாம் பெண் குழந்தையாதலால், பெண் குழந்தையென்றாலே எனக்கு ஒருவித அருவருப்பு. அவருக்கு என்னவோ பெண் குழந்தை மேல்தான் விருப்பமாம்.

''ஏன் பெண்குழந்தை பிறக்கணும்னு நீங்க விரும்புறீங்க?''

''பெண் குழந்தைன்னா, உன்னைப்போல அழகா இருக்கும்.'' என்பார்.

என் அழகைப்பற்றி அவர் புகழ்வதில் ஒன்றும் குறைச்சலில்லை. ஆனால்.. நான் அவரிடமிருந்து எதிர்பார்க்கும் அன்பு எனக்குக் கிடைப்பதில்லை. ஒரு கணம் என்னிடம் அன்பு பாராட்டினால், மறுகணம் என்னிடம் நாயினும் கேவலமாக நடக்கப்பார்ப்பார்

சில நேரங்களில் நான் நவாஸ் மச்சானை நினைத்துப் பார்ப்பேன். அவர் இப்போது என்ன செய்கிறாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் பரீட்சை எழுதி முடித்து இருப்பாரா? யாரையாவது திருமணம் செய்து இருப்பாரோ என்னவோ? அவர் எங்கிருந்தாலும் சுகமாக, நிம்மதியாக இருக்கவேண்டும் எனவே நான் இறைவனிடம் பிரார்த்திப்பேன்.

எனக்கு இப்போது ஒன்பதுமாதம் முடிந்து பத்துமாதம் தொடங்கிவிட்டது. எந்தநேரத்திலும் குழந்தை பிறக்கும் என பேசிக்கொண்டார்கள்.

ஏனோ தெரியாது, கடந்த சில நாட்களாக என் கணவர் நல்ல மனநிலையில் காணப்படவில்லை. இரவு வேளைகளில் வழமையைவிட பிந்தி வீட்டுக்கு வருவார். அடிக்கடி யாருக்கோ டெலிபோன் செய்வார். சதா எதைப்பற்றியோ யோசித்தவாறு இருப்பார்.

அது ஒரு வியாழக்கிழமை, பிற்பகல்.

வயிறு சற்று வலிப்பதாக உணர்ந்தேன். அவர் அறைக்குள் இருந்தார். அவரிடம் சொல்லலாமென அறையை நோக்கி நடந்தேன். அவர் டெலிபோனில் பேசுவது கேட்டது. டெலிபோன் செய்யும்போது உள்ளே சென்றால் பாய்ந்து விழுவார். பேசி முடியட்டும் என வெளியில் காத்துக்கொண்டிருந்தேன். அவர் பேசுவது அப்பட்டமாக எனது காதுகளில் வீழ்ந்தது.

"மாஹிர். நான் சொன்னதை நல்லா ஞாபகம் வைச்சுக்கோ. இரவு சரியா பத்துமணிக்கு நான் உன்னைச் சந்திப்பேன். நாம இருவரும் எட்டாம் கட்டைச் சந்திக்குப் போகிறோம். சரியாக பதினொரு மணிக்கு அந்த பார்ட்டி அபினி பெட்டியோட காரில வருவாங்க. உன்னைக் கண்டதும் காரை நிறுத்துவாங்க. நீ பணத்தைக்கொடுத்து அந்தப் பெட்டியை வாங்கிக்கணும். நான் சடுதியாக முகமூடி அணிந்து கையில் துப்பாக்கியோட வந்து அவங்களை மிரட்டுவேன். நீயும் நானுமா அவங்களை அதே இடத்தில கட்டி வைச்சுட்டு, பணத்தையும் அபினியையும் எடுத்துக்கொண்டு அதே காரிலே வர்ரோம். காரை வழியில போட்டுட்டு நாம வந்துடலாம். ஒன்னைமட்டும் ஞாபகம் வைச்சுக்கோ. இது புது பார்ட்டி. ஜாக்கிரதையா கையாளணும்"

மற்ற பக்கத்திலிருந்தவன் எதையோ கூறினான். இவர் திரும்ப திரும்ப தன்னுடைய திட்டத்தை விளக்கினார்.

டெலிபோனை அவர் வைப்பதற்கும், நான் அறையினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

எதற்காக அவரைப் பார்க்கப்போனேனோ அதை மறந்தேன். என் முகத்தில் கோபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாருக்கு டெலிபோன் பண்ணினீங்க?''

''உனக்கு தேவையில்லாத விசயம். போ அங்கால''

''எனக்கு தெரிந்து ஆகணும். சொல்லுங்க. யாருக்கு டெலிபோன் செய்தீங்க?''

''நான் யாருக்காவது செய்தேன். உனக்கெதற்கு? என் விசயங்களில நீ தலையிடக்கூடாதுண்ணு நான் உங்கிட்ட சொல்லி இருக்கன்''

''நான் தலையிட்டுத்தான் ஆகுவேன். என்னால இன்னும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. நீங்க இன்று இரவைக்கு எங்கேயுமே போகக்கூடாது''

''போனு என்னடி செய்வே?'' அவர் பற்களைக் கடித்தவாறு என்னை நோக்கி எழுந்தார்.

''நான் உங்களைப் போகவிடமாட்டேன். நீங்க பயங்கரமாக எதையோ இன்று ராவைக்கு செய்யப்போறீங்க. துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி கொள்ளை அடிக்கப் போறீங்க. எனக்கு இன்றைக்கு உடம்புச்கு நல்லா இல்ல. என்னைத் தனியே விட்டுட்டு நீங்க எங்கயுமே போகக்கூடாது''

''இல்ல. போய்த்தான் ஆகுவேன். எத்தனையோ மாதங்களாக போட்ட திட்டம் இது. இதுல பல லட்ச ரூபா சம்பந்தப்படுது. இதைமட்டும் வெற்றிகரமா செய்துட்டு நான் இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுட போறன். அப்புறம் இந்தத் தொழில செய்யவேமாட்டேன். உன் தலைமேலே சத்தியம்''

நான் அவரிடம் கெஞ்சினேன். கால்களைப் பிடித்து மன்றுடினேன். அவர் என் கோரிக்கைக்கு காது கொடுக்கவே இல்லை.

எனக்கு திரும்பவும் வயிற்றுநோவு ஏற்பட்டது. எனக்கு அவரின்மேல் ஏற்பட்ட வெறுப்பு, அவரிடம் என் வேதனை தொடர்பாக எதையும் சொல்லவிடாமல் தடுத்தது.

அவர் வீட்டிலிருந்தும் வெளியே சென்றுவிட்டார். நான் அழுதவாறு இருந்தேன். வேலைக்கார பெண் சென்று எனது பெற்றோரை அழைத்துவந்தாள்.

நேரம் ஆகஆக வயிற்றுநோவு அதிகரிக்கத்தொடங்கியது. என்னுல் தாங்கமுடியாத வலி. என் மாமா ஏன்டாம்பி ஓடோடிச்சென்று மருத்துவிச்சியை அழைத்துவந்தார்.

என்னுல் சகிக்கமுடியாத வேதனை... அலை அலையாக வலி எழுபுவதும் அடங்குவதுமாக .. வாய்விட்டு அழுதேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேதனையின் மத்தியிலும் எனக்கு அவரின் எண்ண மாகவே இருந்தது. அவர் எங்கே போகிறாரோ? என்ன தொல்லையில் அகப்பட்டுக்கொள்ளப்போகிறாரோ?

''எங்கம்மா உன் புருசன்?'' வாப்பா கேட்டார். நான் எதுவுமே சொல்லவில்லை. அவரை நினைக்க எனக்குக் கோபம் கோபமாக எழுந்தது. என்னுடைய இந்த நிலைமை யில் என்னைத் தனியே விட்டுவிட்டுப் போய்விட்டாரே. திடீரென எனக்கு நவாஸ் மச்சானின் நினைப்பு எழுந்தது. ஒரு நோன்பு மாதம் என் உம்மா தருவீஹ் தொழ போன பின் நான் தனியாக இருக்கமாட்டேன் என்று அந்த கார் இருட்டில் வெளிச்சமே இல்லாமல் எனக்கு துணையாக இருக்கவந்தாரே. அவருடன ஒப்பிடும்போது இவர்?

நேரம் யுகமாக நகர்ந்தது.

நான் உம்மாவைக் கட்டிப்பிடித்தவாறு வயிற்றுநோவால் அழுதேன். மருத்துவ பெண்ணைக் கட்டிப்பிடித்தேன்.

மெதுவாக ஆரம்பித்த வயிற்றுநோ இப்போது சூறாவளி யாக உருவெடுத்து ... நான் துடித்தேன். ''உம்மா... உம்மா...'' என அழுதேன்.

என் வயிற்றினுள் உள்ள குழந்தையின்மேல்... என் கணவனின்மேல், எனக்குக் கோபம் கோபமாக எழுந்தது. அல்லாவே! இந்த வேதனையிலிருந்துமட்டும் நான் நீங்கி விட்டால்......

தொடர்ந்து என் வயிற்றினுள் புயல்...

நேரம் இரவு பன்னிரெண்டு இருக்கும்.

நான் என்னை மறந்து ஒரு பெரிய கூச்சலிட்டேன்.

குழந்தை துடித்து அழும் சப்தம் என் காதுகளில் தேனாக ஒலித்தது. வயிற்றினுள் புயல் ஓய்ந்தது.

'ஆண் குழந்தை' என மருத்துவிச்சி உம்மாவிடம் கூறி யதும் எனக்குக் கேட்டது.

என் கணவர் உடனேயே வரமாட்டாரா? குழந்தை யைப் பார்க்கமாட்டாரா என துடித்தேன்.

நேரம் சென்றது. குழந்தை அழுவதும் அடங்குவது மாக இருந்தது. அவரைக் காணவே இல்லை.

அதிகாலை ஜும்ஆ பள்ளிவாசலின் பாங்கு ஒலி கேட் டது. இன்னும் அவர் வரவில்லை. அவர் எங்கே போனார் என என் பெற்றோரும், அவரின் பெற்றோரும் என்னை நச் சரித்தவண்ணம் இருந்தனர். நான் சொல்லவில்லை. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிடுவார் என காத்துக்கொண்டிருந்தேன். பொழுது பொலபொலவென விடிந்தது. அவர் இதுவரை வீட்டுக்கு வரவில்லை. எனக்கு ஏனோ தெரியாது இனம்புரியாத பயம் ஏற்பட்டது.

திடீரென யாரோ வீட்டுக்கு வந்ததும், சற்று பலத்த குரலில் என் வாப்பாவுடன் கதைப்பதும் எனக்குக் கேட்டது.

''இதுதானே சலீம் வீடு?''

''ஆமா''

''சலீம் உங்களுக்கு யாரு?''

''அவர் என் மருமகன்''

''அவரை எட்டாம் கட்டை சந்தியிலே யாரோ கடந்த இரவு சுட்டு கொலைசெய்துட்டுப் போட்டுட்டுப் போயிட்டாங்க''

அதற்குமேல் எனக்கு எதுவும் கேட்கவில்லை. என் இதயம் சடுதியாக அடைப்பதுபோல்... இந்த வீடு, பூமி, வானம் எல்லாமே தட்டாமாலை சுற்றுவதுபோல்... நான் மயக்கமானேன்.

---

## நவாஸ்

## 40

கொழும்பிலுள்ள பெரிய ஆஸ்பத்திரி. பாரிசவாத நோய் சம்பந்தப்பட்ட பிரிவில நான் கடமையாற்றுகிறேன். நூற்றுக்கணக்கான நோயாளிகள். கால், கை வழக்கமில்லாதவர்கள்... உடம்பின் ஒருபக்கம் மரத்துப்போனவர்கள்... வாய் பேசமுடியாதவர்கள் அடிக்கடி காய்ச்சலும், குத்துவலியும், கைகால் வீங்குவதுமாகக் கஸ்டப்படுபவர்கள்...

வயதான ஒரு டாக்டரின்கீழ் உதவி டாக்டராக வேலை செய்கிறேன். தினசரி ஆஸ்பத்திரிக்குச் செல்வேன். மாலை வரை நோயாளிகளைக் கவனிப்பேன். இரவில் குளித்துவிட்டு வாசிகசாலைக்குச் செல்வேன். வைத்தியம் தொடர்பாக புதுப் புதுக் கட்டுரைகளை வாசிப்பேன். இரவில் வீட்டுக்குவந்து சாப்பிடுவேன்.

என் புறக்கிரியைகள் இவை. என் மனம் நஜீமாவை மனைவியாகப் பாவனைபண்ணும். அவளுடன் கதைப்பதாக... அவளிடம் சொல்லிவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போவதாக... அவள் சமைத்து என் பீங்கானில் போடும் உணவை ருசித்துச் சாப்பிடுவதாக... என்னுடைய உடுப்புக்களை அவள் தேர்ந்தெடுத்துத் தருவதாக... நானும் அவளும் என் அனுபவங்களை, முன்னேற்றங்களை பகிர்ந்துகொள்வதாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நவாஸ். நீதான் டாக்டராகிட்டே. உன் நஜீமாவும் கல்யாணம் முடிச்சுட்டாள். நீ எந்தப் பொறுப்புமே இல்லாதவன். அப்புறம் எதுக்காக சும்மா இருக்கணும்? ஒரு பெண்ணைப் பார்த்து நீயும் கல்யாணம் செய்துக்க. எனக்குத் தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படி என்றால் சொல். நான் உனக்கு ஒரு பெண்ணைப் பேசி முடிவுசெய்கிறேன்'' அதிபர் அப்துல்லா அடிக்கடி என்னிடம் சொல்வார்.

''மகன். எங்களுக்கும் வயசாகிட்டு. எங்க கண்ணுக்கு முன்னாலேயே நீ ஒரு கல்யாணம் முடிப்பதை நாங்க பார்க்க வேண்டாமா?'' அவருடைய மனைவி ஏங்குவார்.

மனதினுள் சிரித்துக்கொள்வேன். எனக்குக் கல்யாணமா? நஜீமாவின் இடத்தில் இன்னொருத்தியா? நான் தான் இப்போது மனதால் நஜீமாவுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறேனே.

அவளுக்குத் திருமணம் முடிந்துவிட்டதாக நான் அறிந்த நாள் தொடக்கம் என் உள்ளத்தில் ஏற்பட்ட காயம்! இப்போது தழும்பாகிவிட்டது. அந்தத் தழும்பு மாறப் போவதே இல்லை.

அந்த விபத்திலிருந்து ஏன் தப்பிப்பிழைத்தேன்... என்பதற்காக நான் அடைந்த துக்கம்... அந்தப் பாழும் விபத்து நடைபெற்று ஆஸ்பத்திரியிலிருந்த நாட்களில் எனக்கு அவள் எழுதிய கடிதத்தை உரியவேளையில் என்னால் வாசித்து அறிய முடியாமல் போனதால் ஏற்பட்ட வேதனை... கடிதத்தை வாசித்ததும் ஓடோடிப்போனபோது மஜீது எனக்குக் கூறிய அதிர்ச்சித் தகவல்... அடைந்த ஏமாற்றம்... பல நாட்கள் அவளையே நினைத்து, நினைத்து என் மூளை நரம்புகள் ஒன்றுடன் ஒன்று சிக்கி சிதறுண்டு அடைந்த வேதனைகள்...

எல்லாமே இப்போது ஏதோ ஒரு வழியாக அமைதியடைந்து .. நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். எதிர்காலம் எனக்கு சூனியம். அதற்காகக் கவலையுறப்போவதில்லை. ஒரு பெண்ணுடன் மணவாழ்க்கை என்பது எனக்கு இனி இல்லை. அதை நான் நினைக்கப்போவதுமில்லை.

நானும், ஆஸ்பத்திரியும், நோயாளிகளுமாக வாழ்ந்துகொண்டிருக்கும்போதுதான் மஜீதின் அந்தக் கடிதம் எனக்குக் கிடைத்தது.

நான் அதிர்ச்சியுற்றேன். இது என்ன கொடுமை! இவ்வளவு கொஞ்சநாட்களுக்குள் அவளுடைய தாலி பறிக்கப்பட்டுவிட்டதா? அவளுக்கு வேதனையின்மேல் வேதனையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய கணவன் கொலைசெய்யப்பட்ட அடுத்த நாளே விசாரணைகள் முடிந்து மையத்தை அடக்கிவிட்டதாக மஜீது எழுதியிருந்தான்.

நான் உடனேயே ஊருக்குச் செல்லவில்லை. இப்போது அவள் துக்கத்துடன் இருப்பாள். என்னைக் கண்டதும் அவளுடைய வேதனை உச்சமாகும். சற்று ஆறுதலாக செல்லலாம் என நினைத்தேன். அவளைச் சந்தித்து அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லவேண்டும் என நினைத்திருந்தேன்.

அவளுக்கு ஆண்குழந்தை கிடைத்த அதே இரவு அவளின் கணவனை இழந்திருக்கிறாளே. இது என்ன சோதனை!

சுமார் நான்கு மாதங்கள் கடந்தன.

இப்போதெல்லாம் என் மனம் வேறு எதைப்பற்றியோ சிந்திக்கத் தலைப்பட்டது. இதற்கு அவள் ஒத்துக்கொள்வாளா? ஏன் மாட்டாள்? என் அதிபரிடம் இதைப்பற்றிக் கதைத்தேன். அவர்கூட இதுதான் பொருத்தமான முடிவு எனச் சொன்னார். அவளின் மனநிலையை அறிந்து அவளிடம் இதையிட்டுக் கதைக்கலாம் என்ற முடிவுடன், மஜீதுக்கு எழுதிவிட்டு ஊருக்குச் சென்றேன்.

நீண்ட நாட்களின்பின் ஊர் வருகிறேன். ஊரில் பெரிய மாற்றங்கள். மணல் ஒழுங்கைகள் — கிறவல் போட்ட தெருக்களாக... ஓலை விடுகள் பல ஓட்டு வீடுகளாக... தெருக்களில் எல்லாம் மின்சாரக் கம்பங்கள்... பள்ளிவாசல் பெருப்பித்து கட்டப்பட்டு... பிரதான வீதியில் நிறைய வாகனங்கள்... கூட்டங் கூட்டமாக அரைக் கால்சட்டையும், வெள்ளைக் கவுணுமணிந்து பாடசாலைக்குச் செல்லும் சிறுவர், சிறுமிகள்.

என்னைத் தெரிந்த சிலர் உற்றுப்பார்த்துவிட்டுச் சென்றனர். என்னுடன் படித்த இரண்டொருவர் ஆசிரியர்களாகி நீண்ட காலசட்டை அணிந்து சைக்கிள்களில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தனர். என்னை அடையாளம் கண்டு கொண்டவர்கள், சைக்கிளை நிறுத்தி குசலம் விசாரித்தனர். நான் டாக்டராக ஆகி இருப்பதை அறிந்து என்னைப் பாராட்டினர்.

மஜீதின் வீட்டுக்குச் சென்று, குளித்து காலை ஆகாரம் அருந்தினேன். என்னைக் கண்டதும் அவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. நான் நஜீமாவுடன் எதைப்பற்றிக் கதைக்கவேண்டுமென நினைத்துக்கொண்டிருந்தேனோ, அவனும் என்னைக் கொண்டு அதைக் கதைப்பிக்கவேண்டுமென நினைத்துக் கொண்டிருந்தானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஜீமாவின் வீட்டை அடைந்தேன். பெரிய வீடு. கதவில் பொருத்தியிருந்த விசையை அமுக்கினேன். கதவு திறபட்டது.

'அல்லாஹ்வே! இது என்ன கோலம்!'

பல நாட்கள் எண்ணெய் காணுமல் வரண்டு விரித்த தலை.. வெள்ளைச் சேலை அணிந்து... முகம் அழுததால் காய்ந்து சுருங்கி...

''நவாஸ்... வாங்க'' அவளுடைய குரலில் சோகம். வேதனை.

அங்கு கிடந்த கதிரையொன்றில் அமர்ந்தேன்.

நான் அவளை உற்றுப்பார்ப்பதை அறிந்ததும் மறுபக்கம் முகத்தைத் திருப்பிகொண்டாள்.

''இப்பத்தான் கேள்விப்பட்டீங்களா ?'' அவள் மெதுவாகக் கேட்டாள்.

''அந்த சம்பவம் நடந்த உடனேயே மஜீது எனக்கு அறிவித்து இருந்தான். நீ வேதனையின் உச்சத்தில் இருந்த அந்த சந்தர்ப்பத்திலே நானும் வந்து உன் துயரத்தை மேலும் அதிகரிக்கக்கூடாதுன்னுதான் இது நாள் வரை பொறுத்திருந்தேன்''

''நீங்க வந்தே இருக்கலாம். துக்கத்துக்கு உச்சம் வேறு?'' கேட்டவாறு விம்மத்தொடங்கினுள்.

''ஆமா. இது எப்படி நடந்தது ?''

''இருங்க. எல்லாமே ஆறுதலா சொல்றேன். உங்களைப் பற்றி சொல்லுங்க. காலேலதான் வந்தீங்களா? சுகமா இருக்கீங்களா ?''

நஜீமா எவ்வளவுக்கு முதிர்ந்துவிட்டாள்! இந்த சோகமான வேளையிலும், அதை மறந்து என்னைப்பற்றி அறிய விரும்புகிருளே!

''நான் எப்படியோ வாழ்றேன். எதற்காக கேட்கிறே?''

''இல்ல... என்னைவிட நீங்க சந்தோசமா இருக்கணும்னு நான் எப்போதுமே பிரார்த்திப்பேன். அதனுலதான்.. நீங்க சந்தோசமா இருக்கீங்களான்னு அறியத்தான். என்னைப் போல பட்டமரமா நில்லாம ஒரு நல்ல இடத்தில கல்யாணம் செய்து வாழுறீங்களா என அறியத்தான்''

அவள் நான் திருமணம் செய்துவிட்டேனு என அறிய விரும்புகிருள். அப்படியென்ருல்... என் மனதில் இருக்கும் அதே எண்ணம் அவள் மனதிலும் இருக்குமோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கல்யாணமா? இன்னும் இல்லே நஜீமா'' கூறிவிட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டேன்.

''காலேல சாப்டீங்களா? இல்லேன்னு ஏதாவது உட னேயே செய்துதர்றேன்''

''வேண்டாம். மஜீதின் வீட்ல சாப்ட்டேன்''

''சற்று இருங்க. டீ ஊற்றிவாறன்''

அவளின் வீட்டிலிருந்து அவளுடைய தாயால் நான் விரட்டி அனுப்பப்படுவதற்கு முன்பாக இப்படித்தானே எனக்கு தேனீர் ஊற்றித்தருவதாகச் சொன்னாள். எத் தனையோ நாட்களின்பின்னர், அதே தேனீரை அவளின் கையால் ஊற்றித் தரப்போகிறாளா?

தேனீரைக் குடித்தேன்.

நான் டாக்டராக தொழில் செய்வதைக் கூறினேன்.

அவளுடைய குழந்தை அழுதது. அதைத் தூக்கிவந்து என்னிடம் காட்டினாள். மிகவுமே அழகான குழந்தை. கை யோடு கொண்டுசென்றிருந்த ஆயிரம் ரூபா அடங்கிய காகித உறையை குழந்தையின் கைக்குள் திணித்து அதை முத்தமிட்டேன்.

''இது எதற்காக?''

''உன் குழந்தைக்காகத்தான் கொண்டுவந்தேன்''

அறைக்குள் சென்று, சற்றுநேரம் கழித்து வந்தாள். குழந்தைக்குப் பால் கொடுத்திருப்பாள்போலும்.

''இப்ப சொல்லு. அன்று இரவு என்ன நடந்தது?''

அவளுடைய கணவனைப் பற்றி.. அவன் செய்த தொழி லைப்பற்றி.. அன்று பிற்பகல் அவன் டெலிபோனில் பேசி யதுபற்றி... அவள் அவனுடன் வாக்குவாதப்பட்டது..

''பாருங்க நவாஸ், நான் அவரிடம் எவ்வளவோ கெஞ்சி னேன். அந்தநிலேயிலே என்னே விட்டுப் போகவேண்டாம்னு அவருடைய கால்களைப் பிடித்து மன்றாடினேன். அவர் என் கோரிக்கைக்கு செவிசாய்க்கல்ல. என் சொற்களை அவர் கேட்கல. எங்கிட்ட போயிட்டுவரேன்னு சொல்லாமலேயே அவர் போயிட்டார். அடுத்தநாள்தான் அந்தச் செய்தி கிடைத்தது'' கூறிவிட்டு விசித்து, விசித்து அழத்தொடங் கினாள்.

''ரொம்ப பரிதாபமா இருக்கு. அவருக்கு வரப்போற ஆபத்தை உணர்ந்து நீ முன்கூட்டியே அவரை எச்சரிக்கை செய்திருக்கே. ஆனா அவர் அதை உணர்ந்துகொள்ளல்ல''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாருங்க. என்னைப் பட்டமரமா ஆக்கிட்டுப் போயிட்டாரே'' அவளின் இருதயத்தில் தேக்கிவைத்திருந்த துக்கம் வெடித்து இருக்கவேண்டும். ஏங்கி, ஏங்கி அழத்தொடங்கினுள்.

''பாவம். எல்லாமே உன் விதி! நீ எனக்கு எழுதிய கடிதம் உரிய நேரத்திலே கிடைக்காமல் போனது... அந்தச் சமயத்திலே நான் கார் விபத்தொன்றில் சிக்கி உணர்வே இல்லாமல் ஆஸ்பத்திரியொன்றிலே படுத்துக்கிடக்க நேர்ந்தது... அப்புறம் நான் ஓடோடி வந்தப்போ உன் திருமணம் முடிந்து இருந்தது... எல்லாமே விதி! எல்லாமே தலை எழுத்து. இதற்காக யாரைக் கோபிக்கலாம்? நடந்தவைகளை மறந்துவிட்டு இனி நடப்பவைகள் நல்லதா இருக்கணும்னு பிரார்த்திக்கணும்''

அவளுக்கு ஆறுதல் கூறினேன். அவளுடைய திருமணத்தின் முன்னர் எனக்கு நேர்ந்த எல்லாமே மஜீதின் தங்கை மூலமாக அவளுக்குத் தெரிந்து இருந்தது.

நான் எவ்வளவுதான் ஆறுதல் வார்த்தைகள் கூறினுலும், அவளின் அழுகை என்னவோ ஓய்ந்ததாக இல்லை. நான் எதையோ கூற .. அவள் திரும்ப, திரும்ப அவளுக்கு நேர்ந்த விதியை எண்ணி நொந்து அழ ..

''நவாஸ்... நீங்க என்னதான் சொன்னுலும் என் வாழ்க்கை என்னவோ அரைவாசி மட்டுமே எழுதப்பட்ட கதையாக நின்னுபோச்சி'' அவள் கூறினுள்.

நான் நினைத்துவந்ததை அவளிடம் கதைப்பதற்கு இது தான் பொருத்தமான சமயம் என நினைத்தேன்.

''நஜீமா... நான் ஒன்று சொன்னு நீ கோபிக்கமாட்டாயா?''

''சொல்லுங்க நவாஸ். நான் எதுக்காக கோபிக்கணும்? சொல்லுங்க''

''நஜீமா... உனக்கு ஆட்சேபனை இல்லேன்னு... நீ விரும்பினு... பாதியிலே நின்றுவிட்ட உன் கதையை நான் தொடர்ந்து எழுதறேன்''

''நீங்க என்ன சொல்றீங்க?''

''நான்... நான் உன்னைத் திருமணம் செய்யலாம்னு நினைக்கிறேன்''

அவள் ஒரு வினுடி மௌனமாக நின்ருள். என்னை உற்றுப்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நவாஸ் என்ன கேள்வியைக் கேட்டீங்க? நீங்க .. என்னைத் திருமணம் செய்வதா? நான் உங்களை மறுதாரமா மணப்பதா? முடியாது நவாஸ். முடியவே முடியாது. என் மனதிலே இருக்கிற என் கணவனின் இடத்திலே இனி யாரையுமே நான் குடியமர்த்தப்போவதில்லை. உங்களையும் சேர்த்து'' அவள் சப்தமிட்டுக் கூறினுள்.

''நீ ரொம்ப அவசரப்படுறே. ஆறுதலா யோசித்துப் பார். நீ பொறந்த நாள் தொடக்கமே நீதான் எனக்கு மனைவி, நான்தான் உனக்குக் கணவன்னு நாம ரெண்டு பேருமே நினைச்சி வாழ்ந்துகொண்டிருந்தோம். இடையிலே ஏற்பட்ட ஏதோ விதி நம்ம ரெண்டுபேரையும் பிரிச்சுட்டு. இப்போ அது விலகிட்டு. நீ விரும்பினு நான் உன்னையும், உன் மகளையும் ஏத்துக்கறேன்''

''வேண்டாம் என் வாழ்க்கையிலே புயல் அடிச்சு ஓய்ந்துபோய் இப்போ மனம் தெளிந்த நீராக ஆயிட்டு இருக்கு. தயவுசெய்து அதிலே கல்லை எறிஞ்சு கலக்கிடாதீங்க. திருமணத்துக்கு முன்னுலே நீங்கதான் என் கணவனு வரணும்னு நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனு, யாருடைய கை என் உடலிலே பட்டதோ, நான் யாருக்காக என்னையே அர்ப்பணித்தேனே அவர்தான் என் மனதிலே இப்போ நிரந்தரமா குடியிருக்காரு. அந்த இடத்தை இனி யாருக்குமே நான் கொடுக்கப்போறதில்ல. அவரால எனக்கு கிடைத்த செல்வம், என் மகளை சீராக, சிறப்பாக வளர்ப்பதுதான் இனி என் கடமை. அதைத்தான் நான் செய்யப் போறேன்''

என் கோரிக்கையை அவள் ஒரே மறுப்பாக மறுத்தாள்.

''நஜீமா. நீ எனக்கு முறைப்பெண்''

''அது எனக்குத் தெரியும். ஆனு, அது நான் திருமணம் செய்வதற்குமுன்னர். இப்போ நான் வேறுயாரோ ஒருவருடைய விதவை. அவரை நினைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு பட்டமரம்''

எத்தனையோ உதாரணங்களை அவளிடம் எடுத்துச்சொன்னேன் என் மனதிலுள்ள அவள் தொடர்பான எண்ணங்களை வெளிப்படுத்தினேன். அவள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

என் துயரங்களை எல்லாம் ஒன்ருக ஆக்கி கடைசித் தடவையாக அவளிடம் கேட்டேன்.

''நஜீமா ... நன்ருக யோசித்துச்சொல். இப்போது முடியாதுவிட்டால், நான் கொழும்புக்கு போவதன்முன்னர் மீண்டும் இங்கே வருகிறேன், அப்போது வேண்டுமானுலும் சொல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வேண்டாம். அந்த எண்ணத்துடன் நீங்க என்னைப் பார்ப்பதையோ, என்கூட பேசுவதையோ நான் விரும்பல்ல. என்னுடன் சகோதரர்கள் யாருமே பிறக்கல்ல. என்னைப் பொறுத்தவரை நீங்க இப்போ என் சகோதரன்போல''

''இதுதான் உன் கடைசிமுடிவா ?'' நான் துயரம் வெடிக்க, நாக்குழறக் கேட்டேன்.

''ஆமா''

''அப்போ நா போகட்டா ?''

''போயிட்டுவாங்க''

என் தலைசுற்ற, கால்கள் பின்ன, துயரம் தொண்டையை அடைக்க கதிரையில் இருந்தும் எழுந்து வாசற்கதவை நோக்கி நடக்கிறேன் என் இதயம் ஓலமிட்டு அழுதது.

தெருவுக்குச் சென்றிருப்பேன்.

''நவாஸ் சற்று வந்துட்டுப்போங்க''

நஜீமா அழைத்தாள். அவள் மனம் மாறிவிட்டாள் போலும் என நினைத்து என் உள்ளம் திடீரென சிலிர்த்து மலர, நான்கு எட்டில் அவளை அடைந்தேன்.

''இந்தாங்க. உங்க உம்மா எனக்குப்போட்ட சாணைக் கூறை. இது இன்னும் எதுக்காக எங்கிட்ட இருக்கணும்?''

கையிலிருந்து சாணைக்கூறையை என்னிடம் தந்தாள்.

என்மனம் குவிந்து வெதும்பி... மீண்டும் ஓலமிடத் தொடங்கியது

கால்கள் பின்ன நான் தெருவைநோக்கி நடந்து.. நடைப்பிணமாக மஜீதின் வீட்டைநோக்கி நடக்கத் தொடங்கினேன்.

★ ★ ★

இப்போது நான் என்ன செய்கிறேன் ? அறிய ஆசைப் படுகிறீர்கள்.

எனக்கு வயது நாற்பத்திநாலு. என் உம்மாவின் பெயரில் தனியான ஒரு நர்ஸிங் ஹோம் அமைத்து. பாரிச வாத நோயாளிகளுக்கு சிகிச்சை செய்கிறேன். இந்த நோய் தொடர்பாக இங்கிலாந்துக்குச் சென்று மேற்படிப்பு படித்து வந்துள்ளேன்.

என் மனதில் ... என் மனைவியாக என்னோடு இரண்டறக் கலந்து நஜீமா வாழ்கிறாள். ஆனால் அவள் மனதிலோ .. நான் .. ?

— முற்றும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான

சுவையான

உணவுகளுக்குத்

தலைநகரில்

தரமான இடங்கள் :—

# ஹோட்டல் - டி - இக்பால்

இல. 44 - ஹல்ஸ்டப்,

பழைய சோனகத் தெரு,

**கொழும்பு - 12.**

புறக்கோட்டையில் :—

# யூஸோபியா ஹோட்டல்

(பஸ் நிலையத்துக்கு முன்னால்)

இல. 19, 5ம் குறுக்குத்தெரு,

**கொழும்பு - 11.**

## இன்றே விஜயம் செய்யுங்கள்

தொலைபேசி : 21728, 29244.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With*

*Best*

*Compliments*

*of :*

**The Pacific Press (Pvt.) Ltd**

OFFSET, LETTERPRESS PRINTERS

Specialist in :
Muslim Calendars, Office Calendars,
large and small.

267, Wolfendhal Street,
Colombo - 13

Telephone : 546507

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CATHOLIC PRESS, BATTICALOA.